# நாஞ்சில் வட்டார வழக்கு சொல்லகராதி



அ. கா. பெருமாள்

# நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி

அ. கா. பெருமாள்

தமிழினி

நாஞ்சில வட்டார வழககுச சொலலகராதி
**அ. கா. பெருமாள்**

தமிழினி
67 பீட்டாஸ சாலை
ராயபபேடடை, சென்னை – 14

முதல் பதிபபு : நவமபர் 2004
ISBN 81-87641-48-7
அசசாக்கம் : மணி ஆப்செட், செனனை 600 005

நூல வடிவமைபபு : ஸ்ரீ வைகுநத கமபயூடடர்ஸ்
ஓவியங்கள : மாரீஸ

ரூ. 65

அப்பாவின் பசுமையான
இளைய நினைவுகளுக்கு

# அணிந்துரை

டாக்டர் சு. இராசாராம்
பேராசிரியர், பணிநிறைவு
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*1988ஆம ஆணடு. கி ராஜநாராயணன எழுதிய 'வடடார வழக்குச் சொல்லகராதி' என்னும நூலின மதிப்பாய்வுக கருத்தரஙகம் தஞசைத் தமிழ்ப் பல்கலைககழகத்தில நடைபெற்றது. இக் கருத்தரங்கிற்குக கி ரா. வும் அழைககப்படடிருந்தாா. வட்டார வழக்குச சொல்லகராதி, கி ரா. வின் சொல்லகராதியில காணும் வட்டார வழக்குக கூறுகள, களஆய்வு நோக்கில வட்டார வழககுச சொல்லகராதி, பயன்பாட்டு மொழியியல நோக்கில் வட்டார வழக்குச சொல்லகராதி என நானகு மதிப்பாய்வுக் கட்டுரைகள் இககருத்தரஙகில வாசிதது விவாதிக்கப்படடன. ஆய்வுக கட்டுரை களை வழங்கிய ஆய்வறிஞாகள் அனைவரும் மொழியியலாய்வில ஆழககால் பதிததவர்கள்; அகராதியியல் பற்றி நன்கறிநதவர்கள். இருநதபோதிலும் கி. ரா தன் சொல்லகராதிக்கு வரையறுத்திருந்த எலலைக் கோட்டுக்குள்ளேயே அவாகளது ஆய்வுக கருத்துகள் முடககப்பட்டிருந்தன விவாதங்களும் அவற்றை யொட்டியே அமைந்தன*

*கடைசியாக, கி. ரா. வின சுற்று கி ரா. வின் கருததுகளை ஆாவமுடன் எதிர்பார்ததிருநத பார்வையாளர்க்கு மிஞ்சியது பெருதத ஏமாற்றமே. கி ரா. ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை ஆயவுக் கருத்துகளையும அவறறின்மேல தொடரபபட்ட விவாதங் களையும் குறித்துக கி ரா என்ன கருதினார் என்பது இன்றுவரை புதிராகவே உள்ளது இப்புதிர் உடைக்கப்பட்டிருக்குமானால சொற்களை மொழியியல அடிப்படையிலான அகராதி*

தொகுப்பாளனைப் போலனறி ஓர் இலககியப் படைப்பாளி அகரவரிசைப்படுத்தும நோத்தியில் அறிவியல்பூாவமான ஓா அணுகுமுறையைச் சாதிததிருக்க முடியும என்பது எனது கருத்து நிசசயமாக, ஒரு மொழியியல மாணவன் என்ற நோக்கில அல்ல. இதனாலேயே,

> நான் அடிப்படையில் நாட்டார் வழக்காறறியல ஆய்வாளன் வழககாறுகளை ஆவணப்படுத்த வேண்டும் எனறு மனதில் ஊறிய எண்ணமும, வேகமும்தான் என்னை இந்த அகராதியைத தொகுக்க வைததிருக் கிறது. ஒரு வகையில் கரிசல் வட்டாரச சொற்களைத் தொகுத்த கி. ராஜநாராயணனும், கொங்கு வட்டாரச் சொற்களைத் தொகுத்த பெருமாள் முருகனும் எனக்கு முனனோடிகள்

என்று அடையாளம் காடடிக் கொள்கிறார் இநநூலாசிரியர் அ. கா. பெருமாள். எனவே, இவ வரையறுக்கப்படட எலலைக்குள் நின்றே இந்நூலைப் பற்றிக் கூறக கடடாயப் படுததப்படடுள்ளேன் என்பதை இங்கு தெளிவுபடுத்தியாக வேண்டும்.

'வடடார வழக்குச் சொலலகராதி' என்னும தலைப்பில இந்நூல் நான்காவதாக வெளிவநதுளளது கி. ராஜநாராயணனின 'வடடார வழக்குச் சொல்லகராதி' (1982), பெருமாள முருகனின் 'கொங்கு வட்டாரச சொல்லகராதி' (2000) கே. ஜீவபாரதி, வே. எழிலமுதது ஆகியோரின் 'ஜீவா தொகுத்த வழககுச் சொல்லகராதி' (2001), ஆகியன முதல் மூன்று நூல்களாகும். இத்தலைப்பில் அல்லாமல் வெளிவந்துள்ள மற்றொரு நூல் லேனா தமிழவாணனின் 'வட்டாரச் சொறகளும் விளக்கங்களும்' (1987). இவற்றுள் கி. ரா வை உரு மாதிரியாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளனவாகப் பெருமாள் முருகனின் நூலையும், அ. கா. பெருமாளின் இந்நூலையும குறிப் பிடலாம. இவ்வமைப்பில் வட்டார வழககுச சொல்லகராதி வரிசையில் இந்நூல் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது.

அகராதிக்கான சொல்தேர்வு, பதிவுமுறை, பொருள் விளக்கம் ஆகிய அனைத்திலும் இம்மூனறு அகராதிகளுக்கும பொதுவான ஓா அணுகுமுறையை உணரமுடியும். குறிப்பாக, வடடாரம் (region) எனபதற்கும், அவ்வட்டாரத்தில் வழஙகும வழக்குச் சொற்களுக்கும இம்மூனறு அகராதிகள தரும் விளக்கததை இவற்றை ஒரு குடைக்கீழ் கொணடுவரும் அடிப்படைக காரணியாகக கொள்ளலாம். கி. ரா. வடடார வழககுச சொல் என்பதைக கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> இருமல என்கிற வார்த்தையை எலலாத தமிழர்களும் அறிவாாகள். 'தொறத்தல' என்று சொன்னாலும் இருமல்தான எனபது பல பகுதித தமிழ் மககளுக்குத் தெரியாது இப்படிக குறிப்பிடட ஒரு வார்த்தை ஒரு

குறிப்பிட்ட அர்த்தத்தில் புழக்கத்தில் இருக்குமானால் அதுதான் வட்டார வழக்குச் சொல் என்று சொல்லப் படுகிறது. (ப v)

பெருமாள் முருகன இன்னும் சற்று விரிவாக,

பொதுமொழியிலிருந்து பொருள் அளவில் வேறுபடடு நிற்கும சொற்களையே வட்டாரச சொல் என்கிறோம். கருதத்தக்க அளவில உசசரிப்பு வேறுபாடு இருப்பினும் அதையும் வட்டாரச சொல் என்றே கொள்ளலாம். வட்டாரச் சொல் என்பதைப் பொது வழக்கில் இருக்கும ஒரு சொல், பொதுப் பொருளிலிருந்து வேறுபட்ட பொருளில் வழங்குதல்; ஒரு சொல் குறிப் பிட்ட வட்டாரத்தில் மடடுமே வழங்க, புரிநது கொள்ளப்படுதல்; பொது வழக்குச சொல்லாக இருப்பினும் திரிநது, உச்சரிப்பில் வேறு சொல்போலத் தோற்றம் தருதல் என மூன்று நிலைகளில் புரிந்து கொளள முடியும். (ப.15)

என்று குறிப்பிடுகிறார். அ.கா.பெருமாள், இவவிருவரையும் முன்னோடிகளாகக் கொள்வதன் மூலம் வட்டார வழக்குச் சொல்லை அவர்கள் வழியே விளஙகிக் கொளகிறார்.

அகராதித் தொகுப்பு நெறிமுறையை வகுத்துக் கொணட நிலையிலும், பிரச்சினைகளை எதிர்கொண்டு தாம் எடுத்த நிலைப்பாடுகளிலும் இம்மூனறு அகராதிகளுக்கிடையே ஒறறுமையைக் காணமுடிகிறது. எடுததுக்காட்டாக, வட்டார வழக்குச் சொறகளில் காணும் சாதிய அடையாளத்தைக் குறிப்பிட லாம. மூவருமே சாதி அடையாளத்தைத் தவிர்க்க முற்பட்டிருக கின்றனர். இந்நூலாசிரியர்,

நாஞ்சில் நாட்டுக் கிராமஙகளிலிருநது நாகர்கோவில் நகரத்துக்குக் குடியேறிய சாதியினா சாதி வழக்காறு களிலிருந்து அந்நியப்பட்டுக்கொண்டு வருவதைப் போலவே சாதிக்கே உரிமையுடைய சொற்களைத் தவிதகுப் பேசுவதில் கவனமாக இருக்கின்றனர். சாதிக் கலவரம் அதிகம் நிகழும் தென்மாவட்டஙகளில் இது போன்ற விஷயஙகளைக கூறுவதில நாட்டார் வழக்காற்றியல ஆய்வாளனுக்குப் பெரும் சிக்கல் வருகிறது. இதறகு ஒரே வழி தவிர்பபதுதான் என்று முடிவு செய்தேன்.

என்று குறிப்பிட்டுள்ளார். இருநதாலும், மூவருமே சாதிய அடையாளததிற்குள் அகப்பட்டுள்ளனர் என்பதை அகராதிப் பதிவுகளிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இது வட்டார

வழககுச் சொற்களில் தவிர்கக முடியாதது. உணர்வுப்பூர்வமாகச சாதி அடையாளததைத தவிர்க்க முயற்சிகள மேற்கொணட பின்னும் கூட நுடபமாகச் சாதி அடையாளம பொதிந்திருக்கலாம எனப் பெருமாள் முருகன கூறுவதுதான யதார்ததம (ப.18). மொழியியல அடிபபடையிலான வட்டாரக் கிளைமொழி அகராதியும (regional dialect dictionary) இப்பிரச்சினைககு உட்படாமல் இருகக முடியாது.

இதேபோன்று வட்டார வழககின் வழக்காற்று எல்லையை வரையறுத்தல (கரிசல் காடு, கொஙகுநாடு, நாஞ்சில் நாடு), பல்வேறு சாதியினரை அடையாளம காட்டும் வழககு வேறுபாடுகளைத் தமிழ் எழுத்துகளில காட்ட இயலாமை, பிரச்சினைக்குரிய அகராதிப் பதிவுகள் (குமபகோணம, தென்காசி உபசாரம) என இம்மூன்று நூல்களில மையம் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் பொது வானவை.

மற்றொரு பொதுக்கூறாக, அகராதிப் பதிவின பொருள விளககத்தைக் கூறலாம். இப்பொருள் விளக்கம் இவ்வகை அகராதிகளை 'நோக்கீட்டு நூல்' அலலது 'பார்வை நூல்' எனனும் தளததிலிருந்து கூடுதலாக 'வாசிப்பு நூல்' தளத்திற்கு ஏற்றியுள்ளது இதன விளைவுதான் சிறுகதை, புதினம, போல இந்த அகராதிகள வாசகா பார்வையைக் கவாந்தது எனலாம். எடுத்துக்காட்டாக, 'இண்டமபுதர்' என்னும் கரிசல காட்டு வழககுக்குப் பொருள் தெரியாமல் கி.ரா.வின் வட்டார வழக்குச் சொல்லகராதியைப் பார்த்தவர்களைவிட ஒரு புதினத்தைப் போல அதனை வாசித்துப் பொருள் புரிந்துகொண்ட வாசகர்களே அதிகமாயிருப்பர்.

> இணடம புதர்: இணடு எனறு ஒருவகை முள்ச்செடி புதராய் மண்டி வளர்நதிருக்கும். அதனுடைய முள் அமைபபு ஒரு விநோதமானது. கையை உளளே விடும்போது ஒனறும செய்யாது கையை இழுககும் போது விடாது. தூண்டிலை விழுங்கிய மீனின் கதைதான. இந்தப் புதருக்குள் ஒருவன் தலையைக கொடுத்துக் கொண்டால் அவன் பாட்டைச் சொல்ல வேணடாம் புருஷனைப பறிகொடுதது விட்டுத தக்க துணையும் ஆதரவும இல்லாமல் துனபுறும் பெண் தன நிலையை இபபடிச் சொல்லி அழுகிறாள
>
> "இண்டம் புதாவிடு நீங்க
> இனம் பெருத்த நங்கோடு உஙக
> இனமெலலாம் ஒண்ணலலோ நான்
> ஏலக்காய் துண்டுபட்டேன்" ஒப்பு (ப 29)

இணடம புதர் என்னும் சொற்பதிவின இப்பொருளை வாசிககுமபோது ஒரு சாதாரண அகராதியின் சொற்பதிவுத் தேர்வு, பொருள கூறும முறை ஆகியவறறில இவ்அகராதிகள்

வேறுபடும விததததை உணரமுடியும. இருபபினும் அ.கா பெருமாள் ஒவ்வொரு அகராதிப் பதிவிலும சாதாரண பொது அகராதியின பொருள விளக்கப்பானமையைப் பின்பற்றியது கி.ரா.வின் அகராதியைக காட்டிலும் பொது அகராதியின் தன்மைக்கு நாஞ்சில் நாடடு வட்டார வழக்குச சொல்லகராதியை நெருககியுள்ளது குறிப்பிடத்தக்கது

எலலாவறறுக்கும் மேலாக இக கி.ரா. வகை அகராதிகளின சொல்தேர்வுக்கான மூலாதாரஙகள் பறறி முககியமாக இஙகுக் குறிபபிட வேண்டும். எழுத்துத தமிழுக்கு ஓர் அகராதியை உருவாக்குவதைக காடடிலும் பேச்சுத் தமிழுககு ஓர் அகராதியை உருவாக்குவது கடினமான பணி. மொழியியல் இப்பணியை மேற்கொளள எளிதான வழிமுறைகளை வகுத்துளளது. ஆனால், மேறகாணும் அகராதிகள் வட்டாரரீதியாக நேரடியான கள ஆயவை மேறகொணடு கிளைமொழிகளை ஆராயந்து சொல தேர்வை மேறகொள்ளும் மொழியியல் படிநிலைகளைப் பின்பற்ற வில்லை. எழுத்தில் இடம் பெறறுள்ள வழக்குச சொற்களைத் தொகுபபதிலேயே அதிக ஆாவம் காட்டியுள்ளன. இதன் விளைவாக இவ் அகராதிக் கலைஞர்கள தேர்வு செயத ஆதாரமூலங்கள் கூடுதலாகத துறைசார்புடையதாக அமைநதுள்ளது இங்குக குறிப்பிடத்தககது. அகராதியியல் வரலாற்றில் சமீபக்காலப் படிநிலை வளாச்சியாக இதனைக் கருதலாம. இதனை விளங்கிக் கொள வதற்குப் பின்னணியாகத் தமிழ் அகராதியியல வரலாறு பற்றிய சிறுகுறிப்பு இங்குப் பொருத்தமாக அமையும்

தமிழ அகராதியியல வரலாறு தொல்காப்பிய உரியியல், நிகண்டு, அகராதி, கலைககளஞ்சியம் என நானகு வளர்ச்சிப படிநிலைகளைக் கொண்டது. தொல்காபபிய உரியியல், உரிசசொறகளின் பொருண்மைப் பரப்பை விளக்குகிறது. இது அகராதியியல வரலாற்றின் முதல் வளாச்சிப் படிநிலை. இத்துடன் பல சொற்களின் பயன்பாட்டுப் பரப்பையும் தொல்காப்பியம விளக்குகிறது இதன் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அகராதிக்கான கருத்துருவாக்கம் உருக்கொண்ட சிறப்பு தமிழுக்குக் கிட்டியுள்ளது.

எட்டாம் நூறறாண்டில் பிஙகலம் என்னும நிகண்டுவகை தோன்றிய பினனரும் அது உரிச்சொல், உரிச்சொற பனுவல் என அழைககபபடடது இவ் வரலாற்றுப் பாதையின தொடாச்சியை உறுதிப்படுததுகிறது. சொறகளையும் சொற்பொருளையும் மனபபாடம் செயயும் நோக்கததில் பா வடிவிலமைநத இந்நிகண்டுகள் இலக்கணமரபில ஆழவேரூன்றியவை சொல வளர்ச்சியை இலக்கணத்திலிருநது தனியொரு அங்கமாக வளர்ததெடுகக முயனற முயற்சியின் திருவினையாக்கம் இவ்வகை அகராதி உருவாக்கம் எனலாம. இலக்கணக் கலைஞர்களே இவ்வுருவாக்கத்தின் சிற்பிகளாகத் திகழ்ந்தனர். பினனர் பதினேழாம்

நூற்றாண்டு தொடங்கி அகராதி வகைகள் தமிழில தோன்ற ஆரம்பிததன இன்றுவரை எத்தனையோ வகை அகராதிகள் தொகுக்கபபட்டுவிட்டன.

இருபதாம் நூற்றாண்டில் மொழியையும் சமுதாய மெய்மைகளின் ஓா அங்கமாகக் கருதும மனபபோக்கு மொழியறிஞரிடையே வளர்நதது. மொழிக்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள உறவு, மொழிப பயன்பாட்டில் சமூகப் பொருளாதாரத்தின் ஆளுமை ஆகியன மொழியினங்களுக்கான காரணிகளாகக கருதப்பட்டபோது வட்டாரமும் அது நிர்ணயித்த பேச்சு வழக்காறும் முக்கியத்துவம் பெறறன பேச்சு மொழி மொழியியலாளரின் ஆய்வுப் பொருளானது. மொழிப் பொதுமைகளை (language universals) நிறுவுவதையே நோககமாகக் கொண்ட மொழியாராய்ச்சி மொழிகளிடையே காணப்படும் வேறுபாடுகளும் முக்கியமானது என உணர்நதது. ஒரு மொழியின இவ் வேறுபாடுகளை விளக்கினால் மட்டுமே ஒரு மொழியை முழுமையாக விளக்க முடியும். பொதுப் பேசசுமொழியும் அதன் பல்வேறு கிளைமொழிகளும் மொழியியலில் முககியத்துவம் பெற்றது இவ்வாறே. வட்டார வழக்கு ஆய்வும், வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கமும் இவற்றின வெளிப்பாடுகளாகும்

மொழியியல் அடிப்படையிலான அகராதிகளைப் போன்றே கி.ரா. வகை அகராதிகளும் கள ஆய்வு, தகவல் சேகரம், தரவு என ஓர் அகராதி உருவாக்க முயற்சியின படிநிலைகளைக கொண்டிருநதாலும் நிகணடு உருவாக்கம் இலக்கியப பிரதிகளை (literary texts) ஆதார மூலங்களாகக கொண்டது போன்ற இவ் அணுகுமுறை சிததாந்தத்தை இக கி.ரா. வகை அகராதி உருவாக்கத்திலும் காணமுடிகிறது. இவ்வணுகுமுறை அகராதிக் கலைஞனை அடையாளம காட்டிவிடுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தககது

கி.ரா. இலக்கியக் கலைஞர் (literary artist) என்ற வகையிலும், பெருமாள் முருகன மற்றும் அ.கா.பெருமாளும் இலககியம், கூடுதலாக நாட்டார் வழககாற்றியல் கலைஞர்கள் என்ற வகையிலும் அவரவர் அகராதிகளில எளிதாக இனங்காணபபடுகின்றனர். தததம துறையறிவுசார் புலமையை இவர்களே முனனுரையில குறிப்பிட்டிருந்தாலும கையாணடுள்ள சொல்வகைத் தேர்வு, பொருள் விளக்கம், பொருள் விளககததின் மொழிநடை ஆகியவை தொகுபபாளனைப் பிரதிபலிககும கண்ணாடி பிம்பஙகளாகத திகழ்கின்றன.

கி.ரா.வின் அகராதியை இலக்கியக் கதைமாந்தர் பேசும் குறிப்பிட்ட வட்டார வழககாற்றுச் சாயலோடு தொகுக்கப்பட்டுள்ள அகராதியெனக் குறிப்பிட்டால் நாட்டார் மற்றும் நாட்டாா கதைப் பாடல் உடபட நாட்டுப்புற மககளின் வட்டார வழக்குச் சாயலோடு

தொகுக்கப்பட்டுள்ள அகராதியென அ.கா பெருமாளின் அகராதியை வகைப்படுத்தலாம். நாஞ்சில் நாட்டு வில்லிசைப் பாடல்கள், நாஞ்சில் நாட்டின் பின்னணியில எழுதப்பட்ட நாவல்கள், சிறுகதைகள், நாஞ்சில நாடடுப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், நாட்டார விளையாடடுக்கள், பொதுவான வழக்காறுகள் ஆகியன சொல் தேர்விற்கான ஆதாரமூலங்கள் என ஆசிரியர் குறிப்பிடுகிறார. இம் மூலங்கள் காலத்தால் மறககபபட்டு வரும்போது இச் சொறகளுள் பலவும் மறக்கப்பட்டுவிடும். இவ்வாறு ஏற்கனவே மறைந்துபோன சொற்கள் ஏராளம். இந்நூலாசிரியர் சொல் தேர்வுககான மூல ஆதாரங்களாக இவற்றைக கொள்வதால் மறையவிருக்கும் பல சொற்களை ஆவணப்படுத்திப் பாதுகாத்த பெரும்பணியைச் செய்துள்ளார்.

சாதாரணமாகப் பேச்சுவழககில் மட்டுமே இடம பெற்றிருக்கிற ஒரு சொல் சாதி, சமய, வட்டார எல்லைகளைக் கடந்து மொழிப் பொதுநிலையாக்கம் (language Standardization) பெற வேண்டும். பின்னர் அச்சொல எழுதது மொழியில் இடம் பெற்று அகராதியின் நுழைவிற்குத் தகுதிபெறுகிறது. எழுத்தில் இடம் பெற்றாலும் பொதுநிலையாக்கத்திற்கு உள்ளாகாமல் பேச்சு வழக்கிலேயே பல சொற்கள் தங்கி விடுவதுண்டு. கதைகளிலும் புதினங்களிலும இடம்பெறும வட்டாரச சொறகள் இவ்வெழுத்துத் தகுதியைப் பெறுவதால் மட்டுமே பொது அகராதியின் பதிவு நுழைவுக்குத் தகுதிச் சான்று பெற்றுவிட்டதாகக் கூற முடியாது. பொது நிலையாக்க வரையறைகளுக்குக கட்டுப்பட்டு வரும வட்டார வழககுச் சொல் மடடுமே பொது அகராதியில் இடம் பெறவியலும அதுவரைக்கும பொது அகராதியின நுழைவிற்காகக் காத்திருக்கும் வட்டாரச் சொறகளின் 'காத்திருப்போா பட்டியலாக' இவ் அகராதிகளைக் கருதலாம். இவ் வரிசையில் நாஞ்சில் நாட்டு வடடார வழக்குச் சொற்களின் முதன்மைக காத்திருபபோர் பட்டியலாக இந்நூலை உருவாககியுள்ள பெருமாள் எல்லா வகையிலும் பாராட்டிற்குரியவர்.

அ.கா.பெருமாள் அகராதிக் கலைஞர் என்று தம்மை முன்னிறுத்துவதைக் காட்டிலும் ஒரு நாட்டார் வழக்காற்றியல ஆய்வாளர் என்றே தமமைப் பதிவுதோறும் அடையாளம் காட்டிக் கொள்கிறார். இவ அணுகுமுறையால் ஒவ்வொரு பதிவின் பொருள் விளக்கமும் நாட்டுப்புற மண்வாசனை பெறுகிறது. கி.ரா.வின் அகராதியில் இலக்கிய வாசனையை நம்மையும அறியாமல் நுகர்வது போன்ற உணாவு இவ அகராதியின பதிவுகளை வாசிக்கும்போதும ஏற்படுகிறது இவ உணர்வை அகராதி தொகுபபாளரின் புலச்சார்பும் துறைவழக்கும் (register) ஊட்டிவிடுகின்றன.

அகராதி உருவாக்கததில சொற்பதிவுகளுக்கான பொருள் விளக்கம் கூடுதலாகப் பணபாட்டுச சொற்களிலே சிறப்படைகிறது

எனபா் அகராதியியல கலைஞா் இவ அகராதியில உட்படுததப் பட்டுளள தலைச சொற்களுள (head words) பெருமபாலானவை நாஞ்சில நாட்டுக்கேயுரிய வட்டாரப் பண்பாடு குறிததவையாதலால் ஒவ்வொரு பதிவின பொருள் விளககமும் சிறபபாகவே அமைந் துள்ளது. பொருள் விளககம், எடுத்துக்காட்டு, மேற்கோள, விளக்கப் படம், குறுக்கு நோக்கீடு என எல்லாக் கூறுகளும் அமைநத பொதுவான ஒரு வட்டார வழககுச் சொலலகராதி என்பதைக் காட்டிலும ஒரு குறிப்பிட்ட துறை சாாநத அகராதியின் (Subject based dictionary) சாயலைப பெறறு இநநூல் விளங்குகிறது. அகராதிப் பொருள விளககததின் மறறொரு முகமாகக கருதப்படும இலக்கணப்பண்பு விளக்கம் பதிவுகளில் இடம்பெறாதது நாட்டார் வழக்காற்றியல் துறைசார் அகராதியொனறின் சாயலுக்கு இந் நூலைத் தகுதிப்படுத்திவிடுகிறது. இதுதான இவ அகராதியைப பார்வை நூல் தளததிலிருந்து வாசிப்பு நூல தளத்திற்கு ஏறறி விடுகிறது.

ஒவ்வொரு அகராதிப் பதிவின் விளககமும் சுருக்கமாக, மயக்க மின்றிப் பொருள வரையறையுடன் தெளிவாக எளிய நடையில் தரப்பட்டுள்ளது இம்முயற்சியில் கி ரா. வகை அகராதிகள் மூன்றுமே தன்னிறைவு பெறறிருந்தாலும் ஓர் அகராதியின் முழுமையை அடைய இயலாத குறை திட்டமிடலிலும் அச்சுப்படி உருவாக்கத திலும் உள்ளதை இங்குக் குறிப்பிடாமல இருகக முடியாது. ஓர் அகராதி உருவாககம, உருவாக்கம (Preparation), பதிப்பு (editing), அச்சுப்படி உருவாககம் (Preparation of press copy) என மூன்று முதனமைப படிநிலைகளை உடையது. இவறறுள் உருவாககத தின படிநிலைகளாகத் திட்டமிடல் (Planning), அகராதிச் சொல் தொகுபபு (Collection), சொல தோவு (Selection) என்பதைக் குறிப் பிடுவா பதிப்பு தலைச் சொல தோவு (Selection of head word), ஒலிப்பு உசசரிப்பு - ஒலிபெயர்ப்பு (Spelling pronunciation - transliteration), இலக்கண விளக்கம் (Grammatical explanation), பொருள் விளக்கம / வரையறை (meaning / definition) எனனும் படிநிலைகளை உள்ளடககியது. அச்சுபபடி உருவாக்கம் அகராதிச்சொல அமைப்பு (arrangement of entries) உததிகளின பயனபாடு (use of notations), முன்னுரை உருவாக்கம் (writing introduction), பயனாளர் வழிகாட்டி (user guidelines) என்னும் பகுதிகள கொண்டது. ஓா அகராதி இவ்வமைப்பில உருவாக்கப் பெற வேண்டும் எனபதோடு அதன் முன்னுரை இதனை எடுததுக் காட்டுக்களுடன் விளககித தன்னிலை விளககம தரவேண்டும் பொதுவாக, இவ்வமைப்பில கி ரா. வகை அகராதிகள் அமையவில்லை எனச் சுட்டிக காட்டுவது இங்குத் தவிர்க்க முடியாதது. இருந்தாலும் அகராதியியல் துறை சார்ந்த இவ்விமர்சனம் எநத வகையிலும் இவவகை அகராதிக கலைஞர் களின் துறையறிவையும் முயற்சியையும குறைதது மதிபபிடுவதை நோககமாகக் கொண்டதன்று.

இந்நூலாசிரியர் நாட்டார் வழக்காற்றியலை ஆழமாகக் கற்றவர்; கிட்டதட்ட இருபததைந்து ஆண்டுகளாக இததுறையில் ஆய்வுகளை மேற்கொண்டு நாற்பதுககு மேற்பட்ட ஆயவு நூல்களை எழுதியவர்; ஓர் அகராதியைத் தொகுப்பதிலுள்ள அனைதது இடர்ப்பாடுகளை யும் தனிமனிதராக எதிர்கொண்டவர். மேலே காட்டிய எல்லா நிலைகளிலும் கடினமான தேடலுககுப்பின இப்பணி நூலாககம் பெற்றுளளது. மேலே அகராதியின் அமைப்புப பற்றித் தரபபட்டி ருககும் பொதுவான குறிபபு இப்பணியில் ஈடுபடும் பிறதுறை வலலுநர்ககு இனிவரும் காலங்களில பயன்படலாம் என்னும் கருத்திலேயே தரப்பட்டுளளது. எல்லாவறறையும விட ஒரு வட்டார வழக்குச் சொல்லகராதியில துறைதோறும வழங்கும் வழக்குச் சொறகளும் இடம்பெறும வகையில் அந்தந்த துறைசார் அறிஞர்கள் ஏற்கவேண்டிய அகராதிப் பணிக்கான அகராதி நெறிமுறை இங்கு வலியுறுத்தபபடுகினறது எனபது பொருத்தமாக இருககும்

தமிழிலுள்ள அனைத்து வட்டாரச் சொறகளும் சேகரிககப்பட்டு ஒரு முழுமையான வட்டார வழக்குச் சொல்லகராதி ஒரு காலததில் வெளிவரததான் போகிறது என்பது கி.ரா. வின் தீர்க்கதரிசனம். இதற்கான ஒரு பங்களிப்பாக இநநூலையும கருதலாம். நாட்டார் வழக்காறறுச் சார்போடு நாஞ்சில் நாட்டு வட்டார வழக்குச சொற்கள் இந்நூலில தொகுத்தளிக்கப்பட்டிருக்கினறன. இதனமூலம் அ. கா. பெருமாள் ஒரு வட்டார வழககுச் சொல்லகராதியில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளனின் பங்கை உறுதிபபடுத்தி யிருப்பதுடன் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்குச சொல்லகராதி உருவாக்கத்தில தம் பங்கைச் சிறப்பாக நிறைவு செய்திருக்கிறார். கலவிசார் ஆய்வைப் பொறுத்தவரையில் நாட்டாா வழக்காற்றி யலின மறறொரு பரிமாணத்தை ஆய்வறிஞர்க்குக் கோடுகாட்டி யுள்ளார்.

கி. ரா. வின் தீர்ககதரிசனம் அறிவியல் அணுகுமுறையோடு கூடிய ஒரு வட்டார வழக்குச் சொல்லகராதியின் முழுமை நோககிய எதிர்பார்ப்பு. தமிழிலக்கியக் கலைஞர்களும நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்களும் வட்டார வழககுச் சொற்களை ஆவணப்படுதது வதில் தத்தம் பங்கிற்குப் பிள்ளையார் சுழி போட்டுள்ளனர். இவற்றைத் தொடர்ந்து இன்னும் சில அகராதிகள் வெளிவரலாம. அவை முழுமையான வட்டார வழக்குச சொல்லகராதிக்கு உதவலாம். இருநதாலும இவாகளோடு கைகோர்ததுக் கொண்டு இத்துறையில் செயல்திறம கொண்டவர்கள் இததகைய அகராதி உருவாக்கத்திற்குத் தம பங்கைச் செலுத்த வேண்டும். இலக்கணமும் மொழியியலும் அறிந்தவர்கள் இந்நூலைச் செப்பனிடுவார்கள் என்னும் இநநூலாசிரியரின் எதிர்பார்ப்பும இதனையே மையபபடுத்துகிறது இந்த எதிர்பார்ப்பை அகராதித் தொகுப்பில் சிறப்புத் தகுதிபடைத்த மொழியியலார் எப்போது நிறைவேற்றப போகின்றனர்? கி. ரா

*மறறும் பெருமாள் முருகனோடு அ. கா. பெருமாளும் காத்திருக்கிறார். நாட்டார் வழககாற்றியல் தமக்கிறுத்த அகராதிப் பணியைத தன்னளவில் செம்மையுடன் நிறைவுசெய்துள்ள அவருக்கு நம் வாழ்த்துகள்.*

*276, விநாயக நகர்*
*தெ. தி. இந்துககல்லூரி பின்புறம்*
*நாகர்கோவில் 629 002*

**சு. இராசாராம்**

# முகவுரை

நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி என்ற இந்த நூலைத் தொகுப்பதற்கு முழுமையான தகுதிகள் எனக்கு இல்லை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்ட பின்புதான் இதைத் தொகுத்திருக்கிறேன். முப்பது வருஷங்களுக்கு முன்னால் எம்.எ. பாடத்திட்டத்தில் இருந்த நன்னூலையும், தொல்காப்பியத்தையும், மொழியியலையும் மனப்பாடம் செய்து வைத்திருந்த பகுதிகளைக் கொஞ்சமும் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் பணிபுரிகின்ற என்னிடம் அவை மட்கிபபோய்விட்ட தருணத்தில்தான் இந்த அகராதியைத் தொகுத்திருக்கிறேன்.

நான அடிப்படையில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளன். வழக்காறுகளை ஆவணப்படுத்த வேண்டும் என்று மனதில் ஊறிய எண்ணமுமு, வேகமும்தான் எனனை இந்த அகராதியைத் தொகுக்க வைத்திருககின்றன. ஒரு வகையில் கரிசல் வட்டாரச் சொற்களைத் தொகுத்த கி. ராஜநாராயணனும், கொங்கு வட்டாரச் சொற்களைத் தொகுத்த பெருமாள் முருகனும் எனக்கு முன்னோடிகள்.

நாட்டார் வழக்காற்றுப் புத்தகங்களின் வாசிப்பும், கள ஆய்வுக்காகச் செய்த பயணமும் இவற்றில் ஏற்பட்ட அனுபவமும் என்னை இந்தப பணியைச் செய்ய ஈடுபடுத்தியிருக்க வேண்டும். இந்த அகராதி நூல் என்னுடைய 41 ஆவது நூல். தென்குமரி யின் கதை என்ற என் நூலுக்காக உழைத்ததை விட நிறையவே இந்த அகராதியைத் தொகுக்க உழைத்திருக்கிறேன். கள ஆய்வு மூலமும், புத்தகஙகள் மூலமும் செய்திகளைச் சேகரிப்பது எழுதுவது என்ற ஒரேமாதிரியான வேலையல்ல இது என்பதை இநத அகராதியைக் தொகுக்கும்போது உணர்ந்தேன். நான் இப்படி ஒரு அகராதியைத் தொகுத்துக் கொண்டிருக்கிறேன் என்றதும், குறுஞ்சிரிப்போடு கூடிய பரிகாசத்தையும், கிண்டலையும்தான் சிலரிடம எதிர்கொண்டேன். என் ஊக்கத்தைச் சிதைப்பதற்குரிய

எல்லா அஸதிரங்களும் என்மீது விழுநத பிறகுதான் இநதத் தொகுப்பு வேலையில் முழுமூச்சாய ஈடுபடடேன.

சுமாா 28 வருஷஙகளுககு முனபு, 1976 அளவில இருக்கலாம என் அண்ணனின் ஆசிரியா என்ற முறையில் பேராசிரியர் நா வானமாமலை அவாகளைப பார்ககப் போயிருநதேன். அவரது அறிவின் வீசசோ படிப்பின் ஆழமோ முழுமையாகத் தெரியாத நிலையில தனிக்கலலூரி ஆசிரியராகத்தான அவரைச் சந்திததேன. அவர் பரிவோடு படிக்கச சொனன நூற்களின் பெயாகளில் சில இப்போது நினைவில் இல்லை; அவர் அனறு பழகிய விதம் தான் இனறு நினைவுககு வருகிறது, அது இன்றைககுபபோல் இருக்கிறது.

நா. வா. என்னிடம "நீ பிஎச.டி ஆய்வுக்காக எதாவது ஒரு தலைப்பை எடுத்துக்கொளளுவது பெரிய விஷயமிலலை. இனறு வழக்கில உள்ள பல விஷயங்கள் இன்னும கொஞ்ச நாளில் மறைந்துவிடும் பின் எதையுமே பதிவு செயயமுடியாமல ஆகிவிடும். உன்னால் முடிந்த அளவுககு உனனைச் சுற்றியுளள விஷயங்களை ஆவணப்படுதது" என்றார் அவர் நாஞ்சில் நாட்டுப் பாணியில சொன்ன வாசகங்களில் சில இப்போதும் மறக்க முடியவிலலை "நீ என்னதான் சாடினாலும இலக்கியத்தில் ரெம்பவும் சாதிகக மாடடாய். மிஞ்சி மிஞசிப் போனால ஒரு கட்டுரைத் தொகுதி யளவுககு மிஞசும். நாட்டுப்புற இயலை நீ எடுததுக்கொள். எதாவது செய்யமுடியும்" என்றாா.

நா. வா வைச சந்திதது நாலைந்து வருஷங்கள் கழிதது மதுரைப பலகலைக்கழகததில் பிஎச் டி ஆய்வுககுப பதிவு செய்தேன். (1980) தலைபபு "நாஞசில் நாட்டுச் சிறுதெய்வங்கள". அபபோது நாடடாா தெய்வம் எனற சொல் பரவலாக வழககில் வரவில்லை. நா.வா. தயாரிததுக் கொடுத்த கேள்விப்பட்டியலின் அடிபபடையில் செயதி களைச் சேகரிக்க ஆரம்பிததேன். அநதச் சமயததில அவர் கலகத்தாவில் இருந்தார். அவா எனககு எழுதிய கடிதத்தில் "சிறு தெய்வங்கள் தொடர்பான தகவல்களுடன் .. அதற்கே உரிய வடடார வழக்குச் சொறகளையும் குறித்து வைத்துக்கொள்; பின்னால் பயனபடும" என்று எழுதியிருநதார். ஒருவகையில் இந்த அகராதித் தொகுபபின மூலகாரணமே நா. வா வின் இந்தச் சிறுகடிதம்தான் என்று நினைக்கிறேன்.

ஏதோ காரணத்தால், சிறுதெய்வங்கள் ஆய்வைத் தொடரவில்லை. அந்த ஆயவைப பாதியிலே விட்டுவிடடேன். மறுபடியும் 1983ல் மதுரைப பல்கலைககழகததிலேயே பதிவு செய்தேன. தலைப்பு நாஞ்சில் நாடடு வில்லிசைப் பாடல்கள். தலைபபுககுரிய ஏடுகளைத் தேட ஆரம்பித்தேன். அது புதிய அனுபவமாக இருந்தது, அப்போது ஆறுமுகப்பெருமாள் நாடாரின் பழககம் கிடைத்தது. இவரது

உதவியுடன் 42 விலலிசைப் பாடல்களைச் சேகரித்தேன். இவற்றில் பாதிககு மேல் வழக்கில் இல்லாதவை இதனால இநத வில்லிசைப் பாடலகளில பல சொற்களுககுப் பொருள தெரியாமல் திகைத்தேன். அபபோதெல்லாம் ஆறுமுகபபெருமாள நாடார்தான் உதவினார். மகப்பேறு நடககும் அறை - மகபபேறு பாரப்பவர் - மகப்பேற்றுக் குரிய கத்தி இபபடி எல்லாவறறிறகும் தனிததனி சொற்கள் வில்லுப் பாட்டில இருநதன பிராமணா வாழும் தெருவை அகரம என்று குறிப்பதும் சோதிடனைச் சோதிரி என்பதும் விலலிசைப பாடலகளில காணமுடிநதது. இப்படிப் பல சொற்கள் நாஞ்சில் நாட்டிற்கே உரிய பேச்சுவழக்குச சொறகளாய் உள்ளவை வில்லிசைப் பாடல்களில இருந்ததைக் கண்டேன்.

இந்த முறை என் ஆய்வு வழிகாட்டியாக இருந்தவர் டாக்டர் வே. சிதம்பரநாதன் இவர் இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறார் இவர் மொழியியல துறையைச் சார்ந்தவர்; என்னை சிரத்தையுடன் நெறிபபடுத்தியவர்.வில்சைப்பாடல்களில் காணப்படும் சொற்களின் சேகரிப்பைப் பற்றி இவரிடம பேசியபோது இவர் எல்லாச் சொற்களையும் முறைப்படியே தொகுதது அவற்றின் பொருளையும் சேர்த்து ஆய்வேட்டின பின்னிணைப்பில் கொடுக் கலாம் என்றார்.

என் ஆய்வேட்டின் பக்க வரையறை காரணமாக இநதச் சொற் களைப் பின்னிணைப்பில சேர்கக முடியாமல் ஆயிற்று. அதே சொற்களை இந்த அகராதியில் கொடுத்திருக்கிறேன் சில சொற்களுக்குப பொருள கண்டுபிடிக்க முடியவில்லை. அவற்றை இந்தத் தொகுபபில் சோககவிலலை.

என முனைவர் பட்ட ஆய்வைத் தொடர்ந்து 17 - 18 ஆண்டுகளாக நாஞ்சில் நாட்டில் பல்வேறு சந்தாப்பங்களில் பல்வேறு காரணங களுககாகத தொடர்ந்து களஆயவு நடத்திக்கொணடிருக்கிறேன். தென்குமரியின் கதை (கன்னியாகுமரி மாவட்ட வரலாறு) என்ற நூலை நாட்டார் வழக்காற்றுச செயதிகளின் அடிப்படையில் எழுதுவது என்று தீர்மானித்து, செயலபட்ட பிறகு என் பயணம் மறுபடியும் தொடாநதது. இந்தச சமயங்களில் வட்டார வழக்கு அகராதி என் மனதில் ஓடிக்கொணடிருநதது பெரும்பாலும் ஒவ்வொரு நாளும எனக்குப புதிய சொற்கள கிடைக்கததான் செய்தன. பழைய சொற்களின பொருளைக் கண்டுபிடிபபதற்கு ஆட்கள் கிடைககத்தான் செய்தாாகள.

ஒரு நாள்; நாஞ்சில் நாட்டில் மலையை ஒட்டியிருந்த பன்றியோடு என்ற ஊருக்குப் போயிருந்தேன். அந்த ஊா காட்டின் நடுவில் இருநதது நான் அந்த ஊரின எல்லையில் இருந்த கோவிலுக்குப் போக வேணடும. கூடவே தம்பி ஜெகதீசனும இருந்தான. எனககுக் கோவிலை விட, கோவிலைப பராமரிதத ராபபாடி (புரதவண்ணான்

சாதியைச் சார்ந்தவா) ஒருவரைச் சந்திக்க வேண்டும. அவரது பாடல்களைப் பதிவு செய்ய வேண்டும என்றுதான போனேன்.

நாங்கள் போகவேண்டிய கோவிலை அடையாளம் கேடபதற் காகச் சுற்றுமுற்றும் பார்த்தோம்; ஆள் அரவமில்லை. வேறு வழியில்லாமல் ஒரு வீட்டின் முன வேலிக்கதவைத திறந்து உள்ளே போனோம வீட்டு முற்றததில 60 - 65 வயதில் பெண் நினறு கொணடிருநதாள் அவள் கையில் ஒனறரை வயதுக குழந்தை. அதைத் தன்னை மறந்து கொஞ்சிக்கொண்டிருநதாள்.

"என் தெருலோககிய கட்டி ... சர்பேததிரங்கண்ணு ... ஆனைக குஞ்சரம் ..." இப்படியாக வருணித்துக கொண்டிருந்தாள். நான் கோவில் இருககும இடம் பற்றிக் கேட்க வேண்டும எனபதையே மறந்து போனேன். 'தெருலோக்கியக் கட்டினனா என்ன அர்த்தம்' என்று அவளிடம் கேடடேன். அவள என்னை ஒரு தினுசாகப் பார்த்தாள. தலையில் தொப்பியும், தோளில் ஜோல்னாப் பையுமாக இருந்த என்னைப் பற்றி என்ன நினைத்தாளோ? பதில் பேசவில்லை. நான அந்தச் சூழ்நிலையை உணர்ந்தேன் என்னைப் பற்றியும், அங்கு வந்த காரணத்தையும் சொன்னேன் மறுபடியும் அந்தச் சொல்லுககு அர்ததம் கேட்டேன். அவள் முகம், மலர ஆரமபிததது. அதுவா, "குறுமபே செயயாத என கட்டின்னு அர்த்தம்" என்றாள்.

எனக்கு அவள பேசியதும் விளக்கியதும் வித்தியாசமாக இருந்தது. பேச்சுவழககில் இல்லை என்று நினைத்த சொற்களை யாரோ பேசிககொண்டிருக்கிறார்கள்; மறைந்துவிட்டது என்று முழுதும் நம்பிய சொற்களை யாரோ எப்போதாவது பேசுகிறார்கள் என்பது ஜீரணிக்க முடியாததாக இருந்தது. நான் இதைக் காலஞ்சென்ற வயதான முதுபெரும புலவர் ஒருவரிடம் சொன்னபோது அவர், "ஈததாமொழி பக்கத்துலே ஒரு வியாபாரி ஒருவரை எனக்குத் தெரியும்; அவர் பேத்தியைப் பிரசவத்திற்குக் கோபாலபிள்ளை ஆஸ்பததிரியில் சேர்ந்திருந்தார். அவர் பேசும்போது பிரசவ வார்டை ஈத்துப்பெரைன்னு சொல்வதைக் கேட்டிருக்கிறேன்" என்றார். ஈத்துப்பெரை என்ற சொல் வில்லுப்பாட்டில் மட்டுமே வருகின்ற சொல்.

நாஞ்சில் நாட்டின பின்னணியில எழுதப்பட்ட நாவல்கள் சிறுகதைகள ஆகியவற்றிலிருந்தும் பெருமளவு சொற்களைத் திரட்ட லாம் என்று நான் முடிவு செய்திருந்தாலும் அதை முறையாகச் செயய ஆரமபித்தது நாலைந்து வருஷஙகளுக்கு முன்புதான். நாஞ்சில் நாடனின் தலைகீழ்விகிதங்கள் நாவலைப் படித்துச் சொற்களை வரிசைப்படுத்தி வந்தேன். ஒரு சொல்லின் வேறுவேறு பொருட் களைக கணடுபிடிப்பதில்தான் சிககல் வந்தது. இந்த நிலையில்தான் நாஞசில் நாடனைச் சந்தித்தேன். என் அகராதி முயறசி பற்றிச் சொனனேன அவர் 'நல்ல பணி செய்யுஙகள்' என்றார். இது

நடந்து இரண்டு மூன்று நாட்கள் ஆயிருக்கும. ஒருநாள் கோவையிலிருநது தொலைபேசியில் கூப்பிட்டார். நாகர்கோவிலில் உளள ஒரு திருமண மண்டபத்தின் பேரைச் சொல்லி அங்கே நாளைககுச் சாயங்காலம வாருங்கள; பேசலாம் என்றார். அவர் சொனனபடி போனேன என்னைப பார்த்ததும், நீள லெட்ஜர் நோட ஒன்றைத தநதார். நான் நோட்டை விரித்துப் பார்த்தேன். நாஞ்சிலநாடனே அவரது படைப்புகளிலிருந்தும் நினைவிலிருந்தும் தொகுத்த நாஞசில் நாடடு பேச்சு வழக்குச சொற்கள் அதில் இருந்தன. சிலவற்றிற்குத்தான் பொருள எழுதியிருந்தார்; உத்தேசமாக 250க்கும மேற்பட்ட சொற்கள் இருககும் என்றார் அவர். தொடர்நது என்னிடம் உங்கள தொகுப்பில் இவற்றைச் சேர்ததுக் கொள்ளுங்கள் என்றார். அவர் சேகரிதத சொற்களில் நான் ஏற்கனவே தொகுதத சொற்களும் இருநதன, நான் தொகுக்காத வழக்கிழந்த சொற்கள் அவரின் சேகரத்தில் இருந்தன.

'தென்குமரியின கதை' நூலுக்காக நாஞ்சில் நாட்டுப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், பொதுவான வழக் காறுகள, நாட்டார் விளையாட்டுக்கள் எனப் பல்வேறு வகைகளில் வந்த எம். பில்., பிஎச டி., ஆய்வேடுகளைப் படிக்க ஆரம்பித்தபோது வழககாற்றுச் சொற்களையும் குறித்துக்கொண்டே வந்தேன.

இந்தச் சொற்களின் சேகரம் எனக்கு அகராதியைத் தொகுக்க லாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. நான தொகுத்த பல சொறகளுக்கு அாத்தம கண்டுபிடிப்பதில்தான் பெரும் சிரமப்பட்டேன். பேச்சு வழக்குச் சொற்களுக்குரிய அர்ததத்தைக் கேட்க ஆரம்பித்த பொழுதுதான் சிக்கல் தெரிய ஆரம்பித்தது. "பூனாம் பூனாம்" என்ற சொல்லுககு அர்த்தம கேட்டபோது நாஞ்சில்நாட்டு தமிழப் பேராசிரியரே திகைததார். அதற்கு அவர் உடனே பதில் சொல்லவில்லை. கொஞ்சம் யோசித்துவிட்டு, "நான் என் ஒரே மகளைப் பூனாம் பூனாம்னு வளர்ததேன் . . . இப்படி ஆயிற்றே" என்ற ஒரு நீண்ட சொற்றொடரைச் சொல்லிப் பொருளைக கண்டுபிடிக்கச் சொன்னார் சிலசொற்களுக்கு இப்படித்தான் பொருளைக் கண்டுபிடித்தேன்.

'எருசிரிச்சான் மூலை' என்ற சொல் எப்படியோ என் சேகரத்தில் வந்து சேர்ந்தது. அதற்குப் பொருளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொன்னார்கள். ஒருமுறை ஒரு கலயாண வீட்டில் வயதான ஒருவரைச் சநதித்தேன. அவர் பழுத்த விவசாயி; அவரிடம அநதச சொல்லுக்குப் பொருள் கேட்டேன். அவர் ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியரும் கூட. அவர் அதற்கு விரிவான விளக்கம் சொல்லி விட்டு இப்போதெல்லாம் மிசின் வசசு உழ ஆரம்பிச்சுட்டான். இது எதுக்கு என்றார். நான் விவரத்தைச் சொன்னேன். அவர் ஒரே சிரிப்பாய சிரித்தார் 'இது நொர்நாட்டியம் பிடிச்ச வேலேல்லா' என்றார். எனக்கு அப்போதுதான நொர்நாட்டியம என்ற

சொல்லுக்குச 'சிககலான, கஷ்டமான, செய்ய முடியாத' எனற பொருள்களும உள்ளன என்று புரிந்தது.

சாதிகள் தொடர்பான பேசசுவழககுச சொற்களில் சாதி அடையாளததை அடைபபுக்குறிககுள் கொடுக்கலாம; சாதி தொடாபான வழககாறறுப பிரயோகங்களைச் சேர்க்கலாம எனற ஆலோசனைகளைச சிலர் சொன்னார்கள. இப்படிச் செய்வது பல இடர்ப்பாடுகளை உண்டாககும் எனபதை அனுபவபூர்வமாக உணாநததால் இதை ஆரம்பததிலேயே விட்டுவிட்டு விட்டேன. நாஞ்சில் நாட்டு கிராமங்களிலிருந்து நாகர்கோவில் நகரததுககுக் குடியேறிய சாதியினர் சாதி வழககாறுகளிலிருந்து அந்நியப்பட்டுக கொணடு வருவது போலவே சாதிக்கே உரிமையுடைய சொற்களைத் தவிர்த்துப் பேசுவதில் கவனமாக இருககின்றனர். சாதிக் கலவரம் அதிகம நிகழும் தென் மாவட்டங்களில் இது போனற விஷயங் களைக் கூறுவதில் நாட்டார் வழக்காற்றியல் ஆயவாளனுக்குப் பெரும சிக்கல வருகிறது இதற்கு ஒரே வழி தவிர்ப்பதுதான் என்று முடிவு செய்தேன்.

உவினஸ்லோவின் தமிழ் அகராதி 1862 ல் வெளிவந்தது இதில 'கும்பகோணம' என்ற சொலலுக்குப் பிததலாட்டம் எனறு பொருள் கொடுக்கபபட்டுளளது. இதே சொலலை (1929) சென்னை பலகலைக் கழகம் வெளியிடட தமிழ் லெக்சிகனில் சோபதற்குப் பெரும எதிர்பபு வந்திருக்கிறது. கடைசியில் இதைச சேர்க்காமல விட்டு விடடனர். தமிழ் லெகசிகனின பொறுபபை ஏற்ற வையாபுரிப் பிள்ளை இது போனற சிக்கலைச் சந்தித்திருக்கிறார்.

'சானறு' என்ற சொலலுககு கள என்று பொருள் கொடுத்ததற்குப் பலா எதிாப்பு தெரிவித்தனர். அதனால் சான்றாணமை எனற சொலலைக கொடுத்துக் கள்ளிறக்கும் தொழில் எனப பொருள கொடுத்தனர். சானறு அடியாகப் பிறந்த சான்றோர் என்ற சொல்லுக்குக கள்ளிறக்கும் தொழிலைச் செயபவர் என்று பொருள கூறுவதையும தவிர்த்தனர். இது போலவே முதலி என்ற சொல்லுக்கு முதலியார் எனப் பொருள் கொடுககக் கூடாது என எதிர்பபு வந்தது. வையாபுரிப்பிள்ளை இது குறிதது லட்சுமணசாமி முதலியார், பம்மல சம்பநத முதலியார் போன்றோர்களுடன விவாதிதது முதலி என்ற சொல்லுககுரிய வேறு பொருள்களைக் கொடுத்து விடடுச் சாதிப் பெயரைக் கொடுககாமல, பாாகக முதலியார் என கொடுத்திருககிறாா. இதே சமயததில் பாாபபனசசேரி எனற சொல்லைச சேரககலாம என்ற விவாதம் வந்தபோது, அச்சொல் பழைய இலககியங்களில் உள்ளது என்று சமாதானம் கூறியதும் எதிர்ப்பு அடஙகிவிடடதாம். அச்சொல் லெக்சிகனில் சேர்ககப் படடது

சாதி தொடர்பான சொற்கள மட்டுமல்ல, ஊரைக்குறிக்கும் பிரயோகஙகளைக கூடச் சேர்ப்பதில வையாபுரிப்பிளளைககுச்

சிககல வநதிருக்கிறது. 'தெனகாசி உபசாரம்' என்பதற்கு உள்ளன் பிலலாத உபசாரம என்ற பொருள் லெகசிகனில உளளது. இதைக் குறித்து ஒருவர் வையாபுப்பிளளையிடமே "நீர் சைவபபிளளையாக இருநதும இதைச் சோககலாமோ" என்று கேடடாராம்.

இப்படியான இந்தச் சிககல்கள் சுமார 70 ஆணடுகளுககு முனபே ஒரு தொகுப்பாளனுககு வந்ததென்றால் இன்று (2004) ஒருவன் இதை எப்படிச் சமாளிப்பான்.

நான் முதலில "மொறயாம்பிள்ளை வேலை" என்ற பிர யோகத்தைச் சோத்திருநதேன். தனக்குப் பிடிக்காதவனை அவமானப்படுத்த, தான் அதில் மாட்டிக் கொளளாமல் சாமாத் தியமாக இனனொருவனை வைதது அவமானபபடுத்திவிட்டுத் தானும் நல்ல பேர வாங்குவது என்பது இந்தப பிரயோகததின விளககம். இதற்குச் சமூகப் பின்னணி உண்டு.

பழைய திருவிதாங்கூர் அரசின் காலத்தில நாஞ்சில் நாட்டின் பன்னிரண்டு பிடாகைகளிலும உள்ள கிராமங்களில் மூத்தபிள்ளை என்ற பட்டப்பெயர் பெற்ற மருமக்கள்வழி வேளாளர் தலைவராக இருந்தார். இவர் ஒருவகையில் வருவாய்த்துறை அதிகாரி போன்றவர் இவருக்குக் கீழே இருந்த பணியாளா முறையான் பிள்ளை. இவர் ஊரில் திருமணம் இறப்புச் சடங்குகளில் குற்றேவல் செயபவர். இவரை மூத்தபிள்ளைகள அடிமையைப் போலத்தான நடததினர். முறையாமபிள்ளையும் வேளாளர்தான. இவருக்கு மூத்தபிளளையை எதிர்த்துப் பேசவும் முடியாது, எதிர்க்கவும் ஆசை.

அப்போது ஊர்க்கூட்டஙகள் அம்மன் கோவில்களிலோ அம்பலங்களிலோ நடந்தன. தலைவரான மூத்தபிள்ளை வருவதற்கு முன்பாகவே ஊர்க்காரர்கள கூடியிருக்க வேணடும். எல்லோரும் வந்தபின மூததபிள்ளை வருவார். அவருக்கு முன்னே முறையான் பிள்ளை வருவார். முறையான்பிள்ளை கூடியிருக்கும் மககளில இளைஞர்களைப் பார்த்து "மூத்தபிள்ளை வாறார்; எழுந்து நில்லுங்கோ, மரியாதை கொடுக்கணும்" என்று மெதுவாகக் கூறுவார். இது மூத்தபிள்ளைக்குக் கேட்காத அளவில் கூறுவார்; அதோடு ஊரில் அடாவடிததனம் உளள இளைஞர்களைப் பார்ததும் சொல்லுவார். முறையாமபிள்ளையின் தொனி, "நீங்கள் மூத்த பிள்ளைககு மதிப்புக் கொடுக்காவிட்டால இவர் உங்களைத் தொலைத்துவிடுவார்' என்று கூறுவது மாதிரி இருக்கும். முறையாம் பிள்ளையின இந்தப் பேச்சு எதிர்விளைவை உண்டாககும். கொஞ்சம் அடாவடித்தனம் உளள இளைஞர்கள், "மூத்தபிள்ளை மயிரப் பிடுங்குவான" என்று உரக்கச் சொல்வாரகள. முறையாம்பிள்ளை விடமாட்டார். "பெரியவங்கள அப்படிச் சொல்லாதே" என்பார் விடலைகள மீணடும அதைச் சொல்வார்கள். மூத்தபிள்ளை கேட்கும்படி சொல்வார்கள் மூத்தபிள்ளைககுக் கூட்டத்தினரை

ஒனறும சொல்ல முடியாது. முறையாமபிள்ளைக்கு நினைத்தது நடந்ததில திருப்தி. மூததபிள்ளையிடம் நலல பெயர் வாஙகிக் கொண்டே அவருக்கு ஊரில் எதிர்ப்பை உண்டாக்கிவிடுவார்.

இத்தனை பின்னணியை உள்ளடககிய "மூத்தபிள்ளைக்கு மொறையாமபிளளை" என்ற பிரயோகம் நாஞ்சில் நாட்டில் இன்று வழக்கில் இலலை இபபோதும் "ஆளுரு" எனறு ஒருவனைக் கூப்பிட்டால் மற்றவர்கள் அவனை ஒரு தினிசாகப் பார்ப்பார்கள், அவனும் எதிர்வினையாற்றுவான். இந்தச் சொல்லுக்குப் பின்னாலும ஒரு பினனணி உண்டு. ஆக இபபடியான பிரயோகஙகளைக கொஞ்சம் நான் தொகுகக ஆரம்பித்ததும் இவற்றைப் பதிவு செய்வதன எதிர்விளைவை உணர்நது விட்டுவிட்டேன். உவின்ஸலோ காலத்தில (1862) இருந்த சுதந்திரம வையாபுரிப்பிள்ளைக்கு (1929) இல்லாமல் ஆகிவிட்டது. இந்த நிலையில் (2004) நான் எல்லாவற்றை யும் பதிவு செய்யும உரிமையை எப்படி எடுத்துக்கொள்ள முடியும?

இந்த நூல ஆசைபற்றி அறையலுற்றதன் வெளிப்பாடுதான். இதைத் தொகுப்பதற்கு அரசு நிதி உதவியோ தனிப்பட்ட நிறுவனத்தி னரிடமிருந்து பொருள் உதவியோ நான் பெறவில்லை. தொகுப் பிற்காக அலைநதபோதெல்லாம் என் கைபபணத்தைத்தான் செலவழித்தேன்.

இந்த அகராதியில் 3424 சொற்கள் உள்ளன. இது ஆதார நூல அலல. மறுபடியும நான் சொலலிக் கொளகிறேன். நாட்டார் வழககாற்றியல் ஆய்வாளனின் கடின உழைப்பின் வெளிப்பாடு தான் இது. இலககணமும மொழியியலும் அறிந்தவர்கள் இநத நூலைச் செபபனிடுவார்கள் என்று நமபுகிறேன்.

இந்த நூல் முடிநத முடிவலல. விடுபட்ட சொற்கள் நிறையவே இருககலாம. அகராதி என்பது முடிந்து விடுவதும் அல்ல. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியின வைர விழாவை 1897ல் கொணடாடினார்களா. அப்போது அந்த அகராதித் தொகுப்பை விக்டோரியா மகாராணிக்கு உரிமையாக்கினர். இந்த நேரத்தில், "இது முற்றிலும் நிறைவு பெற்றால் சிறந்த செயலாகத்தான் இருக்கும்" என்ற வாசகத்தை உரிமை உரையாகக் கூறினர். அகராதி முடிநத முடிவல்ல என்பதைக் குறிககவே இந்த வாசகம் கூறப்பட்டது என்று வையாபுரிபிள்ளை ஒரு இடத்தில குறிப்பிடும் இநத வாசகத தையே நானும் சொலலிக கொள்கிறேன்.

அ. கா. பெருமாள்

# நன்றியுரை

என் சொல் சேகரங்களை ஆரம்பத்தில் தனித்தனித் துண்டுத் தாளில் தான் எழுதிக்கொண்டு வந்தேன். அத்தனையும் ஒன்றாகக சேர்ந்த பிறகு அகரவரிசைபபடுத்துவதில் வந்த மலைப்பின் - அலுபபின் போதுதான என் நண்பர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறை பேராசிரியா டாக்டர் என். ராமச்சநதிரன் உதவ வநதார். கணிப்பொறியில் அகரவரிசைப்படுத்த பெரிதும இவர் உதவி செய்தார்.

என் ஆய்வுகளுககுத தொடர்ந்து உதவிக் கொண்டிருப்பவர்கள் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழககாற்றியல் துறை அறிஞாகள். இத்துறை நூலகத்தை நான் உரிமையுடன் பயன்படுதத அனுமதியளித்தவர் அருளதந்தை பிரிட்டோ அவர்கள.

இந்நூலுக்கு அணிநதுரை தந்தவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சு. இராசாராம் அவர்கள. அகராதித் தொகுப்பு பற்றி அடிக்கடி இவரைக் கலந்தாலோசித்தேன். பரிவுடன் அறிவுரை கூறினார். நான் மனம் தளர்ந்து சேகரத்தை நிறுத்தி வைத்தபோது தொடர்ந்து ஊக்கம் கொடுத்தார்.

என் நண்பர் நாகர்கோவில் தெ.தி இந்துக் கல்லூரிப் பேராசிரியர் டாகடர் எஸ். ஸ்ரீகுமார் கடற்கரை மக்களின் பேச்சு வழக்குச் சொற்களைத் தொகுக்க உதவினார். இந்த அகராதியின் முயற்சிக்கு பெரும் ஊக்கம கொடுத்தவர் இவா. இவரின் சக ஆசிரியரான டாக்டர் தெ. வே ஜெகதீசன் உழவுத்தொழில் தொடர்பான சொறகளைத் தொகுக்கவும், கடினமான சொற்களின் பொருளை அறியவும் உதவி செய்தார். இந்துக்கல்லூரி ஆங்கிலப் பேராசிரியரான மா. சுப்பிரமணியம என்னுடன களஆய்வுக்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறார்.

தமிழ் லெக்சிகனில் உளள நாஞ்சில் நாட்டுப் பேச்சுவழக்குச் சொற்களை ஒப்பு நோக்க என் மகள் செல்வி ரம்யா துணை நின்றாள்.

இநநூலைக கணிப்பொறியில் வடிவமைததவா் திருமதி லீலா. இரண்டு வருடங்களாகப பலமுறை நான் தொடா்ந்து செய்த திருத்தங்களை முகம் சுளிக்காமல் சரி செய்தாா்

இந்நூலில் உள்ள வரைபடங்களை வரைந்தவா் திரு மாரிஸ் அவா்கள். இந்த வரைபடஙகளில் பல மாதிரிகளை வரைய உதவிய வா் டாக்டா் தெ. வே ஜெகதீசன. என் மகள் செல்வி ரம்யாவும் சில படங்களை வரைந்தாள்.

என் ஆய்வு முயற்சிக்குத் தொடா்ந்து ஊககமளித்து வருகிறாா் எழுத்தாளா் ஜெயமோகன் அவாகள். நண்பா் வசநதகுமாா் இந்த நூலை வெளியிட அன்புடன் இசைந்தாா்.

என கல்லூரித் தாளாளா் டாக்டா் ச. மனகாவலப் பெருமாள் அவா்கள் இநநூலை வெளியிட அனுமதி அளித்தாா; என் துறைத் தலைவரும, நீண்ட நாள் நண்பருமான பேராசிரியா் சி. தாணு கிருஷ்ணன அவா்கள் அச்சுப்பிழையைத் திருத்த உதவினாா். முழு நூலையும ஒரு சேரப் பாா்ததுத் திருதத எம். எஸ். அண்ணாச்சி துணை நின்றாா்.

இவா்கள் அனைவருககும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

471- 53 B2 கவிமணி நகா்
தெ. தி. இந்துக்கல்லூாி தெற்கு
நாகா்கோவில் 629 002

அ.கா. பெருமாள்

# அ

**அக்கச்சி** அக்கா; மூத்த சகோதரி.

**அக்கடா** விச்சிராந்தியாக இருத்தல், சும்மா இருத்தல.

**அக்கா** மூதேவி; மூத்த இசக்கி என்ற நாட்டார் பெண் தெய்வம்; இருளடைநத முகம.

**அக்காணி** பதநீர்.

**அக்கி** உஷ்ணததால் வரும் நோய்.

**அக்கி எழுதல்** திருஷ்டி பரிகாரம் செய்தல்; திருஷ்டியால வரும் உடல் கொப்புளத்திறகுச் சிவப்பு மண்ணால் பரிகாரம் செய்தல; அக்கிப்புண் தீர செங்காவிக் குழம்பால சிங்கம், நாய் உருக்கள் எழுதுதல்.

**அக்கியானி** பார்க்க: அக்காணி.

**அக்குதொக்கு** ஒட்டுப் பற்று, தொடர்பு, சம்பந்தம், சொந்த உறவு.

**அக்யானம்** சந்தேகம்; தீய நிகழ்ச்சி நடந்துவிடுமோ என்ற பயம்; மனப்பிரமை; தீய சகுனம் நிகழ்வதன் காரணமாக ஏற்படும் மனவிகற்பம்.

**அகப்பத்து** கிராமத்தைத் தொட்டு இருக்கும் வயல்.

**அகப்பைக்குறி** அகப்பையளவு.

**அகமுடையான்** கணவன்.

**அகரம்** வீடு.

**அகராதி** மிகுந்த அறிவுடையவனாக, சாமார்த்தியம் உடையவனாக பாவிக்கும் திமிர்பிடித்தவன்; சொன்னதை உள்வாங்காமல் திமிர்பிடித்துப பதில் பேசுபவன்; குழபபம் ஏற்படுத்துபவன.

**அகலக் கால்வைத்தல்** ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் போது மிக விரிவாகப் பரந்த அளவில் தொடங்குதல்; அச்செயல் குறித்த அறிவில்லாமல் ஆரம்பித்தல்

**அகவுதல்** அழைத்தல்.

**அகோரன்** சிவன்.

**அங்க சேட்டை** கை காலகளால் குறும்பு செய்தல்.

**அங்கசங்கம்** பகட்டு.

**அங்கண** அங்கே.

**அங்கணம்** வீட்டு அடுக்களைப் பகுதி; முற்றம; அடுக்களையில் பாத்திரம கழுவும் இடம்; மழைநீர் பிடிககுமிடம்; சலதாரை.

**அங்கலாய்த்தல்** துக்கம் அடைதல்.

**அங்கி** நாட்டார் தெய்வ விழாக்களில் தெய்வ உருவத்தின் மீது அணிவிக்கும் வெள்ளி அல்லது செம்பு உலோகத்தினாலான கவசம்.

**அங்கிரியக்கூத்து** நாட்டார் தெய்வக கோவில் விழாக்களில் நடக்கும் விகாரமான கூத்து.

**அங்குசு** சிறப்பு; போலியான சிரத்தை

**அங்ஙத்தை** ஊர் அதிகாரி; கோவில் நிர்வாக அதிகாரி; மதிப்பிற்குரியவர்.

**அச்சாரம்** முனபணம; ஆரம்பம்; முன்னதாகப் பதிவு செய்தல்.

**அச்சாணியம்** பார்க்க: அக யானம.

**அச்சி** கேரளத்து வைப்பாட்டி

**அச்சு** சாயல்; பழைய நாணயம்; வண்டியின அச்சு.

**அச்சுமுறுக்கு** இரும்பு அச்சி னால் தயாரிக்கப்படும் இனிப் பான முறுக்கு.

**அசட்டாளம்** ஆரவாரம்; ஒழுங் கீனம்

**அசட்டை** கவனமினமை

**அசடன்** மூடன், விவரமில்லா தவன்.

**அசத்து** சுடடித்தனம்; தீய பிள்ளை; விஷமத்தனம செய் கின்றவன்

**அசத்துதல்** நாகரீகமாக உடை; ஒப்பனை செயதல்

**அசதி** சோர்வு

**அசந்து** தன்னிலை மயங்கி.

**அசர்தல்** அயாதல.

**அசல்** அடுதத குடும்பம்; முதல்; மூலமானது

**அசலூர்** வெளியூா.

**அசாத்தியம்** சிறப்பாக; அழகாக; அடடகாசமாக, நன்றாக, சாதிகக முடியாதது.

**அசுர வைத்தியம்** காலரா நோயக்குக கடைசியாகச் செய்யபபடும் வைத்தியம; காந்தாரி மிளகை அரைத்துக குடிக்க வைத்து வாந்தி பேதி எடுக்க வைப்பது.

**அசேசம்** முழுதும்

**அசை** துணிகள் போடும் நீணட மூஙகில; துணி போடும் மரத் தாலான கொடி.

**அஞ்சல் ஓட்டம்** தபால்காரரின் ஓட்டம்.

**அஞ்சறப்பெட்டி** சமையலறை யில, மஞ்சள், கடுகு, சீரகம, வெந்தயம், பூண்டு முதலியவை வைக்கப் பயன்படும் ஐந்து அறைகளுடைய மரப்பெட்டி.

**அஞ்சாலி** வயல்களுக்கு விதிக்கப் பட்ட வரி; பெரும்பாலும் கோவில் நிலஙகளைப் பரா மரிப்பவருக்குரிய வரி.

**அஞ்சாங்கொம்பு** வயலில் விதைத்த ஐந்தாம் நாள் தண ணீா அடைக்கும் முறை

**அஞ்சே (அஞ்ச)** அங்கே.

**அட்டக்கரி** அடர்த்தியான கறுபபு நிறம்.

**அட்ட தரித்திரம்** குணம்; சம பத்து, தனம், நல்ல குலம், ரூபம், வித்தை, விவேகம், ஆகியவை இல்லாத நிலை.

**அட்டணங்கால்** காலை குறுக் காக மடக்கி வைத்தல்; பார்க்க: நட்டணக்கால்.

**அட்டி** புத்தக நோட்டு அட்டை மூடைகளின் அடுக்கு; மறுப்பு

**அட்டியல்** உடகழுதது தங்க நகை.

**அட்டியில்லாமல்** மறுப்பில்லா மல்.

**அட்டு** சோம்பல, அழுக்கு; கசடு; தரித்திரம்.

**அட்டுப்பிடித்தல்** அலங்கார மின்றிச சோம்பல்தனமாகச் செயலற்று இருத்தல்.

**அட்டூழியம்** தீயசெயல; குறுமபு, அநியாயம்.

**அடக்கம்** பிணத்தைப் புதைத்தல்; அடஙகுதல்.

**அடக்கவிலை** பொருளுக்குரிய மொத்தவிலை, வாங்கின விலை.

**அடக்கோழி** அடைகாக்கும் கோழி.

**அடங்கல்** மொத்தமாக; அனைத் தையும் அடக்கி.

**அடங்காப்பிடாரி** யாருக்கும் அடங்காதவன; மந்திரவாதி களால அடக்க முடியாத பிடாரி.

**அடப்பு (அடைப்பு)** விடுமுறை, சுற்றி வேலியுள்ள தோட்டம்.

**அடம்** பிடிவாதம; முறணடு.

**அடவு** முறைகள்; தந்திரம்.

**அடவோலை** குத்தகை ஒப்பந்த ஆவணம.

**அடாவடி** கொடுஞ்செயல்.

**அடாவடித்தனம்** போக்கிரித் தனம்.

**அடிக்கட்டு** மணபானை வேக வைக்கப் பயனபடும் சூளை யின் அடிப்பகுதி.

**அடிச்சூடு** பாதத்தில உறைக்கும் வெப்பம்.

**அடிச்சோறு** கட்டிபிடித்த சோறு; பாத்திரததில் ஒட்டி உண்ப தற்குப பயனபடாத சோறு.

**அடிப்பிடித்தல்** அதிக வெப்பத் தால சோறு தீய்ந்து போதல்; உணபதற்குப் பயனபடாமல் ஆகுதல்; சேர்த்துக கொளளல்

**அடிபாடு** மாடு முதலியவற்றின் உழைப்பு.

**அடிமடி** இடுப்புப் பகுதி மடி.

**அடிமடியில் கைவைத்தல்** ஆதாரப் பகுதியில் பிடித்தல், ஒரு செயலின் முககியமான பகுதியைப் பற்றுதல்.

**அடிமண்** கீழ்மண்; சூனியம் செய்ய எடுக்கும காலில ஒட் டிய மண்.

**அடிமாடு** கசாப்புக் கடைக்குக் கொண்டு செல்லபபடும மாடு; உழைக்க முடியாத நிலையில் உள்ள மாடு.

**அடியந்தரம்** இறப்புச் சடங்கு; ஒருவர் இறந்த 16ஆம் நாள் நிகழ்வது; கருமாதிச் சடங்கு.

**அடியந்திரக்காரன்** அடியந்திரம் நடத்துபவன்.

**அடியுரம்** மரபு வழி வரும் சொத்து; முன்பு இட்ட எரு; மனவலிமை.

**அடியோலை** தென்னைமரத்தின் அடிப்பகுதியில் உள்ள முற்றிய ஓலை.

**அடிவயிறு** வயிற்றின் கீழ்ப்பகுதி.

**அடிவைத்தல்** குறிப்பிட்ட ஒன்றை மனதில் வைத்தல் (அடிவச்சுப் பேசுதல்).

**அடுக்களை** சமையலறை.

**அடுக்குப்போணி** ஒனறினுள் ஒன்றாக அடங்குமபடி வைககப்படும பாத்திரம்.



அடுக்குப்போணி

**அடுப்பங்கரை** அடுப்பை அடுத துளள இடம், சமையலறை.

**அடை** ஒட்டு; அணடை; முட்டு; அரிசியும் பருபபும் கருவேப் பிலையும் கலந்து அரைத்த மாவால சுடபபடும் தோசை; பாரக்க: அண்டை.



அடை

**அடைப்பு** பார்கக. அடப்பு.

**அடைமண்** கலப்பையில் ஒட்டும மண்

**அடையோலை / அடவோலை** வயலைக் குத்தகைக்கு வாஙகு பவர் நில உடமையாளருக்குக் கொடுக்கும ஓலை.

**அண்டம்** அண்டி; குதம்

**அண்டவிடாமல்** நெருஙகவிடா மல்.

**அண்டா** பெரிய செம்புப் பாத் திரம்.

**அண்டி** முந்திரிப் பருப்பு; கொல் லானகொட்டை பருப்பு; மூல முளை நோய்

**அண்டை** அருகே; ஒட்டு; முட்டு.

**அண்ணங்காய்** ஒருவகை வாழைக்காய், பாளையங் கோட்டான.

**அண்ணத்தப்பாடு** அனறன றைக்கு; அன்றைய பொழுது.

**அண்ணாக்கயிறு** அரைஞாண கயிறு; இடுபபில் கட்டப்படும் கயிறு.

**அண்ணாவி** ஆசிரியர்; வில் லிசைக கலைஞர்.

**அணக்கயிறு** மாட்டில் பால் கறக்குமபோதோ மருந்து கொடுக்கும்போதோ காளைககு லாடம அடிக்கும்போதோ பின் னங்கால்களைக் கட்ட உதவும் கயிறு.



அணக்கயிறு

**அணக்குழி அம்மன்** நெருப்பில விழுந்து உயிரை மாய்தத நாட டார் பெண் தெய்வம.

**அணவடைத் துணி** கைக்குழந் தையைத் தரையில் அல்லது மடியில் வைக்கப் பயன்படுத் தும் துணி.

**அணவடைப்பிள்ளை** கைக் குழநதை.

**அணிமரம்** கட்டுமரத்தின் குறு கிய விளிமபு.

**அணைகட்டுதல்** தன குற்றத்தை மறைக்கத் திட்டமிட்டுச் செயல்படுதல்.

**அணோடைப்பிள்ளை** பார்க்க: அணவடைப்பிள்ளை.

**அணோடைப் பழஞ்சில** பார்கக: அணவடைத துணி.

**அத்தகுத்தம்** சிறு பழுது; சிறு மராமத்து.

**அத்தம்** அற்றம; கடைசி.

**அத்தாந்தரம்** நடுவழியில், பாதியில்.

**அத்தாளப்பட்டினி** இரவுப் பட்டினி.

**அத்தாளம்** இரவு, கடுமை, தனிமை; இராச் சாப்பாடு

**அத்துக்கு** ஒரு பேச்சுககு.

**அத்துப் பேசுதல்** முறிததுப் பேசுதல்

**அத்துபடி** முழுமையான அறிவு, தெளிவு, எல்லாம் தெரிநத நிலை

**அத்துவானம்** உடல் உழைப்பு, உடல உழைப்பிறகாக வளைநது கொடுக்கும் நிலை.

**அத்துவானம்** கடுமையான உழைப்பு.

**அதிகப்பற்று** அதிகமாகப் பறறிக் கொண்ட பொருள

**அதிகப்பிரசங்கி** அளவுக்கு மீறிப் பேசிக்கொண்டிருபபவர்; பேச ஆரமபித்து எளிதில் நிறுத் தாதவர்.

**அதிய விளைச்சல்** மிகுநத சாமர்ததியம உடையவன; அதி சாமர்த்தியசாலி; கோபம, நக் கல் தொனி.

**அதிரசம்** பணியார வகை.

**அதுக்காச்சுட்டி** அதற்காக.

**அதுதாலா** அதுதானே.

**அந்தராயம்** கோவிலுககுப் பகதர் களால் தினமும கொடுக்கப் படும் உள் வருமானம்.

**அந்தாக்குல** பார்கக: அந்தால.

**அந்தால** அதோடு; உடனே; அப்புறம்.

**அந்து போதல்** உறவு முறிதல்; இரண்டாகுதல.

**அந்துற்று** அறுந்து போயிற்று.

**அப்பச்சர்** அபபா.

**அப்பச்சி** அப்பா; தந்தை

**அப்பம்** அப்போது.

**அப்புண்டு** பாாக்க: அப்புராணி.

**அப்புதல்** ஒட்டுதல் ; பூசுதல் ; ஒற்றுதல் , தேய்த்தல்.

**அப்புராணி** (அப்பிராணி) ஒனறும் அறியாதவன், உலக அறிவு இல்லாதவன்.

**அப்பை** ஒருவகை மீன்.

**அப்பைக்கப்ப** அப்போதைக்கு அப்போது.

**அபிசேகச் சம்பா** சமபா வகை நெல்.

**அபேச்சை** விணணப்பம்.

**அம்மச்சி** பாடடி; வயதான ஆசசி.

**அம்பலமாதல்** குறிப்பிட்ட செய்தி எலலோருக்கும் தெரியும்படி ஆதல்.

**அம்பாரம்** நெற்குவியல்.

**அம்பிடுதான்** அவ்வளவுதான்.

**அம்மச்சி** தாய்; அம்மா

**அம்மணங்குண்டி** நிர்வாணம (குழந்தையைக் குறிப்பது)

**அம்மன் கூத்து** கணியான் ஆட்டத்தின் துணையாட்டம்; வேப்பிலையைக் கையில் வைததுக கொண்டு ஆடும் சடஙகு சார்ந்த நாட்டார் கலை.

**அம்மன்வகை** ஊருக்குப் பொதுவான அமமன் கோவிலின் சொத்து.

**அம்மாச்சான்** மாமா; பாாக்க: காரணவர்.

**அம்மாடி** அதிசயக் குறிப்பைக் கூறும் வியப்புச் சொல்; அம்மையே; ஆசுவாசம்

**அம்மாடி அடித்தல்** இறப்புச சடங்கில் பெண்கள் வட்டமாகச் சுற்றிவநது கைகளால மார்பில் அடிததல். இது இரண்டு வட்டமாக இருக்கும். முதல வட்டத்தில் விதவைகளும், உள் வட்டத்தில சுமங்கலிகளும் கனனிகளும் இருப்பர். இப்படி அடிக்குமபோது அமமாடி தாயாரே என்று சபதததுடன் பாடி அழுவர்.

**அம்மிப்பால்** அம்மியில் கறிக்கு அரைததபின கழுவும்போது வழிக்கபபடும் கலவை நீர்.

**அம்மை** அம்மை நோய்.

**அமட்டுதல்** வருத்தப்படுதல்; மயககுதல; மனக்கிலேசம கொள்ளுதல்; வாநதி வருவது போன்ற மனநிலையிருததல்

**அமத்திக்கிட்டு இருத்தல்** பேசாமல் செயலற்று இருத்தல்; எதுவும செய்யாமல் இருத்தல்; மௌனமாக இருத்தல்.

**அமத்திட்டு** அடங்கி.

**அமல்** அமைதி.

**அமுக்கறை** மௌனமாக இருநது குறும்பு செய்பவன்; இரகசியமாகச் செயல்படுத்துபவன.

**அய்ய** அவர்கள்.

**அயத்தல்** மறந்து போதல்.

**அயந்து** பார்கக : அசந்து.

**அயர்தல்** சோர்வடைதல்.

**அயிலை** ஒருவகை மீன்.

**அயிலை பிடித்தல்** பழைய சோற்றில் தணணீா மிகுதியாக விட்டுக குடித்தல்.

**அர்ஜி** புகார்; முறையீடு.

**அரக்கல்லு** அம்மி.

**அரக்குதல்** மரத்தின் இலை தழைகளை வெட்டுதல்; வேகமாகச் சாப்பிடுதல்; சவைத்தல்.

**அரங்கு** உக்கிராண அறை; விலை உயர்ந்த பொருட்களை வைககும் அறை

**அரசல் புரசலா** தெரிந்தும் தெரியாமலும்

**அரசாணி** திமிர்பிடித்த வாயாடிபபெண்; அரட்டல் புரட்டல்; வாந்தி வரும் மன நிலை, ஏமாற்றி வாழ்தல்.

**அரசிலை** பெண் குழந்தைகளுக்கு இடுப்பில இடும் அரசு இலை வடிவ ஆபரணம் ; பெண்குறி.

**அரட்டல் புரட்டல்** வாந்திவரும் மனநிலை; ஏமாறறி வாழ்தல்.



அரசிலை

**அரணைப் புத்தி** ஒன்றைக கேட்டவுடன் மறந்து போதல்.

**அரநாணம்** பார்க்க : அரைஞாக கொடி.

**அரப்பு** சீகைக்காய அரைப்பு.

**அரமும் அரமும் கிண்ணரம்** ஒத்த மனமில்லாதவர் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலை.

**அரவணை** சர்க்கரைப் பொங கலைப் போன்ற இனிப்பான உணவு.

**அரி** அரிசி; ஒரு கைப்பிடி நெற் கதிர்; அரிந்து வை.

**அரிக்கஞ்சட்டி** அரிசி அரிக்கும் செம்பு; அலுமினியப் பாத்திரம்.

**அரிக்கன் செம்பு** வெள்ளோடு உலோகத்தில் செய்யப்பட்ட சிறிய பாததிரம்.

**அரிக்காரன்** தூதன்.

**அரிக்கிராவி** ஒருவகை நெல்.

**அரிச்சு எடுத்தல்** நச்சரித்தல்.

**அரிப்பு** எரிச்சல்; பிரித்து எடுப்பு; தினவு; சல்லடை.

**அரிப்பு எடுத்தல்** உடம்பில ஊரல் வருதல; பாலுணர்வு செயறபடல்.

**அரியெடுப்பு** கதிரைச சூடடிப பவருக்குக் கூலி போக இரண்டு கைகளாலும அன்பளிப்பாகக் கொடுக்கும நெல்.

**அரிவட்டி** பனை ஓலையால் ஆன சிறிய பெட்டி; சாதம் பொங்க அரிசியைக் கழுவிக் கல் நீக்கி தண்ணீர் வடிய பயனபடுத்தும் பெட்டி.

**அரிஷ்டம்** விலை மலிவான போதை பானம்.

**அருச்சனை** ஏச்சு.

**அருமாந்த** பிரியமான; செல்ல மான.

**அருமானை** (அருவாமனை) அரி வாள்மனை; காய்கறி நறுக்க உதவுவது.



அருவாமனை

**அருமை** அன்பு

**அருவா** அரிவாள்.



அருவா

**அருவாக் கட்டு** நெல அறு வடைக கூலி; ஆள் தன்னியல் பாக எடுத்துககொள்ளும் ஊதி யம் சாரா நெல்; வயல் அறுக்க உதவும் கதிரருவாள்கள் பல சேர்ந்த கட்டு

**அருவு** விளிம்பு.

**அருளமாடன்** சுடலைமாடன் வகை.

**அருளாடி** பாராக்க : கோமரத்தாடி.

**அரை** இடுபபு.

**அரைக்கால்** கால் பகுதியில் பாதி, 1/8

**அரைக்கோட்டை** 10½ மரககால் அளவு.

**அரைஞாக்கொடி** (அரைஞாண கயிறு) அரைஞாணகொடி; இடுப்பில கட்டபபடும் கறுத்த கயிறு; குழந்தை இடுப்பின் ஆபரணம.

**அரை வச்சாச்சு** நெற்பயிரின் மூடு திரண்டுவிட்டது.

**அல்லற சில்லற** இடையூறு; குடும்பபபாரம்; பார்க்க · பிக கல் பிடுங்கல.

**அல்லு கில்லு** சிறிது சிறிதாக.

**அல்லோலப்படுதல்** சிறிது சிறி தாகச் சீரழிந்து கெடுதல்.

**அலக்கழிச்சல்** வீணான அலைச சல்; பயனில்லாத பயணம்; தொநதரவு.

**அலக்கு** பாாகக : தொரட்டி

**அலசுதல்** கழுவுதல; விமாசனம் பணணுதல்.

**அலத்தல்** உணவுககு ஏங்குதல்.

**அலப்பறை** அதிருப்தி உடைய வன, பார்க்க · அலவறததனம்

**அலப்பு** உணவுககு ஏஙகித் திரிதல்.

**அலம்புதல்** ததுமபுதல்.

**அலவலாதி** கீழத்தரமானவன.

**அலவறத்தனம்** எவ்வளவு உணவு கிடைத்தாலும திருபதி அடை யாத நிலை, சாபபாடு மீதான அபரீதமான ஆசை, நிறைவில லாத ஆசை.

**அலவாங்கு** கடப்பாரை

**அலவு** தாடை, அலகு.

**அலாக்கு** எளிது; தனிமை, லாகவம.

**அலாதி** தனியான; விததியாச மான; வேறுபட்ட.

**அலுக்கு பிலுக்கு** ஆடம்பரமாய் பந்தா காட்டுதல்.

**அலுசுவம்** அதிசயம, இதுவரை இல்லாத.

**அலைச்சல்** அலைந்து திரிதல்; அலைந்து வருந்தல்.

**அவ்வையாரம்மன்** வழிபாடடுக் குரிய அவவையார் எனற பெண தெய்வம.

**அவ்வோ / அவ்வ** கணவனைக் குறிக்க மனைவி பயன்படுத்தும் சொல், அவர்கள்.

**அவகாசி** உரிமையுடையவர்

**அவசரக் குடுக்கை** எப்போதும் அவசரப்படடுக் கொண்டிருப பவன்; எதிலும அவசரம காட்டுகிறவன்.

**அவசானம்** முடிவு.

**அவையம்** பார்க்க : அவயம்.

**அவதாரம்** ஊருககு அடங்காத வன், வீணாய் அலைந்து திரிப வன், ஊா சுற்றும குறும்புக் காரன்.

**அவதி** வாயதா; துனபம; விடு முறை.

**அவயம்** சப்தம்; பெருஙகூச்சல்

**அவஸ்தை** வேதனை; இடையூறு; மனவருத்தம.

**அவிய** அவர்கள்

**அவியல்** கத்தரிககாய், வெள்ளரிக் காய, புடலஙகாய, சேனை, மாங்காய், வாழைக்காய, முருங்கைககாய ஆகிய காய் களைக் கொண்டு தேங்காய் கலநது செய்யபபடும் கூட்டு.

**அவுட் விளையாட்டு** ஐந்து போ ஆடும சிறுவர் விளையாட்டு.

**அவுரு** கழறறு; முடிச்சை அவிழ்த்துவிடு.

**அவையான்** பெருசசாளி

**அவையான் பொந்து** பெருச் சாளி வளை.

**அழிகாரி** வீணான செலவு.

**அழிச்சாட்டியம்** சீரழிவு; கெடு தல் செய்தல்; இடையூறு.

**அழிமதி** அழிவு.

**அழிமானம்** கழிந்தவை; அழிந்த மதிப்பு.

**அழலை** ஒரு நோய் ; தொண்டை நோய்.

**அழுக்கன்** கஞ்சன்.

**அழுகினி** எப்போதும் அழுது கொண்டிருக்கும் குழநதை

**அழுத்தக்காரன்** எதையும் மன தில் வைத்துக் கொளளுபவன்; எதையும் வெளிப்படையாகப் பேசாதவன்.

**அழுதுவடிதல்** பொலிவு இல லாமல இருத்தல; துக்கச் சாயலுடன் இருததல், முகக் களையிலலாமல் இருத்தல்

**அளப்பம்** செய்தி; செய்தியறிய, நடநத நிகழ்ச்சி; அடுததவர் மனதில் உளள ரகசியமான கருத்து.

**அளபபமறிதல்** உடகருததைத் தந்திரமாக அறிதல்; செய்தி நடந்த நிகழச்சியை அறிதல்

**அளவன்** உப்பு எடுக்கும ஜாதி யினர்; சித்திரவலலியார் என்ற சாதியினர்.

**அளி** மாட்டுத தொழுவத்தில வைக்கோல் வைப்பதற்காகக் கட்டப்படடிருககும் மரக்கம்பு; தட்டி அல்லது மூங்கில் பிளாச்சு தட்டி; மரச்சட்டம், வீட்டின் முன் திணணையில் அமைக்கபபடுவது.



அளி

**அளிக்கதவு** மரச்சட்டத்தால் ஆன கதவு

**அளிவுகரிசு** சொத்தை அழிக்கப் பிறநதவன்.

**அளைதல்** கிளறுதல்; குழநதை சோற்றைத் தின்னாமல் பிசை தல்

**அற்றம்** இறுதி; கடைசி.

**அற்றகுற்றம்** பார்க்க : அத்த குத்தம்.

**அற்றுப் போதல்** பார்கக · அந்து போதல்.

**அறகுலமாடன்** சுடலைமாட னின் வகையான தெய்வம்.

**அறங்கூடு** படுககை அறை.

**அறப்பாத்தி** மாமிசம் அறுக்க உதவும் கத்தி

**அறப்பு** வெட்கம.

**அறப்பெரை** வீட்டின் முன்பக்கம அமைந்த தனியறை

**அறப்பேசுதல்** முடிந்த முடிவாகப் பேசுதல்; வெட்டு ஒன்று துணடு இரண்டாகப பேசுதல்.

**அறிவு சூடு** எச்சரிக்கை; அறி வுறுத்தும செயல்.

**அறுட்டு** கதர்நூல் கண்டு.

**அறுவங்குறுவா** குறுவா வகை யிலான நெல்.

**அறுத்த துட்டி** மனைவி உயிரு டன இருக்குமபோது கணவன் இறப்பதால் வரும் துட்டி.

**அறுத்தல்** இரண்டாக்குதல்; இலலாமல் ஆக்குதல; ஓரினச் சேர்க்கை.

**அறுத்துக் கிழித்தல்** கடுமையாகப பேசுதல.

**அறுத்து முறித்தல்** பார்க்க : பந்தம் ஒழிப்பித்தல்

**அறுதப்பய** விதவையின் மகன்; ஏசுவதற்குரிய சொல்.

**அறுதப்பயஓழி** தகாத உறவு வைத்துக்கொண்ட பெண்; ஏசு வதற்குரிய சொல்

**அறுதலி** கைம்பெண்; தாலி அறுத்தவள்.

**அறுப்பு** போர் அடித்தல்; ஓரின பால உறவு; வயல் அறுவடை.

**அறுப்புக் காலம்** கதிரறுககும் காலம்.

**அறுப்புத்துட்டி** பாாக்க : அறுத்த துட்டி

**அறை** கா்ப்பப்பை, பெண் குறி.

**அறைதிரத்தல்** பொதி வெளிவரு வதறகு முன் பயிரின் தடிப் பான பகுதி.

**அன்னக்காவடி** பிச்சைககாரன், தரித்திரன்; சாப்பாட்டிறகாக காவடி எடுப்பவன்

**அன்னங்காய்** பார்க்க : அண் ணங்காய்.

**அன்யோன்யம்** நெருக்கமான.

**அன்றாடு** தினமும்; நாளுககு நாள்.

**அன்றாடு காசு** வழக்கத்திலிருக் கும நாணயம்.

**அனக்கம்** அசைவு; பேச்சு மூச்சு இருத்தல.

**அனத்தம்** அரவம்; சப்தம்

**அனத்தம் கலக்கல்** மஞ்சள், சுண்ணாம்பு, வேப்பிலை கலந்த நீர்; திருமண, இறப்பு சடங்குகளில் திருஷ்டி கழிக்க செய்ய உதவும் நீர்

**அனத்தல்** சூடாக்குதல்.

**அனத்துதல்** மேற்பாாவை செய் தல்; சிரத்தையுடன் கவனிததல்.

**அனந்தரப் பணம்** திருவிதாங் கூர் நாணயம்.

**அனாமத்து** யாருக்கும் உரிமை யில்லாத.

**அனுப்பானமாக** வசமாக; ஏந்தலாக

## ஆ

**ஆக்கம் கெட்டவன்** ஒழுக்கம், உறுதி இலலாதவன; உருபபடா தவன்; எதற்கும் உதவாதவன

**ஆக்கணாங் கெளிறு** கெளிற்று மீன.

**ஆக்கினை** தண்டனை.

**ஆக்குப்புரை** திருமணம், பிற சடங்குகளுக்குப் போடப்படும் ஓலைக் கொட்டகை; காம ணம்; சமையல் பந்தல்.

**ஆக்கெளுத்தி** கெளிற்று மீன

**ஆக்ஞை** ஆணை.

**ஆகப்பாடு** மொத்தம்.

**ஆகாடியம்** கிண்டல செய்தல்; குறும்பு கொடுமை.

**ஆகாதவன்** தீயவன், பிரயோ ஜனமற்றவன.

**ஆச்சி** பாட்டி.

**ஆச்சிக்குட்டி** ஆட்டுககிடையிலி ருந்து தானமாக வழஙகப்படும் ஆட்டுக் குட்டி.

**ஆச்சியாடு** இலவசமாகக கிடைக் கும் ஆடு.

**ஆச்சை** (ஆழ்ச்சை) கிழமை; ஆசசு.

**ஆச்சை முறை** துட்டி கேடபதற குரிய ஞாயிறு, வியாழன் ஆகிய நாடகள்.

**ஆசான்** ஆசிரியர்; வைத்தியன்; போர்க்கலையைக் கறபிப் பவர், சிலம்பாட்டக்காரர்; நாட்டார கலைக்குழுத் தலை வர்.

**ஆட்டம் காணுதல்** சோர்ந்து விடுதல்; பொருளாதார நிலை யில் சரிதல்.

**ஆட்டாங்கள்ளி** திருகுகள்ளி.

**ஆட்டாம் புழுக்கை** ஆடடின சாணம்.

**ஆட்டுரல்** (ஆட்டுககல்) தோசை மாவு அரைக்கும் கல்



ஆட்டுரல்

**ஆடாதோடை** ஒருவகை மருந்துச் செடி.

**ஆடிக்கழைத்தல்** ஆடி மாதம முதல நாளில திருமணமான மாப்பிள்ளையையும் பெண ணையும் பெண வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தல்.

**ஆடித்தங்கல்** புதுமணபபெண் ஆடி மாதம் பெறறோரின் வீட் டில் தஙகுதல.

**ஆடிப்போதல்** செயலற்று மனம் வெதும்பி இருத்தல்.

**ஆடியறுதி** ஆடி மாதத்தின் கடைசி நாள்.

**ஆடு சதை** சதைப்பற்றுள்ள முழஙகால் பகுதி.

**ஆடு தின்னா பாளை** ஆடு தின் னாத செடி.

**ஆடுபாரம்** மாட்டுவண்டியில் பாரத்தை முன்னும் பின்னு மில்லாமல் சமமாக வைத்தல்.

**ஆண் சிரட்டை** தேங்காயின கண்ணிலலாத பாதி ஓடு; கொட்டாங்கச்சியில் கண இலலாத பாதிப பகுதி.

**ஆண்டு** ஒருவர் இறந்த ஒரு ஆணடு நிறைவடைநத நாள் நிகழ்சசி; இறபபுச் சடங்கு.

**ஆணம்** கறிககுழம்பு; கட்டி கறிக்குழம்பு; அடர்த்தியான குழமபு, துண்டுகள் அலலாத குழம்பு

**ஆத்தா** பாட்டி.

**ஆத்தாடி** களைப்பாக உட்காரும் போது சொல்லும இளைபபாற் றல் சொல

**ஆத்தாது** நிறைவு வராது; மனத் திருபதி வராது.

**ஆத்தாமை** பறிகொடுதது பரித விததல.

**ஆத்திமாடன்** சுடலைமாடன தொடர்பான மாடன்.

**ஆத்துதல்** திருடிச் செல்லுதல், சாமாததியமாகக் கவருதல்

**ஆதாரம்** பிரமாணம்.

**ஆதாளி** ஆரவாரம, பேய் அல் லது ஆவிகள சப்தமிட்டு கல வரம் செய்தல.

**ஆதாளிக்காரன்** இடக்காகப் பேசுபவன்

**ஆமக்கன்** கணவன்; தந்தை; தாயைப் பெண்டாளுபவன்; இழிவான ஏசல வழக்கு.

**ஆமக்கா** பெணகுறி

**ஆமப்படப்பு** மோடுகூடாத வைககோல் போர்.

**ஆமைவடை** பருப்பு வடை.

**ஆய்** குழநதைகளின் மலம், மோசமான பேச்சுக் குறிப்புச் சொல்.

**ஆய்தல்** ஆய்நது எடுததல், மீன ஆய்தல.

**ஆயக்கட்டு** நீர் பாயும் வயல் பரப்பு.

**ஆயக்கால்** கடவுளின் திருஉரு வலம்வரும் வாகனத்தைச் சுமப்பவா வாகனததை நிறுத் தும்போது பயன்படுத்தும் வலிமையான கழி; வாகனத் தைத் தாங்கும் முட்டுக்கால்.

**ஆயக்கோல்** பார்கக · ஆயககால்.

**ஆயம்** தீர்வை, நிலவரி.

**ஆயினிச்சக்கா** ஒரு வகை பலா.

**ஆரச்சர்** தூக்குத் தண்டனை பெறற குற்றவாளிகளின தண்ட னையை நிறைவேறறும் திரு விதாஙகூா சமஸ்தான அதிகாரி.

**ஆரத்தி எடுத்தல்** பார்க்க : ஆலத்தி எடுததல.

**ஆராசனை** நாட்டார் தெயவக கோவிலில் ஆடும் சாமியா டிககு வரும் அருள.

**ஆராட்டு** பெருநெறித் தெய்வத் தைக கடல் அல்லது ஆற்றில நீராடடுதல்.

**ஆராட்டுதல்** கோவில் விழாத் தெயவத்தை கடல அலலது நீா நிலையில நீராட்டுதல்.

**ஆரைக்கால்** வண்டிச் சக்கரத் தின் ஆரம.

**ஆலத்தி எடுத்தல்** சுபகாரியம், துக்க காரியஙகளில் தொடர்

பானவாகள வீட்டில் நுழையும போது மஞசள், சுண்ணாம்பு, வேபபிலை கலந்த நீர் பாதததி ரத்தால் அவரின் தலையைச் சுறறித் திருஷ்டி கழித்தல.

**ஆலாப்பறத்தல்** ஆலாபபறவை போல பறத்தல்; சாபபாட்டுக காக ஏங்கி அலைதல்.

**ஆவலாதி** புகார்.

**ஆவாகனம்** பழைய கோவிலில் உள்ள தெய்வததைப் புதிய குடம அல்லது விககிரகத்தில உரு ஏற்றுவது.

**ஆவிச்சேர்த்து** ஆரத் தழுவி.

**ஆழம் பார்த்தல்** ஒருவனின் மனதைச் சோதித்தல; மனத்தின எணணத்தை அறிய முயற்சி செய்தல்.

**ஆழாக்கு** ஓர் அளவு.

**ஆளாக்கு** வளர்த்து விடு.

**ஆளாகுதல்** பார்க்க . சமைதல்.

**ஆன மட்டும்** முயன்ற மட்டும்; கூடியவரை; முடியும அளவு.

**ஆனையர்க்குளா** மீன வகை.

**ஆனைக்கொம்பன்** ஒரு வகை நெல்

## இ

**இக்கட்டு** துன்பம; இடையூறு.

**இகசுக்கு** நீா முள்ளிச் செடி.

**இங்கன** இங்கே; இந்த இடத்தில்.

**இசக்கியம்மன்** நாட்டார பெண் தெய்வம

**இசகுபெசகு** முறைகேடு.

**இசப்புதல்** ஏமாறறுதல்.

**இசலிப்பு** பார்கக · எசலிப்பு.

**இசவு** மகபபேறு வேதனை.

**இஞ்ச** இங்கே.

**இஞ்சி** கோபம், முசுடு.

**இட்டலிக் குட்டுவம்** இட்லிக கொபபறை.



**இட்டலிக் குட்டுவம்**

**இடக்கு** குதாககம்; பார்கக : எடக்கு.

**இடங்கழி** ஒரு படியளவு; மரப் பாத்திரம்.

**இடச்சன்** இரண்டாவது குழநதை, இரணடிலொன்று முடிவாக; தீர்க்கமாக; உறுதியாக.

**இடங்கை** இடங்கைச் சாதிகளைத் தலைமையாகக் கொணட சாதிகளின் குழு; வலங்கை அல்லாத சாதிகள்.

**இடத்தே** இடது பக்கம

**இடவழிப்பிணம்** பாாகக . எட வழிப் பிணம்.

**இடவன்** மாட்டு வண்டியில் இடபபக்கம் பூட்டிய காளை, ஏரில இடது நுகத்தில் பூட்டப படும மாடு.

**இடிச்சக்காய்** பார்கக சீமச்சக் காய்

**இடிதாங்கி** மிக மோசமான பரதததை, காம வெறி பிடித்த பெண்.

**இடிமுடுக்கு** ஒரு ஆள்கூட சாவ காசமாகச செல்ல முடியாத குறுகிய சந்து

**இடுக்காஞ்சட்டி** மிகச் சிறிய மண அகல்; கார்த்திகை மாதம் வீட்டின முன வைககப்படும் சிறிய அகல் விளக்கு.



**இடுக்காஞ்சட்டி**

**இடுக்கு** சுருங்கிய வழி; குறுக லான இடம்.

**இடுக்குத்தடி** களளூறும் பானையை நெருக்கிப பிடிகக வைககும் இரடடைத தடி; பனை மரததின பாளைகளைப் பதப்படுததப பயன்படும் இரண்டு கட்டைகளால இணைக்கபபட்ட இடுக்கி போன்ற கருவி.

**இடுக்குதல்** பனையில் பதனீர் எடுக்கப் பாளையைச் சீவி பானையைக் கட்டும செயல்.

**இடுக்குபானை** களளிறககும் பானை.

**இடுப்பு வலி** மகபபேறு வலி.

**இடைஞ்சல்** இடையூறு, தொந் தரவு

**இடையம்புளி** ஆடு மேயககும் இடையர்கள் தயாரிககும் குழம்பு. சுடட மிளகு வத்தல, புளி, உப்பு, கறிவேபபிலை, உள்ளி சோத்து தயாரிப்பது.

**இடைவாழை** மலையிலுள்ள மருந்து

**இண்டு** சிறிய அளவு.

**இணுங்கு** பெயர்த்து எடு; இணுககு.

**இதமாய்** கனிவாக.

**இப்பம்** இபபோது.

**இம்மி** கொஞ்சம்கூட; சிறிதளவு.

**இயக்கியம்மன்** பார்க்க : இசக்கி யமமன.

**இரசவடை** இரசத்தில ஊறப் போட்டப் பருப்புவடை.

**இரத்தச் சுரப்பு** செருக்கு ; கொழுப்பு

**இரப்பட்டி** குடல்; இரைப்பை

**இரப்பாளி** யாசகம செயபவன்; கஞ்சன்; பிச்சைககார குண முடையவன; பழிப்பிற்குரிய சொல்.

**இரவுதன்** குதிரை ஓட்டுபவன்.

**இராசியாதல்** சமாதானம் ஆதல்.

**இராட்டு** ஊர்சுற்றுபவன் (பழ ராட்டு).

**இராப்பாட்டாளி** குடுகுடுப்பைக் காரன; குடுகுடுப்பை அடிததுக குறி கூறும் மராட்டியன் அலலது தெலுஙகுக்காரன

**இராப்பாடி** பாாக்க : ராப்பாடி.

**இராவு** இரவு.

**இராவைக்கு** இரவுக்கு.

**இராஜமேளம்** நாட்டார் இசைக கலைஞர்கள் நிகழ்ச்சியை

ஆரம்பிக்கும முன் எல்லோரும் ஒருசேர இசைக்கருவிகளை இயக்கும் நிகழ்ச்சி.

**இரி** உட்கார.

**இரிக்கி** இருககிறது.

**இருக்கட்டும்** போதும், ஏற்றுக் கொள்கிறேன்.

**இருப்புச் சட்டுவம்** பெரிய அண்டாவில் சோறு பொங்கும் போது சோற்றைக கிளறப் பயன்படுத்தும் பெரிய சட்டுவம்.



**இருப்புச் சட்டுவம்**

**இரைகடி** வயிற்று வலி.

**இரைப்பட்டி** பார்க்க : இரப்பட்டி

**இலங்கப்புரை** போர்க் கலை பயிற்சிககாகக் கடடப்படட தற்காலிகமான ஓலைபபந்தல்

**இலாடக்காரன்** இலாட சந்யாசி; பைராகி.

**இலுப்படி மாடன்** இலுபபை மரத்தை இடமாகக் கொணட மாடன; ஆண் தெய்வம.

**இலைவாணியர்** செட்டியார் ஜாதியில் ஒரு பிரிவினர்; வெற்றிலை விற்கும் செட்டியார்

**இவிய** இவாகள்.

**இழுகுதல்** கடடியான பொருள் நீர்வடிவம் ஆதல்.

**இளக்கம்** இளகிய தன்மை; நெகிழ்ச்சி; பார்க்க : ளைக்காரம்

**இளக்காரம்** தாழ்நிலை; இழிவான நிலை; பரிகாசம், துசசமாக நினைத்தல.

**இளக்குதல்** கோள மூட்டம்

**இளநாக்கடித்தால்** யோசிக்காமல் விருப்பம் தெரிவிததல்; ஒருவரைத் திருப்தி செய்ய உதவுவதாக வாககளிததல.

**இளப்பம்** சிறு வயது.

**இளவட்டம்** இளம் வயதுடையவன்.

**இளவன்** இளம் தேங்காய்; விளையாத தேங்காய்; ஒரு வகை தடியன்காய்.

**இளிச்சவன்** எளிமையானவன்; அப்பாவி.

**இளிச்சவாயன்** ஒன்றும் தெரியாதவன்; எளிதில் ஏமாற்றப் படுபவன்.

**இளைப்பு** பார்கக : எளப்பு.

**இறுக்கம்** இறுதி நேரம்; நெகிழாத தன்மை; தட்டுப்பாடு.

**இறுங்கு** மக்காச் சோளம, இறுகியது.

## ஈ

**ஈக்கமாறு** தென்னை ஈர்க்குகளால் ஆன துடைப்பம்.

**ஈச்சை** ஈ.

**ஈசல் பொரி** ஈசலைப் பொரித்து மிளகு பொடி தூவித் தயாரிக்கும் சிற்றுண்டி.

**ஈசான மூலை** வட கிழக்கு மூலை; உழவு, களை எடுப்பு

போனறவறறை ஆரம்பிக்கும மூலை

**ஈஞ்சை** ஒரு மரததின படடை, குளிககும்போது - உடமபு தேயக்கப் பயனபடுவது.

**ஈட்டான்** பதிவாகச் சந்திக்கும் இடம், குறிப்பிடட இடம்.

**ஈடு** பணையம்; அடகு வைத்தல்.

**ஈனுதல்** பசுவின் மகப்பேறு.

**ஈத்தளைதல்** மாடு பேற்றிற்காக வேதனைப்படுதல

**ஈத்து** ஆல.

**ஈத்து அத்தல்** நெல் பயிரின கதிர் முழுதும் வெளிவந்த நிலை.

**ஈத்துக்காரி** பிரசவம பார்க்கும் தாதி.

**ஈத்துக்கூலி** மகபபேறு நடததியதற்குக் கூலி

**ஈத்துப்புரை** மகபபேறு நடக்கப புதிதாகக கட்டுப்படும் ஓலை வேய்நத அறை.

**ஈத்துமாடு** இரண்டாவது கன்றை ஈன்ற பசு.

**ஈர்க்கல்** தெனனோலை நரமபு.

**ஈர்க்கின்றால்** இறால் வகை.

**ஈரங்கி** வழக்குக கேள்விமுறை (Hearing).

**ஈரணை** சாலவிட்டு சால உழுதல்.

**ஈரப்பனை** கூநதல் பனை

**ஈராங்கியம்** உள்ளி, வெங்காயம.

**ஈரிழைத்துவர்த்து** பாாக்க : துவர்த்து

**ஈருள்ளி** பேன் எடுக்க உதவும சீப்பு, வெங்காயம்.



**ஈருள்ளி**

**ஈற்றுப்பெறை** பார்கக : ஈத்துப் புரை

**ஈறல்** இளம மூங்கில்.

**ஈனம்** கீழ்த்தரம், இழிந்தவன்.

**ஈனன்** தலித் மக்களின் நாட்டார் ஆண் தெய்வம்.

## உ

**உக்கம்** கயிறு

**உக்கல் தோல்** உளுத்த தோல; பழுதடைநத தோல்.

**உக்காறு** பருவமடைந்த பெண்ணுக்குக கொடுக்கபபடும மருந்து வகை.

**உக்கிராணக்காரன்** கோவில உக்கிராண அறையைப் பராமரிப்பவன

**உக்கிராணம்** பலசரக்கு வைக்கப் படும் அறை.

**உக்குதல்** கெட்டுபோதல்; மக்கிப் போதல்.

**உகந்துடமை** கணவன தன சொத்தில் ஒரு பகுதியை மனம உவநது கொடுபபது (மருமககளவழி தொடர்பானது)

**உச்சக்கட்டம்** உச்சநிலை.

**உச்ச நேரம்** நடுப்பகல்.

**உச்சி** தலை; நண்பகல் நேரம், உயரமான.

**உச்சிக்கொடை** நாட்டார தெய்வக் கோவிலகளில் நடக்கும் நணபகல விழா

**உச்சிப்பொடி** குழநதைக்கு ஜலதோஷம் வராமலிருககக குளித்தவுடன் உச்சியில் வைக்கும் மருந்துப் பொடி

**உச்சினி மாகாளி** உஜஜய்னி மாகாளி என்ற நாட்டார் பெண் தெயவம்.

**உச்சு காட்டுதல்** (சூ காடடுதல்) நாயைத் தூணடி விடுதல்.

**உச்சு கொட்டல்** ஆமோதித்தல்.

**உச்சுகான்** காசுவைத்து விளையாடும ஒரு வகை விளையாட்டு.

**உச்சுதல்** பிறரது பொருளைத தந்திரத்தால் கவர்தல்.

**உடப்பிறந்தாள்** சகோதரி

**உடம்படி** ஏணி; ஒப்பந்தம்; மாடிககுச் செலலும வழியில் மேல்கீழாக ஆடிககொண்டிருக்கும் கதவு.

**உடமஸ்தன்** (ஒடமஸ்தன்) உரியவன், சொநதககாரன

**உடுமாத்து** மாற்றுத் துணி.

**உடுமானம்** ஆடை.

**உண்டாக்குதல்** உருவாக்குதல்; உடலுறவு கொள்ளுதல்.

**உண்டாயிருத்தல்** காப்பமாயிருத்தல்.

**உண்டியல்** காணிக்கை; காணிக்கைப பெட்டி.

**உண்டைக் கெளுத்தி** கடலில் உள்ள கெளுத்தி மீன்களில சிறிய வடிவில உள்ளது.

**உண்டைச் சம்பா** (வி.பா.) சமபா என்ற நெல்வகை; ஐநது மாதப பயிர்.

**உணக்க மீன்** கருவாடு.

**உணக்கம்** வாட்டம்.

**உணங்கி** (ஒணஙகி) உறைநது, காய்ந்து

**உணங்குதல்** காய்தல்.

**உத்தரம்** பதில சொல்; சமாதானம்; உத்திரக்கட்டை; ஜாமீன.

**உத்திரம்** பார்க்க : உத்தரம்.

**உதயம்பழம்** பழுககும பருவத்திலுள்ள புளியங்காய்.

**உதிர்புட்டு** புட்டவிக்கும குழலில் இடாமல் வாயகன்ற மண சட்டியில துணிகட்டித தயாரிக்கும புட்டு

**உதிரப்பாடு** உதிரப்போக்கு; கருச சிதைவின்போது ஏற்படும உதிரப பெருககு

**உதிரம் குடிப்பு** நாட்டார தெய்வ விழாவில் சாமியாடி பலியின குருதியைக் குடிபபது.

**உதிரிப்பூ** உதிரியாக உளள மலா

**உப்பந்துண்டம்** உப்பிட்டுக் காய வைத்த மீன; உப்பு மஞ்சள தேய்த்துக் காய வைதத மாமிசத துண்டு.

**உப்பு** நாட்டார விளையாட்டின் போது ஆதாரமாக இருககும் பொருள்; பார்க்க தாய்ச்சி

**உப்புக் கவட்டி** கபடி விளையாடடு.

**உப்பு சுமத்தல்** நாட்டார் விளையாட்டில் வென்றவனைத் தோறறவன் முதுகில சுமப்பது.

**உப்புபயிர்** உபபுப் பாத்திகளில் கடல் நீரைப பாய்ச்சுவதால விளைந்த உப்பு.

**உப்புப் பாத்தி** உப்பு விளையும இடம்.

**உப்பு மரவை** உப்பு வைககப் பயன்படும் மரப்பாத்திரம

**உப்புக்கண்டம்** உப்பு தடவி காய வைக்கப்பட்ட மீன் துணடு.

**உப்புக்கரித்தல்** உணவில் அதிக அளவு உபபு இருத்தல்.

**உப்புக்குத்தி** பின்னங்கால்.

**உப்புக்கோடு** கிளித்தட்டு விளை யாட்டில் உள்ள கோடு

**உப்புதல்** நீரில் ஊறுதல்.

**உப்புப் பாச்சா** உப்பில் வரும் கரப்பான பூச்சி.

**உபசரணை** உபசாரம்; அன் போடு விசாரித்தல்.

**உம்பளம்** லஞ்சம.

**உம்பிளிக்கம்** தயவு.

**உமிக்கரி** பல தேய்ககப பயன் படும் கரிபபொடி, உமியின கரி.

**உரக்குண்டு** எருக்குழி.

**உரச்சுப் பார்த்தல்** மோதிப் பார்ததல்; பலத்தைச் சோதிததுப் பார்ததல.

**உரசல்** சணடையால் வரும பிணக்கு.

**உரசுதல்** மோதுதல்

**உரப்பெட்டி** உலக்கை கொண்டு நெல் குததும்போது உரலின வாய்ப பகுதியிலிருந்து அரிசி சிநதாதவாறு வைக்கப்படும் நார்க கூடை.



**உரப்பெட்டி**

**உரி** அரை நாழி

**உரிஞ்சு விடுதல்** ஆடையை முழுகக அகற்றிவிடுதல்.

**உரிதல்** அபகரித்தல்

**உருக்குத்துதல்** அம்மை நோய்க குரிய ஊசி குத்துதல்.

**உருக்குலைஞ்சு** அழகு குறைந்து, நிலைதடுமாறிச செல்வம அழிந்து.

**உருகுதல்** இளைததல்.

**உருட்டு** ஏமாற்று; பொய் புரட்டு; ஒரு செயலைச் செயவதாகச் சொலலி மழுப்புதல்.

**உருட்டுதல்** பேச்சை மழுப்புதல, உணமையை மறைக்கச சாமாத தியமாகப் பேசல்

**உருப்படி** தங்க நகை; சரியாக; எண்ணம்.

**உருப்பாத்தி** ஒரு கடல் மீன்.

**உருப்பிடித்தல்** யாகத் தீயில் உருவை வெளிககொணர மந்திரம ஓதுதல்.

**உருட்டு பெரட்டு** தந்திரமாக ஏமாற்றுதல்.

**உருமா (உறுமால்)** திருமண மேடையில் உறவுமுறைக்காரர் களால் மணமகனின தலையில் கட்டப்படும் பல வண்ணத்

துணிததுண்டுகள்; மேல் துணடு.

**உருவி விடுதல்** ஒருவனிடம காரியத்தைச் சாதிக்கத் தய வாகப பேசுதல; நடித்தல். பரி காசச் சொல்.

**உருவுதல்** கெஞ்சுதல்

**உருவேற்றுதல்** துர்போதனை செய்தல்.

**உருவேறுதல்** ஆவேசம் ஏறுதல்.

**உருளி** வெங்கலத்தால் ஆன பாத் திரம.

**உலும்பு வாடை** கவிசச வாடை; கொச்சை வாடை

**உலை** சோறு சமைகக உதவும் அடுப்பு; சோறு சமைகக உத வும் பாத்திரம்; நெருப்புளள அடுபபு, சோறு சமைப்பதற் காகக் கொதிக்க வைக்கும் நீா.

**உலை மூடி** சோறு சமைகக உதவும் மண்பானையின மண ணாலான மூடி, பெண்குறி.



உலைமூடி

**உலக்களம்** (உரக்களம) நெல குத்த உதவும் உரல உலக்கை இருக் கும் இடம; நெல் குததுவதற் காகப் பயன்படுத்தும் அறை

**உலைவைத்தல்** ஒருவனுக்குக் கெடுதல் செய்தல்

**உவ** பதா.

**உவச்சன்** பார்க்க: ஓச்சன்.

**உழக்கு** முகததலளவு, கால்படி

**உள்மடி** வெளியே தெரியாதபடி இடுபபில் கட்டியிருக்கும் வேட்டியின் மடி.

**உள்வெண்டயம்** பொதி மாட் டின் முதுகில பொருளை வைக்க உதவும் அணை

**உள்ளன்** சூட்டி மாட்டுப பிணையின் உட்பகுதி மாடு.

**உள்ளி** சிறிய வெஙகாயம்.

**உள்ளில்லை** திராணியில்லை.

**உளத்துதல்** தட்டிக்கழித்தல்

**உளவுக்குள் விடுதல்** உழுத சாலில மறுபடியும் உழுதல, வெளிப்படையாகப் பேசாமல இருததல்.

**உளுந்தஞ்சோறு** சம்பா புழுங் கல் அரிசி, முழு உளுந்து, வெந்தயம், பூணடு, சுககு, தேஙகாய் சேர்தது பொங்கிய சாதம்.

**உளுந்தரைத்த அம்மி** மந்தம் பிடித்த நிலை; மசணை.

**உளைச்சல்** நரம்புக குததல்

**உறக்கச்சடவு** தூங்கி எழுநத பின்னர் உள்ள சோர்வு; தூக் கத்தினால் ஏற்படும் அசதி; தூக்கம் தொடங்கி விட்டதன் அறிகுறி.

**உறடு** உதடு.

**உறுக்குதல்** மிரட்டுதல்.

**உறுகிற்று** பிசகுதல.

**உறுஞ்சுதல்** ஒருவனைத் தந்திர மாக ஏமாற்றி கவருதல்.

**உறுதிப்படுத்தல்** (ஸதிரப் படுத தல) திருமணப்பெண, மாப்பிள் ளையை உறுதிப்படுத்தல.

**உறுப்பாங்கட்டி** மண் புழுக்கள் உருவாக்கும மணகட்டிகள.

**உறுமா** பாாகக · உருமா.

**உறுளி** பார்கக : உருளி

**உறை ஊத்துதல்** பால பிறை ஊற்றல்

**உன்னி** எழுமபிநின்று.

## ஊ

**ஊச்சாளி** ரவுடி; போக்கிரி.

**ஊசவடை** கெட்டுப்போன வடை.

**ஊசிச் சம்பா** சம்பா நெல்லின் ஒருவகை, நுனி கூர்மையான நெல.

**ஊசித் தொண்டை** கீசசுக்குரல உடைய தொணடை; அதிக அளவு சாப்பிட முடியாதவன்

**ஊசுதல்** பண்டம கெட்டுப் போதல்; சுவை கெடுதல்.

**ஊட்டி** கழுத்து.

**ஊட்டி அறுத்தல்** நம்பிக்கை துரோகம் செயதல்; கழுத்தை அறுததல், குரல்வளையை நெரிததல்; அடுத்துக் கெடுததல.

**ஊட்டு** காளி கோவில் விழா

**ஊட்டு கொடுத்தல்** பலி கொடுத தல

**ஊட்டுப்புரை** கோவிலில பிரா மணா உணவு உண்ணும் இடம்; கோவில விழாக்களில் சாப்பிடுவதறகுச சமைக்கப் படும காவணம.

**ஊடு பயிர்** ஒரு பயிரின் இடை யில சாகுபடி செயயப்படும வேறு பயிர்.

**ஊடுகோரிப்போடல்** பயிர் சரியாக இலலாத இடங்களில் பயிரைத தோண்டிப போடுதல

**ஊடுமம்பிட்டி** வயலில், வளராத இளம பருவத்தில், மூடு குறை வாக இருக்கும் இடத்திறகு மூடு கூடுதலாக இருக்கும் இடததிலிருநது மணணோடு பயிரை எடுத்துப் போட உதவும் மணவெட்டி; நீண்ட கையுடைய மணவெட்டி.

**ஊணிக்கமபு** மாட்டு வண்டியில பாரஙகள் விழாமல் இருககத தடுபபாக நடப்படும கம்பு.

**ஊத்தப்பம்** மிகவும் புளித்த தோசை மாவுடன் சோடா உப்பு, உள்ளி, பசசை மிளகாய் கலந்து சுடபபடும கனமான தோசை

**ஊத்தம் போடுதல்** வாழைப பழத்தை பழுகக வைக்கப் புகைபோடல

**ஊத்தங்கள்** புகைபோட்டு பழுகக வைத்த காய்.

**ஊத்தாங்கால்** வயல் அறு வடைக்கு முன வயல நீரைச சுததமாக வடிகட்ட அமைக்கப் படும கால்.

**ஊத்தாம்பட்டி** பலூன.

**ஊத்து** வாய்வழி உடலுறவு செய் பவன.

**ஊத்தை** அழுக்கு; பல் சொததை.

**ஊப்பாடு** கத்தி.

**ஊமைக்காயம்** விபதது அல்லது மனித தாக்குதலால் உடம்பில ஏறபடும புண இலலாத உள காயம்.

**ஊமைக்கிளாத்தி** கிளாததி என்ற மீனவகைகளில ஒனறு, நிறத துடன் கூடியது.

**ஊமைக்குசும்பு** (குசும்பு) நல்ல வனாக நடித்துக்கொண்டு கோள் சொல்லுதல், சணடை மூடடுதல், குசும்பு செய்தல்; அமைதியாக இருநது குறுமபு செய்தல்.

**ஊமைச்சி** கடல் மீன், தவிட்டு நிறமுடையது

**ஊரக்கருவாடு** உப்பு வைத்துப் பதப்படுத்தப்படட கருவாடு; காயாத கருவாடு.

**ஊரல்** அரிப்பு

**ஊரழைப்பு** திருமணம் போன்ற விசேஷத்துககாக ஊர் மக்களை அழைபபது.

**ஊராளி** தென்னை மரத்தில் ஏறு பவன்; மலைசசாதியன்.

**ஊருப்பட்ட** அளவுக்கு அதிக மாக; நிறைய. பார்க்க : எககச் சக்கம்.

**ஊரை** கோள் கூறுபவன, சரி யாகக் காயாத விறகு; கருவாடு; நெல்லுடன் வளரும் களை, வால் நெல்.

**ஊளியக்காரன்** சம்பளமினறி வேலை பார்க்கும் குறிப்பிட்ட சாதியன.

**ஊளியம்** சம்பளமின்றி பாரக்கும் வேலை.

**ஊளை** பொருத்த நிலையிலான அதிக சப்தம; ஆரவாரததுடன கூடிய சப்தம; கெட்டுப்போன பதார்ததத்தின வாடை

## எ

**எக்கச்சக்கம்** ஏராளம்; கணக்கி லடங்காத

**எக்காளம்** இளக்காரம்; தாழ்வாக நினைத்தல

**எக்காளப் பேச்சு** மதிக்காமல் பரிகாசமாகப் பேசுதல்

**எக்கு** இடுபபு.

**எக்குத்தப்பா** தவறுதலாக; எதிர் பாராமல்.

**எகுறுதல்** ஆணவததுடன நிலை கொள்ளாமல நிற்றல்

**எங்கிண** எஙகே.

**எச்சவலை** பலதரப்பட்ட மீன் களைப் பிடிககும் வலை.

**எசக்கேடு** இசைகேடாக; தவறு தலாக, முறையற்ற நிலையில்; தெரியாமல; சரியாக அறியாத நிலையில்

**எசகு பெசகு** தெரியாமல்; அகஸ் மாத்தாக.

**எசலிப்பு** பிணஙகுதல; வேண்டி யவர்கள இருவரும் சண்டை போடுதல்

**எசலுதல்** சண்டை இடுதல்.

**எசவு** தோதுவாய; பொருத்தமாய்.

**எட்டடிப் பாம்பு** விரியன் பாம் பின் ஒரு வகை.

**எட்டடி விரியன்** விஷமில்லாத விரியன் பாம்பு

**எடக்கு** நையாண்டி கலந்து வித்தியாசமாகப் பேசுதல.

**எடவழிப் பொணம்** ஒரு செயல் பாதியில் நிற்றல.

**எடவாடு** ஆதாரம; ஆவணம்; உறவு.

**எடுத்துக்கட்டி** (உழுதல்) ஆழமில் லாமல உழுதல.

**எடுத்துக்கட்டிக்கூறல்** இயல் பாக நடக்காத ஒன்றைத் தானே உருவாககிச் சொல்லு தல்

**எடுப்புக்காரி** கர்வமுடையவள்.

**எடுப்பு உழவு** விதைப்பதற்கு முன்பு உள்ள உழவு

**எடுப்பு வரி** கட்டாயமாகக் கடடப்பட வேண்டிய வரி.

**எண்ணெச் சிப்பல்** பலகாரத் தின் எண்ணெய் வடிவதற்குரிய துவாரங்கள் உடைய தட்டைப் பாததிரம

**எண்ணெய் தப்பளம்** தலையில் நிறைய நல்லெணணெய் தேய்த தல்.

**எண்ணெய் கக்கம்** காயச்சிய எண்ணெயிலுள்ள கசடு.

**எண்ணெய்க்காய்ச்சி** எண் ணெய காய்ச்சப் பயன்படும சிறிய கரணடி.

**எத்தன்** ஏய்ப்பவன்.

**எத்தனம்** ஆயத்தம்.

**எத்தனம் கூட்டுதல்** ஆயத்தம் செயதல.

**எத்துக்குத்தா** எதிர்பாராத விதமாக.

**எத்துதல்** ஏமாற்றுதல்

**எத்துவாளி** ஏமாற்றுக்காரன்.

**எதம்பதமா** மெனமையாக; முரட்டுததனம அல்லாமல்.

**எதிர்ப்பு** வழிப்பயணம் செய்பவ ருக்கு முன் எதிா வருதல்; எதிாப்படுதல்; சகுனம்.

**எதுக்களித்தல்** வாந்தி எடுத்தல்; மிதமிஞ்சிய உணவு உண்பதால் வயிறு குமட்டுதல்.

**எதுத்தால** எதிரில்.

**எதுப்பு** சகுனம்.

**எதேச்சை** தற்செயல.

**எப்பம்** எப்போது.

**எமட்டன்** ஏமாற்றுக்காரன்; அச காய சூரன்.

**எமப்பளுவன்** எமனையே ஏமாற்றுபவன்

**எய்ச்சோறு** கிராமத்தில் இருந்த ஒரு வரி.

**எரப்பாளி** பார்க்க : இரப்பாளி.

**எரிசேரி** சேனை அலலது வாழைககாயால சமைககப் படும நல்ல மிளகு சேர்நத ஒருவகைக் கூட்டு.

**எருசிரிச்சான்மூலை** வடமேற்கு மூலை. வடமேற்கில மேகம் கறுத்தால் மழை பெய்யாது என்பது நம்பிக்கை. வயலில உழும்போது வடமேற்கு மூலை யில எருது மேகத்தைப் பார்த்து, இன்று மழை வரும நாம் தப்பி விடலாம் எனறு சிரிக்குமாம். அதனால் பொதுவாக வயலின் வடமேற்கு மூலைப் பகுதியை எரு சிரித்தான் மூலை எனபது வழக்கம்.

**எல்லுப்பொடி** எலும்புப்பொடி உரம்

**எல்லைக்கதிர்** அறுவடை வயலைக் கூறுபிரிகக அடையாளமிடும முடிந்து வைக்கப்பட்ட கதிர்.

**எலக்காளை** ஒருவகைக் காளை.

**எலிப்பொறி** எலியைப் பிடிக்க உதவும் கூண்டு; எலிப்பத்தாயம



எலிப்பொறி

**எலுங்கொடி** மாடு ஈனும்போது வெளிப்படும நச்சுக்கொடி.

**எலைச் சுருட்டுப் புழு** நெற்பயிரின் இலையிலுள்ள பச்சையதனை உண்டு வளரும் புழு.

**எளக்கம்** பார்கக : எளக்காரம்.

**எளக்காரம்** இளப்பமாக; லெகுவாக; எளிதாக.

**எளகுதல்** தடையின்றிப் பேசிக் கொணடிருந்தல்; குறைந்த அளவு புத்தி பேதலித்து பேசிக் கொண்டிருததல்; ஒரு செயலை வேகமாகச் சோர்வின்றிச் செய்தல்.

**எளப்பு** ஆஸ்தமா என்ற நோய்.

**எளவடியந்திரம்** சாவுச் சடங்கு

**எளவு** இறப்பு; பழிப்பதற்குரிய சொல்.

**எளவு வீடு** இறப்பு நடந்த வீடு.

**எறப்பு** கூரை

**எறவட்டி** வாய்ககாலிலிருந்து நீர் இறைக்கப் பயன்படும் கூடை. (இதன் இரண்டு பககங்களிலும் நீண்ட கயிறுகள் இணைக்கப்பட்டிருக்கும், இருவர் சேர்ந்து செயல்படுவதற்கு உரிய அமைப்புடையது.)



எறவட்டி

## ஏ

**ஏகத்தாளமாய்** மகிழ்சசியில் ஆணவத்துடன் இருத்தல்; தான்தோன்றித்தனம்.

**ஏகதேசம்** உத்தேசமாக.

**ஏகப்பட்ட** கணக்கிலடங்காத.

**ஏகாங்கி** குழந்தையின்றி இருப்பவள; மலடி.

**ஏடு தொடங்கல்** குழந்தைக்கு விஜய தசமியன்று அட்சர அப்பியாசம் தொடங்குதல்.

**ஏடுவாரல்** பனை ஓலை ஏடு தயாரிப்பதற்கு ஓலையைச் சீவுதல்.

**ஏண்ட உதவி** இயன்ற உதவி.

**ஏத்தன்காய்** ஒருவகை வாழைக் காய்; நேந்திரஙகாய.

**ஏத்தனத்துக்கு** தொழில் செய்ய.

**ஏத்தெடுத்தல்** ஏற்று நடத்தல்.

**ஏந்தல்** உதவி

**ஏப்பித்தல்** ஒப்படைததல்

**ஏர்க்கால்** மாட்டு வண்டியில் நுகத்தின் அடியில் உள்ள கம்பு.

**ஏர்கால்** ஏரின் மேழியை இணைக்கும் கம்பு.

ஏலவில்லை சகதியில்லை

ஏவல் ஒருவனை அழிக்க பேய் அல்லது துாதேவதையை மநதிரம் வைதது ஏவுதல்.

ஏழாங்கொம்பு வயலில் நெல விதைத்த ஏழாம் நாள.

ஏழாம் பொருத்தம் இரண்டு பேர்களின முரண்பட்ட பொருத்தமற்ற நிலை.

ஏழாநீர் திருமணம் முடிந்த அடுத்த நாள மணமக்களுக்குள் நிகழும் சடஙகு.

ஏற்றி இறக்கல் திருமணம முடிந்த பின்னர், திருமண மேடையில் மணமக்களின் முன் தாயும் பின்னால் மணமகளின் சகோ தரியும நின்றுகொணடு குங்கு மம் பழம முதலிய பொருட் களை ஏற்றி இறக்குவது

ஏறுக்குமாறு முன்பின்னாக.

ஏறுமாறு முரணபாடு; ஒன்றுக் கொனறு சமபநதமின்றி; தாறு மாறாக.

ஏறுவெயில் பகல மணி ஒனறுககு மேல உள்ள வெயில்.

ஏனம் பாததிரம்

ஏனோதானோ தான்தோன்றித தனம்.

## ஐ

ஐய்யம் மோசமான, அழுகலான

ஐயங்காச்சி படைகள் பேய்ப் படைகள

ஐயம் பிடாரி நாட்டார் பெண் தெயவம்

## ஒ

ஒக்க ஒனறாக; மிகுதியாக.

ஒக்கப்பார்த்தல் ஒன்றாகப் பாாததல்.

ஒக்கப்பிள்ளை இடுப்பில் தூக் கும பருவத்துப் பிளளை.

ஒக்கல் இடுப்பு.

ஒக்கல் பிள்ளை பார்கக : ஒககப பிள்ளை.

ஒசக்க மேலே; உயரே.

ஒசத்துதல் திருடுதல்; ஏமாற்றிக் கொணடு செல்லல்.

ஒசூர் கச்சேரி மாவட்ட வரு வாய் துறை அலுவலகம்.

ஒட்டிக்கிரெட்டி ஒனறுக்கு இரண்டு

ஒட்டு மொத்தம் முழுவதும்; மொத்தமாக.

ஒட்டு வேலை கூரை மேலுள்ள வேலை.

ஒட்டுக்கணவாய் கடல் மீன் வகை.

ஒட்டுக்கும் முழுதும.

ஒட்டுத் திண்ணை வீட்டு வாச லுக்கு அருகே உள்ள தெருத திணணை; வீட்டின முன பகுதிச் சுவரை ஒட்டி இருக்கும் அகலம் குறைந்த திண்ணை (பார்க்க : படிப்புரை).

ஒட்டுபந்தம் நெருஙகிய உறவு.

ஒட்டுவாரொட்டி தொற்று நோய்.

ஒட்டை ஒரே வயது

ஒடக்கு மாறுபாடு; முரண்பாடு.

ஒடப்பிறந்தா உடன்பிறநத சகோதரி.

**ஒடமஸ்தன்** பார்க்க : உடமஸதன

**ஒடுக்கம்** இறுதி; கடைசி.

**ஒடுக்கு** வரி, வரி வசூலித்தல்.

**ஒடுங்குதல்** இளைததல்; அடஙகு தல்; வறுமையடைதல

**ஒடுக்குப்படி** ஒருவகை வரி

**ஒண்டி** தனியாக.

**ஒண்டிக்கொண்டி** தனிததனியே

**ஒண்ணுக்குள்ள ஒண்ணு** நெருஙகிய உறவுககுள்ளே; உறவினாகுள்ளே; தாயாதிகளுககுள்.

**ஒணங்குதல்** உலருதல்; காய்தல்.

**ஒத்தக்காலில் நிற்றல்** பிடிவாதமாக இருத்தல.

**ஒத்தடம்** உடலின் வீக்கம் வலி போன்றவற்றிறகு மருந்து எண்ணெய் தேய்த்த அல்லது சூடான நீரில் முக்கிய துணியால் ஒத்தி எடுத்தல்.

**ஒத்தன மரம்** ஒரு ஆள் மட்டும செலலும கடடு மரம்.

**ஒத்தாசை** உதவி.

**ஒத்தி** (ஒறறி) சொத்தை அனுபவிககும பாததியதையுடன் கூடிய அடமானம; குத்ததகை; ஈடு.

**ஒத்து** நாகஸ்வர சுருதி.

**ஒத்து ஊதுதல்** அடுத்தவர் சொல்வதை அப்படியே ஆமோதிததுப பேசுதல; ஒருவருககுச் சாதகமாகப் பேசுதல்.

**ஒத்துப் போதல்** ஒரே மாதிரியாக நடத்தல்.

**ஒத்தூதல்** பார்க்க சிங்கியடித்தல.

**ஒத்தேல** தனியாக

**ஒத்தைக்கொத்தை** தனித்தனியே

**ஒத்தையா ரெட்டையா** ஒரு நாட்டுப்புற விளையாட்டு; வெறறியோ தோல்வியோ என்ற நிலை.

**ஒதுக்கம்** அந்நியமாய் நிற்றல்; மறைமுகமாக; தனியாக

**ஒதுக்களிச்சு** ஒரு புறமாய சரிந்து

**ஒதுக்கி வைத்தல்** விவாகரத்து செய்தல்.

**ஒணங்குதல்** காய்தல்.

**ஒப்பளவு** நெல்லை அளக்கும் போது மரககாலின் தலைப் பகுதியைப் பிடிக்காமல் அளப்பது

**ஒப்பரவு ஒழுகல்** நியாயம் பேசுதல்; யோக்கியனாகக் காட்டுதல்; போலியாக நடிததல்.

**ஒப்பு** ஒப்பம்.

**ஒப்புக்கு** பெயருக்கு; சிரத்தையிலலாமல்; வேறுவழியில்லாமல.

**ஒப்பேத்துதல்** இருப்பதைக் கொண்டு சமாளித்தல்.

**ஒப்பேறாது** பிழைக்காது, வெற்றி பெறாது; சரியாகாது

**ஒய் விழுதல்** அரியில புழு அரித்தல, பயிரில் பூச்சி அரித்தல்

**ஒயத்துதல்** பார்க்க : ஒசத்துதல.

**ஒரக்களம்** பார்கக : உலைககளம்.

**ஒரக்குண்டு** எருக்குழி.

**ஒரச்சுப்பார்த்தல்** மோதிப் பாாத்தல்

**ஒரப்பெட்டி** பார்கக : உரப்பெட்டி.

**ஒரு மாதிரி** ஒரு தினுசு, வித்தியா சமான குணமுடையவா.

**ஒருக்கக்கூட** மறுபடியும்; இன னொருமுறை

**ஒருவாடு** மிக அதிக அளவில்; பெரும் அளவில

**ஒருவாடு நேரம்** மிக அதிக அள விலான நேரம்.

**ஒரே ஒட்டை** ஒரே வயது; ஒரே பருவம.

**ஒலக்களம்** பாாக்க · உலக்களம.

**ஒலுங்கு** பெரிய கொசு.

**ஒளத்துதல்** பாாக்க : உளததுதல்.

**ஒழப்புதல்** குழப்புதல்; வார்த்தை களால மழுப்புதல்.

**ஒழுக்கறைப் பெட்டி** பணம, நகை வைப்பதற்குரிய இரும்புப பெட்டி.

**ஒழுகு** நிலததின் வரலாறு முறிதத கணக்கு.

**ஒற்றிப்பிரமாணம்** சொததை அடமானமாக வைககும்போது எழுதபபடும் ஆவணம்.

**ஒறக்கச்சடவு** தூக்கக கலக்கம்.

**ஒறச்சகட்டை** தைரியமான மனிதன், எதற்கும் பயம இல் லாத ஆள; குளிருக்கும், வெயி லுக்கும் தாக்குபபிடிக்கும் உடம்புடையவன.

**ஒறச்சு** உரக்க; சபதமாக.

**ஒறண்டை** ஓரிடததிலும, ஒரு பககத்திலும், எங்கும்.

## ஓ

**ஓங்கரித்தல்** வாநதி எடுததல பார்க்க : அமடடுதல.

**ஓங்கரிப்பு** பொறாமை.

**ஓங்கிட்டே** உன்னிடம.

**ஓச்சக்கிராளி** இரண்டு பேருககுச் சணடை மூட்டிவிடும குண முடையவன.

**ஓச்சக்குலைவு** சீர்குலைவு, சீரழிவு

**ஓச்சன்** காளிகோவில பூசாரி; கம்பா சாதி; பலலவராயர், சலலியராயர்.

**ஓஞ்சிற்று** ஓய்நதுவிடடது

**ஓட்ட உருவம்** மணணால் செயது சுடபபடட உருவம்.

**ஓட்டன்** பெரும செல்வர்களுக கும் சிற்றரசர்களுககும் தூது செலபவன்; தகவல் கொடுப்ப வன; குற்றேவல செய்பவன்.

**ஓட்டாஞ்சில்லி** உடைந்த மண பானைத் துணடு

**ஓட்டை** துவாரம.

**ஓட்டை உடைசல்** உடைந்த பொருட்கள்

**ஓட்டைவாயன்** இரகசியத்தைப் பாதுகாக்க முடியாதவன்.

**ஓட்டைவாய்** உளறுவாய்.

**ஓடு கயிறு** தூண்டில்களுக்குப பயன்படும் கயிறு.

**ஓமல்** (உமல) மீன் விற்கப் பயன் படும பெட்டி; குருத்தோலைப பெட்டி.

**ஓமலிப்பு** பொறாமை.

**ஓலன்** தடியஙகாய், சிறுபயறு கலநத ஒருவகைத தொடுகறி

**ஓமுடிஞ்சு போதல்** இல்லாமல் ஆதல்

**ஓர்மை** ஞாபக சக்தி.

**ஓரணஏர்** இரண்டு மாடுகள இழுத்துச் செலலும் ஏா, ஒரு ஜோடி மாடு; கலப்பை நுகம்

**ஓரணச்சால்** உழும்போது, உழுத இடம போக மீதி கிடககும உழவு சாலில் ஏர் திருமப வேண்டுமென்ற குறிபபு.

**ஓருணைஏர்** ஒரு ஏக்கர் உழுவதறகுரிய மாடுகளும் ஏரும்

**ஓலை** மரணச்செயதி.

**ஓலைப்புரை** ஓலைக்குடிசை

**ஓவு** கூரை வடிகால்.

## க

க பலாச்சுளையில் இருக்கும ஒரு பகுதி.

**கக்கம்** காய்ச்சபபடட நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எணணெயின அடிப்பகுதியில் தஙகும் கசடு; அககுள்.

**கக்கட்டி** கண இமையில் வரும நோய்.

**கக்கலும் விக்கலுமாய்** கதிர் ஈனறதும் ஈனாததுமாய; சொல்ல முடிந்ததும முடியாததுமான இக்கட்டான நிலை.

**கக்குதல்** வாந்தி எடுத்தல.

**கங்கணம்** ஒரு செயலைச செயய முனைப்பாக, ஆவேசமாக இருத்தல்.

**கங்கணம் கட்டுதல்** ஒரு செயலைச செயயும் ஆவேசத்தோடு திட்டமிடல்.

**கங்காணி** கூலியாடகளை வேலை வாங்கும ஒப்பந்தககாரன; மேஸ்திரி.

**கங்கு** தீபபொறி; சுடர்விடாத நீறுபூதத நெருபபு.

**கங்குகரை** அளவில்லாமல.

**கங்கூஸ்** மீன் தூணடிலில பயனபடுததும நூல்.

**கச்சட்டி** பார்க்க : கக்கட்டி.

**கச்சகட்டில்** துணிப்பட்டை கட்டிய கட்டில

**கச்சடா** இழிவு; கீழ்தரமான, தரம் குறைநத.

**கச்சப்புறம்** கொலுசு, பெண்கள் காலில் அணியும தஙகம அல்லது வெள்ளி அணி.

**கச்சம்** சலங்கை மணி , ஒருவகை மீன.

**கச்சமுறி** வெள்ளைச சேலை

**கச்சவடம்** வியாபாரம்.

**கச்சன் கருவாடு** கருவாட்டு வகை.

**கச்சன்** மேல்திசை.

**கச்சா** மீனைச் சேமித்து வைக்கப் பயன்படும நூல் கூடை.

**கச்சாத்து** நிலவரி செலுத்தியற்கான ரசீது; ஆவணம; Document (கை + சாத்து)

**கச்சாவலை** நெத்திலி மீன் பிடிக்கப்பயன்படுத்தும் வலை

**கச்சிக்காரன்** மேற்படி ஆள்; வழக்கின் வாதி அலலது பிரதிவாதி.

**கச்சிதம்** கவர்ச்சியாக, அழகாக, நேர்ததியாக.

**கச்சுப்போதல்** கைததுப போதல்.

**கச்சேரி** கிராம அலுவலகம், சீட்டுக் கச்சேரி; ஆடல் பாடல் முதலியவை.

**கச்சை கட்டுதல்** சண்டைக்குத் தயாராகுதல.

**கச்சை** நாடடாா கோவில் விழா வில் சாமியாடுபவா ஆடும் போது இடுபபில் கட்டியிருக் கும் அரைககால் சட்டை; கட டில் பின்னுவதறகுரிய துணிப பட்டை.

**கசக்கிப் பிழிதல்** துன்புறுததல், தொடர்ந்து வேலைவாஙகுதல.

**கசக்குதல்** துணி துவைத்தல, கும்முதல; நெருக்குதல்

**கசடு** அடிமணடி.

**கசடுதல்** தொடர்ந்து துன்பம கொடுத்தல்.

**கசண்டி** வழுக்கை.

**கசண்டு** கசடு.

**கசம்** ஆழமான சுனை.

**கசமுசா** ஒழுஙகிலலாமல்; மனக கிலேசம், மாறுபாடு; சணடை

**கசவாளி** கஞ்சன்; கயவன; கயமைத் தன்மை மிககவன்

**கசவுச்செட்டி** சரிகை வியா பாரம் செயயும் செட்டியார் சாதி.

**கசவு** சரிகை

**கசாயம்** விலை குறைநத போதை பானம்.

**கசாலை** மண்சுவா மழையால நனையாமலிருக்கக் கடடப் படும ஓலைக்கூரை, சமையல செய்யுமிடம.

**கசுமாலி** (கண்ட்ராவி) சண்டைக காரி, ஆபாசம்.

**கஞ்சப்பிசினாறி** கஞ்சன.

**கஞ்சப்பிசினி** கஞசன்.

**கஞ்சிசாப்பாடு** சோற்றின வடி தணணீர்

**கஞ்சித்தண்ணி** பார்க்க : வடி கஞ்சி

**கஞ்சித்தெளிவு** அடிகஞசி; சோற்றுபபருககை குறைவாக உளள கஞ்சி.

**கட்சிப்பாட்டு** வில்லிசைக் கலை போனற நாட்டார் கலை, இரண்டு பிரிவுகளாக அமர்ந்து நிகழ்த்துவது.

**கட்டக்குருத்து** வாழை இலை யின் குருத்து.

**கட்டணம்** பிணததைச் சுடு காட்டுக்குக் கொண்டு செல்ல மூங்கிலால் கட்டப்படும் ஏணி போன்ற அமைப்பு.

**கட்டமண்** உயரம் குறைந்த மண் சுவர்; மழையால நனைநது கட்டையாயப் போன மண் சுவர்; ஏசுவதறகுரிய சொல்.

**கட்ட மண்வெட்டி** பழகிய மண் வெட்டி.

**கட்டயன்** ஒரு வகை நெல.

**கட்டளைக்காரன்** கோவிலில உரிமையுடையவன; குடுமபக கோவிலின வரிகாரன.

**கட்டிக்கருமிள்ளான்** ஒரு வகை நெல்.

**கட்டிச்சம்பா** சமபா நெல்லில் ஒருவகை, குறைநத நாள பயிா.

**கட்டி** மரம் பொடி உழவில் அடிக்கும முதல் மரம.

**கட்டிச்சோறு** கடடுச்சாதம; பயணததின் போது துணியில் கட்டி வைககப்படும சாதம்.

**கட்டு எடுத்துப் பாவல்** மழைக காலஙகளில பாததி போன்ற

அமைப்பில விதையைப பாவு வது.

**கட்டு வலை** மீன் பிடிக்க உதவும் வலை

**கட்டு** உடற்கட்டு.

**கட்டுக்கால் நாற்று** நாற்றங் காலுக்காக விடப்பட்ட பகுதி யில் வளர்ந்த நாற்று.

**கட்டுக்குளிகை** பேதியை நிறுத்த உதவும் மாததிரை.

**கட்டுத்தோணி** ஆழமில்லாத கடற்பகுதியில் செல்ல உதவும் படகு.

**கட்டுப்பாளை** பதனீர் எடுக்க பாளை சீவப்பட்ட ஆண் பனை.

**கட்டுமுட்டு** அவசரம.

**கட்டை** வில்லிசைக் கலை நிகழச் சிககுரிய பின்னணி இசைக் கருவி; இணையான இரண்டு மரத் துண்டுகள; நீள் சதுர வடிவமுடையது. இது தாளக் கட்டை எனவும்படும்.

**கட்டையில் போவான்** இறந்து போகப் போகிறவன்; ஏசுவதற் குரிய சொல்.

**கடக்க** யாருக்குமதெரியாமல்; கடந்து செல்ல.

**கடக்குட்டி** கடைசிக்குழந்தை.

**கடக்கே** தொலைவில்லை; ரகசிய மாய் வைத்தல; எட்டாத இடத் தில

**கடகால்** அஸதிவாரம.

**கடந்தை** ஒரு வகை கொட்டும் எறுமபு.

**கடப்புறம்** கடற்கரை.

**கடமரம்** கட்டுமரத்தின அகன்ற விளிம்பு.

**கடரியன்** ஒரு வகை நெல்

**கடவம்** (கடகம்) வாய அகன்ற பனை ஓலைபபெட்டி

**கடவாப் பெட்டி** பனை ஓலை யால ஆன பெரிய வாயகன்ற பெட்டி

**கடனக் கழித்தல்** கடமையை ஒழுங்கு முறையின்றிச் செய் தல்.

**கடா** எருமைக்கடா.

**கடிச்சை** ஒருவகை கடல்மீன்.

**கடியாகட்டு** மரத்தடிகளை இணைக்கும் கருவி.

**கடுக்காய் கொடுத்தல்** தநதிர மாக ஏமாற்றுதல்.

**கடுக்குதல்** முள்குததிய வலி.

**கடுத்தல்** பார்க்க : கடுககுதல்.

**கடுப்பு** கசப்பு, கோபம், செருக்கு, வெறுப்பு; முள் குததிய வலி.

**கடுவாய்** கோபக்காரன்; கரடி

**கடையம்** கழுத்தில் அணியும் தங்க ஆபரணம்.

**கடோத்கஜன்** யாராலும் ஏமாற்ற முடியாதவன்.

**கண்கட்டி** கண்ணில் வரும் நோய.

**கண்கெட்டி வித்தை** மாயஜால வித்தை.

**கண்ட்ராவி** பார்ப்பதற்கு அரு வருப்பான.

**கண்ட கோடாலி** களரி என்ற போர்ககலைககுரிய ஆயுதங் களில் ஒன்று; சிறிய கோடாலி; தறகாப்பு ஆயுதம்.

**கண்டதும் கடியதும்** கிடைததது எல்லாம.

**கண்டம்** சிறிய வயல, ஆபதது; சிறிய துண்டு; தத்து.

**கண்டமானம்** அதிகம; பெரு மளவு

**கண்டமுண்டான்** நாட்டுப்புற ஆண் தெய்வம; சிவனின அமசம.

**கண்டமேனிக்கு** விருப்பம் போல; எதையும யோசிக்கா மல்; தானதோனறித்தனம்

**கண்டவன்** அறிமுகமிலலாதவன; தெரியாதவன்; யாரெனறு அடையாளம் காட்ட முடியாத வன்

**கண்டாங்கி** நூல் சேலை.

**கண்டாங்கிப் பாச்சா** கடும சிவப்பு நிறமுடைய கரபபான் பூசசி.

**கண்டி** துண்டு; முடிசசு.

**கண்டிக்கிழங்கு** துணடுதுணடாக அவிதத மரச்சீனிக்கிழங்கு.

**கண்டூரம்** ஒருவகை நோய.

**கண்டெழுத்து** நிலத்தைப் பார்தது மதிப்பீடு செய்து பதிவு செயதல்.

**கண்ணக்கறக்குதல்** உறக்கத்திற்கு ஆரம்பமாதல்.

**கண்ணயத்தல்** தன்னை அறியா மல் உறங்குதல்.

**கண்ணன் ஆட்டம்** உறியடித் திருவிழாவில கண்ணன யசோதை ஆகியோரின் வேடம் தரிததவாகள ஆடும கலை.

**கண்ணாப்பை** கண அகப்பை; துவாரம் உடைய அகப்பை.



கண்ணாப்பை

**கண்ணாம்பூச்சி** (கண பொத்தி விளையாட்டு) குழந்தைகள் கண்ணைக் கட்டிக் கொண்டு விளையாடுதல.

**கண்ணும் கயந்தலை** குழநதை குட்டிகள.

**கண்ணும் கயந்தலைக்காரன்** பிள்ளைகுட்டிக்காரன்.

**கண்ணுவெளிச்சம்** பார்க்கும்படி யான வெளிச்சம், இருடடு வதறகு முன் சிறிது நேர வெளிச்சம்

**கண்மலர்** தெய்வ விக்கிரகங் களின் கண்ணில் வைக்கும் வெளளி ஆபரணம



கண்மலர்

**கண்மூடித்தனம்** மடததனம்; கவனமினமை.

**கணக்கா** அவ்வாறாக.

**கணக்குச் சொல்லுதல்** ஒருவரின் எதிர்கால வாழ்கதை பற்றிக் கூறுதல; சோதிடம கூறல்; நாட் டார தெயவ சாமியாடி அருள் வழஙகல.

**கணவாய்** கடலமீன் வகை.

**கணிசம்** நிறைவாக, நிறை.

**கணிசமாய்** அதிக அளவில், பெரும் அளவில

**கணியம்** முந்திய நாள கடலில போட்ட வலையைத் திருமப எடுக்கபபயன்படுத்தும் ஒரு குறி

**கணியான்** கணியான் ஆட்டக கலை நடததுபவன.

**கணியான் ஆட்டம்** நாட்டார் கோவில சடஙகு சார்ந்த கலை, ஆட்டம் பாட்டு என நிகழவது.

**கணுக்கை** முனகை.

**கணை** நெஞசு கூடி வருமவியாதி.

**கத்தரிக்காய் சருவம்** ஒருவகைப் பாத்திரம.

**கத்தரிக்கோரை** கோரைப் புலலின் ஒருவகை.

**கத்தரித்தல்** நிறுத்துதல், பாதியில் மறித்தல்.

**கத்திகிட்டு** கோபப்பட்டு.

**கத்துதல்** அழுதல; சப்தமிட்டுப் பேசுதல்; எரிதல்.

**கதம்பம்** பலவகை மலர்களால் கட்டப்படும மாலை.

**கதம்பை** பார்க்க : சவுரி.

**கதம்பைக் கயிறு** தேங்காய் மட்டை கயிறு.

**கதம்பைத் தைலம்** ஒருவரின இறுதிககாலம்; இறப்பின் அறி குறிககான கிண்டல் பேச்சு.

**கதலி** ஒருவகை வாழைப்பழம்.

**கதிர்குளித்தல்** திருமணததனறு மணப்பெண் கோவில்குளத்தில் காலை நனைததல்; சூரியக் கதிரைப் பார்த்தல்.

**கதிர்பானை** பார்கக : நாக்கதிர் பானை.

**கதிரறுப்பு** வயலறுப்பு.

**கதை** செய்தி; தகவல; நடந்த நிகழச்சி.

**கதையளத்தல்** வமபளத்தல்; கற் பனையாகப் பேசுதல், நடககாத நிகழ்ச்சியை விவரிததல.

**கதை வாசிப்பு;** குறிப்பிட்ட கதையை ஏட்டினபடி தாளம தபபாமல் வாசிபபது

**கந்துவட்டி** பிடிப்புவட்டி.

**கப்பக்கால்** வளைவான கால்.

**கப்பி** மணல் அல்லது மணலைச சலிதத பின்னர் எஞ்சும் பொருள்; பொடிமணல், அரிசி மாவைச் சலித்தபின் மிசசம் இருககும் பொடி; மணலை அரிததபின் மிச்சம் இருக்கும் பெருமணல.

**கப்பு** இரகசியம்.

**கப்புச்சிப்பு** மௌனமாக; வாயை மூடிக்கொண்டு.

**கப்பை** கைபபிடி நாற்று.

**கப்பைக்கால்** வளைந்த கால்.

**கபகபவென** ஒலிக்குறிப்பு, நெருப்பு, புண அல்லது வயிற்றுப் பசியைக குறிக்கப் பயனபடுவது.

**கம்பக்கூத்து** கழைககூத்து

**கம்பக்கெட்டு** வாணவேடிககை.

**கம்படி** சிலமபம, சிலமபடி.

**கம்பி கொடுத்தல்** தந்தி கொடுத் தல.

**கம்பிக்கரை வேட்டி** மெல்லிய கரையுள்ள வேட்டி.

**கம்மம்பூ** கமுகினபூ.

**கமறுதல்** நெருப்பில் மிளகு வத தல எரியும்போது சுவாசிக்க

முடியாமலிருககும் நிலை; சமை யல் தாளிப்பு வாசனையால் தொண்டையில் இருமல வரு வது போன்ற உணர்வு; நெருபபுப் புகையால் தொண் டையில் எரிச்சல ஏற்படல், அடுப்பில் அவியும் பதார்த்தம மிகவும் வேகுதலால் ஏறபடும் புகை

**கமுந்துலக்கை** பூண் இல்லாத உலக்கை.

**கயந்தலை** குழந்தை.

**கரண்டகம்** (கரண்டம்) வெற றிலைக்குரிய சுண்ணாம்பு வைக்கும் செம்புக் கிண்ணம். (பார்க்க : சுண்ணாம்புக் கரண் டகம்)

**கரண்டிப்பாறை** கடல்மீன்வகை

**கரப்பான்** சிறுகுழநதைக்கு வருமு சிரங்குநோய்.

**கரம்** தீாவை

**கரம்புதல்** கறமபுதல, தந்திரமாகச் சொததை கவருதல், கொறித் தல்

**கரல்** ஈரல்.

**கரவலுவு** கரையை நோக்கி நீரோட்டம் வருவது.

**கராச்சிக்காளை** உயர்சாதிக் காளை; கராச்சியிலிருந்து வந்தது

**கரிச்சுக் கொட்டுதல்** கோபம அலலது பொறாமையால் பழித் தல்

**கரிசனை** அககறை, அன்பு; கருணை; ஆதரவு.

**கரிப்பு** பொறாமை; கோபம.

**கரிப்பிடித்தல்** விளக்கின நெருப்புக் கரி பற்றுதல்.

**கரிவாளை** கடலில் உள்ள நீள மீன்வகை

**கரிவு** கருகிப்போதல், பயிர் அழிநதுபோதல்; நீர் இனறிப் பயிா அழிதல.

**கருக்க நெல்லிக்காய்** உப்பில உலர்ந்து காய்ந்த காடடு நெலலிககாய்

**கருக்க நேரம்** மாலை நேரம்

**கருக்கருவாள்** பனை ஏறுபவர் வைததிருக்கும் அரிவாள்.

**கருக்கல்** இருளசூழ்ந்த மாலை நேரம்.

**கருக்கு** இளநீர்; நெற்பயிரின் நோய்.

**கருக்கு நார்** பனைநார்

**கருக்குமட்டை** பனைநார் மடடை.

**கருங்குறுவா** ஒரு வகைக் குறுவா நெல்

**கருஞ்சாந்து** குழந்தைகளுக்காக வீட்டில தயாரிக்கபபடும சாந்துப் பொடடு.

**கருட்டு வழக்கு** விதணடா வாதம்; வீண்வாதம்

**கருடக்கொடி** மருந்துக்கொடி; மகப்பேறு உடைய பெண களுககு கொடுக்கப்படும் மருந் துக்குரிய வேர்.

**கருடச் சம்பா** ஒரு வகைச் சமபா நெல்.

**கருநடவு** வெளிறிய மஞ்சள கலந்த பச்சை நடவு; நாற்று

நட்ட பதது நாளைககுள் பயிா செழிப்பாக இருந்தால குறிப பது.

**கருநாக்கு** கறுப்புப் புள்ளி உள்ள நாககு, இந்த நாக்குடையவர் கூறுவது நடக்கும் என்ற நம் பிக்கை உண்டு.

**கருப்பட்டி** (கருப்புக்கட்டி) பனை வெலலம.

**கருப்பா பாறை** கடல் மீன் வகை.

**கருப்புக்காலி விரியன்** ஒரு வகை நெல்

**கரும்பாறை பிளப்பான்** ஒரு வகை நெல்.

**கருமத்தமாடு** எருமைமாடு.

**கருமாதி (அடியந்திரம்)** இறந்த வர்களுக்காகப பதினாறாம் நாள் செய்யும் சடங்கு.

**கருவாடு** காயவைத்த மீன்

**கருவேப்பிலை** கறிவேப்பிலை

**கரை ஏறுதல்** வேலை முடித்தல; வயல் வேலை முடிததல்.

**கரைசீட்டு** ஏலசசீட்டில் முதல் சீட்டு.

**கரைஏத்துதல்** ஒரு செயலைச் செய்து முடித்தல், பெண்ணைத் திருமணம செயது கொடுத்தல்.

**கரைக்காரன்** சிட்டி உறுப்பினர்.

**கரைச்சல்** தொல்லை; தொந் தரவு.

**கரைவலை** கடல அல்லது நீர் நிலையின் அருகில் நின்று மீன் பிடிக்க உதவும் வலை.

**கல்குடல்** பேதி இளகாத அளவுககுரிய இரைப்பை.

**கல்குளித்தல்** இறந்தவரின் பதி னாறாம் நாள நிகழும் சடங்கு.

**கல்நொங்கு** முற்றிய நொங்கு.

**கல்பனை** அரசரின் உத்தரவு.

**கல்பித்தல்** ஆணை இடுதல்

**கல்மரவை** மாககலலால் ஆன சட்டி; அவியல என்ற கூட்டு வைப்பதற்குரிய பாத்திரம.

**கல்லு நாவுதல்** அரிசியில் கல்லைப் பொறுககுதல்.

**கல்லுண்கான்** ஒரு வகை நெல்.

**கல்லுளிமாங்கன்** நாடோடியான ஒரு வகை யாசகன்; அடம் பிடிக்கும் பிடிவாதக்காரன்; சொன்னதைச சாதிப்பவன்.

**கல்லுளுவை** ஒருவகைக் கடல் மீன்.

**கல்லெடுப்பு** இறந்தவருக்குப் பதி னாறாம் நாள செய்யும சடங்கு

**கல்வருக்கை** காட்டுப்பலா.

**கலக்கல்** போதைப்பொருள்.

**கலசம்** சிறிய மண்பானை.

**கலப்பட்டி** பெரிய பருத்த வயிறு.

**கலப்பித்தல்** நாற்றுநட்ட வயலில் இடைவெளி பார்தது மீணடும் ஒருமுறை நடவு செய்வது.

**கலப்பைக் கிழங்கு** குழந்தை யையும் தாயையும இணைக் கும் தொப்புள் கொடி.

**கலப்பை பூட்டுதல்** ஏரை நுகத் தில் பூட்டுதல்.




**கலப்பை**

*கலப்பை* ஏா

*கலப்பைக்குத்தி* ஏரின் கீழ்ப் பகுதி; ஏரின் முககிய உடல் பாகம்; கலப்பைக கொழு வோடு சேர்ந்த பகுதி.

*கலவடை* மணபானை வைப் பதறகுரிய மரம் அல்லது வைக கோல பீடம்; உரலின் வாய்க் கட்டு.

*கலுங்கு* சநதியிலுள்ள பாலம; ஏரி மதகு, நீாவழியும அணைக கட்டு.

*கவ்வுதல்* வாயால் கடிததல்.

*கவக்கம்பு* முள் செடிகளைத தூக்குவதறகுரிய பிளவுபட்ட கம்பு.



**கவக்கம்பு**

*கவட்டாங்கம்பு* நாட்டுப்புற விளையாட்டு; மரத்தின் மேல ஏறி இருநது கொண்டு இரு கால்களின் இடைவழி சிறிய கம்பை எறிநது ஓடிப்பிடித்து விளையாடும் விளையாட்டு

*கவட்டை* ஆடு மாடுகள செல்ல முடியாதபடி குறுகியதாக இருக்கும் தோட்டத்திற்குரிய சிறிய வாசல.

*கவண்* கல்லெறியும கருவி.

*கவணி* தோள் மேல் போடும் மெல்லிய சீலை. பார்க்க : கவுனி.

*கவர்க்கால்* வளைநத கால்.

*கவளி* வெறறிலைககட்டு.

*கவாத்து* உடற்பயிற்சி ; போலிசின் உடறபயிற்சி; மரக்கிளையை வெட்டி விடுதல்.

*கவாத்துக்காரன்* உடறபயிற்சி செய்பவன்.

*கவுட்டை* பார்கக . கவட்டை.

*கவுட்டையடிப் பத்து* பெண் உறுப்பு.

*கவுனி* மரியாதையாக அணி விக்கப்படும பொன்னாடை.

*கவுரு* சூரியன் உதிப்பதற்கு ஒரு மணி நேரம முனபு உள்ள நேரம்.

*கழஞ்சு* தொலைந்து; தஙக நிறை யளவு.

*கழி* காயல்.

*கழிக்கஞ்சி* பதனீர், பச்சரிசி மாவு, பெரும்பயிறு, தேங்காய், ஏலம, சுக்கு சேர்தது தயாரிக கப்படும் கஞ்சி.

*கழிச்சல்* குழந்தைக்கு வரும வியாதி.

**கழச்சி** கோலி.

**கழச்சி விளையாட்டு** கண்ணாடி அல்லது உலோகத்தாலான உருண்டையை வைத்து விளையாடும் கோலி விளையாட்டு.

**கழிநிலம்** உப்பளம்.

**கழிப்பு கழித்தல்** மநதிரவாதம் செய்தல; குடும்ப பீடை அல்லது உடல் ஆரோக்கியத்திற்கு மந்திரவாதம செய்தல்.

**கழியலாட்டம்** ஆடல், பாடல் எனற நிலையில் கோலால் தட்டி நிகழ்த்தப்படும நாட்டார் கலை

**கழுத்தேரு** முதல் ஏருக்கு அடுத்த ஏர்.

**கழுநீர்** பார்க்க : கழனி.

**கழுவத்தி மூலை** கழு ஏற்றும் மூலை.

**கழுவேறி** ஊர்சுற்றும் இளைஞன்; உருப்படாதவன்.

**கழுனி** அரிசி கழுவிய நீர்.

**கழைதல்** கழுவுதல்; அரிசி களைதல்.

**கள்ளச்சாலம்** பாசாங்கு.

**கள்ளச்சாவி** திருட்டுத்தனமான திறவுகோல.

**கள்ளப்பண்டம்** திருட்டுத்தனமாக எடுத்துச் சாப்பிடும தின பண்டம; முறையான உணவு இலலாத பண்டம்

**கள்ளப்பிராந்து** கருடன

**கள்ளப்பிள்ளை** சோரத் தொடர்பால் பெற்ற பிள்ளை.

**கள்ளம்படுதல்** காளை, எருமை வேலை செய்ய முரண்டு பிடித்தல்.

**கள்ளன்** வாழைப்பூவில உள்புறத் துளள ஓர் உறுப்பு.

**களச்சி** கோலிக்குண்டு.

**களபம்** சநதன உருண்டை, சநதனக குழம்பு.

**களம்** நெல கதிரைச சூடடிதது வகையாக்கும் இடம்.

**களமெழுத்தும் பாட்டும்** தாய்த் தெய்வத்தின் படத்தை வரைந்து பாடடுப்பாடிப் பூசை செயயும் நாட்டார் கலை.

**களவாணி** திருடன், திருடி (செல்லமாகக் கூறுவதற்குரியது)

**களிப்பாக்கு (சாயப்பாக்கு)** அவித்துச் சாயமூட்டிய பாக்கு.

**களிப்பு** திருட்டி கழிக்கச் செயயும மந்திரவாதம்.

**களிபறைதல்** எககாளமாய்ப் பேசல

**களியடைக்காய்** சீடை என்ற ஒரு வகைப் பலகாரம.

**களியாட்டம்** கோலால் தட்டி விளையாடும் ஒருவகை விளையாட்டு.

**களுந்து உலக்கை** பூண் இலலாத சிறிய உலககை. (இதன் முனை மழுமழுப்பாக இருக்கும்.)

**களை கட்டுதல்** ஒரு நிகழ்சசியின் முக்கியமான; மகிழ்ச்சியான பகுதி.

**களை** பயிர் வளருவதறகுத் தடையாக வளரும புல் பூண்டு.

**களைபறிப்பு** வயலில் உள்ள களைகளைப் பறிப்பது.

**கறட்டு வழக்கு** பிடித்த பிடியாக இருததல்; பிடிவாதம்.

**கறண்டி** சிறிய அகபபை; கொதத வேலைக்குரிய கருவி.

**கறண்டு போதல்** பயிர வளரா மல இருத்தல; குழநதை வளரா மல இருத்தல; விளக்கின் எண ணெய இல்லாமல் திரி அணையக காரணமாதல்.

**கறண்டைக்கால்** பாதத்தின் பின் பகுதி

**கறிக்காவெட்டு** கலயாணத்திற்கு முந்தினநாள் ஊர்கூடிக் காய கறி வெட்டுவது.

**கறிச்சட்டி** மீன் குழம்பு, மாமிசம் சமைக்க உதவும் மண் சட்டி

**கறுத்தக்கறி** மீன் குழம்பு, ஓமம், சுக்கு, பூடு, கடுகு, காயம் சேர்த்த குழம்பு, குழந்தை பெற் றவளுக்குக் கொடுக்கப்படுவது

**கன்னி இருட்டு** பொழுது விடியு முன் ஏற்படும் இருட்டு.

**கன்னிப்பூ** ஆண்டின் முதல் சாகு படி ஆவணி மாதம் அறுவடை யாவது

**கனக சம்பா** சம்பா நெல்வகை.

**கனகச்சிதம்** பார்க்க : கசசிதம்

**கனம்ப** நிறைய (தணணீர் பெருக்கை குறிபபிட).

**கனமாக** அதிகமாக; பெரும் அளவு.

**கனைக்கட்டு** கட்டுமரததின பாயை நெறிப்படுத்தும் கயிறு.

## கா

**காக்கட்டன்** பார்க்க : கொக்கட் டான்.

**காக்கட்டை** தோட்டங்களில் தணணீர் கோரப பயன்படும காவடி போன்ற அமைப்பு டைய கருவி, நீணட கம்பும் கம்பின் இரு நுனிகளில் தொங் கும கயிற்றில் கட்டிய வாளியும உடையது.



**காக்கட்டை**

**காக்கன்** கடல் மீன் வகை.

**காக்கா குளியல்** மிக அவசர மாகக் குளித்தல்; உடமபில் அதிகம் நீர்படாமல் குளித்தல்.

**காக்காச்சி** காகம; கடல்மீன் வகை.

**காக்காச்சி மலை** சுடலை மாடன் என்ற நாட்டார் தெய் வம தங்கும் மலை

**காக்காய் தோல்** குதிகாலில் உண் டாகும கொப்புள வகை.

**காக்காய் வலிப்பு** வலிப்பு நோய் வகை. Epilepsy.

**காச்சி விடுதல்** அடிததுவிடுதல்; சிறப்பாகச் செய்தல்.

**காச்சுதல்** நனறாக அடித்து விடு தல்.

**காச்சுமூச்சு** குழந்தையின் அழு குரலைக் குறிப்பது; ஒலிக் குறிப்புச் சொல.

**காசுக்கட்டி** (காசுமண்) சிவப்பு மண் கட்டி; ஒருவகை மருந்துச் சரக்கு.

**காட்டம்** உறைப்பு; ஆழமாக; காரம்; கோபம்.

**காட்டாளன்** காட்டுததன முடைய முட்டாள்.

**காட்டான்** நாகரிகம் இல்லாத வன்.

**காட்டுமிராண்டி** நாகரிகம் அற்றவன்.

**காடாத்து** (காடாறறு) கருமாதிச சடங்கு, இறநதவரின எலும்பு களைச் சேகரித்துப் பால்விடும் சடங்கு.

**காடி** அரிசி மாவும், சர்க்கரையும் கலந்து செயயபபடும் பான வகை.

**காடிப்பீ** பசுங்கன்று பிறந்த சில நாள் வரை போடும் ஒட்டும் தன்மையுள்ள சாணி.

**காடு** சுடுகாடு.

**காடுதாலிக்காரி** ஒரு வகை நெல்

**காடைக் கழுத்தன்** ஒரு வகை நெல.

**காணப்பொடி** கொள், உப்பு, வததல ஆகியவற்றை வறுத்துப் பொடித்துத் தயாரிக்கப்படும் உணவு வகை.

**காணம்** கொளளு

**காணியாளன்** காணிக்காரன் எனற பழஙகுடியினம், நில உடைமையாளன்.

**காணியாட்சை** பரமபரைச் சொத்தை உரிமையாக வைத்துக் கொள்ளுதல்.

**காத்துக்கருப்பு** பேய் பிசாசு.

**காதறை கூதறை** ஒழுக்கம் கெட டவள்; விலைமகள.

**காதறை** காது அறுபடடவள்

**காதுகுத்துதல்** நடக்காத காரி யத்தைச் சொல்லி நமப வைக்கும முயறசி

**காது நிலவா** வாயகன்ற சிறிய பெரிய அளவிலான, கைப்பிடி யுள்ள செம்புப் பாத்திரம்.

**காதுலபூ வைத்தவன்** அபபாவி; எளிதில் ஏமாறுபவன்.

**காப்பரிசி** விஜயதசமி அனறு குழநதைக்கு அரிச்சுவடி ஆரம் பிததல; குழநதை காதுகுத்து நிகழ்ச்சி; தைப்பொஙகல் போனறவற்றில் தயாரிக்கப் படும சாககரைப்பாகு கலந்த அரிசி

**காப்புக் கட்டுதல்** திருமணததில் மணமேடையில் வைதது மண மகன், மணமகள் இருவர் கையிலும் மஞ்சளை மஞ்சள் நூலில் சேர்த்துக கட்டும் சடங்கு.

**காம்புதல்** சமையல் பதார்த்தத் திற்கு மூல ருசி மாறுதல

**காமணம்** பெரிய ஓலைப் பந்தல்.

**காமாசோமா** ஒழுங்கு முறை இல்லாமை; முறைப்படி அல் லாமல்.

**காமாடு** (கால் மாடு) உடம்பின் கால் இருக்கும் பகுதி; உறங்கும் போது கால்கள் இருக்கும பகுதி.

**காய்** குறைமாத காப்பம்.

**காய்குன்னல்** நெல்கதிர் வளை தல்.

**காய்விழுதல்** குறைமாத கர்ப்பம்; கர்ப்பச் சிதைவு.

**காயடித்தல்** ஆடு, மாடு, பன்றி களுக்கு ஆண்மைக் குறைவைச செய்யும் செயல்.

**கார்** ஆவணி, புரட்டாசி மாத விளைச்சல்.

**கார்வார்** கர்வம், ஆணவம், உயர்வு மனப்பான்மை.

**காரணவர்** தாய்மாமா; மருமக் கள்வழி வேளாளாக் குடும்பத தின் தலைவன; பாதுகாவலன்

**காராட்டம்** பொறாமையால வரும் வெறுப்பு; அகங்காரதது டன கூடிய பொறாமை

**காராடுதல்** பூனை புணர்ச்சி விரும்பி சப்தமிடுதல், பொறா மைப்படுதல்

**காரியக்காரன்** சுயநலவாதி; கொள்ளி வைப்பதற்கு உரிமை யுடையவன.

**காரியக்கிறுக்கு** சுயநலககாரன், பைததியம எனப் பிறரால் பரி கசிக்கபபட்டாலும் தன் காரி யத்தை முடித்துக கொள்ளு பவன

**கால் நாட்டுதல்** திருமண நிச்சய தாம்பூல விழாவில ஆலமரக் கம்பைப் பெண் வீட்டில் தூணில் கட்டி வைத்தல; சிறு தெய்வ பெருந்தெயவ விழா வின் தொடக்கததை அறிவிக்க நிகழும் நிகழச்சி.

**கால்கட்டு** திருமணம்.

**காலகண்டன்** ஒரு செயலை விடாப்பிடியாகச் சாதிப்பவன்.

**காலசாமி** காலன் என்ற நாட் டார் ஆண்தெய்வம்

**காலசேபம் நடத்துதல்** அன்றாட வாழ்க்கை நடததல்.

**காலடி மண்** பார்க்க : அடி மண்.

**காலந்தடி** ஒரு நாட்டுப்புற விளையாட்டு; துணியைத் தலைமுடி போல பின்னி, அதைக் கால் விரல்களுக்கிடை யில் கொடுத்தல்

**காலம்பற** அதிகாலை.

**காலாற நடத்தல்** காலின் விருபபபபடி நடததல; குறிக் கோளினறி நடததல்.

**காலுறுவான்** காலரா எனற நோயால் அழிபவன்; ஒரு வனைப பழிபபதற்குரிய சொல்.

**காவக்காரி** ஒழுககம இல்லாத பெண், ஏச்சிற்குரிய சொல், விபச்சாரி.

**காவணம்** பார்க்க : காமணம்.

**காவாலி** அயோக்கியன், ஒழுக்க மில்லாதவன; மனமபோல் நடப்பவன; பொறுப்பற்ற தீய இளைஞன்.

**காவி** மிதப்பான்; கடலில் வலை கீழே போகாமல தடுக்கப் பயன்படுத்தும பொருள்.

**காவு கொடுத்தல்** பலிகொடுத் தல், ஒருவருக்குப் பதிலாக இன் னொருவருககுத் தண்டனை கொடுத்தல்.

**காவோலை** நன்றாக காயநத பனை ஓலை; வீட்டிறகு உத வாத இளைஞன்; எப்போதும வளவளவெனப் பேசிக் கொண் டிருப்பவன்

**காளாஞ்சி** தாம்பூலச சாற்றைத் துப்ப உபயோகபபடுததும் உலோகப் பாத்திரம.

**காளியூட்டு** காளி கோவில விழா

**காளைமாடன்** காளைபோல வளாநதவன்.

**காற்றாடி முண்டன்** முண்டன வகையிலான ஒரு வகை நெல.

**காறல்** கடல்மீன்வகை.

## கி

**கிச்சடி** ஒரு வகைக் கறி; தயிரும் தடியங்காயும் கலந்து செயயப் படும உணவு; சட்னி.

**கிச்சு கிச்சு தாம்பாலம்** சிறுவர் அல்லது சிறுமியர் மணலில் விளையாடும் விளையாட்டு.

**கிட்டக் கயிறு** கடலில் மீன பிடிக்கப பயனபடும் கயிறு.

**கிட்டத்தில்** சமீபத்தில.

**கிட்டம்** சமீபம.

**கிட்டி போடுதல்** செயலற்றிருக் குமாறு செய்தல்; அசைய முடி யாமலாக்குதல்.

**கிட்டி** தண்டனை கொடுப்பதற் குரிய இறுககும் கருவி.

**கிட்டிப்புள்** பார்க்க : குடடிப்புள.

**கிடங்கு** சிறை; குழி; பள்ளம்

**கிடா** ஆண் எருமை.

**கிடாரம்** பெரிய வாய் அகனற பாத்திரம்.

**கிடாரி** பெண் கன்று.

**கிடுவிடி** ஏசசுசசொல்.

**கிடுகு** பார்க்க : கிடுவு.

**கிடுவு** தென்னை கீற்றினால பின்னபபடும் பரந்த தட்டு; கிடுகு.

**கிடை வைத்தல்** வயல், தோட் டத்தில் ஆடுகளை அடைத்து வைத்தல்.

**கிண்டி உணர்த்தல்** சிரத்தை யாகக குடும்பக் காரியங்களைக் கவனித்தல்.

**கிண்டிக்கவுத்துதல்** ஒரு செயலைச் செயய விடாமல் ஆக்குதல்.

**கிண்டுதல்** கிளறுதல்; ஒருவரின் பேச்சின் ரகசியத்தை ஆராய் தல்; கிணடல செய்தல.

**கிண்ணாரம்** ஒரு இசைக்கருவி, ஓயாமல பேசும பெண்

**கிண்ணி** தொடை எலும்பு; சிறிய பாததிரம்.

**கிணற்றுமூடி** கிணற்றை மூடும் கருவி; அடைப்பான்; பெண் குறி; hymen

**கிணியா** கடற்கரையில் மக்கள விளையாடும நாட்டார் விளை யாட்டு

**கித்தாட்டி** மூடி மறைத்துப் பேசு தல்.

**கிந்தி விளையாட்டு** ஒற்றைக் காலால் கிநதி ஆடும் பாண்டி விளையாட்டு.

**கிந்துதல்** நொண்டுதல்.

**கிராணி** ஒரு நோய்.

**கிராணிப்பேச்சு** பிறரைத் துன் புறுத்தும் எரிச்சலூட்டும் பேச்சு.

**கிராளித்தனம்** கெடுதலை நினைக்கும செயல்.

**கிரியக் கலயம்** மநதிரவாதம் செய்வதற்கும் இறந்தவர்களின் எலும்புகளைச் சேகரிக்கவும் பயன்படும் சிறிய அளவிலான குடம்.

**கிருத்திருமம்** சேட்டை, தீய விளைவைக கொடுககும் செயல்; நாசூக்காகக் கெடுதல செய்தல்; கோள் சொல்லுதல; சண்டை மூட்டுதல்.

**கிருத்துருமக்காரன்** கிருத்துரு வம செய்கின்றவன். பார்கக : கிருததிருமம.

**கிருத்துருவம்** பார்கக : கிருத் துருமம

**கிருதி** சேட்டை செய்பவன, கர்வமுடையவன.

**கிருதிருமக்காரன்** பார்க்க · ஊரை.

**கிருமி கடி** வயிற்றில் பூச்சிவரும் வியாதி.

**கிரையம்** விலை.

**கில்லித் தண்டு** பார்கக . குடடிப புள்.

**கில்லாங்குச்சு** பார்கக : குட்டிப் புள்.

**கிலுக்காம்பெட்டி** பனை ஓலை யால செய்யபபட்ட கிலுக்கம், வளவளவெனப் பேசிக்கொண் டிருப்பவர்.

**கிலுக்கு பிலுக்கு** சாமர்த்தியமாக ஒரு வேலையைச செயயாத தைக குறிக்கும் ஒலிக்குறிப்புச சொல்.

**கிலுக்கு பிலுக்குன்னு** ஒலிக் குறிபபு.

**கிலுக்கு** குழந்தையின் விளை யாட்டுச் சாமான்.

**கிழமேல் உழவு** வயலில் கிழககு மேறகாக சால் அமைதது உழு வது

**கிழமை** ஒருவரின இறப்பிற்குப் பின 16 நாட்களுக்குள் வரும் வியாழன, ஞாயிறு கிழமைகள்.

**கிளாக்காய்** வேப்பங்காய் வடி வுள்ள புளிபபுளள காய்.

**கிளாத்தி** கடல்மீன் வகை.

**கிளி** கிளியாநதட்டு விளையாட் டில் தன் சதுரக கோட்டெல் லையைச் சுற்றிக்கொண்டு மறிககப்பட்ட ஆடடக காரரைத் தொட முயலபவன். பார்க்க · கிளியாந்தட்டு.

**கிளிக்கூடு** கோவிலைப பிரிததுத் திருப்பணி செய்யுமபோது கரு வறைத தெயவஙகளுககுக காப் பாகச் சுறறியிடும மரக்கூடு.

**கிளியாஞ்சட்டி** மண்ணால ஆன சிறிய அகல் விளக்கு (பாாக்க : இடுக்காஞ்சட்டி).

**கிளியாந்தட்டு** நிலத்தில் விளை யாடும நாட்டார் விளை யாட்டு, இரணடு அணிகளாகப் பிரிந்து விளையாடும் விளை யாட்டு.



**கிளியாந்தட்டு**

**கிளுவை** குளத்துமீன வகை

**கிறுகிறுத்தல்** தலைச்சுற்றல; மயககமடைதல.

**கிறுச்சானுக்கு மறிச்சான்** ஒன்று சொலல ஒனறு செயவது; நேர் மாறான செயலைச செய்வது; எதறகும எதிராகப பேசும் தன்மை.

**கிறுதிவட்டம்** அதிகப் பிரசங்கித தனம

**கிறுபூறு** ஒலிக்குறிப்பு; இருவருக் கிடையே உள்ள தகராறைக குறிக்க உதவும் சொல.

## கீ

**கீச்சான்** கீசெனச் சபதமிடும் ஒருவகை வண்டு, சிளவணடு, சுவர்க்கோழி

**கீச்சு கீச்சு தம்பாலம்** குழநதை களின ஒருவகை நாட்டார் விளையாட்டு.

**கீரப்பாத்தி** சிறு துணடு வயல.

**கீரைப்பாம்பு** வயிற்றில உள்ள பூச்சி

**கீறுபூறு** பார்க்க : கிறுபுறு.

**கீணம்** வருததம கலந்த கோபம், தேவையற்ற கோபம்.

**கீழ்க்கடை** கடந்து போன நாட்கள்; முன்பு இருந்தது போலவே.

**கீளி** கடல மீன் வகை.

## கு

**குக்குளித்து** மூழ்கி.

**குச்சி குத்தல்** கர்ப்பத்தைக கலைத்தல்; எருககலஞ் செடிக் குசசியைக் கர்ப்பமான பெண் ணின் குறிக்குள் குத்துதல்.

**குச்சு** சிறுமியின காதணி.

**குசலம்** நடைமுறை வாழவுநிலை

**குசலம் விசாரித்தல்** அன்றாட வாழ்க்கைப் பற்றிப் பேசுதல்.

**குசால்** சந்தோஷம்.

**குசினி** சமையலறை.

**குசினிக்காரன்** சமையல்காரன்.

**குசினிக்காரி** சமையலகாரி.

**குசினிப்பெரை** சமையலறை.

**குசும்பன்** கோள்மூட்டுபவன்.

**குசும்பு** பார்கக : ஊமைக் குசும்பு.

**குசும்புத்தனம்** கோள்; குறும்பு செய்யும் செயல்.

**குஞ்சாங்குறும்பு** குழந்தைகள்.

**குஞ்சாலம்** ஊஞ்சல்.

**குஞ்சி** குழந்தையின் ஆண உறுபபு.

**குஞ்சு** பார்க்க : குஞ்சி.

**குஞ்சும் குழுமானும்** குழந்தை களின் கூட்டம்.

**குட்டி** சிறியபெண; சிறுமி; மகள்; பல்லாங்குழி விளையாட்டில் அதிகமாகக் கூடும் காய.

**குட்டிக்கர்ணம் அடித்தல்** கர் ணம் அடிததல; ஒரு செயலைச் செய்யத தீவிர முனைப்பு காட்டுதல்.

**குட்டிக்கரணம்** தலைகீழாக மறிந்து விழும வித்தை; பெரும் முயற்சி.

**குட்டிப்புள்ளு** சிறிய குசசும் புள ளும் வைத்து விளையாடும் நாட்டாா விளையாட்டு.

**குட்டுவம்** தண்ணீர் ஊறறி வைக்கப் பயன்படும் பெரிய செம்புப் பாத்திரம்.

**குடம்** வண்டிச் சக்கரத்தின் ஆரக் கால் குவியும இடம்.

**குடவண்டி** தொப்பை வயிறு (பார்க்க : தொந்தி).

**குடி எழுப்புதல்** கொடை விழா விற்கு முன்தினம் தெய்வங் களைப் பீடஙகளில நிறுத்து தல்; கொடை விழாவிற்கு முந் திய நாள் நிகழ்ச்சி (குடி அழைப்பு).

**குடித்தரம்** தனியாகக் கொடுக்கப் படும் குடித்தீர்வை.

**குடித்தனம்** (தனிக்குடிததனம்) கணவனும் மனைவியும் தனி யாக வாழ்வைத் தொடஙகு தல்; வாழ்க்கை முறை; ஒழுஙகு; விழுமியம்.

**குடியிருப்பு** ஒருவனிடம் நிலை பெற்ற மோசமான குணங்களை.

**குடுக்கை** குடுவை, பசுத்தோல் போர்த்த இசைக்கருவி.

**குடும்பதோசி** குடும்பங்களுக்குத் தோஷம் செய்பவன், மருமக்

கள்வழி காரணவர் சேஷ காரர்களுக்குக கெடுதல் செய் தால் கிடைககும் பெயர்.

**குடைச்சல்** ஒரு விஷயத்தைத் துருவித் துருவிக் கேடகும செயல்

**குண்டலப்புழு** எந்த விஷயத்தை யும அறிய வேணடும் எனக குடைநது குடைந்து கேடபவன.

**குண்டாகுண்டான் சட்டி** வாய் அகன்ற செம்புப பாத்திரம் (அண்டா குண்டா)

**குண்டாமண்டி** கோள; வதந்தி (குண்டா மட்டி).

**குண்டு** (உரக்குண்டு) உரம் சேக ரிக்கும் குழி, கோலி; குழி; குண் டான மனிதர்; பளளம்.

**குண்டுச்சம்பா** சமபா என்ற நெல வகை; அளவில் பெரிய அரிசி யுடைய நெல.

**குண்டுணி** கோளமூட்டுபவன்.

**குண்டுணி நாரதர்** கோள் கூறு பவர்.

**குணட்டல்** கொஞ்சுதல்; பசப பல், பகட்டுப் பணணுதல.

**குணுக்கு** சிறிய காதணி; கல் இல் லாத காதணி.

**குத்தம்** குற்றம்.

**குத்தல்** வலி.

**குத்தவைத்தல்** பிருஷட பாகம தரையில் படாமல் இரு பாதங் களை ஊன்றி இருத்தல்; குநதி இருத்தல; பெண பருவம் அடைதல்.

**குத்திக் காட்டுதல்** ஒருவனின் குற்றத்தைச் சொலலிக் காட்டு தல்

**குத்து மதிப்பு** உத்தேசமான விலை; சுமாரான விலை; தோராயமாக; உத்தேசமாக.

**குத்துக்கல்** எல்லைக்கல்; வேலிக் காக கட்டப்படட கல; மாடு கட்டுவதற்காகப் பொது இடத் தில் நடப்பட்ட கல்; நில அடையாளத்தைக காட்டும எல்லைககல, செங்குததாகப் பூமியில் நடபபட்ட கல.

**குத்துக்காரி** கூலிக்குக நெல் குறறு பவள.

**குத்துப்போணி** சிறிய அளவிலும, பெரிய அளவிலும் உள்ள பித் தளைப் பாத்திரம்.

**குத்துமி** தவிடு நீக்கபபடாத உமி; பல் தேய்ப்பதற்குரிய கரியைத் தயாரிக்க உதவும் உமி.

**குத்தூசி** அறுவடைக் காலங களில் வரும் குறிகாரன்.

**குதப்புதல்** வாயினுள பதார்த் தத்தைச் சுவைததல்.

**குதர்க்கம்** விதண்டாவாதம ; குந் தகம் இடையூறு.

**குதிகால்** பாதத்தின பின்புறம்.

**குதிரை முகம்** கால் முட்டுக்கும் கறண்டைககும் இடைப்படட பகுதி.

**குதிரைவாலிச் சம்பா** ஒருவகைச் சம்பா நெல்.

**குதுகுதெனல்** குளிராக இருத்தல்

**குந்தகம்** குற்றம்; இடையூறு; குறை.

**குந்தம்** நாட்டார் ஆண் தெய்வத் தின ஆயுதம், ஏச்சுசசொல்.

**குந்தாணி** நெலகுததப் பயன் படும் உலக்கை.

**குப்பக்காய்ச்சி** அரசு நிலம்; ஒரு இடததில் உள்ள குப்பைகளை

எரிதது உரமாக்கி நிலத்துககு உரியவரிடம் கொடுத்துவிட்டு, அநத இடத்தில் இருககும் உரிமை பெறுதல்.

**குப்பம்** குவியல

**குப்பாயம்** பெண்கள் அணியும் ரவிககை; தொளதொளபபான, பெண்ணின் மேலாடை

**குப்பி** காளை மாட்டின கொம் பில அணியும அணி; வெள ளோடு உலோகத்தால் செய்யப் பட்டது, Bottle; தவுல் அடிப பவர் விரலில அணிநதிருப்பது



குப்பி

**குப்பிப்பூண்** உலக்கையின் பூண்.




**குப்பிப்பூண்**

**குப்புறத் தள்ளுதல்** கீழே தளளு தல்; காலை வாரி விடுதல், குறிப்பிடட சமயத்தில் ஏமாற்றி விடுதல, தலைகீழாக விழும் படிச் செய்தல்

**குப்புறப்படுத்தல்** கவிழ்நது கிடத்தல்.

**குப்பை வைத்தல்** அழுகிய உரத்தைப் போடுதல்.

**குப்பைமல்லி** குப்பையில் முளைக்கும மருந்துச்செடி.

**குப்பைமேனி** பார்க்க : குப்ப மல்லி

**கும்பப்பூ** தை மாத அறுவடைப் பயிர; இரணடாம போக சாகு படி.

**கும்பளங்காய்** ஒருவகைப் பூசணிககாய்

**கும்பளா** ஒருவகைக கடல் மீன

**கும்பா** உணவு உணணும் குழிந்த பாத்திரம

**கும்பாட்டம்** கரகாட்டம் என் னும் நாட்டுப்புறக் கலை.

**கும்பி** குடல்; இரப்பை; வயிறு.

**கும்பிடுபூச்சி** ஒருவகை விட்டில் இலைபபூச்சி.

**கும்பிப்போதல்** சோறுதண்ணீர் இலலாமல வற்றிப் போதல்.

**கும்பிளித்தல்** நீரில் மூழ்கிச் செல் லுதல்.

**கும்புதல்** தீய்ந்து போதல; குழம்பு; கறி கும்புதல்.

**கும்மாயம்** சுண்ணாம்பு; குழைத்த சுணணாம்பு, சுண ணாமபுச் சாநது.

**கும்மிளித்தல்** பார்க்க : கும்பிளித் தல்.

**கும்முதல்** அதிக நெருப்பில் வெந்த சாதம் பக்குவம் மாறிப் போதல்.

**குமட்டில் குத்துதல்** முகததில் குததுதல்

**குமரி** கன்னி.

**குமருதல்** பெண பருவம அடை தல்.

**குமிச்சு** குவிதது.

**குமைத்தல்** கிண்டல் செய்தல்; ஒரு செயலைச் செயயவிடா மல ஆக்கல்; குலைததுப் போடு தல், பரிகாசம் பண்ணுதல்; குழபபுதல்.

**குமைதல்** மனம கலங்குதல்.

**குரங்குப் பட்டை** கூரை ஓடுகள் கலைந்து போகாதபடி இடப படும் சுண்ணாம்புப பட்டை.

**குருக்கள்** சைவ வேளாளர் சாதியினரில் ஒருவகையினர்; சடங்கு கிரிசை செய்பவர்.

**குருக்கு** ஒருவகை செடி; முள் இலை உடைய மருந்துச்செடி.

**குருட்டு பனங்காய்** உள்ளீடு இல்லாத பொக்கு பனஙகாய்.

**குருட்டுத்தனம்** கண்மூடித்தனம்.

**குருணை** பொடி அரிசி

**குருத்தல்** முளைத்தல்.

**குருத்துப் புழு** நெறகதிா வந்த பினபு அதன் குருததைச சேதப் படுததும் புழு.

**குருத்துவம்** குருபேரில் உள்ள மரியாதை; நன்றி.

**குருதி கொடுத்தல்** நாட்டார் தெய்வத்திற்குப் பலி கொடுத் தல.

**குருமண்** களிமண்; பசை அதிக முடையது, கறுப்பு நிறம். (நெல் வைக்கும் அறையில இம மண் ணால் பூசி சாணத்தால் மெழுகுவர்)

**குலமறியான்** ஒரு வகை நெல்.

**குலுக்கம்** வெட்கம், அவமானம்

**குலுக்கை** குதிர்; நெல் போடப் படும் பெரிய பானை; நெல் சேமிபபதற்குரிய மணகுதிா.

**குலைத்தல்** அழித்தல்.



குலுக்கை

**குலைவாடல்** குலை முறிந்து வாடிய தேங்காய், நோஞசா னான குழந்தை.

**குழிப்பெருக்கம்** பெருககல் வாய்ப்பாடு.

**குழியல்** சாப்பிடப் பயன்படும் பித்தளைப பாத்திரம்.

**குழிவித்து** நீரிலலாத வயல் உழ வில் விதையைக் குழி தோண்டி வைப்பது.

**குழை அரக்குதல்** மரத்தில் இலை தழைகளை வெட்டுதல்.

**குழைச்சட்டுவம்** பெரிய அள வில உள்ள சட்டுவம; அண்டா வில் சோறு கிண்டப் பயன்படு வது.



குழைச்சட்டுவம்

**குழைதல்** நெகிழ்தல், பசபபல்.

**குழையடித்தல்** அளவுககு மீறிப் புகழ்தல்; ஜால்ரா அடித்தல்; வசப்படுத்த தந்திரமாகப் பேசு தல்; ஒரு காரியத்தை முடிக்க தாஜா செய்தல்.

**குழையுரம்** மர இலை; தழை உரம்.

**குள** மந்திரவாதிக்குக கட்டுப் படட பிசாசு (குடடிசசாத் தான்).

**குளக்கால்** குளத்துககு நீர் வரும வாய்க்கால்.

**குளக்கெழுத்தி** ஆற்று குளதது மீன் வகை, கெழுத்தி மீனவகை.

**குளக்கோரை** ஒருவகைக் களை; புல்

**குளத்தாங்கரை** குளததினகரை.

**குளத்துக்குப்போதல்** மலங் கழிககச் செல்தல்

**குளிகை** மாத்திரை.

**குளிசை** மாத்திரை.

**குளித்தி** குளிர்.

**குளிப்பாட்டுதல்** தாஜா செய்தல்; முகஸ்துதி செயதல்

**குளியாணி** கடல் பாறைகளில் சிக்கிய வலைகளை அகற்றும பணியாளர்.

**குளிர்காய்தல்** பிறர் உதவியில் வாழ்தல்.

**குளிர்விடுதல்** பயம் விட்டுப் போதல்.

**குளுசை** மாத்திரை.

**குளுவெள்ளை குளிப்பன்** ஒரு வகை நெல்.

**குளைதல்** சோறு அதிகமாக வெந்து போதல.

**குறண்டி** தூண்டில் முள்; பார்கக : பாதாளக் கரண்டி.

**குறத்திக்களி** குறவஞ்சி இலக்கி யஙகள் கூறும் கதையை நாட் டார் தன்மையுடன் நடததிக் காட்டும் நாட்டார கலை.

**குறளி** பார்க்க . கொறளி.

**குறியது** சிறு மரசசட்டம்.

**குறுக்கு** முதுகு

**குறுக்கு வழி** சுறறி வளைககாமல் செல்லும் வழி.

**குறுக்குதல்** மிக ஆடம்பரதது டன் கவர்சசியுடன இருத்தல்.

**குறுங்கட்டி** விசுப்பலகை



**குறுங்கட்டி**

**குறுங்காவளையம்** ஏர் வள்ளத் தையும் மரத்தையும் பூட்டும் சங்கிலி; உழவு கருவி.



**குறுங்காவளையம்**

**குறுஞ்சம்பா** சம்பா நெல்வகை, சிறிய அளவில் உடைய நெல்; குறுகிய காலத்தில் விளைவது.

**குறுணி** முகத்தலளவு, ஒரு மரக் கால்; 8 படி கொண்ட தானிய அளவு.

**குறுணை** அரிசி முதலியவற்றின சிறுநொய்

**குறுதல்** மெலிதல்.

**குறுந்தட்டி** ஒரு வகை மருந்துக் கொடி.

**குறுப்பு** வைணவ சமயத்தில்

தீவிரமுடைய ஒருவகைச சாதியினர்; கிருஷ்ணவகை சாதியினர்.

**குறும்பல்** முதிராத தென்னங்காய்; பனங்காய்.

**குறும்பாறை** பாறை என்ற கடல் மீன்வகை.

**குறுமான்** சிறு குழந்தைகள்.

**குறுமுழி** திருஷ்டி படவைக்கும பாாவை.

**குறுவா** ஒரு வகை நெல்.

**குறைச்சல்** வெடகம்.

**குன்னாலித்தனம்** அறியாதவன் போல் நடித்தல்; போலித்தனம, கள்ளத்தனம்; சாகசமாக நடித்தல, பயப்படுவது போல் நடித்தல

**குன்னிமுத்து** குன்றுமணி.

**குன்னுதல்** அவமானத்தால் உடல குன்றிப் போதல்; தண்ணீர் குறைவின காரணமாக சாதம் பருவம் மாறி இருததல்.

**குனிப்பான்** நடமாடுவான

## கூ

**கூச்சம் காட்டுதல்** உடலில் கிச்சு கிச்சு மூட்டுதல்.

**கூட்டவியல்** பார்க்க : அவியல்

**கூட்டாக்குதல்** பொருட்படுததல்.

**கூட்டான்** கறிகள் (கூட்டு).

**கூட்டாஞ்சோறு** எலலாவகைக காய்கறிகளும் பருபபும் கலந்த சோறு.

**கூட்டி வருதல்** அழைதது வருதல்.

**கூட்டிக்கொடுத்தல்** ஒரு பெணணைப் பெண்டாள கொடுததல (கூட்டிவிடுதல்).

**கூட்டிப்பிடித்தல்** ஒருவனை மன்னித்து ஏற்றுக்கொளளுதல்.

**கூட்டுக்கச்சவடம்** கூட்டு வியாபாரம்

**கூட்டுக்கு** துணைக்கு

**கூட்டுதல்** கறிவகைக்குரிய சேருமானத்தைக கூட்டி வைத்தல.

**கூடைச் சோறு** கல்யாணத் தம்பதிகள் தம் வீடு செல்லும் போது பெண் வீட்டிலிருந்து கொடுக்கப்படும் சோறு.

**கூண்டு வண்டி** கூண்டு உள்ள மாட்டுவணடி; மேற்கூரை உள்ள மாட்டுவண்டி.

**கூத்தம்பலம்** கோவிலில் கலை நிகழ்ச்சி நிகழுமிடம; அரங்கு

**கூத்து** கேலிககிடமான செயல்.

**கூதறை** ஒழுககமிலலாத பெண; கூறுகெட்டவள்

**கூந்தப்பனை** பெரிய கொட்டகை வாயிலை அலஙகாரம் செய்ய உதவும பனை

**கூந்தல்** நொங்கு, பனங்காயின் சீவிய மேறபகுதி

**கூப்பயினி** காயச்சிய பதனீாகூழ்; பதனீர்.

**கூப்பு** ராட்டு நூற்பதற்குரிய பஞ்சை வைக்கும் காற்றுப புகாத பனை ஓலைப பெட்டி.

**கூம்பெட்டி** பார்க்க : கூப்பு.

**கூமுட்டை** அழுகியமுட்டை; விவரம இல்லாதவன்; உடனறியும் சகதி இல்லாதவன், நுட்பமான அறிவில்லாதவன்.

**கூராப்பு** மழை மூட்டம்.

**கூலிக்கு மாரடித்தல்** விருப்பமிலலாமல பணததிற்காக மட்டும் தொழில செய்தல.

**கூவரகு** கேள்வரகு.

**கூவை** கூகை; அழகில்லாதது

**கூழக்கும்பிடு** போலி வணக்கம.

**கூழாஞ்சக்கை** பழத்திற்குப் பயன் படாத பலாவகை.

**கூளக்கும்பிடு** போலிததனமான வணக்கம.

**கூளையன்** குள்ளன்.

**கூறு** அறிவு, புத்தி

**கூறு வைத்தல்** காய்கறி, மீன போனறவற்றை விறபனைக் காகத் தனியே பிரித்துக் குவிதது வைத்தல்.

**கூறுவடி** கூறுவைப்பவன்; வயல் அறுக்கும் தொழிலாளர்களைக கண்காணிபபவன; கஙகாணி.

**கூனிக்குறுகி** அவமானததால் கூசி.

**கூனிப்பொடி** சிறிய கடல் மீன்; குழந்தைகள கூட்டம்.

**கூனுதல்** அவமானத்தால் அடங்கி இருத்தல்.

**கூனையன்** உயரம் குறைந்தவன், காளை வகைகளின் ஒனறு.

## கெ

**கெட்டிக்காரத்தனம்** சாமர்த் தியம.

**கெட்டிக்காரன்** சாமர்த்தியசாலி

**கெட்டிச்சாவி** உட்குழல் இல லாத சாவி.

**கெடை** மூங்கில; ஆடுகளை வயல் அலலது தோட்டத்தில் தங்க வைத்தல்.

**கெண்டி** மூக்குவாய உளள பாத் திரம்.



கெண்டி

**கெணியாமல்** கவனிக்காமல்.

**கெத்து** தான் எனற அகம்பாவம்

**கெம்புதல்** பேசுதல், உரத்துப் பேசுதல்.

**கெளித்தி** கெளிறு எனற மீன்; தேளி மீன; நலல நீரில் வாழும ஒரு வகை மீன்.

**கெளிறு** பார்க்க : கெளித்தி.

## கே

**கேட்டாப்புள்** கவண்.

**கேணயன்** விவரமில்லாதவன்; எதையும் சரியாகச் செய்ய முடி யாதவன்; சாமர்த்தியமில் லாதவன்

**கேப்பாரு இல்லாமை** தட்டிக் கேட்க ஆள் இல்லாமை.

**கேப்பாரு கேள்வி இல்லை** கேட் பதற்கு யாருமே இல்லை, ஆதரவு இல்லாத நிலை.

**கேமன்** தடியன்.

**கேள்வி** வாயவழி உத்தரவு; விசா ரணை.

**கேள்விக்காரர்** ஏலம கேட்பவர்.

**கேள்விக்கச்சேரி** கிராம அலுவல கம, ஊர் நிலவரி வாங்கும் அலுவலகம

**கேள்விமுறை** கேட்பதறகு உரி யவர்

**கேவுதல்** கோழி முட்டையிடும் பருவத்தில் தொடர்ந்து கததுதல

**கேறுகேறுன்னு** கோபததுக்கு அடையாளமாகச சொலலப்படும சொல்.

**கேறுவது** கோழி முட்டையிடும் பருவத்தில் எழுபபும ஒலி.

## கை

**கை மருந்து** வசிய மருந்து.

**கைகழுவுதல்** கைவிடுதல; ஒரு செயலைச் செய்வதிலிருநது விலகுதல்; உருபபடாத ஒருவனிடமிருந்து விலகுதல்.

**கைகாரன்** ஒரு செயலை அநியாய வழியில செய்து முடிபபவன.

**கைகாரி** மயக்குவதில் வல்ல பெண்

**கைகால் விளங்காமை** பக்கவாதம்.

**கைசால** சமையலறை

**கைசெலவுக்குக் கொடுத்தல்** பார்கக · செலவுக்குக் கொடுத்தல்.

**கைசோலி** சமையல் வேலை; தெருப்பிச்சைககாரர்களிடம பிச்சை இலலை எனபதறகுப் பதிலாகக கூறும சமாதானச சொல்.

**கைதட்டிப் பண்டாரம்** வாய் பேசாமல் கை தட்டிப பிச்சை கேடகும் சனனியாசி.

**கைநனைக்காமை** சாப்பிடாமை

**கைநீட்டுதல்** அடித்தல்

**கைப்பணம்** சொந்தப் பணம்.

**கைப்பாணி பலகை** கொத்தனார் பயன்படுத்தும் சிறு பலகை, சுவரில் பூசிய சிமெண்ட், மண் சமமாகத தேய்க்கப் பயன்படுவது.

**கைப்பிடி மோதிரம்** திருமணத்தில் மாப்பிள்ளைககுப் பெணவீட்டார் அணியும் மோதிரம

**கைபோடுதல்** மாட்டுத்தரகாகள் தங்களின் கைகளைத் துணியால் மூடிக்கொண்டு விரல்களைப் பிடிததுப் பேரம் பேசுதல.

**கைமுட்டி** சுயஇன்பம்.

**கையகப்பை** சிறிய அகபபை.

**கையாலை** மண்சுவருக்குப் பாதுகாப்பாகக் கட்டப்படும் ஓலைக் கூரை.

**கைலேசு** (கைலேஞ்சு) கைக்குட்டை.

## கொ

**கொக்கட்டான்** அரிசியும் சர்க்கரையும் கலந்து செய்யப்பட்ட குழந்தைகளின் உணவுப் பணடம்; சிறுகுழந்தைகள வாயில் வைதது சப்பித் தின்பதற்காகத் தயாரிக்கப்படும் பலகாரம்.

**கொக்கறை** காணிக்காரர் என்ற சாதியினரின் நாட்டார் இசைக் கருவி.

**கொக்கி** கொடுக்கு; கொடுக்காபுளி மரம்; துறட்டி; கொளுவி.

**கொக்கி போடல்** நெற்கதிர் முற்றிவளைதல

**கொக்கு நோய்** கோழிகளுக்கு வரும வெள்ளைக் கழிச்சல் நோய்; நெற்பயிருக்கு ஏறபடும் நோய்.



கொக்கி

**கொக்குபிடித்தல்** *தண்ணீரில் மூழ்கிப போதல்*

**கொக்கூசு** *அச்சுமுறுக்கு.*

**கொங்காணி** *மழைக்காலத்தில தலையின் மேல் அணியும் நாணல் புலலால் ஆன முட் டாக்கு*

**கொச்சக்கயிறு** *தேங்காய் நாரால ஆன கயிறு.*

**கொச்சங்காய்** *மிகச சிறிய தென்னைக் குரும்பல்*

**கொச்சம்** *ஆட்டுக்கிடை நாற்றம்; தேங்காய் நார் கயிறு (கொச்சக் கயிறு).*

**கொச்சன்** *சிறு பையன்*

**கொசவம்** *(கொயசகம்) கொய்து சுருககப்பட்ட உடை; முந் தானை.*

**கொசவன்** *குயவன்.*

**கொஞ்சநஞ்சம்** *சிறிதளவு; மிகக் குறைநத அளவில்*

**கொஞ்சு** *காயலில உள்ள இறால மீன.*

**கொட்டக்குடவை** *பாத்திரவகை.*

**கொட்டப்பெட்டி** *சிறிய பனை ஓலைப்பெட்டி, நார்ப்பெட்டி; தொப்பை வயிறு*

**கொட்டம்** *மாடுகளுககு மருந்து ஊடடப் பயனபடும மூங்கில் குழாய்; மரப்பாததிரம*



கொட்டம்

**கொட்டாப்புளி** *மரததாலான பெரிய அளவு சுத்தியல்*



கொட்டாப்புளி

**கொட்டாரம்** *அரண்மனை.*

**கொட்டைத் தேங்காய்** *தண்ணீா இல்லாத காய்ந்த தேங்காய*

**கொடி** *துவைத்த துணிகளைக் காயப் போடுவதற்குக் கட்டும கயிறு; கடடு மரப் பாயின் மேல் விளிம்பு.*

**கொடி அடுப்பு** *விறகு அடுப்பில் முககிய அடுப்பைத தொட்டு இருக்கும சிறு அடுபபு.*

**கொடி இறச்சி** *மஞ்சள் தடவி வெயிலில காயப்போடும பதப படுத்தப்பட்ட இறசசி.*

**கொடுக்காபுளி** *ஈழப்புளி என்ற மரம்.*

**கொடுவாய்** *தூஙகும்போது வாயிலிருந்து வழியும் எச்சில் நீர்.*

**கொடை** *நாட்டார் தெய்வக் கோவில விழா.*

**கொண்டாங் கொடுத்தான்** மரு மகன், சம்பந்தககாரன்.

**கொண்டாடிப்போவான்** ஒரு வனை அன்பாக ஏசுவது

**கொண்டி** தாழ்ப்பாள்

**கொண்டை** தென்னை, பனை, கமுகு மர உசசி

**கொணக்குதல்** பிணங்குதல்.

**கொணட்டுதல்** பார்கக · குணட் டல்.

**கொத்சு** கத்தரிக்காயைச் சுட்டுத தயாரிக்கபபடும கறிவகை.

**கொத்தமல்லிச் சம்பா** ஒரு வகைச் சம்பா நெல்.

**கொத்து** வயல் அறுவடை செயத வாகளுக்குக கொடுக்கும் கூலி.

**கொதம்பை** பார்கக : கரம்பை.

**கொதவளை** குரல்வளை.

**கொந்தாங்கொள்ளை** ஒரேயடி யாக.

**கொப்பு** ஒரு வகைத் தங்க ஆப ரணம.

**கொம்பு சீவுதல்** ஒரு செயலுக்கு ஒருவரைத் தயாராக்குதல்; ஒரு செயலைச் செய்யத் தூணடும படி பேசுதல.

**கொம்புச்சுழி** மாட்டின் இரண்டு கொமபுகளுககிடையே உள்ள சுழி.

**கொம்புவெள்ளம்** வயல் தொழி யில் நாற்றுப் பாவிய பின்பு ஏழு முறை நீர் பாய்ச்சுவது.

**கொமுட்டுதல்** வாந்தி எடுத்தல்

**கொரளி** (குறளி) துர்தேவதை; மநதிரவாதி கட்டுப்படுத்தி வைத்திருக்கும தேவதை.

**கொல்லம்** வருஷம

**கொல்லமா** கொல்லா மரம, முந்திரி மரம்

**கொல்லமாண்டு** மலையாள ஆணடு.

**கொல்லமிளகு** மிளகாய் வகை

**கொல்லாங்கொட்டை** முநதிரிப பருப்பு.

**கொல்லாம்பழம்** கொல்லா மரத்தின் பழம

**கொலச்சோறு** மரண தண டனைக்குரியவன் உண்ணும் இறுதிச் சாப்பாடு.

**கொலுவுசாளை** ஒருவகை மீன்.

**கொவருதல்** நீரில் ஊறுதல்.

**கொழித்தல்** குத்திய நெல்லைப புடைதத பின்பு சுத்தமான அரி சியைப பிரித்தெடுக்கப புடைத் தல; அரிசியிலிருந்து குறு நெய்யைப் பிரித்தெடுககப் புடைத்தல.

**கொழு** கலபபையில் மண் இளக் கும் கருவி.

**கொழுந்தி** மைத்துனி

**கொழுப்பு** தனி சிமெண்டும் தணணீரும கலநத கலவை; ஆணவம்; செருககு; திமிர்.

**கொழை போடுதல்** நாததங காலில் நாற்று நடும்முன்பு

இலைகளை வெட்டிப்போடு தல்.

**கொள்ளாம்** பரவாயிலலை

**கொள்ளிக்குடம்** கொள்ளி வைக்கப் பயன்படும சிறிய மண்குடம. இது சூளையில் வேக வைக்காததாய இருக்கும.

**கொள்ளி முடிதல்** வாரிசு அற்றுப் போதல்.

**கொள்ளை** பேதி என்ற வியாதி; காலரா.

**கொள்ளையில் போவான்** பேதி என்ற வியாதியால் இறப்பவன்.

**கொளைக்கம்பு** மரத்தின் இலை களை அரிந்தபின் மிசசமுள்ள கமபு.

**கொறச்சல்** வெட்கம்.

## கோ

**கோக்கதவு** பெரிய மிராசுதாரின் வீட்டில் பின்புறமுளள கதவு

**கோக்காலி** தரைமட்டத்தில் மேல் மூன்றடி உயரத்தில் வைக் கோல் வைக்கக் கட்டப்பட்டி ருக்கும் கம்பால் ஆன பரண்.



கோக்காலி

**கோசி** கட்டுமரப் பாயின் கீழ் விளிம்பு

**கோசுப்பெட்டி** சொகுசான வில வண்டியின் முன் பகுதியி லுளள இடம; வண்டிக்காரன் இருககுமிடத்தை அடுத்து இருபபது.

**கோஞ்சாட்டை** தென்னமபாளை யின ஒரு பகுதி.

**கோட்டுமா** மீன் வலையைப் பாதுகாக்கும் நூலால் செய்த பொருள.

**கோட்டை** 21 மரக்கால்; நெல அளவு.

**கோட்டை அடுப்பு** பெரிய அள வில் சமையல செய்யப் பயன் படும் அடுப்பு

**கோடத் தண்ணி** ஊறல் தணணி.

**கோடப்பானை** சாராயம ஊறப் போடும பானை.

**கோடவாரியன்** ஒரு வகை நெல்.

**கோடாலிமுடிச்சு** கொண்டை வகை.

**கோடி** புதியது; புதிய துணி.

**கோடி மண்வெட்டி** களை எடுப் பதற்குரிய சுமார் 4 அடி நீளம் இருக்கும் மண்வெட்டி; புதிய மணவெட்டி

**கோணக்களி** குறும்பு.

**கோடி போடுதல்** ஆணின் இறப்புச் சடஙகில் விதவை யாகப் போகும மனைவிக்கு உறவினர்கள வெள்ளைத் துணி கொடுக்கும் நிகழ்சசி.

**கோணக்களி கிண்டுதல்** ஒரு செயலைச் செய்யவிடாமல குறும்பு செயதல; ஒரு செயலைச் செய்யாமல் தடுக்கச் செய்யபபடும சூழ்ச்சி

**கோணத்தண்டை** குழந்தைகளின காலில அணியும் ஆபரணம்

**கோணம்** ஒரே குடும்பத்திற்குரிய வயல்கள்.

**கோப்பைச் சட்டி** கொட்டாங கச்சி போன்ற சிறிய அமைப புடைய சட்டி. இதில தயிர் ஊற்றி வைத்தால் புளிப்பு வராது.

**கோம்பை** விவரம் இலலாத நிலை; உலக அனுபவம், நுட்ப அறிவு அற்ற தனமை; ஒரு நாடடார பெண் தெய்வம்.

**கோம்பையன்** விபரம இலலாதவன். பார்க்க . கோம்பை.

**கோமரத்தாடி** நாட்டார தெய்வததின அருள் வந்து ஆடுபவர், சாமியாடி; அருளாடி.

**கோமரம்** நாட்டார் தெய்வ அருள்.

**கோமரம் வருதல்** தெய்வ அருள் சாமியாடிக்கு வருதல்.

**கோயிக்கல்** அரண்மனை.

**கோயித்தம்புரான்** அரசியின் கணவன.

**கோயில்பிள்ளை** கிறிஸ்தவக் கோயிலின் அதிகாரி.

**கோயில்காளை** உழைக்காமல் ஊர் சுற்றும் வாலிபன, அடங்காதவன்

**கோரு வலை** காயல பகுதிகளிலும, மீன்கள் அதிகம் உளள இடஙகளிலும் பயனபடுததப் படும மீன்பிடி வலை.

**கோருதல்** முகத்தல்; மோந்து

**கோருவை** சாதம எடுப்பதற்குரிய கைப்பிடியுடைய பித்தளைப் பாததிரம.

**கோரைச்சம்பா** சம்பா என்ற நெல்லின வகை.

**கோழிக்காரம்** கோழியின் காயந்த மலம்.

**கோளாறு** முறைபபடியாக; சரியாக; நிரலபடியே, அறிவு பூர்வமாக

**கோறப்பாக்கு** ஊறப்போட்ட பாக்கு

## ச

**சக்கடாவண்டி** மாட்டுவண்டி; பாரவண்டி; கட்டைவண்டி.

**சக்கப்போடு** திறமையாக, சிறப்பாக; வெறறிகரமாக.

**சக்கரக்காரன்** செல்வந்தன; பணககாரன.

**சக்கரத் தேமல்** உடலின் மேல பகுதியில அமைநத, அதிர்ஷ்டத்திறகு அடையாளமாக அமைநத வெள்ளைத் தேமல்.




சக்கடா வண்டி

**சக்கரம்** சுமார் 3 பைசா மதிப்புள்ள பழைய திருவிதாங்கூர் நாணயம்.

**சக்கரை** குழந்தையின் ஆண்குறி

**சக்காத்து** இலவசம.

**சக்காய்** பலாக்காய.

**சக்கைப்பூஞ்சு** பலாக்காயின நார்ப்பகுதி.

**சங்கடம்** துன்பம்; கவலை; பிரச்சனை.

**சங்கம்பாண்டி** முருக வழிபாடு செய்யும் சாதி; காவடி தூககிச செல்லும் பக்தர்களுக்கு உதவும பண்டார சாதி.

**சங்கரன் காளை** எல்லாக் கேள்விகளுக்கும் தலையை ஆட்டி ஆமாம் போடும் மாடு; பூம் பூம் மாடு; எதற்கும சரி எனச சம்மதிககும குணமுடையவன்.

**சங்காத்தம்** உறவு; தொடர்பு; இணக்கம்; வாசம்.

**சங்கிராண்டி** அரைப்பைத்தியம்,

**சங்கிராண்டித்தனம்** விபரம் இல்லாத நிலை

**சங்கிலித் துறை** கன்னியாகுமரியில் தீாத்தமாடும் இடம்.

**சங்கு** கழுத்து

**சங்கூத்துப் பண்டாரம்** சங்கு ஊதிககொண்டு பிச்சைககு வரும் பண்டாரம்.

**சஞ்சி** பை.

**சட்டம்** மாட்டின் பின்புற இரணடு கால் எலுமபுகள்; எலும்புககூடு.

**சட்டம் ஒடுங்குதல்** ஈனுவதற்கு முன் மாட்டின் பின்புற எலுமபுச் சட்டம் ஒடுங்குவது.

**சட்டம்பி** அடிமுறை தெரிந்த ரௌடி; திண்ணைப் பள்ளிக் கூட மாணவர்களின் தலைவன் (மானிட்டர்).

**சட்டமாய்** முறையாய்; விளக்கமாய; வரிசையாய்; நிரம்ப; நன்றாக.

**சட்டளை** ஆற்றுநீர்; குளத்து வாய்ககாலில பாயவதற்குரிய தடுப்பு. (Shutter)

**சட்டாம்பிள்ளை** கிறிஸ்தவ மத உபதேசியார்; கிறிஸ்தவ மத அறிஞா, வகுப்பில் மாணவர்களின தலைவன்.

**சட்டர்** பகவதி கோவிலில் பணிபுரியும் அதிகாரி.

சட்டர் பாாகக : சட்டளை.

**சட்டிபானை தொடுதல்** குழந்தைககுப் பெயரிடும நிகழ்ச்சி.

**சட்டுத்துணி** அடுப்பங்கரைத் துணி.

**சட்டுவம்** தோசை மாறறிப் போட உதவும் இரும்புக் கரணடி.



சட்டுவம்

**சட்டுவாப்பை** பார்க்க : சட்டுவம்.

**சட்டுனு** விரைவாக; சீக்கிரம்.

**சட்ரஷம் பரிமாறல்** திருமணம் முடிநததும் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் உணவு பரிமாறும் சடஙகு

**சடக்குனு** விரைவாக ; சீககிரமாக.

**சடங்காதல்** பருவமடைதல (பார்க்க · சமைதல)

**சடங்கு** பூபபுனித நீராட்டு விழா.

**சடம்பு** சணல் நூல்.

**சடவாறுதல்** இளைப்பாறுதல்.

**சடவு** இளைப்பு; அயர்வு; சோர்வு.

**சடுகுடு** கபடி விளையாட்டு.

**சடைத்தல்** களைததல்.

**சடையாரி** நாதது.

**சடைவாறுதல்** இளைப்பாறுதல்

**சடைவு** சோர்வு.

**சண்டப் பிரசண்டம்** மகிழ்ச்சியுடன் ஆர்பபாட்டம செய்தல.

**சண்டன்** சிவன.

**சண்டமுண்டன்** எதற்கும் பயப்படாதவன்; அரககன்

**சண்டாள வைத்தியம்** பார்க்க : அசுர வைததியம

**சண்டித்தனம்** திமிர்; முரண்டுத்தனம், பிடிவாதம்.

**சண்டியன்** முரடன்; ரௌடி.

**சண்டு** நெல் அடித்து, சூடடித்த பின் வரும சாவி முதலிய பதா; நெல் பதர்.

**சண்டை பிடித்தல்** உரிமையுடனோ, பகையுடனோ கடுமையாகக் கூறுதல்.

**சண்ணினான்** சாப்பிட்டான்.

**சண்ணுதல்** அதிக அளவு சாப்பிடுதல் (பரிகாசச் சொல).

**சத்தம்** வாடகை; பெருமபாலும வாகனங்களுககுரிய வாடகையைக குறிக்கும் சொல்.

**சத்தம் காட்டுதல்** கூப்பிடுதல்; கைதட்டி அழைத்தல்.

**சந்தி** முச்சந்தி, சந்திப்பு; மாலை

**சந்திப் பிரபை** தலையிலணியும ஒருவகை ஆபரணம்.

**சந்தி விளக்கு** சந்தியில நிறுத்தப் பட்ட கல்தூண மண்ணெண் ணெய் விளக்கு.

**சந்திவேளை** சாயுங்காலம் ; மாலை.

**சந்து** பிருஷ்டம்; தொடை, இறைச்சித் துண்டு.

**சந்துகாரை** ஒரு வகை தங்க ஆபரணம்.

**சப்பட்டை** மோசமானவன; கெட்டவன்; மோசமான பொருள்; கீழ்மகன்

**சப்பாணி மாடன்** மாடன் வகை; நாட்டார் ஆண் தெய்வம்.

**சப்பாத்திக்கள்ளி** கள்ளிவகை.

**சப்பாத்து** படிக்கட்டு இல்லாத சரிவாக அமைந்த பாதை. (Subpath)

**சப்புதல்** கை சூப்புதல்.

**சப்பும் சவறும்** குபபைக்கூளம்; தேவையற்ற பொருடகள், குப்பை.

**சப்பை** நாட்டார் விளையாட் டில உதிரியாக இருக்கும் விளையாட்டு வீரர்.

**சப்பை** பார்க்க : சறுக்கு.

**சப்பைக்கட்டுதல்** குற்றம குறை களை நியாயப்படுததிப் பேசு தல்.

**சம்சியம்** சந்தேகம்; நிச்சயமற்ற தன்மை.

**சம்படம்** திருநீறு வைக்கப்படும் சிறிய மரம் அல்லது உலோகப பெட்டி; வட்ட வடிவ உலோகப பாத்திரம், டிபன பாக்ஸ்

**சம்பா அரிசி** இளம் சிவப்பு நிறமுள்ள அரிசி.

**சம்பாரம்** பச்சை மிளகு, கறிவேப் பிலை கலநத நீர் மோர்.

**சம்பிரதிப் பிள்ளை** கோவில் கணககைக் கவனிப்பவர்; கிராமக கணக்கைக் கவனிப்ப வர்; தாலுகா அளவில அதிகாரி.

**சம்மணம்** வலது காலை மடிதது இடது தொடையிலும இடது காலை மடிதது வலது தொடை யிலும் வைததபடி கீழே அமர்நதிருப்பது.

**சம்மந்தி** துவையல வகை; கண வனின் தஙகை.

**சம்முள் மேளம்** தோலால் மூடப் பட்ட வாயபபகுதியுடைய இரணடு மண குடஙகளான இசைக கருவிகள்.



**சம்முள்மேளம்**

**சம்சோரி** முருங்கைக்கீரையை வதககித் தேங்காய அரைத்துச செய்யப்படும் ஒரு வகை குழம்பு.

**சமுட்டுதல்** மிதித்தல.

**சமுதாடு** நீண்டவாள், நாட்டார தெய்வங்களின் கோவில்களில இருககும் ஆயுதம்.

**சமைஞ்ச பெண்** பருவமடைந்த பெண்.

**சமைதல்** பெண பருவமடைதல்.

**சர்கீட்டு** அரசு அலுவல் காரணமாகச செல்லும் பயணம.

**சர்த்தித்தல்** வாநதியெடுத்தல்.

**சர்த்திப்பு** பார்கக : ஓங்கரிப்பு.

**சர்ப்பக்காவு** பாம்புகள இருக்கும் தோட்டம் (பாமபுக்காவு).

**சர்ப்பீச்சு** போலி கௌரவம ; டாமபீகம; பெருமை.

**சரப்பளி** கழுததணி.

**சரல்** ஜல்லி

**சரித்தல்** சாயத்தல.

**சருவச்சட்டி** வாயகன்ற சிறிய சட்டி

**சருவம்** குழிவு அதிகமில்லாத செமபுப் பாத்திரம்

**சல்லடம்** சாமியாடுபவர் அணியும் சீருடை, கறுப்பு நிற கால் சட்டை பார்டரில சதங்கை மணிகள வைத்துத் தைக்கப் பட்டிருககும.

**சல்லன்** ஒரு வகை நெல்.

**சல்லி** சிறிய கல்.

**சல்லிக்காசு** சிறிய காசு, எண்ணிக்கையில் குறைநத காசு; மிகக குறைந்த மதிப்புள்ள காசு.



**சல்லடம்**

**சல்லியம்** இடையூறு, தொந்தரவு.

**சலம்பாமல்** பிணங்காமல் ; தொணதொணக்காமல்; பேசாமல்.

**சலம்புதல்** ஓயாமல் பேசுதல்.

**சவங்குதல்** மெலிதல; நலிதல.

**சவடு** ஒரு வகைப் பொன் ஆபரணம

**சவண்டுதல்** நீண்டுவிடுதல், தொய்வடைதல்; கெட்டுப் போதல்.

**சவத்தைத் தள்ளு** முடிந்து போன செயலை விட்டு விடு.

**சவலைப் பிள்ளை** குழந்தையின் பால்குடி மாறும் முன்பு பிறக்கும் அடுத்த குழந்தை.

**சவளக்காரர்** கடல்பகுதி அல்லாத இடங்களில் வாழும மீனவர்; மீன் வியாபாரம் செயயும் உளளூர் மீனவர்.

**சவறு** குப்பை கூளம்; எதற்கும் ஆகாத.

**சவுக்களி** ஒருவகைக் காதணி.

**சவுக்காளி** நண்பன்.

**சவுட்டுதல்** மிதிததல்.

**சவுட்டுவண்டி** சைக்கிள்.

**சவுரி** தேங்காய் தோடு; செயற்கைத தலைமுடி; பார்க்க : கதம்பை

**சவையாடுதல்** மெனறுகொண்டி ருத்தல, பேசிக்கொணடிருத் தல்.

**சள்ளவாயன்** ஓயாமல் பேசு பவன்

**சள்ளென** (சள்ளுசள்ளுன்னு) கோபததைக் காட்டும் குறிப்பு.

**சள்ளை** இடையூறு; தொநதரவு, ஒருவகை ஆற்றுமீன.

**சள்ளைக்காய்** முதிராதது, முறறா தது; விளையாதது

**சள்ளையன்** தொந்தரவு கொடுப பவன்.

**சளக்குபுளக்கு** நேர்த்தியில்லா மல் வேலை செய்வது

**சளசளப்பு** அர்த்தமின்றிப் பேசு வது; ஓயாது பேசுவது.

**சளத்தம்** பார்க்க : சளம்

**சளம்** துன்பம்; வேதனை; இடை யூறு செய்பவன், இடையில பேசுபவன

**சளம்ப** நிறைய; அளவுககு அதிக மாக

**சளவோலை** திருமணப பந்தலில் அழகுபடுத்தப் பயன்படும ஒரு வகை ஓலை மலைப பகுதியில் காணப்படுவது

**சளித்தல்** அழுகுதல்; கெட்டுப் போதல், ருசி இல்லாமல் ஆதல்; உடல் பருமனாதல்.

**சறுக்கல்** வழுக்கல.

**சறுக்கு** தேரின சக்கரம தரையில் புதைநதுவிடாமல இருக்க அதன் அடியில் இடப்படும் மரக் கட்டை (சப்பை).

**சன்னம்** கொஞ்சம.

**சன்னம் சன்னமாக** கொஞ்சம் கொஞசமாக.

## சா

**சாக்கு** கோணி; மூடை

**சாக்குபோக்கு** வீண்காரணம்; போலித்தனம்.

**சாக்கோட்டி** கர்ப்பிணிக்கு வரும் மசக்கை; வயக்கோட்டி.

**சாக்கோட்டிக்காரி** வயக்கோட் டிககாரி; மசக்கைகாரி.

**சாங்கியம்** இறந்தவர்களுக்குரிய சடங்குகள்.

**சாட்டிப் பேசுதல்** குறிப்பிட்ட ஒருவரை மறைமுகமாகப் பழித்துப் பேசுதல், குததிக காட்டிப் பேசுதல்.

**சாட்டை** வணடிமாட்டை அடிக்க உதவும் கம்பும் கயிறும்.

**சாடைசம்பா** சம்பா வகை யிலான ஒரு வகை நெல்.

**சாடைமாடையாய்** பார்த்தும பாராமலும.

**சாணங்கி** மாட்டுச்சாணம்.

**சாணங்கிமாடன்** மடத்தனமான செயல்களைச செயபவன்.

**சாணிப்பால்** தண்ணீா கலந்த சாணி, சாணித்தணணி.

**சாணிப்பால்குறி** நெற்குவியலின மேல இடப்படும் குறி.

**சாத்தப்பிள்ளை** மேற்படி ஆள்

**சாத்து** பெயர்த்து நடப்பட்ட நாற்று.

**சாத்துதல்** அடித்தல்.

**சாந்து** மண்ணும் தண்ணீரும் கலந்த கலவை; சிமெண்ட் மண் கலவை; சுண்ணாம்பு மண் கலவை; பொட்டு.

**சாந்து குழைத்தல்** மண் அலலது சிமெண்ட் சாந்தைக குழைத் தல.

**சாந்து கூட்டுதல்** குழந்தைகளுக் குரிய சாந்தைத் தயாரித்தல

**சாந்துச்சட்டி** சிமெண்ட சாநதை அள்ளும் இரும்புச சட்டி.

**சாப்பாட்டு ராமன்** சாபபாட் டில் மட்டும் விருப்பமுளளவன்.

**சாம்பிராணி** அறிவிலலாதவன (மடச்சாமபிராணி)

**சாம்பிராணி அரணை** அரணை வகையில் ஒன்று.

**சாமானம்** பொருள்; ஆண அல் லது பெண் உறுப்பு.

**சாமி இறங்குதல்** சாமியாடிக்கு அருள் குறைநதுவிடுதல

**சாமி மலையேறுதல்** சாமி யாடிககு ஆவேசம குறைதல

**சாமிவரத்துபாட்டு** சாமியாடிககு அருள வருவதற்காகப பாடப படும் பாட்டு.

**சாய்ப்பு** நாலுகட்டு வீட்டில இடது பக்கம் உள்ள ஒரு அறை, சாய்வான கூரை.

**சாயப்பாக்கு** சாயம ஏற்றிய பாக்கு.

**சாயப்பெட்டி** சாயம இடப் பட்ட பனை ஓலையால் செய்யப்பட்ட பெட்டி.

**சாயமுண்டு** சாயம் ஏற்றப்பட்ட வேட்டி.

**சாயராட்சை** மாலை நேரம.

**சாயாபோ** தூரமா போ; தள்ளிப் போ.

**சார்த்து வாசிப்பு** மணமக்களின் பெயர், திருமண நாள், பிற சடங்குகளின் நாள நேரம் குறிதத செய்திகளை எழுதி வைததிருககும் ஓலை இதை ஜோதிடர் நிச்சயதாம்பூல நிகழச்சியில் படிப்பார்.

**சாரணம்** தலையில் வெள்ளை நிறததில் செதில படருவது. பொடுகு.

**சாரம்** லுஙகி; கைலி; வீட்டுச் சுவர் காங்கிரீட் போட மூங்கி லால கட்டும தட்டி.

**சாரிப்புக்காரன்** விசாரிப்பு காரன், பண்ணையாரின தனி வேலைகளைக் கவனிப்பவன்

**சால்** வயலில் ஏர் உழும் போது அமையும் இடைவெளி; நிலத்தை உழும் முறை; வண ணான் துணி அவிக்கப் பயன் படுததும பெரிய மண்பானை.

**சாலம்** களளத்தனம்.

**சாலம் போடுதல்** கள்ளத்தன மாக நடித்தல்

**சாவி** நெல்லின் பதர்.

**சாளை** ஒருவகை மீன்; நாஞ்சில நாட்டில பரவலாகச சாப் பிடப்படும் மீன் வகை

**சாறு ஆறவில்லை** உழவு தீர வில்லை.

**சானல்** காலவாய். (Channel)

## சி

**சிக்கடித்தல்** சிககு நாறறமடிததல.

**சிக்காக** கவர்ச்சியாக.

**சிக்கு** போதை பானம் அருந்திய வன்; அருந்திய நிலை; தலை முடி சிககாக இருத்தல், வெட் கம்.

**சிக்கு வலை** கடலின அடிமட்டத தில் மீன்பிடிககப் பயன்படும் வலை

**சிக்கெடுத்தல்** தலைமுடியின சிககு நீககுதல்.

**சிங்கன்** ஒருவகை வாழைபபழம்

**சிங்கங்காய்** ஒருவகை வாழைக காய்.

**சிங்கி** சிஞ்சி; ஜால்ரா.

**சிங்கிடி** கையாள; ஜால்ரா அடிப பவன.

**சிங்கியடித்தல்** கோலி விளை யாட்டில தோல்வியுற்ற வனுககுத தண்டனை கொடுத் தல, தோற்றவனின் கைமுட டில கோலியால அடித்தல், வாழ்க்கையைக கழிப்பதற்குரிய பணம இனறி இருத்தல்; அன றாட செலவுக்குக் கூடக கஷ்டப்படுதல்; ஜால்ரா அடித் தல்; ஒருவர் கூறுவதை அப் படியே ஆமோதித்தல.

**சிட்டம்** நூல்கண்டு.

**சிடுக்கு** நூலின் சிக்கல்; தலை மயிர் சிககு.

**சிடுக்கு** முடிசசு, சிககல்.

**சிணுக்கூறி** சிககெடுக்கும் சீப்பு.

**சிணுங்குதல்** செல்லமாகக் கொஞ்சுதல்; லேசாக அழுதல்; குழந்தை கணணீர் வராமல் அழுதல்.

**சித்தாங்கம்** அடமபிடித்தல.

**சித்திரத்தை** ஒரு மருந்து.

**சித்திரவல்லியர்** கடல்நீரிலிருந்து உப்பெடுக்கும் நுட்பம் அறிந் தவர்; அளவர்.

**சித்திரைக்காரி** ஒரு வகை நெல.

**சித்திரு** காதணி; தாலி.

**சித்துடுக்கை** வில்லிசை கலைக் குரிய இசைக்கருவி. சாதாரண உடுககை என்ற இசைக்கருவி யிலிருந்து சற்று வேறுபட்டது

**சித்தோசி** யாசகர், பிறைச் சநதிரன் கூடிய தலைப்பாகை யும நீணட வெள்ளை அங்கி யும் அணிநதிருப்பார். கையில் மணி வைத்திருப்பார். நாழி மணிக்காரர் என்ற நாடோடி சாதி வமசத்தினர்.

**சிப்பல்** சாதம் தோணட பயன் படும் கண்ணுள்ள தட்டு, சோறு விளம்பும் தட்டு போன்ற துவாரமுள்ள பாத் திரம.

**சிமிச்சாள்** பாவனை காட்டும் பெண.

**சிமித்துதல்** சாதிததல; காரி யத்தை முடித்தல்

**சிமிழன்** பெரிய ஆள; கில்லாடி.

**சிரட்டாப்பை** கொடடாங்கசசி யால் ஆன அகப்பை (சிரடடை அகப்பை).

**சிரட்டை** தேங்காய் ஓடு; கொட் டாஙகச்சி

**சிரட்டை மடு** சிறுமடு.

**சிரிப்பாணி** சிரிப்பு.

**சில்லந்தட்டுதல்** சிதறுதல்; முழு ரூபாய் சில்லறையாக மாறி குறைநது போதல்; முழுமை உடைதல்.

**சில்லம்** உதிரியாதல்.

**சில்லம்தட்டிப் போதல்** உதிரி யாக சிரழிதல்.

**சில்லறை** அற்பன்.

**சில்லறைத்தனம்** அற்பபுத்தி; அற்பததனம.

**சில்லாட்டை** பார்க்க. கோஞ சாட்டை.

**சில்லிரத்தம்** மூககிலிருந்து வரும் ரத்தம்.

**சில்லீடு** குறைவாகத் தேஙகாய் வெட்டுதல்.

**சில்லு** துண்டு.

**சில்லுக் கருப்பட்டி** சிறிய அளவி லான கருப்புக்கட்டி.

**சிலம்பச்சுவடு** சிலம்ப விளை யாட்டின் பொதுவான சொல்.

**சிறகு** வேளாளர் தாலியில் பிள்ளையார் உருவத்தின் இரு புறமும உளள பகுதி.



சிறகு

**சிறப்பு** பார்கக · படுக்கை.

**சிறுக்கன்** சிறுவன்; இளைஞன்

**சிறுப்பம்** இளம் வயது.

**சிறுகண்டான்** ஒரு வகை நெல்.

**சிறுயீர்க்குச் சம்பா** சமபா வகையிலான நெல்.

**சிறுவீட்டுப் பொங்கல்** சிறு குழந்தை தைபபொங்கல் விழா வில் விடும் விளையாட்டுப் பொங்கல.

**சிறுவீடு** தை பொங்கலில பெண் குழந்தைகள் பொங்கலிடக் கடடப்படும் சிறிய வீடு

**சின்னாபின்னப்படுதல்** எதற்கும் உதவாமல் பிரிந்து சென்று விடுதல்; பயனற்ற நிலையில் ஆதல்; பார்க்க : வங்கத்துக்கு வராமலாதல்.

**சினை இட்டிலி** சிறுபயிறு, சர்க்கரை கலந்த பூரணத்தை உள்ளே வைத்து அவிககபபடும் இட்டிலி.

**சினைப் பருவம்** கதிரில் நெல் மணி பிடிக்கும் பருவம்.

**சினைப்படுத்தல்** கர்ப்பமாக்குதல்; சினையாக்கு.

**சிஷ்டம்** எஞ்சியது; மீதி.

## சீ

**சீக்கல்** ஒருவகைக கல் (Laterıte).

**சீக்காய்** பழுககாத பனங்காய்.

**சீஞ்சட்டி** சீனாச்சட்டி; பலகாரம் சுடப் பயன்படும் வாணலி.



சீஞ்சட்டி

**சீட்டியடித்தல்** சீழ்க்கை அடித்தல்.

**சீட்டு பிடித்தல்** சீட்டில் ஏலம பிடித்தல்.

**சீட்டுக்கரை** சீட்டுத் தொழில்.

**சீட்டுக்களி** சீட்டு விளையாட்டு.

**சீட்டுமுன்பன்** ஏலசசீட்டு நடத்துபவன்.

**சீண்டரம்** தொந்தரவு; வெறுமனே தொணதொணக்கும் தொந்தரவு செய்பவன்.

**சீண்டுருண்டை** இனிப்பான சீடை என்ற பலகாரம்.

**சீண்டுதல்** தொந்தரவு செய்தல்; தூண்டுதல்; கோபத்தை உருவாக்குதல்.

**சீணம்** தளர்ச்சி; அலுப்பு.

**சீணித்தல்** அழிவுறுதல்; உடல்நலிவுறுதல்; செலவம் சிதைநது போதல்.

**சீத்துவம்** திறமை.

**சீத்தை** குணமின்மை; மோசமான இழிவான; தரங்கெட்ட.

**சீதாபேகம்** ஒரு வகை நெல்.

**சீந்துதல்** தொடர்பு வைத்தல்.

**சீப்பு** குளத்து நீரை மடைப்பகுதியில் தடுப்பதறகாக அமைக்கப்பட்ட கதவு.

**சீம்பால்** ஈன்ற மாட்டின் முதல் பால; பசு ஈன்று மூன்றுநாள் வரை தரும் பால்.

**சீமத்தனம்** அதிகப் பிரசங்கித்தனம்; யாரையும் மதிக்காத குணம.

**சீமை** அதிகப் பிரசஙகித்தனமுடையவன்.

**சீமைச்சக்காய்** சிறிய கறிப் பலாக் காய், போர்ச்சுக்கீசியர் கொண்டு வநத பலா; இடிச் சககாய.

**சீமையை வித்தவன்** யாராலும் ஏமாறற முடியாதவன்.

**சீரகச் சம்பா** சம்பா வகை நெல்.

**சீராடுதல்** கொஞ்சுதல்.

**சீலாந்தி மரம்** பூவரசு மரம்

**சீலை கொடுத்தல்** விதவைககுப் புடவை கொடுத்து மணம் புரிதல்.

**சீவாளி** நாதஸவரத்தின் ஒரு பகுதி

**சீவிலி** (ஸ்ரீபலி) கோவிலில் இடும் அனனபலி, கோவிலில நாளதோறும் பலி பூசைக்காக எழுந்தருளச் செய்யும் சிறு விக்கிரகம்.

**சீவிக்கட்டுதல்** பனைமரப் பாளையைச சீவிக கலயம் கட்டுதல

**சீவுளி** தச்சன மரத்தைச சீவப் பயன்படுத்தும் உளி.



**சீவுளி**

**சீறுசீறு** கோபம.

**சீறுபூறு** கோபமாய இருத்தல்

**சீனிக்கண்ணாடி** தூர திருஷ்டிக் கண்ணாடி; பைனாக்குலர்.

**சீனிக்காரம்** படிக்காரம் (சீனாக் காரம்).

**சீனிக்கிழங்கு** சாககரைவளளிக கிழஙகு.

**சீனிச்சட்டி** பார்க்க : சீஞ்சட்டி.

**சீனித்தோணி** பார்க்க வள்ளம்.

**சீனியவரைக்காய்** கொததவரங காய்.

## சு

**சுக்கம்பாறை** சுணணாமபுத் தன மையுடைய பாறை.

**சுக்கல்** ஒருவகைக் கண்நோய்.

**சுக்காப்பி** சுக்கு, கருப்புக்கட்டி கலந்த பானம

**சுக்கு நாறிப்புல்** ஒருவகைப புல்

**சுக்கு வெள்ளம்** சுக்கு கலநத வெந்நீர்.

**சுக்குச்சட்டி** கஞ்சன்; ஈயாதவன்

**சுக்குமாந்தடி** நாட்டார் தெயவத் தின் கையிலுள்ள ஆயுதம



**சுக்குமாந்தடி**

**சுகக்கேடு** உடல்நலக கேடு.

**சுகந்தப் பொடி** மணமுள்ள மூக்குப்பொடி.

**சுசியன்** மோதகம போனற ஒரு இனிப்புப் பலகாரம

**சுட்டித்தலை** அக்கிரமம்; குறும்பு; குறும்புக்காரச் சிறு வன.

**சுட்டித்தனம்** அககிரமத்தனம; துஷ்டத்தனம்.

**சுடலைமாடன்** சிவன் அம்ச முடைய நாட்டார் தெயவம; சுடுகாட்டுத் தெயவம் (சுடலை, சொள்ள மாடன், சொடலை).

**சுடலையாடி** சுடலைமாடனுக காகச சாமி ஆடுபவர்.

**சுடுகஞ்சி** சூடான கஞ்சி; உடைநத அரிசியால் ஆன கஞ்சி.

**சுடுகாடு நக்கி** வாயில் கறுப்பு வெணமை நிறமுடைய மாடு.

**சுடுசொல்** பார்க்க . சுண்டுசொல.

**சுடுமூஞ்சி** சிடுமூஞ்சி, கடுகடுத்த முகமுடையன்

**சுண்டக்கறி** சூடாக்கிய பழங்கறி

**சுண்டக்காய்ச்சுதல்** நீர்வற்றும படியாகக காய்ச்சுதல.

**சுண்டு** உதடு.

**சுண்டு சொல்** பழிககுமபடியான அல்லது கடுமையான சொல், துனபுறுத்துவதறகுரிய சொல்.

**சுண்டுவது** விரலால் வலிக்கும் படித தெறிப்பது.

**சுண்டைக்காய்** கசபபான ஒரு வகைககாய; மதிப்பில்லாத வன; தகுதியில்லாதவன.

**சுண்ணாம்புக் கறண்டம்** வெற றிலைச் சுண்ணாம்பு வைக்க உதவும செப்பு

**சுண்ணாம்புப் பதனீர்** சுண ணாம்பு நீர் கலந்த பதனீர்

**சுண்ணாம்புப்பரவன்** சுண ணாமபு நீற்றி விற்கும் சாதி யினன்.

**சுணக்கம்** நேரஙகடத்தல; கால தாமதம்; பிணக்கு, வாடடம்.

**சுணங்குதல்** தடைப்படல, தாமதித்தல.

**சுத்துரு** கழுத்திலணியும் தங்க ஆபரணம

**சுத்துவாரி** சுவரைத் தாணடிய பகுதியில் நீண்டு நிற்கும ஓலைக்கூரை

**சுதாரித்தல்** உஷார் ஆகுதல்.

**சுதி இறங்குதல்** வீறாப்பு குறை தல்.

**சுதி கூட்டுதல்** தயாராககுதல.

**சும்பத்தனம்** மூடத்தனம்.

**சும்மா** தொழில எதுவுமில்லா மல் , இயல்பாகப் பேசாமல; மௌனமாய்; இலவசமாய்; தேவையில்லாமல்; அமைதி யாக.

**சும்மாடு** தலைச் சுமடு எடுபப வர், தலையில் கட்டியிருக்கும தலைப்பாகை; பாரம சுமப் பவர் தலையில் வைத்திருக்கும துணி.

**சுமை தாங்கி** கர்ப்பிணிகள் இறந் தால் அவர்களின ஆன்ம சாந்திககாக நடப்படும் கால (மாஸ்திக கல்).

**சுயம்பு** ஒழுஙகு, இயல்பு.

**சுரத்து** இரத்தம; பணம்; வரு மானம்

**சுரப்பு** ரததககொழுப்பு; பணத் திமிர்.

**சுருக்கம்** சிக்கனம்; விரைவு; குறைவு

**சுருக்காஞ்சி** சுருக்கு; கயிற்றில உள்ள சுருக்கு முடிச்சு.

**சுருக்குப்பை** வாயைச் சுருக்கும் படி அமைந்த மிகசசிறிய துணிப் பை. இடுப்பில கட்டிக கொள்ளும்படியான வசதி யுடையது.

**சுருட்டுதல்** கவர்தல்; சாமர்த் தியமாகத் திருடுதல்.

**சுருணை** வைக்கோலால் செய்யப்பட்ட சிறு குதிர்.

**சுருள்** மொய்; திருமணம் போன்ற சடங்குகளில் மணமக் களுக்கு அன்பளிப்பாகக கொடுக்கும் பணம்; மணமகக ளுக்கு உறவினர் கட்டாயம் கொடுக்க வேண்டிய பணம்

**சுருள்வாள்** களரிப் பயிற்றுக் குரிய ஆயுதம், சுருளும் தன்மை கொணட இரும்பால் செய்யப பெற்ற நீண்ட வாள்.

**சுரை** காது குத்தப்பட்ட குழந்தை யின் காதில் அடையாளமாக இடப்படும பொருள்; காதணி யில் திருகாணியைச் செலுத்தும் சிறுகுழாய்.

**சுரைக் குடுக்கை** அவசரக்காரச் சிறுவன (அவசரக குடுக்கை); சுரைக்காயால் செய்யப்பட்ட பாததிரம்; யாசகம் எடுக்கப் பிசசைக்காரர்கள பயன்படுத் தும பாத்திரம.

**சுவடி** ஒரு வகைத் தங்க ஆபரணம்.

**சுவடு** அழகு; அமைபபு, கன்னம்.

**சுவருமுட்டி** விலை மலிவான அரிஷ்டம் என்னும போதை பானம.

**சுள்ளாணி** மரத்தால் ஆன ஆணி

**சுளவு** முறம் (சொளகு).

**சுளுந்து** கொள்ளிக்கட்டை; தீப் பநதம.

**சுற்றிப் போடுதல்** மிளகாய், உப்பு, முச்சந்தி மண், கடுகு ஆகிய வற்றைத் திருஷ்டியுடையவரின் உடம்பை மநதிரம் சொல்லி சுற்றி நெருப்பில் போடுதல்; திருஷ்டி கழித்தல்.

**சுற்று வட்டாரம்** சுற்றுப் புறத்துப் பகுதிகள்; கிராமங்கள்.

**சுற்றுக்கட்டு வீடு** நாஞ்சில் நாடடு வீடுகளில் ஒருவகை; வீட்டின் உள்புறம் ஓடு வேய்ந்த நானகு திண்ணைகளும் சுற்றி யிருக்க நடுவில் முற்றமும் கொண்ட வீடு; உழவுத் தொழிலைச செயகின்றவர் களுககு ஏற்றவாறு கட்டப் படும் வீடு.

## சூ

**சூ விளையாட்டு** பார்க்க : அவுட் விளையாடடு.

**சூக்காட்டுதல்** சூ எனச் சப்த மிட்டு வெருட்டுதல்

**சூசி** ஊசி.

**சூசின் தோணி** பார்க்க : வளளம்.

**சூட்டு** ஓலை; நாணல்; பாளை யால் தயாரிக்கப்பட்ட பந்தம.

**சூட்டுக்கோல்** மாட்டிற்குச் சூடு இடுவதற்குரிய கம்பி.

**சூட்டடுப்பு** மண்ணால் செய்யப் பட்டு சூளையில் சுடப்பட்ட அடுப்பு; சுடுமண் அடுப்பு.

**சூட்டோடு சூடாய்** தொடர்ச சியாக; உடனடியாக; ஒரு செயல் நடந்ததும் அதைத் தொடர்ந்து.

**சூடடித்தல்** நெல்கதிர்களைப் போரடித்தல்.

**சூடாயிருத்தல்** கோபமாயிருத் தல்.

**சூடு** நெறகதிர்களின் குவியல்; சூடு போட்டதால் வரும் குறி; கோப உணர்வு; சுரணை.

**சூடு பிடித்தல்** நீர்க் கடுப்பு நோய் உண்டாதல்; ஆரம்பம்; களை கட்டுதல.

**சூடுசுணை** சுரணை.

**சூத்து** ஆண்குறி; பெண்குறி.

**சூத்தை** பேடு; பொத்தலான; பலனில்லாத; பயனற்ற; கத்தி ரிக்காயில் வரும் நோய்.

**சூப்பி** குழந்தைகளுக்குரிய தின் பணடம்; கொககட்டான்.

**சூப்புதல்** வாய் வழி உறவு கொள் ளுதல; விரலைச் சூப்புதல்.

**சூம்படஞ்சவன்** நிரந்தரச் சோம் பேறி; செயல்பாட்டிற்குத் தகுதி அற்றவன்

**சூம்படைந்த** சோம்பலாக

**சூம்படைவு** சோமபல கொள் ளுதல்.

**சூரியப்பிறை** தலையிலணியும் தங்க ஆபரணம்.

**சூல் காப்பு** சீமந்தச்சடங்கில கருவுற்ற பெண்ணுக்கு அணி யும் காப்பு.

**சூலைக்கூறு** சூலை நோய

**சூலைத் தூண்டில்** கடலில் மீன் பிடிக்கப பயன்படும் தூண்டில

**சூனியம் பிடிச்சவன்** குறுகிய மனம் உளளவன்; பொறாமை உடையவன்.

## செ

**செக்கடிமாடன்** கல் செக்கின் அருகே உளள மாடன் என்ற நாட்டார் தெயவம்.

**செக்காலியன்** செக்கை ஆட்டும சாதியினன்.

**செங்கட்டை** பார்க்க : கிட்டிப் புள

**செட்டை** பறவையின் இறக்கை.

**செடிக்குத்தம்** அடைககோழி, நீர் குடம், மீன் வியாபாரியின் தலையில் உளள வட்டி, பறவை ஆகியவற்றின் நிழல் குழந்தைகளின் மேலபடுவதால் குழந்தைகளுக்கு வரும நோய்.

**செண்டை** ஒருவகைத் தோல் இசைககருவி.

**செண்டை வத்தல்** காரம் குறைந்த, தரம் குறைந்த வத்தல்.

**செண்டைமுறியன்** ஒருவகை இனிபபுப் பணடம பாலும் ஏததன பழமும் கலந்து தயாரிககப்படுவது, கல்யாண மாப்பிளளைக்குக கொடுக்கப்படும் இனிய உணவு வகை.

**செண்ணு** நேரம கழித்து; பிறகு.

**செணம்** சீககிரம; விரைவாக.

**செத்த** கொஞ்ச நேரம்.

**செத்துதல்** செதுக்குதல்.

**செத்தை வீடு** கூரை வேய்ந்த வீடு.

**செத்தோல** கொஞ்சமாக; மிகக கொஞ்சமாக.

**செந்தட்டி** உடலில் பட்டால அரிப்பெடுக்கும் செடி.

**செந்துளுவன்** சிவந்த தோலுடைய வாழைபபழம்.

**செப்பு** இடுபபு.

**செம்பமார்த்தாண்டன்** ஒருவகை நெல.

**செம்பிலி** ஒரு வகை நெல்.

**செம்பிலியாடு** செமமறியாடு.

**செம்பு** பொதுவான பாத்திரங்களின் பெயர்; நெல் அவிக்கும பெரிய செம்புக கிடாரம; கலயாண சமையலுக்குச சோறு பொங்க உதவும பாததிரம

**செம்போத்து பிடித்தல்** திருட்டுததனமாகப் பெண்ணுடன தொடர்பு கொள்ளுதல்.

**செம்மிளகு** ஒரு வகை நெல.

**செம்மு / சொம்மு** சொத்து; அதிர்ஷடவசமாகக் கிடைக்கும சொதது.

**செமித்தல்** செரித்தல.

**செய்வினை** பிலலிசூனியம், மநதிரத்தால் கேடு செய்யும் செயல.

**செய்வினை வைத்தல்** ஒருவனை அழிகக பிலலிசூனியம வைத்தல் (தகடு வைத்தல்).

**செரட்டை** கொட்டாங்கச்சி (சிரட்டை).

**செருமுதல்** கனைத்தல்; மெதுவாக இருமுதல்.

**செல்லப்பிள்ளை** பிடித்தமான அருமைப் பிள்ளை.

**செல்லம்** (வெற்றிலைச் செல்லம்) வெறறிலை வைககும் பெட்டி.

**செல்லம்** இளக்காரம்; அருமை; அன்பு; மிகுந்த இடம் கொடுப்பது.

**செலவாதி** சிறுநீர் (சில உபாதை)

**செலவுக்குக் கொடுத்தல்** ரகசியத் தொடாபுடைய பெண்ணின் வாழ்க்கைச செலவிறகுப் பணம கொடுத்தல்; வைபபாட்டிக்கு வாழவிற்குரிய பணம் கொடுத்தல்

**செவ்வரளி** சிவபபு நிறமுள்ள அரளிபபூ

**செவ்வு** அழகு; யோக்கியத் தனமை; புகழவதுபோல் இகழ்வதறகுக் குறிப்பிடப்படும் சொல்.

**செவத்தை** உணர்வு

**செவரொட்டி விளக்கு** சிமனி விளககு.

**செவனேன்னு** எதுவும் பேசாமல்; அமைதியாக

**செவிடு** பார்க்க : சுவடு

**செவிடு** வடிவ அமைபபு; அழகு; கன்னம்.

**செவிப்பாம்பு** காதின் பின இரண்டு சுழிகள் இருக்கும் மாடு.

**செவில் வலை** மீன் பிடிககப் பயன்படும் வலை.

**செவிளை** கனனம.

**செவினி** கடிக்காத சிவந்த எறும்பு.

**செள்ளு** பேன முட்டை.

**செறப்படுத்தல்** தொநதரவு செய் தல் ; பேசியே அலுபபு ஊடடு தல்.

**செறுக்கி** சிறுககி; சிறுமைததனம் உடையவன்

**செறுக்குதல்** மறித்தல்

**செறுத்தல்** வழிமறித்தல்

**செறை** தொந்தரவு

**சென்னை** கன்னம்; பார்க்க : அலவு

## சே

**சேக்காளி** நணபன்.

**சேக்குப்புள்ளி** உறவினாகளறறு தனித்து நிறபவன்.

**சேக்கை** நடபு.

**சேசம்** மிசசம்.

**சேட்டன்** வயதில மூத்தவன்.

**சேத்தல்** மிருகஙகளைப புணாச் சிக்குச் சோததல்.

**சேதாரம்** பொன், வெள்ளி நகை செய்யும்போது உண்டாகும் தேயமான நஷடம.

**சேமக்கோல்** சேகண்டி என்னும் இசைககருவி.

**சேர்வைக்காரன்** அகால மரண மடைந்து வரம் பெற்ற ஒரு நாடடார் தெயவம்.

**சேரமான் பெருமாள் நாயனார் காலம்** தொன்மையான காலததைக் குறிக்க கூறும் பிரயோகம்

**சேருமானம்** ஒரு பொருளைத் தயாரிக்கும பொருட்கள் சரியாக இணையும் நிலை.

**சேலாப்போ** ஒழுங்காகப போ.

**சேலை** புடவை.

**சேவை** பசசரிசி மாவில் செயயப் படும பலகாரம்.

**சேவை நாழி** சேவை பலகாரம் செய்ய உதவும் கருவி

**சேழம்** மீதி; பகுதி; எஞசியது.

**சேறுகேடு** கடல் கொந்தளிப்பு.

**சேஷகாரன்** மருமக்கள் வேளாள ரான காரணவரின் சகோதரி குழந்தைகள.

## சை

**சைவப்படைப்பு** நாட்டார் தெய்வத்திற்குக் கொடுககப் படும் சைவ நைவேத்தியம்.

**சைனாக்கோழி** அடை காக்காமல முட்டை பொரிககும் சீனாக் கோழி.

## சொ

**சொக்க வெள்ளி** விடிவெள்ளி

**சொக்கப்பனை** கார்த்திகை மாத விழாவில் கோவில்களுக்கு முன்பு எரிக்கபபடும் பனை ஓலைக்கூடு.

**சொக்களி** பரிகாசம்; பயனறற பேச்சால் பரிகசிப்பது.

**சொக்கன்** குரஙகு.

**சொக்காரன்** தந்தையின் பக்கமுள்ள உறவினா.

**சொக்கான்** பழைய அரிசியில் உள்ள வண்டு.

**சொக்கு** மயக்கம்.

**சொக்குப்பொடி தூவல்** பிறரை மயக்குவதற்குரிய செய்கைகளைச செய்தல்.

**சொச்சம்** கழித்தல், வகுத்தலில வரும் மீதி; மிச்சம.

**சொட்டு போடுதல்** சார்நது பேசுதல.

**சொட்டை** இடுப்பெலும்பு.

**சொட்டை** தலைமுடியில் பொடுகு, சிககு முடியில்லாத நிலை; சுருககு முதலியவற்றை மாட்டுவதற்கு இடமானது; தலைப்பொடுகு

**சொட்டை விழுதல்** தலையில வழுககை விழுதல்.

**சொட்டைவாள்** ஒருவகைக குளத்துமீன்.

**சொட்டைவாளை** நல்ல நீரில் வாழும் நீணட வாளை மீன், பூரான் வகை.

**சொடக்கு விடுதல்** கை நொடித்தல்; சோம்பல் விடுதல்; நெட்டி வாங்குதல்.

**சொணக்கம்** பார்க்க : சுணக்கம்.

**சொத்திக்கட்டை** வில்லிசைக் கலைககுரிய குடம் இசைக் கருவியான குடத்தின் மேல் பகுதியில் அடிக்க உதவும தககை.

**சொதப்பல்** உற்சாகமின்மை; கடனைக் கழித்தல்; ஒரு செயலை முழுமையாகச் செய யாமல் இருத்தல்.

**சொதமண்** இறுக்கமில்லாத ஈர மண்.

**சொதை** ஜோடி, அழகு.

**சொயம்பு** ஒழுங்கு; இயல்பு.

**சொர்ணவாரி** ஒரு வகை நெல்.

**சொர்ணாவுதல்** உரசுதல்; வருடுதல்; வருடிக்கொண்டு தொந்தரவு கொடுத்தல்.

**சொரணை** சிறிய வைக்கோல் கட்டு.

**சொரிமிப்பு** ஒற்றுமை.

**சொருகுகத்தி** உறையில் இருக்கும் கத்தி.

**சொருவுதல்** உடலுறவு செய்தல்; நுழைத்தல்.

**சொல்லுவளி** சொன்னபேச்சு; அடுததவர் பேசசு.

**சொள்ளமாடன்** பாாக்க : சுடலை மாடன்.

**சொள்ளை** குற்றம.

**சொளவு** முறம் (சுளவு).



சொளவு

## சோ

**சோடை போதல்** தகுதி குறைதல்; சாமர்த்தியம இல்லாமை.

**சோணுவாடு** கடல் நீரோட்டம் மேறகிலிருந்து கிழக்காகச் செல்லல

**சோத்து மாடன்** சாப்பிடுவதைத் தவிர வேறு அறியாதவன். பார்க்க : சாப்பாட்டு ராமன்.

**சோத்து வெள்ளி** நட்சத்திரம் மூலம் நேரம கணித்தல்.

**சோத்துப் பொதி** பொதிச்சோறு

**சோத்துக்கட்டி** கோவிலில் இறைவனின் நைவேததியமாகப் படைக்கப்படும் சாதம் (கட்டிச சோறு)

**சோத்துக்கை** வலதுகை, உணவு உண்ணுகின்ற கை; ராசியான கை.

**சோத்துப்பக்காளி** பார்க்க : சாப் பாடடு ராமன.

**சோத்துப்பலகை** சாதம் வடிககப பயன்படும் அரசிலை வடிவான பலகை; வடி பலகை

**சோதக்கிடா** இனவிருததி செய்ய இயலாத கிடா.

**சோதிரி** சோதிடன், ஜாதகம் கணிப்பவர்.

**சோந்திரியம்** சுதந்திரம்.

**சோப்பிளாங்கி** உபயோகமற்றவன்; சோம்பேறி; எதற்கும் பயன்படாதவன்; எதறகுமலாயக்கற்றவன்.

**சோவாரி** சோம்பல் கொணடவன்

**சோவி** சிப்பி.

**சோழக்காற்று** தெற்கிலிருந்து வீசும் கடல காற்று.

**சோளி** கிளிஞ்சல்.

**சோளியல்** பிச்சைக்காரனின் பை

**சோளையன்** ஏமாளி.

**சோற்றுக்கடன்** கடமைக்காக மட்டும் இடும சோறு.

**சோற்றுப்பருக்கை** ஒரு சோறு, அன்ன உருணடை.

**சோனகம்** தென் கிழக்குக் காற்று.

## ட

**டக்கர்** குழப்பம்; அழகு.

**டக்கென்று** உடனடியாக

**டண்ணென** மிகசசரியாக; மணியோசைக குறிப்பு.

**டம்ளர்** கப்

**டமாரச்செவிடு** முழுச் செவிடு

**டப்பா** வீண பேச்சு பேசுபவன.

**டப்பி** பெண்குறி.

**டபாய்த்தல்** ஏமாற்றுதல்

## த

**தக்கடி** குதர்க்கமாகப் பேசு பவன்; கால ஊனமுற்றவன்.

**தக்கம்** பல்லாங்குழி விளை யாடும்போது முத்துக்கள் இல்லாத காலிக்குழியின பெயர்.

**தக்கன** தக்கவாறு; போன்று; போல; சமமாக

**தக்கை** பனைமரததைச் சிறிய நீர்வழியின் குறுக்கே பாலமாக இடும்போது பனையின் அடிப் பகுதியைக் குறிபபிடப் பயன படும் சொல்.

**தகடு தத்தம்** தந்திரமாக ஏமாற்று தல்.

**தகடுவைத்தல்** ஒருவனின முன னேற்றததிறகோ கெடுதலுக்கோ மநதிரம எழுதிய செம்பு அல் லது வெள்ளித தகட்டை அவர் தொடாபான இடஙகளில புதைதது வைத்தல

**தகாளி கருப்பன்** ஒரு வகை நெல்.

**தங்கரியம்** பாதுகாபபகம்; ஒதுகக மாய்.

**தங்கானுக்கெங்காள்** வரவும் செலவுமட.

**தங்கிரியம்** தயாரித்துவைத்தல்.

**தங்கூசு** தூணடில் கயிறு.

**தச்சாளி** தச்சன் உளி.

**தச்சு ஏத்தல்** பொறுப்பை ஏறறுக கொள்ளுதல; செய்யாத செயல் களுககான பொறுப்பை வலுக் கட்டாயமாக ஏற்றுககொள்ளு தல, செய்யாத தவறுகளைத் தானாக வலிநது ஏறறுக் கொள் ளுதல்; யாரோ ஒருவரின் உற வால் கர்ப்பமான குழந் தைக்குத் தான் பொறுப்பேற றல்

**தச்சுக்கழித்தல்** புதுவீட்டு கிரகப் பிரவேசத்திற்கு முநதிய இரவு தச்சர்களால செய்யப்படும் சடங்குகள்.

**தட்டட்டி** திறந்த மாடி.

**தட்டம் தூக்குதல்** திருமணச் சடங்கில் மாப்பிளளை வீட்டா ரில் இளம் கனனிகளுமட சுமங் கலிகளும் எடுத்துவரும் தட்டம

**தட்டம்** தட்டு.

**தட்டளிந்து** அலைககழிந்து.

**தட்டளிவு** மனம் அலைபாய்தல்.

**தட்டார வெள்ளை** ஒரு வகை நெல்.

**தட்டான்** ஒரு வகைப் பட்டாம் பூச்சி பார்கக : புட்டான்.

**தட்டி** மூங்கில் கீற்று அல்லது தென்னை ஓலையால ஆனது; விளம்பரப் பலகை.

**தட்டு ஏந்துதல்** பிச்சை எடுததல.

**தட்டு** சாப்பிடும் தட்டு; மாடி; தட்டம.

**தட்டுக் காமணம்** தட்டுப்பநதல்.

**தட்டுக்கல்** வெற்றிலை தட்டப் பயன்படும் கல்லும் குழவியும.

**தட்டுகுழி** பசுவின ஈனுவதறகு 23 நாட்களுககு முன் பெண் குறியில தெரியும அறிகுறி.

**தட்டுச்சொளகு** வட்டமான முறம்.

**தட்டுதல்** பறித்து விடுதல்; தந்திர மாகப் பொருளைக் கவருதல்.

**தட்டுப்பு** மரக்கட்டில்; மாடிக்குச செல்லும்படி.

**தட்டுமுட்டு** தட்டுபபாடு, மிகவும் தேவையானது.

**தட்டெடுத்தல்** தோட்டம் முத லியவற்றில் வரம்பெடுததல.

**தட்டை** ஒரு எண்ணெய் பல காரம்.

**தடஸ்தம்** தடங்கல், தடை.

**தடி** தோச் சக்கரத்தை தூக்கிவிட உதவும உறுதியான தடி.

**தடி** வயல் அளவு; வயல்.

**தடிக்கம்பு** கைககழி; நீண்ட கமபு; வயதானவர்கள பயன்படுத்தும ஊன்றுகோல்.

**தடிச்சம்பா** ஒரு வருடத்தில் விளையும் சம்பா.

**தடிபோடுதல்** கோவில தேரை இழுப்பவர்களுக்கு வசதியாக, நீண்ட தடியால் தடியைத தூக்கி விடுதல்; ஒரு நிகழ்ச் சியைத தடை செயயுமாறு பேசுதல, எதையும தடை செயதல்.

**தடி மாடு** எருமை மாடு; தடியன்.

**தடி வெட்டிப் போடுதல்** இடை யூறு செயதல் பார்க்க தடி போடுதல்.

**தடிவெட்டி** விதண்டாவாதம; விதண்டாவாதி.

**தடுக்கு** ஒருவர் உட்காருவதற் கேற்ற பனை நாரிலான சிறிய ஓலைப்பாய்.

**தடுமல்** ஜலதோஷம்.

**தண்டங்கீரை** ஒருவகைக் கீரை.

**தண்டட்டி** காதணி

**தண்டப்பு** ஓர் ஆபரணம்

**தண்டப்பேர்** நில உரிமைச சானறிதழ்.

**தண்டயமரம்** கோககாலி பாாக்க : தண்டயப்பலகை.

**தண்டயப் பலகை** சமையலறை யில் பாத்திரம் வைக்க உதவும் பலகை.

**தண்டயம்** உழவு செய்யும் கருவி களுள் ஒன்று; ஏரைக்கட்ட உதவுவது; வாகனம் தூக்க உதவும் நீண்ட பருத்த கழி.

**தண்டல்காரன்** வரி வசூலிபப வன; கிராமத்துக குறறேவல காரன.

**தண்டவாளம்** மண்பானைகள் வேக வைககப் பயனபடும்

சூளையின் நடுப்பகுதியில் உளள இருமபாலான பகுதி; ரயில் பாதை.

**தண்டா** கதவை அடைதது இடும இருமபுத்தடி.

**தண்டு** அகஙகாரம், திமிர், ஆண் குறி

**தண்டை** சிறுகுழந்தைகளின் காலில் உள்ள வெள்ளி அல் லது தஙக ஆபரணம்.

**தண்டொட்டி** மாதர் காதணி.

**தண்ணி** கள்; சாராயம்

**தணுப்பு** குளிர்ச்சி.

**தத்தி** வரிசை

**தத்து போடுதல்** வயலிலநீர் வெளியேறச செய்ய வயல் மடைப்பகுதியில வரப்பைச் சமமாகச் செய்தல்.

**தத்து** கண்டம; ததஙெடுததல்; சிறுவாயக்காலில நீர்த்தேககத தில் அல்லது நெல்வயலில நீர் நிறைநத பின்பு வெளியே வழிந தோடுவதற்குரிய ஏற்பாடு; வாய்க்காலின குறுக்கே இடும அணையில் நீர் சிறுகப் பாய் வதற்காகக் குடைநத துவாரம், வாழ்க்கையில் விதியால் ஏற படும் விபதது (பார்கக கண்டம).

**தத்துபித்துன்னு** வாயில வந்தபடி உளறல.

**தத்துவாமடை** வயலில அதிக மாகச் சேரும் நீரை வெளி யேற்ற அமைககப்படும் வாமடை. பார்க்க . வாமடை.

**தப்பளம்** தலை, நெற்றி ஆகிய பகுதிகளில் வியாதிகளுககாகக கைமருந்தால போடும் பற்று; வைததியம் பிடித்தவாகளுக்குத் தலையிலிடும் பறறு.

**தப்புருதல்** கையால் தடவுதல்; கண் தெரியாமல் தடுமாறுதல்.

**தம்பட்டம் அடித்தல்** தற் புகழ்ச்சி பேசுதல

**தம்பட்டம்** விளம்பரப்படுத்தல்; தப்பட்டை என்ற நாட்டார் தோலிசைக கருவி.



**தம்பட்டை**

**தம்புரான்** தலைவன், அரசன்; எஜமான; ஒரு நாட்டார் தெய்வம; திருவிதாஙகூர் அர சர்க்கு வழஙகும பட்டம்; நாட் டார் தெய்வத்திற்குரிய பின் ஒட்டு (மாடன் தம்பிரான்).

**தம்மானம்** சன்மானம்; கோவில் விழா நிகழ்சசியில் கலைஞா களுககுச் செய்யபபடும சிறப்பு.

**தமன் வரப்பு** உயரம் குறைவான இடைவரபபு.

**தமுரு** துவாரம்.

**தரம்** தடவை; முறை

**தராதரம்** அந்தஸது.

**தரிக்க மாட்டாமல்** பொறுகக மாடடாமல; இருக்கமாட்டா மல்.

**தரிசடிப்பு** முதல உழவு.

**தரிப்பு** வலி; உடமபின உள வலி; இருபபு; இருககை.

**தரிப்பு** இருப்பு.

**தரு** வில்லிசைப் பாடலில் நாடகத்தனமை அமைந்த பகுதியைக் குறிக்கும சொல; இது இசையுடன் வருவது.

**தருமம்** ஜலதோஷம்.

**தருவை** உவர்மண கிடைக்கு மிடம்.

**தல்லு** அடி, உதை.

**தல்லுதல்** அடிததல், துவைத்தல.

**தலக்கயிறு** மாட்டின தலைப் பகுதியைக் கட்டப் பயன படும கயிறு

**தலக்கனம்** அகஙகாரம்; தலை வலி.

**தலமடக்கு** வரப்பை ஒட்டி ஏர் செல்லும்போது திரும்புவது

**தலமாடு** கட்டில் அல்லது தரை யில் தலைவைத்துப் படுக்கும பகுதி; வடக்கு திசை.

**தலவடம்** காற்றின் அழுத்தத்தால் கடடு மரம் விழாமல் இருககப பாயை நெறிப்படுத்தும் கயிறு

**தலவாணி** தலையணை

**தலை சீவுதல்** தலையை வெடடு தல; தலை வாருதல்.

**தலைக்கட்டு வரி** ஒரு கோவி லுககு உரிமையுடையவாகள் கொடுக்கும் வரி.

**தலைக்காநாள்** முந்திய நாள.

**தலைக்குத் தண்ணீர் விடுதல்** காயசசல்; பெரியம்மை நோய் தீர்நத பின் குளித்தல், பெண் சடங்கு நிகழ்ச்சியில் தண்ணீர் விடுதல்.

**தலைகால் புரியாமல்** எல்லா உணர்வையுடம் அடக்கிய நிலையில் வேகம காட்டுதல்; கட்டுப்பாடில்லாமல நடத்தல்.

**தலைச்சுமடு** சும்மாடு.

**தலைச்சுற்று** மயக்கம்.

**தலைச்சோறு** மூளை.

**தலைதட்டுதல்** மட்டம் தட்டுதல்.

**தலைப்படுதல்** ஒரு செயலில் ஈடு படல.

**தலைப்பிள்ளை** மூத்த குழநதை.

**தலைமடக்கு** வயலில் ஏர் சென்று திரும்புமிடம்.

**தலையடி** நெற்கதிரை முதலில் அடிக்கும் நிலை; தலைக்கு மேல் உயர்த்தி அடித்தல்.

**தலையீத்து** மாடடின் தலைப் பிரசவம்.

**தவண்** முளைதத தேங்காய்; பனங்கொட்டையின் உள்ளிருக் கும் இனித்த பருப்பு.

**தவணப்பொடி** தவண் தேங் காயால் செய்யப்படும் ஒரு கூடடு வகை.

**தவணைப்பால்** அய்யாவழிக கோவில்களில் வழஙகப்படும் பசசரிசிக கஞ்சி.

**தவி** அகபபை.

**தவியாறி** இளைப்பாறி.

**தழை பழுத்தல்** நெல்முற்றி மஞ் சள நிறமாகும்போது இலை பழுப்பது.

**தள்ளும் புள்ளும்** நாட்டார் விளையாட்டுக்குரிய மரத்தா லான நீண்ட கமபும, குறுகிய கம்பும்

**தள்ளை** தாய்.

**தளநார்** பார்கக : தளை கயிறு.

**தளபாடம்** முழுதுமாக மனப் பாடம செய்தல்.

**தளவாடம்** வேலை செய்வதற் குரிய கருவி; தற்காலிகக கூடாரம

**தளாப்** பார்க்க : தளைநார்.

**தளுக்கு** நடிப்பு, நல்லவரைப் போல நடிப்பு.

**தளுத்தல்** துளிர்த்தல்.

**தளை** வயல் வரபபையொட்டிச் சிறுவரப்பு போல் வரபபு மணணை அணைத்தல்.

**தளைக்கயிறு** தென்னை அல்லது பனைமரம் ஏறுபவர் கால களில் போட்டிருக்கும் இணைககயிறு (பார்க்க : தளா).

**தளைகொத்தல்** வயல்வரப்பை வெட்டிச் சமனபடுத்தல.

**தளைநார்** பனை ஏறுபவன் காலில போட்டுககொள்ளும கயிறு (பார்க்க · தளா)

**தறிகொழை** இலைதழைகளைக் குறுககதறித்து வயலில் போடு வது.

**தறுதலை** வீட்டிற்கும் ஊருக்கும் உதவாதவன்.

**தன் பதம்** சுயமான பதம.

**தன்பழம்** தானாகப் பழுத்தபழம

**தன்மூப்பு** பெரியவர்களைப பொருட்படுத்தாது தானாகவே செய்யும் காரியம்; பிறரிடம் கேட்காமல் தானாக ஒன்றைச் செய்வது; எதேச்சை.

**தன்மூப்பு செலுத்துதல்** அதி காரம் செலுத்தல்.

**தன்வெளிச்சம்** இருட்டு வரும் வேளையில் உள்ள வெளிச்சம்.

**தன்னக்கட்டுதல்** மந்திரவாதி, மநதிரவாதம் செய்யும்முன் தனனைப் பாதுகாததுக் கொளளச செயயும செயல்.

**தனைகட்டுதல்** வயல்வரப்பி லுளள நீர் கசிவைத் தடுக்கப் போடப்படும் சிறுவரப்பு.

## தா

**தாக்கம்** நீரோட்ட சுழற்சி.

**தாக்காட்டுதல்** காததிருகக வைத தல; முனனேறவிடாமல் தடை செயதல்.

**தாக்கிழவன்** முதிய கிழவன்.

**தாக்கு** மீன் வலையின் இரு துண்டுகளை இணைக்கும பகுதி.

**தாக்கும்** மூழ்கச் செயதல்.

**தாக்கோல்** திறவுகோல்

**தாங்களவு** நெலலை அளக்கும் போது மரக்காலின் தலைப் பகுதியைக் கையால் பிடித்துக் கொண்டு அளப்பது.

**தாச்சு** கிளியாந்தட்டு விளை யாட்டில் உள்ள இரு அணித் தலைவர்களுக்கும் உரிய பெயர்.

**தாத்தம்மை** பாட்டி (பார்க்க : ஆச்சி).

**தாத்துவலை** கடலில் குறிப்பிட்ட இடததில் வலையைப போட்டு விட்டு அடுத்த நாள் அநத வலையில அகப்பட்டிருககும் மீனைப் பிடிப்பர். இதற்குப் பயன்படும் வலை

**தாம்பாளம்** பிததளைத் தட்டு.

**தாம்பாளம் மாற்றுதல்** நிச்சய தாமபூலச சடங்கில் மணமக்க ளின் வீட்டார், வெற்றிலை பழம் பாக்கு நிரம்பிய தட் டததை மாற்றிக் கொள்ளுவது.

**தாமசம்** இருக்குமிடம்; காலந் தவறுதல்; வசித்தல்.

**தாமன** கட்டுமரப்பாயின் நடு விளிமபு.

**தாய்ச்சி** குழந்தை விளையாட் டினபோது ஆதாரமாக வைக கும பொருள் அல்லது சிறு வன்; நாட்டார் விளையாட் டில் ஆதாரமாக உள்ள பொருள்.

**தாயம்** தாயம் விளையாட்டி லுள்ள ஒன்று என்ற எண்.

**தாயமாடுதல்** தாமதமாதல; காலம தாழ்த்தல்; தாமதம் செயதல்; நேரமாகுதல்; தாயம் என்ற விளையாட்டை விளை யாடுதல.

**தார்க்கம்பு** தார்ககுச்சி.

**தாரித்திரியம்** தரித்திரம்.

**தாரு** தார்க்கம்பு.

**தாருகுத்துதல்** ஒரு விஷயத்தைத் தூண்டிவிடுதல்.

**தாலம்** தட்டு.

**தாலிப்பெருக்கு** திருமணம் முடிநத ஏழாம் நாள் தாலியை மஞ்சள் கயிற்றிலிருநது தங்கச் சங்கிலிக்கு மாற்றுதல்.

**தாலிக்குப் பொன்னுருக்கு** திரு மணத் தாலி செயயப பொன் உருககும் சடங்கு

**தாவரம்** தாழ்நத ஓடு வீட்டுக் கூரை

**தாவளம்** தறகாலிகக் குடியிருப்பு

**தாவு** கடல் ஆழத்தைக் கணித்தல்

**தாள்** வயல் அறுத்தபின் நிற்கும் நெற்பயிரின் மூடு.

**தாள் பிடுங்கல்** வயல அறுத்த பின் நிற்கும நெறபயிரின் மூட்டை பிடுஙகுதல் (தாளெ டுததல்)

**தாளத்தில் போடுதல்** கிடப்பில் போடுதல.

**தாளம்** விலலிசை கலை நிகழச்சி யில் இயக்கப்படும இசைக கருவி; ஜால்ரா.

**தாறுமாறு** வகையிலலாமல்.

**தானமானம்** தனமானம்; பநதா

## தி

**திகையா** பூாத்தியாகாத.

**திங்கள் வசனம்** ஒரு மாதம முழுக்கச் சிவன் கோவிலில் பாசுரஙகள் பாடி வழிபடுவது.

**திங்காமல்** உணணாமல்

**திங்குதிங்குன்னு** கோபம் ஆவே சத்தால உணர்சசியை வெளிக காட்டி ஏசுதலைக் குறிக்கும் ஒலி.

**திசைபெலி** நான்கு திசைகளில் உள்ள தெயவங்களுககுக் கொடுக்கபபடும பலி (திசை வெலி).

**திட்டுமுட்டு** பாாக்க தட்டு முட்டு.

**திடுதிப்புன்னு** எதிர்பாராமல.

**திண்டுக்கல்** வீட்டுமுன பகுதி யிலுள்ள கல்லால் ஆன திண்டு.

**திண்டுக்குமுண்டு** எதறகும் எதி ராகப் பேசும தனமை; எதிரான பேச்சு; ஏறுமாறாக.

**திண்டுமுண்டு** ஒன்றுகொன்று.

**திரடு** வயல வெளியிலுளள மேட்டுப் பகுதி.

**திரளுதல்** பருவமடைதல் (பார்க்க : சமைதல).

**திரிச்சி** பொடிதது, மாற்றி.

**திருக்கஞ்சாத்து** வீதி வழி வரும் வாகனததுககு வழிபாடு செய தல.

**திருக்கவலை** மீன் பிடிககும் வலை.

**திருக்குப்பூ** தலையில் அணியும் ஒருவகை ஆபரணம்.

**திருப்பன்** சவுரிமுடி.

**திருபானை** நாக்கதிர் பானை.

**திருவலக்குத்தி** தேங்காய் திருவி; தேஙகாய் துருவப் பயன்படும் சிறு சிறு பறகளை உடைய இரும்புச் சாதனம் (திருவல்).



**திருவலக்குத்தி**

**திருவை** தானியம் அரைக்க உதவும் கல எந்திரம்



**திருவை**

## தீ

**தீக்கொளுத்தி** இரண்டு போ களுககுள் கோள சொல்லிக கலக மூட்டுபவன்.

**தீச்சட்டி** நாடடார் தெயவக கோவில் விழா ; சிறபபு பூசை களில சாமியாடி கையில் தூககி எடுக்கும் அக்கினிச் சட்டி.



தீச்சட்டி

**தீஞ்சு போதல்** பயிர் கருகுதல் , அடுப்பில உள்ள பதார்த்தம் கருகுதல்.

**தீட்டம்** மலம்.

**தீட்டரிசி** தவிடு நீக்கிய அரிசி.

**தீட்டாறு வெள்ளை** ஒரு வகை நெல்.

**தீட்டுதல்** அரிசியைக் குததி தவிட்டை முழுமையாகப் பிரிததல

**தீட்டுலக்கை** அரிசியிலிருந்து தவிடடைப் பிரிகக உரலில் குததும் உலக்கை; அரிசியைத் தீட்ட உதவும் உலக்கை.

**தீண்டல்** மாதவிடாய்.

**தீத்தி** தீவனம்.

**தீத்துதல்** குடிசை அல்லது ஓட்டுக் கூரை வீட்டுச சுவரில வெள்ளை மண் குழமபைத் துணியால தேய்த்துப பூசுதல.

**தீயல்** குழமபு வகையில் ஒனறு; தேங்காயை வறுத்து அரைத்துத தயாரிக்கப்படும் புளிககுழம்பு.

**தீர்வை** வரி , கடமை.

**தீரக்கழியாமல்** முழுவதும முடியாமல், உடலநலக் குறைவால் முடியாமல்.

**தீவட்டி** *3 - 5 - 7 - 9 - 11* கதிர்களை உடைய பநதம், கோவில விழாக்களில் வாகனங்களின் முன் வருவது.



தீவட்டி

**தீவனம்** காலநடை உணவு; அதிக அளவு உணவைக குறிக கும சொல.

**தீவாளி குளித்தல்** வீணாக ஆடம்பரச செலவு செயதல்.

**தீனம்** நோய.

## து

**துக்கம்மன்** பார்க்க · துககை.

**துக்கை** மூதேவி, ஒரு நாடடார் பெண் தெய்வம; ஜேஷ்டா தேவி

**துடி** அகஙகாரம், இள ரத்தத் துடிப்பு.

**துண்டம்** மீன் துண்டம; மிகச் சிறிய வயல்

**துந்தனம்** ஒரு தந்தியைக் கொண்ட நரம்பிசைக்கருவி. தகர டப்பா அல்லது மண் கிண்ணம், கம்பியால் செய்யப் பட்டது

**துப்பினி** உமிழ்நீர்.

**துப்பில்லை** வசதி இல்லை.

**துப்பு** வழி; தொண்டி, தடயம், தகவல்; துப்பிவிடு.

**துப்புரவு** சுத்தம்.

**துப்புவாளை** நாஞ்சில நாட்டில் பரவலாக எலலோரும் சாப் பிடும் முள் அதிகம் உள்ள மீன்.

**தும்பு** நுனி; ஆரம்பம்.

**துரக்கரம்** கோவில் நிலங்களுக குரிய வரி.

**துரக்காரர்** கோவில் நிலங்களுக் குரிய வரியை வசூலிக்கும் அதிகாரி.

**துரந்து** (தொறநது) குடைநது.

**துரப்பு** குடைவு; ஒரு விஷயத் தைத துருவித துருவிக கேட டல்

**துரம்** பண்டார வகை அலு வலகம்.

**துரிசம்** விரைவு.

**துருசு** காப்பர் சலபேட (Cop per Sulphate).

**துருத்தி** கொல்லனின் உலைக களக கருவி, சொந்தககாரியம் ; இதயம.

**துரும்பு** துரு.

**துலக்கம்** தெளிவு.

**துவட்டுதல்** குளித்த பின் தலையைத் துணியால் துடைத் தல; உடம்பின் ஈரம போகத் துடைததல்.

**துவர்த்து** சிறிய துண்டு (இரண்டு இழைகள் உளள கைத்தறித துணடு).

**துவரன் சம்பா** நெல்வகை.

**துவையல்** கட்டிச சட்னி; தேங் காய் மிளகு வத்தல் உப்பு புளி சேர்த்து அரைத்த கலவை.

**துளச்சு துளச்சு** தூண்டித் தூண்டி.

**துளவை** துடுப்பு

**துறண்டி** அங்குசம்; காது அழுக்கை எடுக்கப பயன்படும் கருவி (செவித்துறண்டி).

## தூ

**தூக்கச்சடவு** பார்கக : உறக்கச் சடவு

**தூக்கு** ஒரு எடை; நிறுத்திவிடு.

**தூக்குப்போணி** மேற்புறம் வளைந்த பிடியுளள பாத்திரம், தூக்குவாளி; தூக்குச் சட்டி; பயணத்தின்போது உணவைக் கொண்டு செல்லப் பயன்படும் பாத்திரம.



தூக்குப்போணி

**தூக்கு வாளி** பாரகக தூககுப் போணி.

**தூட்டா** கடலில மீன் பிடிககப் பயன்படும் உயிரோடு இருக கும் இரை

**தூண்டா** மீன் தூண்டில்.

**தூத்தல்** குப்பையைப் பெருக்கு தல்

**தூத்துவாரியம்மன்** நாட்டார் பெண் தெயவம.

**தூம்பு** சாக்கடை.

**தூமாமடை** சாக்கடை நீர் போகும் மடை.

**தூமை** மாதவிடாய் ரத்தம.

**தூமைக்குளி** மகப்பேறுறற பெண்கள குளித்த நீர் விழும் குழி

**தூரு** அடிப்பகுதி; கழிவுகள்.

**தூருவாருதல்** தூர் எடுத்தல்.

**தூளிச் சிற்பம்** காளி கோவிலின் முற்றத்தில் வரையப்படும வணணபபடம.

## தெ

**தெகட்டுதல்** திகட்டுதல்.

**தெகரம்** கஷ்டம்.

**தெகுடுதெப்புல** எப்போதாவது ; திடீரென்று; எதிர்பாராதவித மாக.

**தெங்கு** தென்னை மரம்.

**தெண்டம்** நஷ்டம்.

**தெண்டி** இரப்பவன் ; கீழ்ததர மாக ஏமாற்றி இருப்பவன.

**தெண்டுதல்** யாசித்தல்.

**தெத்தனம்** அலட்சியம

**தெத்தி விடுதல்** யாருக்கும் தெரியாமல் ஓடிவிடுதல்.

**தெத்துப்பல்** இரண்டு பற்களுக் கிடையே புதிதாக முளைக்கும் பல்.

**தெப்பக்கட்டை** தெப்பத் திரு விழாவில் தெப்பம் செய்வ தற்குப் பயன்படும் கட்டை.

**தெப்பம்** கட்டுமரத்தைப் பக் குவப்படுத்திக் கடலில் கல் கட்டிப் போடுவது; அமிழ்ந்து போகும நிலை

**தெம்மடல் உழவு** வயலில் வடககுத் தெற்காகச சால் அமைத்து உழுவது.

**தெம்மதி** தென்மீதி; நாஞ்சில் நாடடின் தென்பகுதி (கன் னியாகுமரி மாவட்டம தோவாளை வட்டம்).

**தெம்மாடி** கையாலாகாதவன; வாய்ப் பேச்சில் காலம் கழிப் பவன், போக்கிரி; இல்லாதவன்; கோழை.

**தெம்மாடித்தனம்** போக்கிரித் தனம்; இயலாமை.

**தெய்தெய்யென** கோபப்பட்டுச் சத்தமாகப பேசுவதைக் குறிக் கும் சொல்.

**தெய்வீகச்சம்பா** ஒரு வகைச் சம்பா நெல்.

**தெர்லோக்கியம்** குறும்பு செய் யாத, குழந்தையைக் கொஞ்சு வதறகுரிய சொல்

**தெரக்கு** கூடடம், தேடு.

**தெரசர்** கமபவுணடர்; டாகடர்.

**தெரணை** திண்ணை.

**தெரளுதல்** பருவம அடைதல்.

**தெருமறிச்சான்** இந்துக்கோவில் விழாக்காலங்களில் தீணடத தகாதவர் என ஒதுக்கப்பட்ட சாதியினர் வராதபடித் தெருவை அடைதது வைககும் தட்டி.

**தெருவும் திண்ணையும்** வேலை எதுவுமினறியும் பணம் இன்றியும் இருத்தல.

**தெல்** தெல்லு மரத்தின் காயை வைத்து விளையாடும் கோலி விளையாட்டு.

**தெவக்கம்** மூச்சு முட்டுதல, தேக்க நிலை; ஆஸ்த்மா (இளைப்பு); சிறிய கால்வாயில் அணைபோட்டு நீரைத் தேககி வைக்கும் செயல்.

**தெவங்கிதெவங்கி** தேமபித் தேம்பி.

**தெற்றெடுத்தல்** மீன்வலையின் நூல் சிக்கல் எடுததல்.

**தெறி** வசவு; குறுமபுபபேச்சு; ஆணவப்பேச்சு.

**தெறிப்பாச்சா** ஒருவகைக கரப்பான் பூச்சி

**தெறிப்பான்** எப்போதும் அவதூறு பேசிக்கொண்டிருப்பவன்.

**தெறிப்பு** விரைபபு.

**தென்றாடு** தேனீக்கள தேனைச் சேர்த்து வைகக மெழுகால் செய்யும கூடு (Honey comb).

## தே

**தேக்கம்** பெரிய அளவில் தண்ணீர் கட்டி நிற்றல், நீரோட்டத்தின் தடை.

**தேங்குழல்** இனிப்பு முறுக்கு

**தேட்டம்** காணும ஆசை; விருப்பம்; தேடுதல், நினைவுறுத்தல.

**தேத்து** கடலநீர் தெளிவாக இருத்தல்.

**தேய்காய் முறி** பாதி தேய்காய் மூடி.

**தேர்பட்டு** கோவில் தேரை அலங்கரிக்கப் பயன்படுததும் வேலைபபாடுள்ள வணணத் துணி.

**தேர்ப்பாடை** பார்க்க : பாடை.

**தேரடி மாடன்** நாட்டார ஆண் தெய்வம, கோவில் தேரை அடுத்த இடத்தில் இருக்கும் சுடலைமாடன என்ற தெய்வம்

**தேரம்** நேரம்.

**தேரி** வயல், தோட்டம நடுவே உள்ள மணல குன்று.

**தேரோடமால** தெருவோட அனாதரவாக தெருவில் திரிதல்.

**தேவாரப் பெட்டி** அரசர் புறப்பாடடில் முன்பாகக கொண்டு செல்வதும, பூசைக குரிய விககிரகம முதலிய

வறறை வைத்திருப்பதுமாகிய பெட்டி.

**தேளக்கனம்** நெஞ்சுரம, மன உறுதி.

**தேளி** நல்ல நீரில் உள்ள மீன்

**தேளுவை** தேவை.

**தேளை** இதயத துடிபபு.

**தேற்றுதல்** சமாதானப்படுத்துதல்

**தேறுதல்** ஆறுதல் அடைதல்; சாதம் நனறாக வெநது போதல்.

## தொ

**தொக்கு** சாக்குபோக்கு, வசதி; தனனைக் குற்றவாளியாக்காமல் இருப்பதறகான காரணம, கட்டியான குழம்பு; மாமிசத துண்டுகள் நிறைந்த கட்டியான குழம்பு; மாங்காய் ஊறுகாய்.

**தொங்கட்டான்** காதணி.

**தொங்குதல்** கெஞ்சுதல், தரம் தாழ்ந்து வேணடல.

**தொட்டாச்சிணுங்கி** தொடடதும அழும் குழந்தை.

**தொட்டி** மாட்டுக்குக் கழுநீர்; நீர் வைககும் மண அல்லது கல தொட்டி, கீழான குணம உடையவன்

**தொட்டிவீடு** தொட்டுக் கட்டியுளள வீடு, நடுமுற்றமுள்ள வீடு.

**தொட்டுக்கூட்டுக்கறி** பசசடி முதலிய திரவ உணவு வகை.

**தொட்டுப்பிடித்தல்** மகப்பேறு காலததில் கருவுற்ற பெண்ணின் பக்கததிலிருந்து உதவி செய்தல்; தொட்டுச் சென்று பிடிக்கும் நாட்டார் விளையாட்டு.

**தொடக்கயிறு** ஏரில் நுகததைக கடட உதவும எருமை மாட்டுத தோலால ஆன கயிறு

**தொடுக்கு** (தொடுப்பு). வைப்பாட்டி; உதவியாள்; கைக் குழநதை.

**தொடுகயிறு** உழவு கயிறு

**தொடுப்பு** ஆணுக்குப் பெண்ணிடம் உள்ள முறையற்ற உறவு.

**தொண்டு** தோட்டத்தின் வேலியில் தற்காலிகமாகப் போடப்படட வாசல; தோட்டத்து வழியே.

**தொண்டுப்பணி** ஊழியம.

**தொண்டூழியம்** ஊழியம்; சம்பளமின்றி வேலை செய்தல.

**தொண்டைக்குழி** குரல்வளை.

**தொண்டைத் தண்ணி** குரல் வளை ஈரம்.

**தொண்ணாந்தல்** கெஞ்சி நிற்றல்.

**தொத்தல்** மெலிதான; வற்றிய, நொநதுபோன, மெலிநத.

**தொந்தி** பருத்த வயிறு (குடவண்டி)

**தொப்பூள்** கொப்புள.

**தொரட்டி** ஆட்டுககு இலை தழைகள பறிகக இடையாகள் வைததிருககும கம்பு; முருங்கை

மரத்தில் காய் பறிக்க உதவும் கத்தியுடன் கூடிய கழி.

**தொரண்டி** பார்க்க : தொரடடி.

**தொலித்தல்** தேங்காய உரித்தல்.

**தொலைந்து போதல்** காணாமல் போதல்.

**தொவச்சு எடுத்தல்** அடித்து உதைததல்.

**தொழி** சகதி.

**தொழிஉழவு** நீர நிறைநத வயலில் உழுதல்.

**தொழித்தல்** வீட்டு முன் முற்றத் தைத் தண்ணீர்; சாணத் தண் ணீர் விடடுப் பெருககுதல்.

**தொழு** மாட்டுக் கொட்டகை.

**தொழுத்து** பார்க்க : தொழு.

**தொழுப்பிறப்பு** தொழுவிலேயே பிறந்து வளர்நத கன்று; வீட் டோடு நிற்கும் வேலைக்காரன்.

**தொளவை** கட்டுமரம தள்ளு வதற்குரிய துடுப்பு

**தொறட்டு** சிக்கல்; பிரச்சனை, தொநதரவு.

**தொறந்த மேளம்** இரகசிய மினமை; வெளிப்படையாக எதையும் கூறும் மனநிலை.

## தோ

**தோசி** கெடுதல் செய்பவன்

**தோடயம்** கணபதி போன்ற தெயவங்களை வாழத்தும் வாழ்த்துப் பாடல்; நாடகத்தின் முன் மொழிப் பாட்டு.

**தோண்டிப்பட்டை** கமுகம் பாளையிலான வாளி.

**தோண்டி** மண்குடுவை.

**தோதாக** வசதியாக; உடன்பாடு.

**தோதுவாது** சமய சந்தர்ப்பம்.

**தோப்பாண்டி** சிவன் கோவில் திருநநதவனப் பணி செய்யும் பரதேசி.

**தோய்ப்பன்** இனிப்புப் பலகார வகை, சுசியன்.

**தோரணையாக** பந்தாவாக.

## ந

**நக்கணை** பரிகாசம்.

**நக்கல்** கிண்டல்; பரிகாசம்

**நக்கழித்தல்** குழந்தை அமர்ந் திருந்தவாறு நகண்டு செல் லுதல்.

**நக்கி** உலோபி; நககி உணபவன்; கஞ்சன்; எதிலும திருப்தி அடையாதவன்.

**நக்கித்தனம்** உலோபித்தனம்; கஞ்சத்தனம்.

**நக்குவாரி** ஒருவகைத் தென்னை மரம.

**நகண்டு** நகர்நது; இடம் மாறி.

**நகாசு** நுண் வேலைப்பாடு; ஆப ரணத்தில் செய்யப்படும் அலங் கார வேலை.

**நங்குடைமை** மருமககள் வழி முறையில் குழந்தையற்ற வித வைககுக கொடுக்கப்படும் உதவித் தொகை

**நச்சாம்புச்சான்** மிச்சம் மீதி; எஞ்சிய பொருட்கள், உபரியாக; கையூட்டாக, கொடையாக; தானமாக; கூலியாக.

**நச்செரித்தல்** தொடர்நது தொந்தரவு செய்தல்.

**நசுநசுத்தல்** முனங்கிகொண்டே தொந்தரவு செய்தல்.

**நசுநாறி** கஞ்சன், எப்போதும் சிணுங்கிக் கொண்டிருப்பவன; தேவையில்லாமல கோபபபடுபவன.

**நட்டணக்கால்** கால் மேல் கால் போட்டுத் தோரணையில் இருத்தல்.

**நட்டு** புகையிலை காம்பு.

**நடவு** வயலில் நாறறுக்களை நடும் வேலை.

**நடுமரம்** கட்டுமரததின் நடுப் பகுதி

**நடை** நிலைப்படி, முனவாசல்.

**நடைமறிப்பு** திருமணததின் போது மணப்பெண்ணின் அத்தை அலலது மாமா மகன், மணமேடைக்குப் போகும் போது மறித்து பரிசம் கேட்டல்.

**நடைமாற்று** இறப்புச் சடங்கில பிணததைத் தூககி வருபவர்கள் நடநது வருவதற்குக் தெருவில் விரிக்கப்பட்டிருக்கும் சேலை; சுடுகாட்டுக குழியின் பக்கததில் பிணம் எரிக்க வநத உறவினர்கள் உட்காருவதற்காக விரிக்கப்படட சேலை.

**நண்டும் சிண்டும்** சிறியனவும பெரியனவுமாகிய அடுக்கடுக கான குழநதைகள.

**நண்டெடுத்தல்** நீரின் கீழே மூழ்கி இருககும இளம பயிா நண்டு வெட்டுதலால் அழிந்து நிற்கும் நிலை.

**நண்ணி** நன்றி.

**நத்தம்** ஏரி, குளம் சார்ந்த நிலம்.

**நந்துனி** வயலின் போன்ற இசைக் கருவி (இதன் நரமபு பேசின் நாருவள்ளி என்ற கொடியிலிருந்து தயாரிக்கபபட்டது.) காளி கோவிலில் இசைககப்படும் கருவி.



**நந்துனி**

**நம்புரான் விளையாட்டு** சாஸ்தா எனனும் தெயவத்தின் விழாவின் போது குதிரை வாகனத்தில் வருதல்; வாகனம் வேகமாக ஓடுதல். (இந்த வாகனம் நாலுபுறமும சுற்றும் படி அமைக்கபபட்டிருக்கும்.)

**நம்மட்டி** மண்வெட்டி.

**நமட்டுதல்** பழைய நினைவால் வருத்தப்படுதல் ; மனரீதியான வருத்தம்.

**நரங்கி** உட்கார்நதபடி நகர்தல.

**நரங்குதல்** நெற்பயிர் நெருங்கி வளர முடியாத படி இருத்தல்.

**நரவல்** மலம.

**நரைச்சுதல்** பயிர் வெளிறிப் போதல்.

**நல்லதனமாக** நயமாக.

**நல்லது** நலல பாம்பு.

**நல்லப்பம்** முதனமுதலாக.

**நல்லமிளகு** மிளகு

**நல்லீடு** தேஙகாய வெடடும் காலங்களில நல்ல காய்பபுள்ள பருவம.

**நலம்பிடித்தல்** விதையடிததல்.

**நலுங்கு** திருமண நாள் மாலை மணமக்கள் எதிரெதிராக அமர்நது உருடடப் பயன்படும் தேஙகாய் அளவான உலோக உருண்டை ; மலா உருண்டை.

**நவட்டி** நகாத்தி

**நவதி** பொடுதலை இலை

**நவரை** ஒருவகைக் கடலமீன்

**நவிஞ்சுதல்** நனறாக அடித்தல்.

**நவுட்டாம் பழம்** உடல் சிவக்கு மாறு கிளளுதல

**நவுட்டுதல்** கிளளுதல்

**நவுண்டு** நகர்நது.

**நளி** கிணடல் பேச்சு ; பரிகாசப பேச்சு.

**நறுக்கரிசி** பாதி வெந்த அரிசி

**நறுக்கு** ஓலையில் எழுதபபட்ட மந்திர ரட்சை; உடல் நலம பெற மநதிரம் எழுதிய பனை ஓலை, செம்புத் தகடுத துண்டு

**நன்மைக்கு இருத்தல்** தாய் அலலது தந்தை இறநத பின்பு பதினாறாம நாள நிகழும் சடங கில் இறந்தவரின ஆணமககளுககுத் துணி அலலது பணம கொடுககும் நிகழ்ச்சி.

## நா

**நாக்கருது** வயல அறுவடைககு முன்பு நலல நாளில வீட்டிற்கு அறுததுவரும நெற்கதிர் (பார்க்க · நெறை)

**நாக்கருதுபானை** வயல் அறு வடைக்கு முனபு நெறகதிரை வீட்டிறகுக் கொண்டு வநது நிறைப்பதறகுரிய பானை

**நாக்கு** மணியின் நாக்கு; பூட்டு நாக்கு.

**நாக்கைப் பிடுங்குதல்** தற் கொலை செய்தல, அடாத பழி யால் அவமானமடைநது இறப பதறகுரிய வழிமுறை.

**நாகப்படகள்ளி** களளி வகை.

**நாகப்படத்தாலி** கழுத்து அணி வகை

**நாசமத்து** நாசம் இல்லாமல்.

**நாசமத்துப் போவான்** நாசம இல்லாமல் இருப்பவன். (திட்டுவது போல் வாழ்ததுதல்.)

**நாசியடைப்பு** ஜலதோஷத்தில் உண்டான சளியால் மூககடைததுக் கொளளுதல.

**நாசுவத்தி** நாவிதப் பெண்.

**நாசுவன்** நாவிதர்.

**நாட்டுச் சரக்கு** சாராயம

**நாணயவரியோலை** இருபபுத் திட்டம்; மாத வருவாய் முத லியவறறைக் காட்டும் நாணய வழக்கு.

**நாத்துதல்** ஒருவரைப் பறறி இழி வாகப் பேசி அவரைக் கேவலப் படுத்துதல்; ஒருவரைப் பற்றி அவதூறு பரப்புதல்; வதந்தி பரபபுதல.

**நாதங்கி** தாழ்ப்பாள.

**நாதி** பொறுப்பு; ஆள, வேண்டி யவர்.

**நாதியற்று** கேட்க ஆளில்லாத நிலை.

**நாந்துற்று நிற்றல்** தற்கொலை செய்யத் தூக்கில் தொங்குதல்.

**நாயும் புலியும்** தாயம் போன்ற நாட்டார் விளையாட்டு.



நாயும் புலியும்

**நாயுருவி** குப்பைமேட்டில் வள ருமு ஒருவகைச் செடி. இதன் வேரைப பல விளககப் பயன படுததுவர்.

**நாரணிச் சட்டி** திருககார்த்திகை அன்று கோவில் சந்தியில எரிககுமு விளக்குச் சட்டி.

**நாலம்பலம்** நாட்டாா தெய்வக் கோவிலின் முனபகுதி.

**நாலாம்நீர்** திருமண நாளில் முத லிரவுக்கு முனபு மணமக்கள் செயயும் சடஙகு.

**நாலுண்டும்** நாலாவிதததிலும ; எலலாவிதத்திலும்

**நாலுதல்** தூக்கில தொங்குதல ; தற்கொலை செய்யத் தூககில தொஙகுதல்.

**நாவிரேசனம்** தொப்புளில தட வினால் மலத்தை இளகச் செய் யும் நாட்டு மருந்து.

**நாவுதல்** அரிசியைத் தெளிவாகக் கல் நீக்குதல்; புடைத்தல்.

**நாவுரி** நான்கு உரி.

**நாவுருவி** பார்கக: நாயுருவி.

**நாவுழற்று** பொறாமைப்படடுப் பேசுதல்.

**நாள் குறித்தல்** திருமணததிற்கும், நாட்டார் கோவில விழா விறகும் சோதிடர் நாளைக் குறித்தல்.

**நாள்நெல் அவித்தல்** திருமணத் தில் மணமக்களுககு உணவு பரிமாறுவதற்கான சாதத்திற் கான நெல்லை நிச்சயதாம்பூல நாளில் அவிப்பது.

**நாளாவட்டம்** நாளடைவில்; நாள் செல்லச் செல்ல.

**நாளேரடித்தல்** நல்ல நாளில் உழத் தொடஙகுதல்.

**நாளைக்கழித்து** நாளை மறுநாள்.

**நாற்றடிப்பட்டம்** ஒருவர் நிலத் தில் மற்றவர் நாற்றுப்பாவு வதறகுக் கொடுககப்படும் குத்தகை

**நாற்று கிழக்கல்** நடுவதற்குரிய ஒற்றை நாற்றை நாற்றஙகாலி லிருந்து பறிபபது.

**நாற்றுப்பரவல்** தொழிப்பருவத் தில் நாற்றங்காலில் முளை விதையை வைப்பது.

**நாற்றுப்பாத்தி** நாற்றுப் பாவுதற் குரிய இடம.

## நி

**நிச்சியார்த்தம்** திருமணம நிச்ச யம் செயயும் தாம்பூலம் மற்றும சடங்கு; நிச்சயதாம்பூலம்.

**நிச்சிதார்த்தம்** பார்க்க : நிச்சி யார்த்தம.

**நிசாரம்** மிக எளிதாக.

**நிப்பாட்டுதல்** நிறுத்தி வைத்தல்.

**நிமரம்** பாம்பு இரை எடுதத பின்பு அசைய முடியாமல் கிடக்கும் பாம்பு.

**நிமிட்டாம் பழம்** செல்லமாகக கிள்ளுதல்.

**நிமிட்டுதல்** கிள்ளுதல்.

**நிமிண்டுதல்** நகம் படாமல் கிள் ளுதல்.

**நிமிர** நிறைய.

**நிர்மால்ய தரிசனம்** முநதியநாள் அலங்காரங்களைக் களை வதற்கு முன் காலையில் செய யும் சுவாமி தரிசனம்.

**நிர்மால்யப் பூசை** முந்தின நாள் அலங்காரங்களைக களை வதற்கு முன்பு செய்யப்படும் காலை பூசை.

**நிரவலடித்தல்** உழுத நிலத்தைச சமம் செய்தல் (மரம் அடித்தல).

**நிரவு வீடு** மரப்பலகை சுவரால் ஆன வீடு

**நிரை** கூறு.

**நிலக்கடலை** வோககடலை.

**நிலந்தட்டி** கடல்மீன வகை.

**நிலந்தாங்கல்** வெயிலின் கொடு மைககாகப் போடப்படும் பந்தல்.

**நிலவகை** மண்புழு.

**நிலவடியடித்தல்** நெல் கதிரை நிலத்தில் அடித்து நெல்லைப் பிரித்தல்.

**நிலவா** வாயகன்ற, கைப்பிடி யுள்ள செம்புப்பாத்திரம்.

**நிலைவிடுதல்** புதிதாகக் கட்டப் படும் வீட்டின் முன் வாசல் நிலைக்கதவை விடும் சடங்கு நிகழச்சி.

**நிழல் தாங்கல்** பார்க்க : நிலந் தாங்கல்.

**நிறநாழி** நாழி நிறைய நெல் வைத்திருத்தல்; நல்ல கெட்ட சடங்குகளில் வைக்கப்படுவது. (வாழ்க்கை வட்டச் சடங்கு களில, நிறைநாழி வைத்தல் முக்கியமான ஒன்று.)

**நிறை** நெற்கதிரைப் பானையில் வைக்கும் சடங்கு.

## நீ

**நீக்கம்பில் போதல்** தண்ணீர் பாம்பு கடிதது அல்லது காலரா

வநது அழிந்து போவதைக் குறிதத ஏச்சுச் சொல்.

**நீக்கம்பு** காலரா, தண்ணீர் பாம்பு.

**நீக்குப் போக்கு** விடடுக கொடுக கும் தன்மை; இணக்கமாய் இருத்தல்.

**நீக்குப்பெருக்கம்** பாரக்க : நீக்குப் போககு.

**நீச்சுத் தண்ணி** நீர் ஆகாரத் தண்ணி

**நீசத்தனம்** மிகவும் கீழ்த்தனமான.

**நீத்தண்ணி** பழைய சோற்று நீர்; நீராகாரம்.

**நீத்துதல்** சுண்ணாம்புச் சிப்பி களை நீற்றுதல்.

**நீர்க்காளை** மாட்டின நோய் வகை.

**நீர்க்குத்து** மாட்டின் முதுகில் உள்ள சுழி.

**நீர்பேடு** நீர்பேட்டுத் தேங்காய்.

**நீர்மாலை** இறந்தவரைக குளிப் பாட்டுவதற்காகக் கருமம் செய் பவர் நீர் கொண்டுவரும் சடங்கு.

**நீராளி** தெப்பக்குளததில் குடிநீர் எடுப்பதற்காகக் கட்டபபடடி ருக்கும் துறை; குடிநீர் எடுக்கப் பயன்படும் பெரிய கிணறு.

**நீரொழிச்சல் பூசை** தாய்த் தெயவக் கோவில்களில் கள மெழுத்தும் பாட்டும கலை ஆரமபமாகும்போது நடக்கும் பூசை.

**நீலமணி** சம்பா வகையிலான நெல்.

**நீக்குவளை** சம்பா வகையிலான நெல்.

**நீவாடு** நீரோட்டம.

## நு

**நுகம்** வண்டி, ஏர் முதலியவற்றை இழுத்துச் செலலக் காளை அல்லது எருமையின கழுத்தில் பிணைபபதற்குரிய நீண்ட மூங் கில கழி.

**நுங்குதல்** அதிகமாய்ச் சாப்பிடு தல்.

**நுள்ளி** நீர்செடிவகை.

**நுள்ளுதல்** கிள்ளுதல்

## நூ

**நூலாம்படை** ஒட்டடை.

**நூலில்லாமாலை** கழுத்தணி.

**நூலேணி** கடலமீன வகை.

## நெ

**நெஞ்சாங்குலை** ஈரக்குலை; மாரபு.

**நெஞ்சாங்குழி** தொண்டைக்குழி

**நெஞ்சுகரித்தல்** உணவு மிகுதி, ஒவ்வாமை காரணமாக வாநதி யுண்டாகும்படியான மன நிலை இருத்தல்.

**நெட்டு** புகையிலை காம்பு.

**நெட்டையன்** ஒரு வகை நெல்.

**நெடுஞ்சம்பா** ஒரு வகைச் சம்பா நெல்.

**நெடுநாக்கு** கடல மீன வகை.

**நெடும் சம்பா** வகையிலான ஒருவகை நெல்.

**நெடுமுரல்** நீணட மூககுடைய மீன, ஒருவகை முரல் மீன்

**நெடுவாக்களி** வெள்ளி நிற முடைய கடல் மீன்வகை

**நெடுவாலி** பார்க்க : கிருத்துருமக் காரன்.

**நெணவேலை** பார்கக : கிருத் திருமம்.

**நெத்திக்கயிறு** மாட்டு வணடியில் முன பககமிருந்து பினபகக மாகப போகும கயிறு.

**நெத்திலி** கடல் மீன் வகை

**நெத்து** தேங்காய நெத்து; உலர்ந்த காயகள (வாகை நெத்து).

**நெத்துப் படுதல்** தேங்காய் முற்று தல

**நெய்த்து** நெசவு.

**நெரப்பு** சமமாக

**நெரடுதல்** இடறுதல.

**நெரிலிரி** கூடடம்

**நெல்சீட்டு** ஆறு மாதஙகளுக்கு ஒருமுறை நெல்லைச சீட்டுப பணமாகக் கடடும முறை

**நெல்லரி** கைப்பிடி அளவான நெற்கதிர்.

**நெளிவு** பெணகள அணியும் மோதிரம்.

**நெறிகட்டி இழுத்தல்** நாறறங் காலில நீர் தேங்கிய இடத்தில உள்ள நீரை வெளியேறற பாதை வகுத்தல். இதறகு நீர் நிறைந்த வயல் பகுதியில் வைக் கோல பொதிந்த கல்லைக கயி றால் கட்டி இழுத்துப் பாதை உணடாககுவர்

**நெறுத்து** எடை போட்டு

**நெறை** பாாக்க : நிறை.

**நெளிசல எடுத்தல்** ஆவேசமாக அடித்தல்

## நே

**நேந்திரம்** ஒரு வகை வாழை.

**நேர்கொம்பு** மாட்டுக்கொமபில ஒரு வகை

**நேரம் கடத்தல்** காலம் போககு தல, தாமதப்படுத்துதல.

**நேரம்பெற** சீககிரமாய்.

**நேரமறிச்சு** நேர்மாறாக.

**நேரப்போக்கு** பொழுதுபோக்கு.

**நேரீது** மேலதுண்டு; மெல்லிய நோத்தியான துண்டு; ஜரிகை போட்ட துண்டு.

**நேரீயல்** பாாகக · நேரீது.

**நேற்று** முந்தாநாள் சமீப காலத தில்

## நொ

**நொகம்** பார்க்க : நுகம.

**நொகத்தடி** பார்க்க . நுகம்.

**நொங்கு** நுங்கு.

**நொங்கெடுத்தல்** ஈரலை எடுத்து விடுதல, கோபததில கூறும சொல.

**நொசித்துப் போதல்** பாழபட்டு, அழுகிப் போதல்

**நொட்டி** ஆண் பெண் புணர்ச்சி தொடாபான பழிப்புச் சொல்.

**நொடி** குண்டும குழியும உள்ள இடம்.

**நொடித்தல்** ஒடிதல்; ஏழ்மை அடைதல்; மனம உடைதல்.

**நொண்டங்காய்** பிஞ்சு புளியங் காய்.

**நொம்பலம்** வலி

**நொர்நாட்டியம்** குறை கூறும தனமை; குறை, சரியாக விளக்க முடியாத; குறைகள்; சிக்கலான.

**நொள்ளாப்பு** காரணமின்றி வரும கோபம.

**நொறுக்குதல்** அடித்தல்; பெரும் அளவில் சாப்பிடுதல.

## நோ

**நோக்காச்சாவி** நுகக்காலசாவி.

**நோஞ்சான்** மெலிந்தவன்; நோயால மெலிந்தவன்.

**நோண்டுதல்** துருவி விசாரித்தல, குடைநதெடுத்தல்.

**நோட்டம்** வேவு, வெளளோட டம

**நோட்டம் பார்த்தல்** வேவு பாாத் தல்

## நை

**நை** இகழ்சசிக குறிப்பு.

**நையாண்டி மேளம்** நாட்டுப் புறக் கலை, இரண்டு நாதஸ வரம் இரண்டு தவில் இரண்டு பம்பை, ஒதது ஆகிய இசைக் கருவிகளால இயக்கப்படுவது; கரகாட்டக் கலையின் பின் னணி இசைக் கருவிகள்.

## ப

**பக்கக் கண்ணு** தாய் வாழையின் அருகில் முளைக்கும் குட்டி வாழை.

**பக்கறை** துணிபபை, நீண்ட வார் கொண்ட பை.

**பக்கா** பெரிய நாழி, பட்டினம் படி; முழுதும்; முகத்தலளவு; சிறப்பாக

**பக்கி** ஒப்பனை இல்லாத நிலை, பெண்களைப் பழிக்கப பயன் படுததும் சொல, இயககி எனற தெய்வம

**பகர்ப்பு** பிரதி; படி; மூலத்தின நகல்.

**பகர்ப்புச்சுருள்** தொகுத்து வைக்கபபட்ட மூலததின் நகல்.

**பகரம்** பதிலாக; மாற்றாக.

**பகல் பத்தி** பகல் நேரத்தில் மட் டும் கையில அப்பப்படும் மரு தாணிச்செடி இலை.

**பங்கரை** அரைகுறை.

**பங்கறக்கொத்து** ஒரு செயலை அரைகுறையாகச செய்தல;

அரைகுறையாக முடி வெட்டி யிருத்தல்.

**பங்காயம்** நீணட கரண்டி

**பங்கி** அழகினமை; அழகற்ற நிலை; மோசமான தன்மை.

**பங்கொண்டை** தலைமுடியை மேலே வாரிக் கட்டிக் கொள் ளுதல; விதவைகள் மட்டுமே கடடும் கொண்டை.

**பச்சப்புள்ளை** அணவடைப் பிள்ளை; கைக்குழந்தை.

**பச்சம்** நட்பு, காதல்.

**பச்சரிசிப் பிண்டம்** இறப்புச சடங்கில் செய்யப்படும பச் சரிசி இனிப்பு மாவு.

**பச்சை பிடித்தல்** பணவசதி வரு தல.

**பசானம்** மாசிபங்குனி மாத விளைச்சல்; விஷம.

**பசை** வசை.

**பசை** பணம், செல்வம்.

**பஞ்சப்பாட்டு** எப்போதும் ஏழ் மையைப் பறறிப் பேசிக் கொண்டிருக்கும் புலம்பல்.

**பஞ்ச வாத்தியங்கள்** திமிலை, வீககு செணடை, இலைத் தாளம்; சேஙகிலை, சங்கு ஆகிய ஐந்து இசைக் கருவிகள.

**பஞ்சரித்தல்** நச்சரிததல், கெடுதல இல்லாமல தொந்தரவு செய தல. பார்கக : சொாணாவுதல்.

**பஞ்சாரை** (பஞசசாரை) சீனி சர்ககரை

**பட்டணப் பிரவேசம்** திருமணத் தன்று இரவு மணமககள் பல லக்கில அல்லது திறநத காரில் அமர்ந்து ஊர்வலம் வருதல.

**பட்டம் கட்டல்** இறப்புச் சடங் கில கருமங்கள் செய்பவரின் தலையில் கடடப்படும நிகழ்ச்சி.

**பட்டனி** வயலறுககும தொழிலா ளர்கள் வயல் கதிரைப் பங்கு போட்டு அறுக்கும் செயல்.

**பட்டாளம்** ராணுவம.

**பட்டி** நாய்.

**பட்டினி நோன்பு** இறந்த வீட் டில் பெண்கள் பட்டினியாக இருக்கும விரதம்.

**பட்டினிப்பண்டம்** வயதானவர் களின இறப்பிற்குத் துக்கம் அநுடடிக்கப் பட்டினி கிடப் பவர்களுக்காகக குறிப்பிட்ட உறவு முறை உடையவர்கள் கொடுககும் பலகாரம அல்லது பலகாரததுக்குரிய மூலப் பொருட்கள்.

**பட்டை** சாராயம்; பனை ஓலை யால் செய்யபபட்ட வாளி; பதனீர் குடிக்கப் பயன்படும் படடை; திருநீற்றுபபடடை; கோவில் சுவரில் பூசப்படும சிவப்பு வெள்ளை நிறம்; கமுகம் பாளையினால் ஆன வாளி.



பட்டை

**பட்டை கழருதல்** கட்டுப்பாடில லாமல் பேசுதல்; செயல்படுதல்

**படக்கு** பட்டாசு; விரைவாக, 'திடீரென' என்பதைக் குறிக்கும் சொல.

**படப்பு** வைக்கோல போர், நாட் டார் தெயவங்களுக்குப் போடப்படும் படைபபுச் சாதம்.

**படப்புச் சாதம்** நாட்டார் தெய் வத்திற்குப படைக்கப்பட்ட அசைவ அலலது சைவச் சாதம.

**படிக்கம்** வெற்றிலைச சாற்றை உமிழ்வதறகுரிய வாயகனற பித்தளைப் பாத்திரம் (களெஞசி)



படிக்கம்

**படித்தரம்** சம்பளம், கூலி; கோவில் பணியாளரின் சம் பளம், நித்தியக்கூலி; கோவி லுக்குத தினமும கொடுககும் பூசைக்குத் தேவையான பொருட்கள்.

**படிப்புரை** திண்ணை; வராந்தா, படுக்கும் இடம். (பார்க்க : ஒட்டுத் திண்ணை)

**படுக்காளி** அடாவடித்தனம் செய்பவன்; குறும்பு செய்யும் சிறுவன.

**படுக்காளித்தனம்** அடாவடித தனம்.

**படுக்கை** நாட்டார் தெயவத் திற்குச் செய்யப்படும் நேர்ச்சை பூசை, சிறப்பு வழிபாடு; சிறிய வழிபாடு.

**படுமோசம்** மிகவும மோசம்.

**படுவத்தடி** செழி நிறைந்த வயல்; சதுபபு நிலம்.

**படுவப்பத்து** சகதி, செழி நிறைந்த வயல் பகுதி

**படுவம்** பளளம், குழி; குண்டு; சகதி நிறைந்த குழி.

**படை** இரண்டு கைகளாலும் வாரி எடுக்கும் அளவுக்குள்ள நெறகதிாகள.

**பண்டம்** கொறிக்கும் பலகாரம்; தினபணடம், விஷயம்; பொருள்.

**பண்டு** முனபு; ஆதிகாலம; முந் திய காலம்.

**பண்டுவம்** வைத்தியம்

**பண்டுவன்** சிகிச்சை செய்பவன; வைத்தியன்.

**பணஏர்** பணத்திற்காக உழப்படும் கூலி ஏர்.

**பணியாரம்** எண்ணெய்ப் பல காரம; பெண் உறுபபு.

**பத்தயப்புரை** பத்தயம் இருக்கும் அறை. பார்க்க · பத்தயம்.

**பத்தயம்** நெற்களஞ்சியம், நெல் போடுவதற்குரிய பெரிய மரப பெட்டி.

**பத்தாயம்** பார்க்க : பததயம்.

**பத்தி** சாம்பிராணிப்பததி; வில லிசைக கலைக்குரிய குடம் எனற இசைக்கருவியின் வாயில அடிபபதறகுப் பயன் படும் கமுகம் பாளையிலான விசிறி போன்ற கருவி.



பத்தி

**பத்தியம்** நாடடு மருந்து சாப்பி டும்போது வைத்தியா கூறும உணவுக் கட்டுப்பாடு.

**பத்திரம்** கவனம; தாயித்து; கவனமாக.

**பத்து** வயல்.

**பத்துதல்** ஓட்டுதல, மாடடை ஓடடுதல்.

**பத்துந்தண்ணியும்** பழைய சாத மும், சாதத்து நீரும்

**பதக்கு** இரண்டு மரககால் அளவு.

**பதக்கு** முகத்தலளவு, இரணடு குறுணி.

**பதநீர்** பனை மரததிலிருநது கிடைக்கும் இனிய சாறு

**பதப்பரிசி** ஊறவைத்த பச்சரிசி யில் பழம் கருப்புககடடி சேர்த்துத் தயாரிக்கபபடும் பதார்த்தம்.

**பதம்** பககுவம்; நிதானம, மெது வாக; கெடாத தன்மை

**பதம் குலைதல்** முறைகெடல், பருவம் தவறுதல், நிலை குலை தல்; சீரகெடல.

**பதம் விடுதல்** வயல் விதைப்பின் பருவம கெடல்; பககுவம் கெடல்

**பதமாக** மெதுவாக; பக்குவம் அறிந்து.

**பதவல்** சண்டு; சாவி; குபபை; குழந்தைகள் அதிகம் உள்ள குடும்பம்.

**பதனமா** கவனமாக; பக்குவம, இடமறிநது.

**பதி** அய்யாவழிக் கோயில.

**பதிவாக** தினமும், எப்போதும

**பதிவுக் கச்சேரி** பதிவாளா அலு வலகம்

**பந்தடை** வில்லிசைக் கலை நிகழச்சிக்குரிய இசைக்கருவி யான குடம் கருவியை வைக்கப் பயன்படும் புரிமணை போன்ற பொருள்.

**பந்தம்** உறவு, சொந்தம்; தீப்பந்தம.

**பந்தம் ஒழிப்பித்தல்** மணமுறிவு செயதல்.

**பந்திச் சமுக்காளம்** பந்தியில் அல்லது தரையில் விரிக்கப் படும பெரிய ஜமுக்காளம்.

**பந்திப்பாய்** தரையில் அமாந்து சாபபிடுவதற்காகப பந்தி வரிசையில் விரிக்கபபடும கோரைப்பாய்

**பந்தீரடிப் பூசை** பகல 12 மணிககு உள்பட்ட நேரததில நடக்கும பூசை.

**பப்படம்** அப்பளம்.

**பப்பு** மீன் உலர்த்தும இடம.

**பம்பை** எணணெய் தேய்க்காத தலை முடியுடையவன; நையாண்டி மேளததுக்குரிய இசைககருவி. இரண்டு கொட டுகள் இருக்குமா.



பம்பை

**பம்மாத்து** போலியாக அன்பு காட்டல்; ஒன்றும தெரியாத வன் போல் நடித்தல்.

**பயல்** சிறுவன்

**பயினி** பார்கக : பதநீர்.

**பர்சீன் வலை** சுருங்குவதறகு வசதியான மீன்பிடி வலை.

**பராதி** புகார்.

**பரிசி கெடுதல்** சீரழிந்து போதல்

**பரிய வளப்பு வலை** சூரிய உதயத்திற்குப் பிறகு இறால மீனைப் பிடிக்க உதவும் வலை

**பரு** கட்டி; புண்; கொப்புளம்.

**பருக்கை** ஒரு சோறு.

**பருப்பு நீர்** இறபபுச் சடங்கின் இரவில் சிறுபயிறு சர்க்கரை கலந்து செய்யப்படும் பாயாசம்.

**பருமி** கட்டுமரத்தில் பாயைக் கட்டப் பயனபடும் மூங்கில் கம்பு.

**பருவம்** வயலில் விதைப்பதற் குரிய நேரம.

**பருவெட்டாக** மேமபோககாக

**பலவட்டறை** பல ஆணகளுடன் தொடர்பு உடையவள்.

**பலவட்டறைமூளி** பல ஆண் களுடன தொடர்புடைய மூளி; ஏச்சுச் சொல.

**பலவு** கட்டுமரததை நேராகச் செலுத்தப பயனபடும் பொருள்.

**பலவெஞ்சனம்** பலசரக்கு; மளிகைச சாமான்; கூலப் பொருள்.

**பவிசு** மதிப்பு, மரியாதை.

**பவுருசம்** கௌரவம், செருககு; தற்பெருமை; புதிதாக வநத வாழ்வு; தறபெருமை.

**பழங்கறி** முந்தின நாளில் உள்ள குழம்புமா கூட்டும்; முந்தின நாள் வைத்த அவியல, சாம் பாா, தோட்டல் ஆகியவற்றைச் சூடாக்கிய கலவை.

**பழஞ்சி** பழைய சாதம்.

**பழஞ்சிலை** பழைய கிழிந்த சேலை.

**பழராட்டு** ஒன்றுக்கும் உதவாத பொருள்; பழிப்பதற்குரிய சொல்.

**பழையது** பார்க்க : பழஞ்சி; போன பருவத்து நெல.

**பளங்குறுவா** ஒருவகை நெல்.

**பளுப்பு** மீன் கூட்டமாக வருதல்.

**பளுவன்** சாமர்த்தியக்காரன்; சாமர்த்தியமாக ஏமாறறுபவன்.

**பறட்டை** பாாகக : பம்பை.

**பறண்டுதல்** பிராண்டுதல

**பறத்தல்** அலைசசல்; நிலை தடு மாறிய செயல; அவசரம்

**பன்னரிவாள்** புல் கதிர் அறுகக உதவும அரிவாள், கூர் மழுங் கிய அரிவாள.

**பன்னாடை** பார்க்க : கோஞ் சாடடை.

**பன்னாயம்** கட்டுமரததைப் பாது காககப் பயன்படும ஓலையால் ஆன குடடையான கூரை; தொழில் தொடர்பான பொருட்களைப பாதுகாக்கு மிடம.

**பன்னீர் குப்பி** தங்கம் அல்லது வெள்ளியிலான பனனீர் பாட டில்.

**பனந்தூர்** பனைமரத்தின் அடிப் பகுதி

**பனம்பத்தை** பனைஓலை அலலது பனைநாரால் செய்யபபட்ட செருபபு

## பா

**பாக்கு கடிக்கும் நேரம்** சிறிது நேரம.

**பாச்சா** கரப்பான் பூச்சி; பய முறுததல்.

**பாச்சா பலிக்காது** காரியம நடக் காது.

**பாச்சாக் கயிறு** சாமியாடியைக கட்டிப் பிடிப்பதற்குப் போடப படும கயிறு.

**பாஞ்சது** அதிக மீன கிடைககும நிலை.

**பாஞ்சிப்பழம்** சீதாப்பழம்.

**பாட்டம்** குத்தகை.

**பாட்டப் பிரமாணம்** நிலததைக் குத்தகை கொடுததைப் பதிவு செய்யும் ஆவணம்.

**பாட்டா** தாத்தா.

**பாட்டுக்கு** சொந்தக் காரியத துக்கு, தனியாக.

**பாடு** மீன் செழிப்பு; நெல் செழிப்பு.

**பாடு சொல்லுதல்** செய்தி கூறு தல.

**பாடுபேசுதல்** உரையாடுதல.

**பாடை** வயதானவரின் பிணததைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செலவதற்கான ஒன்று. தேர் வடிவில் அமைந்த அமைப்பு.

**பாண்டசுத்தி** பார்க்க : சட்டி பானை தொடுதல்

**பாண்டம் பிடிச்சது** மிகப பழை யது.

**பாண்டுதல்** பாாக்க : பாந்துதல்

**பாணி** திமிலை எனற தோலிசைககருவி.

**பாதகத்தி** பாதகம செயகின்ற வள; பாதகம் செயயும பெண்; ஏசசு சொல

**பாதாளக்கரண்டி** ஆழமான கிணற்றில விழுநத வாளியை

எடுகக உதவும் நங்கூரம் போன்ற கொக்கி.



பாதாளக்கரண்டி

**பாதாளத் தொறண்டி** பார்கக : பாதாளககரணடி

**பாந்து** வயல் வரப்பில் தரையில் உளள சிறிய பொந்து, சுவரின் ஓட்டை; பள்ளம்; தேஙகாய் நார் ஊற வைக்கும் நீளவாககி லான குட்டை.

**பாந்துதல்** நகத்தால் கீறுதல.

**பாம்படம்** காதணி; காதின் துளையை விரித்துப் போடப் படும் கனமான நகை.

**பாய்ச்சு வலை** அகலம் கூடிய மீன்பிடி வலை

**பாரக்கோல்** நெம்புகோல்.

**பால்காரப்பூச்சி** கர்ப்பிணி களுக்கும் குழந்தை பெற்ற பெண்களுககும் கொடுக்கப படும் மீன் வகை

**பால்சுறா** பார்க்க . பால்காரப் பூச்சி.

**பாலடைத்தல்** நெல சூல கொள ளும் நிலை.

**பாவ்லா** பாவனை, போலியான தோற்றம் காட்டுதல்; சிலம பாட்டத்தின் முதல் கால் வரிசை.

**பாவுகல்** வரிக்கல; நீணட கல்.

**பாளை** தென்னம்பூ; கமுகம்பூ; மனித ஈரல்.

**பாறிப்போதல்** இளைததுப போதல்.

**பானக்கம்** (பானைககம்) கருப்புக் கடடி, புளி, சுககு, நார்த்தை இலை கலந்த குளிரபானம்.

## பி

**பிக்கல் பிடுங்கல்** (அல்லற சில்லற;) தொந்தரவு

**பிச்சு உதறுதல்** மிகத்திறமையாக வேகமாகச் சரியாகச செய்தல், பாராட்டுச் சொல்.

**பிச்சுப்பிடுங்கல்** தொந்தரவு செய்தல.

**பிசகுதல்** தவறுதல்; இருந்த இடத் திலிருந்து மாறுதல்.

**பிசானம்** பாாகக பசானம்.

**பிசிங்கி** கஞ்சன்.

**பிசினி** கஞ்சன்.

**பிசுக்கன்** கஞசன்.

**பிசுக்கு** அழுககு

**பிசுக்குதல்** பிசைத்தல்.

**பிஞ்சுபோதல்** பெயாந்து போதல்

**பிட்டுத் தோண்டி** பிட்டு அவிக்கப் பயன்படும் வாய் குறுகிய சிறிய செம்பு அலலது பித்தளைத தோண்டி.

**பிட்டு வைத்தல்** பெயர்த்து வைததல

**பிடாகை** நாஞ்சில நாடடின் பழைய பகுப்பு (நாஞ்சில் நாடு பன்னிரெண்டு பிடாகை களைக் கொண்டது)

**பிடிமானம்** ஆதாரத்திறகுரிய சான்று; ஆதாரம்.

**பிணையல்** (புணையல், பொணையல்) நெற்கதிரைப போரடிக்கும் நான்கு மாடு களின் தொகுதி; உடலுறவு.

**பிணையல் மாடு** போரடிககும மாடு.

**பித்தாநாள்** மறுநாள்; அடுத்த நாள்.

**பித்தான்** பட்டன்.

**பிப்பாடை** மாட்டின் முதுகில் இருக்கும சுழி.

**பிரதமன்** பாயாச வகை.

**பிரமாணம்** ஆதாரம்; ஆவணம்.

**பிரயோசனம்** உபயோகம.

**பிராது** குற்றம் சாட்டுதல்; வக்கீல் நோட்டீஸ்.

**பிராந்து** கருடன், மனநிலை சரியில்லாதவன்; பைத்தியம்; பிறரிடமிருந்து வேறுபட்டவர்.

**பிராயம்** வயது

**பிரி** புத்தி பேதலித்தவன்.

**பிரித்தல்** வசூலித்தல்.

**பிரிப்பது** பணம வசூல செயவது.

**பிரியணை** பானையைத் தரை யில் அசையாமல் வைக்க உத வும் பொருள்.

**பிரியைக் கட்டி இழுத்தல்** வைக் கோல பிரியால கொடும் பாவியைக் கட்டி இழுப்பது போல், குற்றம் செய்தவரைக் கட்டி இழுப்பதாகக் கூறல.



பிரியணை

**பிரிவு** வசூல.

**பிலாக்கணம்** அழுகை கலந்த ஒப்பாரி.

**பிலே** பயல், பையன்.

**பிள்ளை அடுப்பு** பார்க்க : கொடி அடுப்பு.

**பிள்ளை மண்** விறகு அடுப்பின் அருகில் உளள குட்டியான மண் மதில்

**பிள்ளைத்தாச்சி** கைக்குழந்தை உடையவள

**பிள்ளைமாத்து** திருமணமான அடுத்த நாள காலையில் மண மக்கள் அமர்ந்திருக்கப் பொம் மையை வைதது செய்யப்படும் சடங்கு.

**பிள்ளையாண்டன்** பையன்.

**பிள்ளையார் தாலி** வேளாளரின் தாலியில நடுவில் உள்ள பிளளையார் வடிவம்.

**பிள்ளையார் பந்து** கல்லின் மேல் பந்தை எறிந்து விளை யாடும் ஒருவகை நாட்டார் விளையாட்டு

பிளாப்பெட்டி பார்க்க : அரி வட்டி

பிளாவு முறம்.

பிறகால் பினனர், பிறகு.

பிறவிக்குணம் இயல்பான குணம்

பின்னேரு வயல உழவில் கடைசியாக வரும் ஏர்.

## பீ

பீ உருட்டும் வண்டு ஒருவகை பொன்வண்டு.

பீச்சக்கால் இடது கால்.

பீச்சக்கை இடது கை.

பீச்சல் வயிற்றுப் போக்கு; கழிச்சல்.

பீச்சாங்கை இடதுகை

பீச்சாங்கொள்ளி பயந்த சுபாவம் உடையவன.

பீசாத்தி சிறிய கத்தி.

பீத்தண்ணி வயிறறுப போக்கு, மலம் தணணீராகப் போதல்.

பீத்துணி குழந்தை மலம் பெய்த துணி.

பீத்துதல் வீண்பெருமை பேசுதல்.

பீத்தை கிழிநத; ஓட்டையான.

பீத்தை பெருமை தம்பட்டம் அடிததல; தற்பெருமை பேசல; தகுதியில்லாதவற்றைப் பெரிது படுத்தல்

பீநாறி ஒரு செடி.

## பு

புக்கன் சம்பா ஒரு வகை நெல்.

புகைச்சல் மனஸதாபம; இரணடு பேருக்குள்ள மன வேறுபாடு.

புகையறை சமையலறையில் உள்ள நூலாமபடை.

புங்கு ஒருவகை மரம்.

புங்கு புங்கென்று கோபத்தைக் குறிககும அடுககுத் தொடர்.

புட்டான் தும்பி; ஒருவகைப் பட்டாம் பூசசி.

புடம் போடுதல் சுததபபடுத்தல்; மறுபரிசீலனை செய்தல்.

புடவடை திருமணம; புடவை கொடுதது மணம் செய்தல்.

புடுக்கு ஆண உறுபபு.

புடை பொந்து; நண்டு வளை.

புண்ணாக்கு பிண்ணாககு.

புண்ணியானம் தீாத்தம.

புண்ணியானம் தெளித்தல் கோவில் பூசாரி கருப்பக்கிரகத்தில உளள புனித நீரைப் பக்தர்களை மேல தெளிததல்.

புண்ணியாளன் புணணியவான்; கிண்டலாகச சொல்வதற்குப் பயன்படுவது

புத்தரிசி சாப்பிடல் வயல் அறுபபுக்குப் பின் புதிய அரிசியைச சமைககும் சடங்கு.

புத்திர பாக்கியம் மகன

புத்திமுட்டு பணம இல்லாத நிலை.

**புத்தியறிதல்** பெண பருவ மடைதல்

**புதுநிறம்** மாநிறம்.

**புதுமாடு குளுப்பாட்டல்** எதை யும ஆரம்பத்தில் சிரத்தை யாகச் செய்துவிட்டு பின் அதில் சிரத்தை குறைதல.

**புரிச்சம்** (பொரிசசம்) சோதிடம.

**புருத்திச் சக்கா** அனனாசிப்பழம.

**புரை** அறை; கண் பூழை நோய்.

**புரையிடம்** காலிமனை.

**புலப்பம்** தனியாக இருந்து பேசுதல்.

**புலமாடன்** நாட்டார் ஆண தெய்வம்; மாடன் வகை.

**புழுக்கச்சி** சாதிப் பிரஷ்டம செய்யப்பட்டு ஊரின் புறத்தே குடியிருக்கும பெண வேலைக காரி.

**புழுக்கம்** வெபபமாக இருததல்; காறறில்லாமல இருத்தல்; பொறாமை

**புழுங்கல்** அவித்த நெல்.

**புழுதி புரட்டி** ஒருவகை நெல்.

**புளிக்கறி** புளியும தேங்காயும அரைததுத் தயாரிதத குழமபு.

**புளிசேரி** மோர்க்குழம்பு.

**புளிசேரி வைத்தல்** சொததை அழித்தல.

**புளிமொளம்** மீன குழம்பு.

**புளுக்க வேலை** சமையல் வேலை

**புளுக்கை** எலியின் மலம; ஆட் டின மலம் (எலிப புளுக்கை, ஆட்டாம புளுக்கை) கீழ்த் தரமான.

**புளுங்கல்** அவித்த நெல.

**புளுபுளுன்னு** அர்த்தமும் இனி மையும இல்லாமல் தொடர்ந்து பேசுபவரைக் குறிப்பதற்குரிய சொல்.

**புறத்தாலே** (பொறத்தாலே) பின்புறம்

**புறவெட்டு** மரத்தை அறுத்தபின் வரும வெட்டுத்துண்டு.

**புறுபுறுத்தல்** முணுமுணுத்தல.

**புனுகுச்சம்பா** ஒருவகைச் சம்பா நெல

**புஷ்பவதி ஆதல்** பார்கக: சமை தல.

## பூ

**பூச்சி காட்டல்** போலியாகப் பயமுறுத்தல்.

**பூச்சை** பூனை

**பூசனம் பூத்தல்** உணவுப் பொரு ளில் காளான் படருதல்; கெட்டுப் போதல்.

**பூசி மெழுகல்** ஒருவரின் குற்றம் அலலது பேச்சைச சாதக மாக்கிப் பேசல

**பூசை வைப்பு** சரஸவதி பூஜை.

**பூஞ்சம்பா** ஒருவகைச் சமபா நெல்

**பூஞ்சு** பலாப்பழத்தில ஒட்டி யிருககும் நார்ப்பகுதி.

**பூட்டாங் கயிறு** ஏரை மாட்டுடன் பூட்டும் கயிறு.

**பூட்டுபூட்டா** அடுக்கடுக்காக

**பூடம்** நாட்டார் தெய்வததிற்குரிய பொதுவான வடிவம



பூடம்

**பூண் உலக்கை** இரும்புப் பூண் பிடிககப்பட்ட உலக்கை (பார்க்க : குப்பிப்பூண்).

**பூத்துப் போதல்** உணவு, ஊறுகாய கெட்டுப் போதல; பார்த்து அலுத்துப போதல்.

**பூதம்** பூரான.

**பூப்படைப்பு** நாடடார் தெயவத்திறகுச செயயப்படும் வழிபாட்டில் படைககப்படும் மலர் குவியல்.

**பூப்பொருத்தம்** மணமககளுககுக சாதகப பொருததம் பார்க்க முடியாத நிலையில சிவப்பு, வெள்ளைப் பூககளைத் தனித் தனியாகப் பொதிநது வைதது குழந்தையைக் கொணடு எடுக்க வைதது முடிவு செய்வது.

**பூம்பாளை** ஒருவகை நெல்

**பூராவும்** முழுவதும.

**பூராப்பு** பார்க்க : கூராப்பு

**பூராவு** மகிழ்ச்சி, சந்தோஷம

**பூரான் சுழி** மாட்டுக்கு வரும் நோய்.

**பூவிழுதல்** கண்ணின் கருவிழியில் வெள்ளை விழுதல.

**பூளு** நீளமான ஆணகுறி.

**பூனாம் பூனாம்** மெல்ல மெல்ல; மிகக் கவனமாக; பததிரமாக

## பெ

**பெகளம்** தகராறு; கலவரம்; ஆர்ப்பாட்டம்; சண்டை.

**பெண் சிரட்டை** தேங்காயின கண் உள்ள பாதி மூடி,

**பெண்ணடி** பெணவாரிசு.

**பெண்ணம்பழம்** பனம்பழம்

**பெண்ணையன்** மனைவி சொல்லைக் கேட்பவன்.

**பெத்து** விவரமிலலாதவன்; அடுத்தவரின் பேச்சைப் புரிந்து கொள்ள முடியாதவன்; அறிவிலலாதவன்.

**பெரட்டல்** வாநதி.

**பெரட்டன்** ஏமாத்துக்காரன.

**பெரட்டு** ஏமாத்துவேலை.

**பெரட்டுதல்** வாந்தி வருதல்.

**பெரியமனுஷியாதல்** பருவம அடைதல் (பாாகக : சமைதல்).

**பெருவாதி** அதிகம் மீன படல.

**பெரை** அறை.

## பே

**பேடித்தூறி** பயப்படுபவன; பயததால மலம் பெயபவன்

**பேத்தையன்** விவரம் இல்லாத முட்டாள்.

**பேப்பட்டி** வெறிநாய்.

**பேமுட்டை** காளான.

**பேய்ப்பந்து** துணிப்பந்தை ஒருவர் மேல் ஒருவர் விட்டெறிநது விளையாடும சிறுவர் விளையாட்டு.

**பேர்க்கூலி** ஒருவரின் பெயரை அவரது பேரன அலலது பேததிக்கு விடுவதற்குக் கொடுக்கும் சொத்து அல்லது பணம்.

**பேஷ்கார்** மாவட்ட உயர் அதிகாரி; திருவிதாஙகூரில் திவானுககு அடுத்த நிலையில் இருப்பவர்

**பேஷ்கார் ஆக்குதல்** ஒருவரின் தகுதியை மிகைபபடுத்திக் கூறல.

## பை

**பைதா** வண்டிச் சக்கரம; பைசா.

**பைய** மெதுவாக

**பைவலை** ஆற்று முகத்துவாரததில் மீன் பிடிக்கப் பயன்படும வலை.

## பொ

**பொக்கணம்** சிறிய மூட்டை, பார்சல்; பொதியல்.

**பொக்களம்** கொப்புளம.

**பொக்கன்** பெரியம்மை.

**பொக்கு** உள்ளீடு இலலாத தானியம; வலு இலலாத உடம்பு

**பொங்கப்பெரை** சமையலறை.

**பொசறு** புயல்.

**பொசுக்குன்னு** விரைவாக.

**பொசுங்குதல்** லேசான மழை தூவுதல

**பொட்டச்சி** பெண; பழிககும் சமயத்தில அலலது குறறம கூறும் சமயத்தில கூறும் சொல்; பெண்ணைப் பழிககுமபோது பயனபடுததும் சொல்.

**பொட்டு அறல்லே** உழவு சாலில் சிறு துண்டு உழபபடவிலலை.

**பொட்டுன்னு** ஒரு நிமிடத்தில, மிகக் குறுகிய நேரத்தில்.

**பொட்டை** பெண்; குருடு.

**பொடக்கள** புழக்கடை (பொடக்காள)

**பொடதி** பிடரி.

**பொடவு** பொந்து; புடை.

**பொடி அடுப்பு** மரபபொடி அடுப்பு.

**பொடி நடை** மெதுவான நடை

**பொடி விதை** நிலத்தைக் காயப் போட்டு உழுது விதைக்கும் விதை.

**பொடியில் பரவுதல்** காய்நத நிலத்தில் விதைத்தல்.

**பொடியுழவு** காயந்த வயலில் உழுதல.

**பொடுக்கு** தலைபபேன்.

**பொத்தச்சி** உடல பருத்த பெண்.

**பொத்திபொத்தி** மிகக் கவனமாக; அரவணைப்புடன்.

**பொத்துவரத்து** ரகசிய உறவு; கணக்கில வராத வருமானம

**பொத்தை** சிறு குனறு.

**பொதப்பு** போாவை, நாசி; மூக்கு.

**பொதிமாடு** பொதி சுமககும மாடு.

**பொதியெருமை** பொதிகொணடு செலலும் எருமை

**பொந்தன்** குணடானவள்.

**பொந்து** எலிவளை.

**பொம்பள மச்சான்** பெணகளுட னேயே இருப்பவன.

**பொரிச்சம் பார்த்தல்** ஜாதக மின்றிப பரலகளை உருட்டிப் பார்த்துக் கூறல்

**பொரிஞ்சு தள்ளுதல்** வாய் துடுக் காக தொடர்ந்து பேசுதல.

**பொருக்காடிற்று** புண உலர்ந்தது.

**பொருத்து** நெற்றி.

**பொலி** நெறபொலி; நெல் குருத்து வெளிவரும நிலை; தானியக குவியல்.

**பொலி வீசுதல்** போரடிதத நெல்லை முறம் கொண்டு வீசி சுததப்படுத்துதல.

**பொலிக்கால்** ஆடுமாடுகளின் புணர்ச்சி.

**பொலுப்பம்** நிறைவு.

**பொழி** கடலும் காயலும சேரும் பகுதி.

**பொழித்தட்டுப் பலகை** வயல மண்ணைச் சமமாக ஆககும பலகை

**பொழுது** சூரியன; நேரம்.

**பொழுது அடைய** சூரியன் அஸதமிக்க.

**பொளித்தல்** உடைத்தல

**பொற வெட்டு** மரம் அறுத்த பின் கிடைக்கும் ஒழுங்கற்ற பலகை

**பொறத்த** பினபுறம்

**பொறம்போக்கு நிலம்** அரசு நிலம

**பொறவாசல்** பின்வாசல.

**பொறவு** பினனர்.

**பொன்னாசி** மூக்கின் உள்பகுதி

**பொன்னுத்தோணி** பாாக்க வள்ளம்.

**பொன கச்சல்** இருமல், சணடை மனஸ்தாபம், மாறுபாடு.

**பொனகயான்** நெறகதிருககு வரும் நோய. (இநநோய் வந் தால பயிர் சாம்பல் நிறத்தில இருககும்.)

## போ

**போக்கத்தவன்** சொதது இல்லா தவன்

**போக்கத்து** வேறு வழியில்லாமல்.

**போக்கழிஞ்சு** நிலைதடுமாறி, வேறுவழி இலலாமல்.

**போக்கறுவான்** போக்கிடமில் லாதவன்

**போக்காளன்** இளமையில் இறந்தவன்.

**போக்கு** வழிமுறை

**போக்கு வரவு** பட்டாமாறுகை.

**போக்குவெயில்** மாலை 4 மணி முதல் 6 வரையுள்ள வெயில.

**போச்சுல** போகும்போது, இறக்கும்போது.

**போஞ்சி** எலுமிச்சம் பழச்சாறு.

**போட்டி** வேதக்கதைப் பாடல்; பழைய ஏறபாடடுக் கதைகளை ராகததுடன பாடும் நாட்டார் கலை

**போடு** மரத்தின் நடுவில் விழும் பொந்து; வயல் வரபபில நண்டு நுழைந்து ஏறபடுததும் பொநது; ஒரு வயலிலிருந்து இன்னொரு வயலுக்கு உரம் கலந்த நீர் செல்வதற்குச் செயற்கையாக உருவாககப்படும் திருட்டுத்தனமான வளை, ஊளளீடு இல்லாத தேங்காய்.

**போணி** செம்பு அலலது பித்தளையால் ஆன பாததிரம.

**போத்தி** அர்ச்சகர்; நாவிதர் உயிர் சாதியினரை அழைப்பதறகுரிய சொல்; தாததா.

**போத்து** அறிவில்லாதவன்; பார்க்க : கோம்பை.

**போர்** புளளி (மாடுகளுடன தொடர்புடைய சொல).

**போல்** மாட்டுவண்டியின் உறுப்பு.

**போறு** தடி; சட்டம.

## ம

**மக்கள் தாயம்** பாரக்க மககள வழி

**மக்கள் வழி** தந்தையின் சொதது மகனுக்கு வரும முறை கொண்ட வேளாள சாதியினர்.

**மக்களே** மகனே, மகளே; குழநதாய் விளிசசொல்.

**மகழிப்பருவம்** சேற்றுக்காலாக உழுது சாகுபடிக்குத் தகுதியான நிலை.

**மகிழி** சேறு

**மகுடித்தல்** கவிழுதல்.

**மகுடம்** தப்பட்டை; கணியான் ஆட்டததிற்குரிய தோலிசைக கருவி; வட்ட வடிவிலான ஒரு முகக கருவி.

**மங்களா** வரவேற்பு அறை; பெரிய வீடு; பங்களா.

**மச்சம்** மறு; மீன்.

**மச்சம்பி** அத்தான; அக்காளின் கணவன்.

**மசணை** சோம்பேறி

**மசிக்குப்பி** மைக்கூடு.

**மசிதல்** மயங்குதல்; வயப்படுதல.

**மசுக்குட்டி** ஒரு வகை புழு (முருங்கை, பூவரசு போன்ற மரங்களில் ஒட்டி இருக்கும். இதன முடி உடம்பில் பட்டால் ஊரல் ஏற்படும).

**மஞ்சக்கோழி** கடல் மீன் வகை.

**மஞ்சணாத்தி** ஒருவகை மரம.

**மஞ்சணை** நாட்டார் தெய்வங்களின் உருவததின மேல் பூசப்படும சிவபபு நிறமுடைய மஞ்சள, சுண்ணாம்பு எண்ணெய கலந்த மணமான சாந்து.

**மஞ்சத்தோறு** மஞசள் கிழஙகு; தாலி.

**மஞ்சாடி** மஞ்சாடி மரத்தில உள்ள சிவநத நிறமுடைய காய; தாயம் (பலலாங்குழி) என்னும் நாட்டார் விளையாட்டில் பயன்படுததப்படுவது; தங்கம நிறுப்பதறகுரிய ஒருவகை அளவை.

**மஞ்சுவால்** மாட்டின வால் வகைகளில ஒன்று.

**மட்டி** வாசனை உடைய ஒரு வகை வாழைப்பழம்.

**மட்டுப்பா** மொட்டை மாடி.

**மடச்சாம்பிராணி** மடத்தன முடைய குழநதையை விளை யாட்டாகப் பழிக்கும் சொல.

**மடல்** தென்னை ஓலை.

**மடவலை** தாழ்வான கடல்பகுதி யில் போடபபடும் மீன்வலை

**மடி** கட்டுமரம்; மீன்வலை.

**மடிக்காமல்** சோம்பலின்றி.

**மடிச்சீலை** மடியில கட்டியிருக கும சுருக்குப்பை; மடியில் ரக சியமாகக் கட்டி வைத்திருக்கும் துணிபபை (பார்கக : சுருக்குப் பை).

**மடு** பசுவின் மடு

**மடுதாருதல்** மாடு மகப்பேற றிற்குத் தயாராதல.

**மடுப்பெட்டி** வெற்றிலை வைத திருககும் பெட்டி.

**மடை** துவாரம.

**மடை திறப்பான்** ஊர் மடையைத திறக்கும வேலை யாள

**மடை திறப்புக் கதிர்** அறுவடைக் காலத்தில் மடை திறப்பா னுக்குக் கொடுககப்படும கூலி நெற்கதிர்.

**மண்டக்கனம்** தலைவலி.

**மண்டி** எஞ்சிய திரவப்பொருள்.

**மண்டையடி** தலைவலி

**மண்ணைக் கரையேறுதல்** காலின கெண்டைச் சதை மேலேறுகை; வயல்கால மண்ணை வெளியே எடுத்துக் கரையில் போடுதல்.

**மண்வெட்டிப்படம்** மண் வெட்டியில் உள்ள பரந்த இரும்பாலான பகுதி.




மண்வெட்டிப்படம்

**மணல்கால்** மணல் மிகுந்த வயல் பகுதி

**மணல்தேரி** மணலகுன்று

**மணவை** மீன் வகை.

**மணிக்கொச்சம்** பருமன் குறைந்த கயிறு.

**மத்தவன்** மேறபடி ஆள.

**மத்தியானம்** உசசிபபொழுது

**மதினி** அண்ணி (பாாக்க மயினி)

**மதுக்குடம்** காளியூட்டு விழாவில் மதுவைப் பொங்கச் செயய உதவும் குடம்.

**மதுப்பொங்கல்** காளிகோவில் விழாவில் நடக்கும் சடஙகு.

**மந்துக்கால்** யானைககால் வியாதி.

**மப்பு** ஆணவம்; திமிா.

**மப்பும் மந்தாரமும்** கருமேகம் சூழ்ந்த நிலை; மழைக்கு அறிகுறியாக மேகம் சூழதல்.

**மம்மல்** அதிகாலை நேரம்.

**மயக்கிமாலை** தந்திரக்காரி.

**மயம்** வசதி

**மயமா** நிறைய.

**மயானம்** சுடுகாடு.

**மயிராண்டி** ஒருவனைப் பழிப்பதற்குரிய கேவலமான சொல்.

**மயிலை** மாட்டின் நிறத்தைக குறிககும சொல்.

**மயினி** அணணன மனைவி, அண்ணி.

**மா்மம்** பாாகக · வா்மம்.

**மரக்கால்** நெல அளககப பயனபடும முகத்தலளவு கருவி

**மரண ஓலை** மரணத்திற்குரிய நாள.

**மரம்** நிலததைச் சமப்படுத்த உதவும் தடி.



**மரக்கால்**

**மரம்** மீன் பிடிக்கப் பயனபடும் கலன, முறாககு, இலலை போன்ற மரங்களால் செயயப் படுவது.

**மரவை** மரத்தால் செயயபபட்ட பாத்திரம்; உப்பு வைபபதற் குரிய பாததிரம்

**மருத்துவி** மருத்துவச்சி; மகப் பேறு பாா்பபவள்

**மருந்து** சாராயம்.

**மருந்துப்புரை** வெடிமருந்து வைக்கப்பட்ட அறை.

**மருந்துப் புரை இசக்கி** வெடி மருந்து அறையின் காவல் தெயவம்.

**மருமக்கள் தாயம்** பாாக்க : மருமக்கள் வழி

**மருமக்கள் வழி** தந்தையின் சொதது அவரது சகோதரியின் மகனுககு உரிமை உடையது என்னும் வழக்காறு உடைய வழி; வேளாளரின் ஒரு பிரிவினா.

**மருவீடு** மாப்பிளளை வீட்டிற்கு மணமககள செலலும சடஙகு.

**மல்மல்** ஒரு வகை துகில் (மல் லீஸ் வேட்டி)

**மல்லிகைச் சம்பா** சமபா வகையிலான ஒரு வகை நெல்.

**மலக்கறி** காய்கறி (மரக்கறி).

**மலக்காட்டுக்குளம்** மலை அடி வாரத்தில அமைக்கபபட்ட குளம்.

**மலத்துதல்** நிமிர்த்தி வைத்தல்

**மலந்து** மலலாந்து.

**மலம்பாதை** மலை வழி.

**மலம்பிஞ்சு** துணடுக்கல்.

**மலரணை** ஒற்றி.

**மலையாமை** மலையில் காணப் படும் ஆமை வகை.

**மலையாழ்மை** மலையாள லிபி யில மலையாளமும் தமிழும் கலந்து எழுதப்படும் மொழி.

**மலையிஞ்சி** இஞ்சி வகை.

**மவுசு** மதிப்பு; மரியாதை.

**மழுப்புவது** ஒரு விஷயத்தை சாமர்ததியமாக மறைப்பது.

**மற்றநாள்** (நாளைக் கழிதது) நாளை நின்று மறு நாள்.

**மறகழலுதல்** மனநிலை சரியில் லாமல் ஆதல்.

**மறி** வெள்ளாட்டின் குட்டி.

**மறித்தல்** வழிமறித்தல்.

**மறுக** பிறகு.

**மறுநீர்** மீண்டும் மீண்டும் விதையை நனைக்க உதவும் நீர்.

**மறுநீர் காட்டுதல்** நெல் விதையைச் சாக்கில் கட்டி நனைத்தல.

**மறுப்பு** இரண்டாம் உழவு.

**மறுப்பு உழவு** மறு உழவு; முன் உழுத சாலுக்கு குறுக்காக உழு வது

**மறுபடி** பதில்; விடை.

**மனிசலாதல்** புரிதல்.

**மனையருவா** மீன் அறுக்கும் கத்தி

**மனோலமாலை** ஒருவகை தங்க நகை.

**மனோலம்** இனிப்பான முறுக்கு.

## மா

**மாங்கல்யக்காடி** திருமணம் முடிந்த அடுத்த நாளில், முந் திய நாளின சாதம், பச்சரிசி, முளைப்பாரி தளிர் ஆகிய வற்றைக் கலந்து செய்யபபடும் காடி

**மாச்சப்படுதல்** சோம்பல கொள் ளுதல்.

**மாச்சல்** கூச்சம்; சோம்பேறித் தனம்; இயலாமை.

**மாசட்டி** அரிசி மாவு வறுக்கப் பயன்படும மண்சட்டி.

**மாசப்பிறப்பு** மாத முதல் நாள்.

**மாசமா இருத்தல்** கர்ப்பமா யிருத்தல்.

**மாசியடித்தல்** பசு உடலுறவு கொள்ளுவதற்குரிய காலம்.

**மாட்டி** காதணி.

**மாட்டு** வலைகளை உரிய முறை யில சரி செய்தல்.

**மாட்டுத்தொட்டி** மாடுகளுக்குக கழுநீர் வைகக உதவும மண ணால் ஆன தொட்டி.

**மாடம்** குடிசை

**மாடன்** சுடலை மாடன் என்ற நாட்டார் ஆண் தெய்வம, வேறு சில ஆண் தெய்வங் களுககுப் பின் ஒட்டாகக் கூறப படுவது (பனறி மாடன, கரடி மாடன்).



மாடன்

**மாடாக்குழி** (மாடககுழி) விளககு பொருததி வைக்கப்படும மாடம, சுவரில உள்ளடங்கிய புரை.

**மாத்து** சலவைத தொழிலாளி யிடமிருந்து வேறு ஒருவனின் உடையைத் தற்காலிகமாக அணிவதறகுப் பணம் கொடுத் துப் பெறுதல்.

**மாத்தை** சலவைத் தொழிலாளி.

**மாந்தலை** பாயசம் முதலிய உணவு வகைகளில் சுவை பெருகுவதற்காக இடப்படும் காய வைதத மாமபழச சாறு

**மாந்தையன்** அறிவறறவன; கொத்தன; தசசன்.

**மாந்தோணி** பார்க்க : வள்ளம

**மாப்பு** மனனிப்பு.

**மாமாலம்** பாசாங்கு.

**மாயமயக்கி** மயககம செய்பவள.

**மாயி** நாட்டார் பெண் தெயவம.

**மாரடித்தல்** மார்பில் அடித்து ஒப்பாரி பாடுதல.

**மாரடிப்பு** இறந்தவருக்காக மார் பில் அடித்து அழுதல்.

**மாராயப்பணம்** நிலததுககு உரிய வன பாட்டககாரனிடமிருந்து பாட்ட உறுதியின் பொருட்டு முற்பட வாங்கும் பணம்.

**மாராயப்பாட்டம்** மாராயப பணம் வாங்கும் பாட்ட வகை.

**மாராயம்** முன்பணம்; குத்தகை எடுப்பவர் நிலஉடமையாள ருக்குக் கொடுக்கும பாதுகாப்பு பணம.

**மாராயன்** உவச்சரைப் போன்ற நடுவகை சாதி.

**மாலை பூத்தது** திருமண காலம் நெருங்கிவிட்டது.

**மாலைப்பதனீர்** மாலைநேரத்தில் பனையிலிருந்து இறக்கப்பட்ட பதனீர்

**மாவலிவாணன்** பெருந்தீனிக் காரன்; அகட விகடம் செய்து ஏமாற்றுபவன.

**மாற்றான்** மாறறு மருநது

**மாற்றேர் விடுதல்** தனக்கு ஒரு வர் நிலத்தில் உழுது கொடுத்த தறகுப் பிரதியாக அவனி லததை தன் ஏர் விட்டு உழுதல்.

**மாறச்சன்** சாஸ்தா என்னும தெய்வம; மார்த்தாணட வாமா என்னும திருவிதாங்கூர் அரசர் தனககு உதவியவர்களுககு கொடுத்த விருதுப பெயா (மாறு + அச்சன் = தநதை போன்றவன்).

**மாறி** எனவே; மறுபடியும; ஆகவே, ஆகையால, அதனால்.

**மானாமருகுதல்** மிகவும் கெஞ்சுதல்.

## மி

**மிச்சம்** எஞ்சியது; மீதி.

**மிச்ச சொச்சம்** மீதி.

**மிச்சவாரம்** பயிரிடும செலவு தீாவை முதலியவை கழித்து வயலிலிருந்து கிடைக்கும் வருமானம்

**மிஞ்சி** கால் விரலில் அணியும வெள்ளி அணிகலன்.

**மிதப்பு வலை** முந்திய நாள் கடலில் வலையைப் போடடு விட்டு அடுததநாள் அதில் அகப்படும் மீனைப் பிடிக்க பயன்படும வலை.

**மிதி கொழை** வயலில் மரத்தின் இலை தழைகளைத் தறிக்காமல் மிதித்து வைப்பது.

**மிதி பயிறு** வயலில் கதிர் அறுக்கும் முன்பு விதைக்கப் பட்டு அறுவடையான பின்பு விளை முதிரும் பயிறு வகை.

**மிளகுச் சம்பா** மிளகு போன்ற வடிவமுடைய உயர்ந்த சமபா நெல

**மினிட்டாம் பூச்சி** மின்மினிப் பூச்சி.

## மீ

**மீசாங் குறுவா** ஒருவகை நெல்.

**மீட்டு முறி** ஒததி உரிமை நீங்கியதைக் குறிக்கும் பத்திரம்.

**மீத்து வைத்தல்** மிச்சப்படுத்தல்.

**மீன் கூடு** மீன்பிடிககும் கருவி.

**மீன்பாடு** மீன் கிடைக்கும் அளவு.

## மு

**முக்கு** திருமபும் முனை, மூலை.

**முகத்தை மாறவைத்தல்** ஒருவருடன் மாறுபாடு கொள்ளுதல.

**முட்ட** நிறைய, முழுதும்.

**முட்டி** காப்பிணிகளுககும், குழநதை பெறறவர்களுககும் கொடுக்கப்படும மீன்.

**முடிவான்** ஏச்சுச்சொல்; முடிநது போகினறவன்; பழிப்பதற்குரிய சொல்.

**முடுக்கு** சிறிய சந்து; குறுகலான பாதை.

**முடுகு** கையில் அணியும் தஙக ஆபரணம்.

**முடை** தடங்கல்; பணததட்டுபபாடு; பசுமாடு ஈனும காலத்தில் பெண்குறி பகுதியிலிருந்து வீசும் வாடை.

**முடைதல்** பினனுதல்; ஓலை பின்னுதல்

**முண்டக்கண்ணன்** திருட்டு முழி முழிப்பவன்.

**முண்டு** வேட்டி; மரத்தடியில் உள்ள திட்டுப பகுதி; நிரப் பில்லாத பகுதி.

**முண்டு கொடுத்தல்** மறுமணம செய்தல்; ஆண் அலலது பெண ணின் இரண்டாம் திருமணம்.

**முத்தேதி** மாத இறுதி நாள்.

**முதல் படி** ஊர் பொருளாளர்.

**முதலெடுப்பு** பயன் அடைதல்.

**முந்தி** மடி; முனனர்; முன்னால்; முந்தானை

**முந்திரிக்கொத்து** சர்க்கரை சிறு பயிறு மாவு சேர்நத தின்பண டம்.

**முழக்கோல்** கொத்தனார் தரையைச் சமமாக்கப் பயன் படுத்தும் மரப்பலகை.

**முழுகாமலிருத்தல்** கர்ப்பமா யிருத்தல்.

**முழுமாடு** தடியன.

**முளை கட்டுதல்** நெல்விதையைச் சாக்கில் கட்டி நனைத்தல்.

**முளைப்பாரி கரைத்தல்** திரு மணச் சடங்கிற்குத தயாரித்த முளைப்பாரியைத் திருமணம் முடிந்த ஏழாம் நாள் ஆற்றில் கரைத்தல்.

**முறி** அறை; ஓலைப்பிரமாணம்; தேங்காயின பாதிப் பகுதி

**முறிக்கதவு** திறந்து விடும்படி அமைந்த கதவு.

**முறிப்பெட்டி** ஓலைபபிரமாணங் களைக் காப்பாற்றி வைப்பதற் குரிய பெட்டி.

**முறைத்தல்** கோபததுடன் கூடிய பார்வை; வம்புக்குச் செல்லு தல.

**முறையாம்பிள்ளை** நாஞ்சில் நாட்டு வேளாளா கிராமங களில ஊாக் காரியங்களைக் கவனிககும் குற்றேவல்காரர்.

**முன்னிருட்டு** மாலை முடிந்த பின நிலவு வரும நேரம.

## மூ

**மூக்கந்தண்டு** மூக்கு மடல் பகுதி

**மூக்குநாறுதல்** முகம் சுளிததல்

**மூக்குப்போணி** தூக்குவதற்குக கைப்பிடியுள்ள பாத்திரம்; கெணடி போனற அமைப்பு டைய பாததிரம்.

**மூங்கா** ஆந்தை.

**மூங்கில் பண்ணை** அடர்த்தி யான மூங்கில்காடு.

**மூஞ்சி** முகம்.

**மூட்டம் பொதிதல்** ஆயத்தப் படுததல; பிணத்தை எரிப் பதற்குக தயாராகுதல்; பிணத்தை வைத்து விறகு அடுக்குதல்.

**மூண்டாணி** மூன்று வீசம்

**மூணாம் கொம்பு** மூன்றாம நாளையில் விதைப்பதற்காக அதற்கு முன் இரண்டு நாளும் நீரில் ஊறவைத்த நெல்விதை.

**மூத்தபிள்ளை** திருவிதாங்கூர் அரசா நாஞ்சில் நாட்டு வேளாளருககுக் கொடுத்த பட்டம், வரி பிரிக்கும் உரிமை உடையவர்.

**மூத்தவடியா** முதல் மனைவி.

**மூத்துப் போதல்** திருமண வயதைத தாண்டி விடுதல்

**மூதி** மூதேவி.

**மூதியோலை** முடங்கின பனை யோலை.

**மூந்திக் கருக்கல்** மாலை நேரம

**மூந்திக்கருக்கல்** இருள் சூழும் நேரம் கருககல்;

**மூப்பிலு** பெரியவர்; வயதானவர்.

**மூப்பு** தலைமை.

**மூப்பு** முளைப்பு, தான்தோனறித் தனம.

**மூப்புப்போல** விருப்பம்போல.

**மூரியோலை** பார்க்க : மூதியோலை.

**மூலம்** மூலகாரணம்; குதம்.

**மூலைகாத்தல்** இறந்தவரின் மனைவி நோன்பிருத்தல.

**மூளி** நகை அணியாத உறுப்புகள், ஏசுவதற்குரிய சொல; ஜேஷ்டா தேவி ; மூதேவி.

## மெ

**மெக்காட்டாளு** கூலியாள்.

**மெச்சுக்கொட்டுதல்** பாராட்டுதல.

**மெச்சுப்போடுதல்** நடககும் என நம்புதல.

**மெத்தனம்** தாமதம்; மெதுவாக, கவனமின்மை.

**மெட்டு** தடை.

**மென்னி** கழுத்து.

**மென்னியைப் பிடித்தல்** கழுத்தைப் பிடித்தல்; நிாபபநதம் செய்தல்.

**மெனக்கெட்டு** செயல்பாடுகளை நிறுத்திவிட்டு ஒன்றில் கவனம் செலுததல்; தனியான கவனிப்பு.

**மெனக்கெடு** நேரம் வீணாதல்.

**மெனக்கெடுத்துதல்** பயனின்றிப் போகச் செய்தல்.

**மெனக்கெடுதல்** வேறு வேலைகளைவிட்டு ஒன்றில சிரத்தைக் கொள்ளுதல்

## மே

**மேச்செலவு** வீட்டிறகுரிய அனறாடச் செலவு

**மேமழை** இரணடாவது மழை.

**மேல்முகம்** மேற்குப் பகுதி.

**மேலாக்காய் சொல்லுதல்** மனப்பூாவமின்றி வெளியில் மட்டும பேசுதல்.

**மேலா** மேற்குத் திசை.

**மேவலை** கடலில் நீரின மேல் பகுதியில் போடும மீன்வலை.

**மேவளவு வலை** கடலின் மேல் மட்டத்தில ஓடும மீனைப் பிடிக்கப பயன்படும் வலை.

மேழி கலபபை குத்தியான பகுதி.

**மேழிக் கலப்பை** ஏரில கொழு உளள உழும் பகுதி.

**மேழிக்குண்டி** பெரிய பிருஷ்ட பாகம.

**மேளம் கட்டுதல்** பார்க்க · களரி கட்டுதல்.

**மேளம்பிடித்தல்** ஆரம்பித்தல்; நையாண்டிமேளம் எனற நாட்டுப்புறக்கலை தொடஙகுதல்.

**மேனா** மணமக்கள் ஊர்வலம் வரும் பல்லக்கு.

**மேனா இழுப்பு** ஆஸ்தமா.

**மேனி** நெல விளையும் அளவு; பெருமளவு விளைசசல்.

## மை

**மைக்கண்** நெல் வகை.

**மைக்குறுவா** ஒருவகைநெல்

**மைச்சம்பா** சம்பா வகை நெல்

**மைச்சம்பி** மைத்துனன்

**மைச்சாலி** சம்பா வகை நெல்.

**மைனி** மதினி; அணணனின் மனைவி.

## மொ

**மொக்குதல்** சாப்பிடுதல்; பெருமளவு சாப்பிடுதல.

**மொகரக்கட்டை** முகம

**மொகரை** முகம்.

**மொங்கா** தளததை இறுகச் செயயும கட்டை.

**மொங்கான்** தரையைச் சமப படுத்த உதவும் மரத்தாலான கருவி



**மொங்கான்**

**மொங்கான் போடுதல்** கடனாகவோ தற்காலிகமாகவோ பெறற பணம் அல்லது பொருளைத் தனக்கு உரிமையாககுதல.

**மொட்டைக் குறுவா** ஒரு வகை நெல்

**மொடக்கம்** தடை.

**மொடங்குதல்** தடைபபடுதல்

**மொண்டி** நொண்டி.

**மொண்ணையன்** அறிவு மழுங்கியவன்.

**மொந்தன்** ஒரு வகை வாழை

**மொந்தன்பழம்** ஒருவகை வாழைபபழம்; அடி பருத்த உடம்புடையவன்.

**மொய்** ஆடுகளின் தொகுதி.

**மொழுக்கு மரம்** மொழுக்குதலுக்குப பயன்படும மரம (பாரக்க · மொழுக்குதல).

**மொழுக்கு மரமடித்தல்** (பார்க்க பொழித்தட்டிப் பலகை).

**மொழுக்குதல்** நடவு அல்லது விதைபபதறகு முன வயல்

தொழிலைத் பொழித்தடடிப் பலகையால் சமப்படுததல்.

**மொளவட்டி** பலசரகரு சாமான் கள் வைக்கும் பல அறைகளை உடைய பெடடி.

**மொறடு** பெரியது.

## மோ

**மோட்டுக் காவணம்** வீட்டின முன பந்தல்.

**மோட்டை** நீர்கசிந்து வெளி யேறும்படி வயல்வரப்பில் துவாரம் இருப்பது.

**மோட்டோலை** கூரை வேயும ஓலை.

**மோடு** கடல் அலை; கூரை ஓடு.

**மோடு கூடல்** மார்பெலும்பு கூடித் தெரிதல்.

**மோரூற்றுதல்** ஒரு செயலை நிறுத்தல்; கைவிடுதல்.

**மோரெண்ணெய்** மோர் சேர்நத மருநது எண்ணெய்.

**மோரைக்கயிறு** மாட்டின் வாயைச் சுற்றிக் கட்டும் கயிறு.

**மோளுதல்** சிறுநீர் கழித்தல்.

**மோளையன்** முரடன், விவரம இல்லாதவன.

**மோவாய்கட்டை** வாயின் கீழ் பகுதியில் உள்ள இடம்.

## ய

**யத்தனம் கூட்டல்** ஒரு குறிப பிட்ட செயலைச் செயயத் தயாராதல.

## யா

**யாக்கால்** உழவுத்தொழிலுக்குரிய மரக்கமபு.

**யாக்கோட்டி** வயக்கோட்டி; மசகசை.

**யாத்தினம்** மீன் பிடிப்பதற்குரிய பொருட்கள் - குறிப்பாக வலை.

**யாப்பியம்** நாஞ்சில நாட்டு மரு மககள் வழி குடும்பத்தைச சார்நத ஒருவன் குடுமபததி லிருந்து விலகும்போது அக் குடும்பத்தில அவனுககுமுள்ள பாத்தியதைககு ஈடாகக் கொடுதது ஒதுககும் சொத்து.

**யாபித்தல்** அனுபவித்தல.

**யானம்** பாததிரம்.

## யோ

**யோகிப் பரதேசி** பைராகி; வடதேசத் துறவி.

## ரா

**ராக்கடி** தலையணி வகை.

**ராக்குடி** பார்க்க : ராக்கடி.

**ராசியாதல்** சமாதானமாகப் பேசுதல

**ராட்டை** ராடடினம.

**ராப்பாடி** வயல அறுவடைக காலததில நடு இரவில் கிரா மதது வீதிகளில உடுக்கடித்துக் கொண்டு பாடி யாசகம பெறும் புரத வணணாா சமூகத்து மநதிரவாதி.

**ராப்பத்தி** இரவு நேரத்தில் மட்டும் கைகளில் அப்பி வைக்கப படும் மருதாணி இலை.

**ராயவல்லி** சர்க்கரை நாட்டுச் சர்க்கரை.

**ராயபேரிசர்க்கரை** நாட்டு சர்க்கரை.

**ராவு** இரவு; ராத்திரி; கூராககு; தேய்த்து விடு; உரசு.

## ரு

**ருசுப்படுத்தல்** மெய்ப்பித்தல.

**ருதுவாதல்** பெண் பருவமடைதல்

## ரீ

**ரீதி** முறையாக.

## ரெ

**ரெம்ப** நிரம்ப

## ரே

**ரேக்கிளா வண்டி** மாட்டு வண்டி போட்டிக்குரிய வண்டி (ரேஸ் வண்டி); ஒருவன் மாத்திரம் உட்கார இடமுள்ள ஒற்றை வணடி.

**ரேந்தா** சிததிரப் பின்னல்; அதற்குரிய ஊசி.

## ல

**லங்கோடு** ஆண் உள்ளாடை.

**லண்டன் சீனி** வெள்ளை சர்க்கரை.

**லத்தி** குதிரையின சாணம்.

**லம்பார வலை** கடலில் ஆழமான பகுதியில மீன்பிடிகக ஏறற வலை

**லவட்டி** தூநடத்தையுளள பெண்.

## லா

**லாஞ்சி** தோணி.

**லாடச்செம்பு** வாய் குறுகிய சிறிய பித்தளைப் பாததிரம (லாட சன்னியாசிகள் பயன் படுத்தியதால் இப்பெயா பெற்றது.)

**லாந்தர்** மணணெணணெய் விளககு

**லாந்துதல்** உலாவுதல்.

**லாயக்கு** உபயோகம், பொருத்தம், தகுதி.

## லெ

**லெக்கின்றி** புத்தி கெட்டு.

**லெக்கு** இகம்; இலட்சியம்; திசை; நோக்கம.

**லெச்சை** வெடகம்.

**லெச்சை கெட்டு** வெட்கம் இன்றி

**லெவலேசம்** கொஞசம்கூட.

## லே

**லேலம்** ஏலம் (சிட்டி).

## லோ

**லோட்டா** கப்; தம்ளா.

## வ

**வக்கணை** குறைகூறல்; நையாண்டி, வம்பு.

**வக்கத்தவன்** பணம் இல்லாத ஏழை

**வக்கநாடி** நீண்ட முகம.

**வக்கு** செலவம்.

**வகுடு** தலைமுடியின் பிரிவு

**வகையா** சரியான; முறைப்படியாக.

**வங்கத்துக்கு வராது** சரியான படிக்கு வராது.

**வங்கத்துக்கு வராமலாதல்** எதற்கும் பலனற்ற நிலையில் ஆதல்; பார்கக . சின்னாபின்னப்படுதல்.

**வங்கம்** பயனில்லாமல ஆவது.

**வங்கி** குத்துவாள்; வளைந்த சிறிய கததி.

**வங்கு** சிரங்கு, தோல் வியாதி.

**வங்குசம்** வம்சம்.

**வசக்குதல்** அடக்குதல்; தன்வசம் ஆககுதல்; வதக்குதல்.

**வசக்கேடாக** தெரியாமல்; அறியாத்தனமாக.

**வசமாக** முறையாக; சரியாக

**வஞ்சி** காணிக்கைப பெட்டி; உணடியல்.

**வஞ்சி பூமி** திருவிதாங்கூர் சமஸ்தானம், திருவிதாங்கூரின தேசிய கீதம்.

**வஞ்சிப்பாட்டு** ஓடப்பாட்டு.

**வட்டச் செலவு** இதரச் செலவு; வீண் செலவு; மொத்தச செலவு.

**வட்டஞ்சுற்றுதல்** நெறகதிரைப் போரடிககும்போது பிணையல் மாடுகள கதிரின் மேல் வட்டமாகச் சுற்றுதல.

**வட்டம்** கதிரை தலையடி அடித்த பிறகு பிணையல மாடுகளைப் போரடிபபதற்கு ஏற்பாடு செய்தல்.

**வட்டம் தள்ளுதல்** போரடிக்கும் போது கதிர்களை வட்டத்தில போடுதல்; போரடித்தல்.

**வட்டில்** வெள்ளோடு என்னும் உலோகத்தால் ஆன உணவு உணணும் தட்டு.

**வட்டு** மாத்திரை; அரைப்பைத் தியம்.

**வட்டை** அகன்ற வட்டவடிவாய் அமைந்த பாததிரம; பக்கா படிவகை.

**வடக்காச் செல்லி** வடக்கு வாய்ச் செல்வி; காளி என்னும் நாட்டார் பெண் தெய்வம்; வடக்கே நோக்கி இருப்பது

**வடக்கோடி** வடக்குத திசை வழி.

**வடம்** பலகை

**வடமதி, வடமீதி** நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதி. (தோவாளை வட்டம்)

**வடலி** சிறிய பனங்காய்.

**வடி** சிறுவயல்.

**வடிகஞ்சி** சூடான சாதத்தின் நீரும் சிறிது சாதமும் கலந்த கஞ்சி.

**வண்டத்தனம்** மடத்தனம.

**வண்டல மாசியம்** இறந்த வீட்டில் 41 ஆம் நாள செய்யப்படும சடங்கு.

**வண்டுருட்டிப் பழம்** இரண்டு பொன் வணடுகள் உருட்டும மல உருண்டை.

**வண்ணம்** குண்டு; பருதத.

**வண்ணான்சால்** அழுக்குத் துணிகளை வேக வைக்கும் இடம்.

**வதவதன்னு** எண்ணிக்கை அதிகம்,

**வம்பளப்பு** வீண்பேச்சு

**வய்யாளி** கடற்கரை.

**வயசுக்கு வருதல்** பார்கக: சமைதல்.

**வயல் முருங்கை** ஒரு வகைச செடி.

**வயிரவ பூசை** தீர்த்த யாத்திரை சென்று திரும்பியவுடன் வயிரவர் என்னும் கடவுளுக்குச் செய்யும் பூசை

**வயிராவி** பராகி என்ற யோகப் பரதேசிகள் சாதியினா; கோவில காவல்காரர்

**வயிற்றளைச்சல்** வயிற்று வலி, வெபபததால வயிற்றில் ஏற்படும நோய்.

**வர்க்கத்து** யோகம்; அதிஷ்டம, ராசியான.

**வர்ம சூத்திரம்** மாமஸ்தானங்களைப் பற்றிக கூறும ஒரு நூல

**வரப்புப் பாவுதல்** வயல் நடவு நாளில் வரப்பைச் சமமாக வெட்டி சேறறால் பூசுவது.

**வரி** கூரையின் இறுதிபபகுதி; வீட்டுத் திணணையின் ஓரப பகுதி; நாட்டாா தெய்வக் கோவிலின் கட்டாய நன கொடை.

**வரிக்கல்** திருத்தபபட்ட நீளமான கல்.

**வரிசைக்குற்றி** செங்கல் சூளையில் வரிசையாக அடுக்கும விறகுக்குற்றி.

**வருக்கை** பலா வகை

**வருதிருவு** விவேகம; ஒழுக்கம்

**வரைக்கட்டு** மலைப்பககத்தின் கீழப்பகுதியைத் திருத்திய விளைநிலம.

**வல்லம்** தென்னங்கீறறால் செயயபபட்ட நீளவாககிலான கூடை.

**வல்லயம்** ஈட்டி போனற ஆயுதம். நாட்டார் ஆண் தெய்வக் கோவிலில கருவறையில் இருப்பது.



**வல்லயம்**

**வல்லாத** முடியாத.

**வலம் பாடுபவர்** விலலிசை நிகழ்ச்சியில் வலது பககம் இருந்து பாடும கலைஞா.

**வலம்பாடல்** வில்லிசை நிகழ்சசியில வலதுபககம் இருந்து பாடுதல்

**வலவன்** வண்டி அல்லது ஏரில் வலப்பக்கம கட்டபபடும காளை

**வலிச்சம் காட்டல்** முகததைக் கோணலாககிக் காட்டிப பழித்தல்

**வலித்தல்** பிடித்து இழுத்து

**வழவழ** எதையும் கவனமாக எடுததுக் கொள்ளாத நிலை.

**வழிக்கலை** ஓலை தொகுபபு ஆவணம; துணை ஆவணம்

**வழிவகை** பார்கக : பாய்ச்சு வலை

**வள்ளக்கழி** தோணி விளையாட்டு.

**வள்ளக்கை** ஏரின் நுகத்தடியில் இணைககும் கம்பு.

**வள்ளம்** நாட்டுப் படகு; தோணி.

**வள்ளிசாய்** முழுதுமாய்.

**வளப்பாளன்** தத்தெடுத்த பையன

**வளரி** வயலில் முளைக்கும் களை.

**வளுக்கை** தேங்காய் இளநீர் பருப்பு.

**வளுங்கல்** எதையும முடிவு செய்ய முடியாத நிலையில இருப்பவன.

**வற்றுப்பாடு** வறறுகை; வயலில தணணீா இலலாமல் ஆதல்.

**வன்கை** பெரும பணககாரன்

## வா

**வாக்கூடு** கன்றுக்குட்டி மண் அல்லது உணவு அல்லாத பிற பொருட்களைத தின்னாமல் இருக்க அதன் வாயில் போடும கூடை



வாக்கூடு

**வாங்கல்** அதிக அளவில வீசும கடலலை.

**வாங்கு** அடி; நீளமான மீன் துண்டு

**வாச்சான் போச்சான்** வநதாலும் வரும போனாலும் போகும எனற நிலை; நடக்கலாம் நடக்காமலும் இருககலாம; நிலையறற தனமையைக குறிக்கும் சொல, அதிர்ஷ்டவசமாக; அகார்த்தமாக; எதோ காரணத்தால.

**வாசறமிண்டான்** வாரி சிறை மீண்டான் என்னும் நெல் வகை.

**வாசிப்பு** நாதஸ்வர மேளக கசசேரி, பணம் இல்லாத நிலை.

**வாசிரிக்கு** சொல்லி வைத்தாற் போல ; தற்செயலாக; திடீ ரெனறு; எதிர்பாராதவிதமாக

**வாட** கிழககுத் திசை.

**வாட கரிய** கடலில வடகிழக்கு.

**வாடவெலங்க** கடலின் தென் கிழககு

**வாணம்** காாத்திகை தீப விழா வில் இரவில் சிறுவர்கள் கொளுத்தி விளையாடும் மத் தாபபு போன்ற சாதனம். ஆண் பனையின் பூவை எரிதது செய்யப்படுவது.

**வாணாலு** உயிர்; எளிமையான வன்.

**வாணாள்** ஆயுள்.

**வாணியன்** எணணெய்ச் செடடி.

**வாதம்** பககவாதம என்ற நோய்

**வாதை** துனபத்தைக் கொடுக்கும் நாட்டார் தெய்வம்; அகால மரணமடைந்தவரின் ஆவி; வதைபட்டு இறந்தவரின் ஆவி.

**வாம்பரி** திண்ணையில உள்ள கல; நீள வாக்கில் அமைந்த கல்

**வாமடை** வயலுக்கு நீர்பாயும் வழி.

**வாய்க்கூடை** பாாகக : வாக்கூடை.

**வாயனப்பாட்டு** பார்க்க : கதை வாசிப்பு.

**வாயிலெடுப்பு** வாந்தி.

**வாயோலை** ஒற்றி உரிமையைக் குறிக்கும் ஆவணம், ஒற்றி உரிமைக் கிரயப் பத்திரம்.

**வார்ப்பு** பெரிய அளவில் சாதம் பொங்கும் அகன்ற செமபுப பாத்திரம்.

**வாரி** வெள்ளம் மேற்கூரை யிலிருந்து வடியும் மழைநீர்

**வாரியல்** துடைப்பம்.

**வாவரசி** கணவனுடன வாழும் பெண்.

**வாவளையம்** கூரை விட்டம்.

**வாவெட்டி** வெட்டிப் பேச்சு பேசுபவள.

**வாளை** ஒரு வகைக் கடல்மீன், பெரும்பாலும் குழந்தை பெற்ற வளுக்குக கொடுக்கப்படுவது

**வாழ்வரசி** சுமங்கலி.

**வாழாவெட்டி** கணவனைப் பிரிந்து வாழ்பவள்.

**வாழும்புடை** பாம்புப்புற்று.

## வி

**விசர்ப்பு** வியர்வை; பசி.

**விசாரிப்புக்காரன்** பார்க்க : சாரிப்புக்காரன்.

**விசும்பு பிடித்தல்** வைராக்கியத துடன் இருத்தல்; தேவையற்ற தற்கும் அடம் பிடிததல.

**விட்டாளி** வயிறு பருத்தவன், பெருநதீனி தின்பவன்

**விடலை** இளம் தேங்காய; இளநீர்; இளைஞன்; இளம் பருவம்.

**விடியங்காட்டி** விடியற்காலை

**விடிவளம்** காட்டுநெலலிக காயால செய்யப்படும ஊறுகாய்.

**விடுமாடன்** ஒருவகை நாட்டுப் புறத் தெய்வம்.

**விடுமுறி** திருமணத்தை ரதது செய்து கொண்டதைக் குறிக்கும பத்திரம்.

**விண்ணாணம்** விஸ்தாரம்; விசித்திரமாக பேசுதல்; இயல்பாக நடக்காமலிருத்தல்; உலக நடைமுறையை மீறித் தன்னை இனம் காட்டுதல, யதார்த்த மற்ற செயல்களைச் செய்தல்; தன் பெருமையை அளவுக்கு மீறிக் காட்டிக் கொள்ளுதல்.

**வித்தாரம்** அழகு

**வித்துகாளை** பொலிகாளை.

**விதப்பாடு** நெல் விதை விழும் அளவு; வயல் பரப்பளவு.

**விந்துதல்** நொண்டுதல்.

**விம்மிட்டம்** புழுக்கம்

**வியாக்கியானம்** விளக்கமாகக் கூறுதல்; பேசுதல்.

**விர்ரென்று** வேகமாக

**விரால்வலை** விரால் மீனைப் பிடிக்க உதவும் வலை.

**விரிசன்பழம்** விவரம இல்லாதவன், மடையன்; எதற்கும் உதவாதவன்.

**விரிசா** (விரிசலாக) விரைவாக.

**விருத்தி** சுத்தம.

**வில்** விலவிசைக்கலைக்குரிய இசைககருவி.

**வில்கதிர்** வில்லிசை கலைக்குரிய இசைககருவி; நாண் கடடப் படாத நிலையில் மட்டும் விற் கதிர் எனப்படும்.

**வில்குடம்** வில்லிசைக் கலைக் குரிய இசைககருவி. இது மண ணால் ஆன குடம்.

**வில்லங்கம்** சிக்கல்.

**வில்லுப்பாட்டு** வில் எனும் இசைக்கருவியால் நிகழ்த்தப் படும கலை.

**வில்லுப்பூட்டல்** வில்லிசை என் னும இசைக் கருவியின் உறுப்பு களை இணைத்தல்.

**வில்லைமாலை** கழுத்தில் அணியும் தங்க ஆபரணம்.

**வில்வண்டி** கூண்டுள்ள சொகுசான மாட்டு வண்டி

**விலக்கு** மாதவிடாய்; ஒரு ஊரின் எல்லை பிரியும் இடம்.

**விலங்கு வலுவு** நீரோட்டம் அதிக தூரம் போதல்.

**விலாங்கு** மர நாற்காலி, மேஜையின் கால்களை இணைக்கும் கம்பு.

**விவரித் தூண்டில்** கடலில மீன் பிடிக்கப்பயன்படும் தூண்டில்.

**விழுக்குபுரட்டு** எண்ணெயில் வேகவைத்து எடுத்த கறிவகை.

**விளம்புதல்** பரிமாறுதல்; விநியோகித்தல.

**விளித்தல்** அழைத்தல்

**விளை** மரங்கள் அடர்ந்த பகுதி; தோடடம்; தோப்பு.

**விளைச்சல்** இளவயதிலேயே அதிக சாமாத்தியம உடையவன்.

**விறிதா** தேவையில்லாமல்; வீணாக.

**விறியாத்து** மயஙகி.

**விஸ்தரித்தல்** சாட்சியை விசாரித்தல், சுருக்கமாகச சொல்ல வேணடியதை விரிவாகக் கூறல்.

**விஸ்தார குமஸ்தா** கோர்ட்டில் சாட்சியை விசாரணை நடத்த உதவி புரியும குமஸ்தா.

**விஸ்தாரம் பேசல்** தேவையில்லாமல் விவரித்தல்

## வீ

**வீசுகோல்** வில்லிசைக் கருவியை இயகக உதவும் கோல.



**வீசுகோல்**

**வீஞ்சுதல்** வீம்பு பிடித்தல்.

**வீணத்தனம்** துனமார்க்கம்.

**வீணாதிவீணன்** தேவையின்றிச் சணடை போடுபவன்; உபயோகமற்றவன்; போக்கிரி; உரிமையிலலாத நிலத்திற்கு உரிமை கொண்டாடுபவன்; வீண வம்பு செயபவன்.

**வீரலட்சுமி** நாடடார் பெண தெய்வம்.

**வீரமுண்டான்** ஒருவகை நெல.

## வெ

**வெகுலாங்கம்** ஆடுதின்னாப் பாளை என்னும் செடி.

**வெசயா** வேகமாக

**வெசர்ப்பு** வியர்வை.

**வெசண்டை** விசித்திரமாக, தன் முனைப்புடன் ஆடம்பரச் சொற்களுடன் பேசல்

**வெசுண்டை** பார்க்க: வெசண்டை.

**வெஞ்சணம்** மளிகைச் சாமான்.

**வெட்ட வெளிச்சமாக** வெளிப்படையாக

**வெட்டம்** வெளிச்சம்.

**வெட்டருவா** கத்தி; சிறிய அரிவாள.

**வெட்டு பாக்குவெட்டி** பாக்கு வெட்டியின் வகை.

**வெட்டு மருந்து** மூலிகை மருந்து.

**வெட்டை** தரிசு நிலம்; அரிசி ஆலையில் நெல் காயப்போடும் இடம்.

**வெட்டொழிவு** நிலத்தைப் பண படுத்திய் செலவிற்குக் கொடுக்கும தொகை.

**வெடலை** சிதறு தேங்காய; இளம் பையன்.

**வெடி** பெரிய பொய்; உடலுறவு

**வெடுக்கென்று** படீரெனறு.

**வெண்டயம்** அதிக பிரசங்கித் தனம், திருவிதாங்கூர் அரசர் சாதனையாளர்களுக்குக் கொடுதத விருது, கையில் அணியும் பொனனாலான அணி, பித்தளையால ஆன உள்ளீடுளள வளையம்

**வெத்திலை கைமாறல்** பார்க்க : வெற்றிலை கைமாறல்.

**வெத்து வேட்டு** பயனறற பேச்சு; தகுதி இல்லாதவன்.

**வெந்தயக்களி** வெந்தயம் உளுநத மாவு பசசரிசி மாவு கருபபுக கட்டி தேங்காய் ஏலம சுக்கு கலந்த களி.

**வெப்பிராளம்** உணர்ச்சிவயப் படுதல்; வயிறறெரிச்சல்.

**வெப்பு** வேர்க்குரு.

**வெம்பரப்பு** வெட்டவெளி; மேலும் கீழும் இல்லாத நிலை.

**வெம்பல்** வாடி உதிரும காய்.

**வெரவி** பிசைந்து.

**வெல்லி** சாமர்த்தியமான பெண.

**வெலங்க** தூரமாக.

**வெலி** பலி.

**வெள்ளக்குடி** கூலியாட்களுக்கு நீா ஆகாரம் குடிக்கக கூலி, நணபகல் உணவிற்குக் கொடுக் கபபடும கூலி.

**வெள்ளசீலை பண்டாரம்** வெள்ளை வேட்டி சன்னியாசி.

**வெள்ளம்** தண்ணீர்; கள அல்லது சாராயம்.

**வெள்ளன** கொஞ்சம் நேரம் முன்பு; விடியறகாலை

**வெள்ளனை** அதிகாலை.

**வெள்ளாவி** சலவைத் தொழி லாளி அழுக்குத துணிகளைக் காரத தண்ணீரில் வைத்து அவித்தல்.

**வெள்ளாவி வைத்தல்** அழுககு ஆடைகளைக் காரத்தண்ணீரில் வைதது அவித்தல, ஒருவனை நன்றாக அடித்தல்

**வெள்ளுள்ளி** வெள்ளைப் பூண்டு.

**வெள்ளை** சலவைத்துணி; ஆடம் பரப பகட்டு.

**வெள்ளைக் கழுத்து** சம்பா வகையிலான நெல்.

**வெள்ளைச் சீலை** வெளுத்த துணி.

**வெள்ளைச் சீலைக்குத் தடுக்கிடு தல்** நன்றாக ஒப்பனை செய்த செல்வந்தனுக்கு உபசாரம் செய்தல.

**வெளுத்தல்** கடுமையாக அடித் தல்; துவைத்தல்.

**வெற்றிலை கைமாறல்** மணமக்க ளின் வீட்டார் திருமணம் நிச்சயிக்கத் தாம்பூலத்தை மாறறிக் கொள்ளுதல்.

**வெற்றிலைச் செல்லம்** வெற்றிலைப் பெட்டி.

**வெறும் பாட்டம்** முன்பணம் இன்றி விடும் குத்தகை.

**வெறுவாக்கலம் கெட்ட மூதி** பயனில்லாதவன்.

**வெளம்** ஆத்திரம்; பழிவாங்கும் நினைவு.

## வே

**வேக்காடு** முழுதும் அறியாத நிலை; உயிர்போகும் நிலை.

**வேட்டு பறிதல்** உயிர் போதல்.

**வேதக்கோயில்** கிறிஸ்தவ பள்ளி.

**வேப்பந்தாங்கி** மண்வெட்டிக் கையின் நுனி.

**வேய்ப்பரம்பு** மூங்கில் பாய்.

**வேவுபானை** மகப்பேறுற்ற பெண் குளிப்பதற்கு வெந்நீர் போடப் படும் பானை.

**வேனாவெயில்** கடும் வெயில்.

## வை

**வைகோல் பிரி** வைக்கோலால் முறிக்கிச் செயயப்பட்ட கயிறு.

**வைச்சூற்றி** புனல் (Funnel).



**வைச்சூற்றி**

எமப்பளுவன் : எமனை ஏமாற்றுபவன்.

எய்ச்சேறு : முந்திய காலத்தில் கிராமத்தில் இருந்த ஒரு வரி.

எரிசேரி : சேனை அல்லது வாழைக்காயால் சமைக்கப்படும் நல்ல மிளகு சேர்ந்த ஒருவகை கூட்டு.

எருசிரிச்சான்மூலை : வடமேற்கு மூலை. வடமேற்கில் மேகம் கறுத்தால் மழை பெய்யாது என்பது நம்பிக்கை. வயலில் உழும்போது வடமேற்கு மூலையில் எருது மேகத்தைப் பார்த்து, இன்று மழை வரும் நாம் தப்பி விடலாம் என்று சிரிக்குமாம். அதனால் பொதுவாக வயலின் வடமேற்கு மூலைப் பகுதியை எரு சிரித்தான் மூலை என்பது வழக்கம்.

எல்லுப்பொடி : எலும்புப் பொடி உரம்.

எல்லைக்கதிர் : அறுவடை வயலைக் கூறுபிரிக்க அடையாளமிடும் முடிந்து வைக்கப்பட்ட கதிர்.

எலக்காளை : ஒருவகைக் காளை.

எலிப்பொறி : எலியைப் பிடிக்க உதவும் கூண்டு. எலிப்பத்தாயம்.

எலுங்கொடி : மாடு ஈனும்போது வெளிப்படும் நச்சுக்கொடி.

எலைச்சுருட்டுப் புழு : நெற்பயிரின் இலையிலுள்ள பச்சையத்தை உண்டு வளரும் புழு.

எளக்காரம் : இளப்பமாக; லகுவாக; எளிதாக.



ரூ. 60